# கீதா மகரந்தம்

**சுவாமி வித்யா பிரகாஸானந்தா**



தமிழாக்கம்:

*பேராசிரியர். சே. சர்வோத்தமராவ்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியீடு.

# கீதா மகரந்தம்

[ சுவாமி வித்யா பிரகாஸானந்தா ]

## ஐந்தாம் பகுதி

*(16, 17, 18 அத்தியாயங்கள்)*

தமிழாக்கம் :

பேராசிரியர். கே. சர்வோத்தம ராவ்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்,

திருப்பதி.

**GITA MAKARANDAM - Vol. V**

By
**SWAMY VIDYAPRAKASHANANDA**

*Tamil Translation*
Dr. K. SARVOTHAMA RAO

T.T.D. Religious Publication Series No. 575

© All Rights Reserved

First Edition : 2000

Copies : 2000

Price :

Cover Page : Sri P. Narayanagiri Dattu

*Published by*
**Dr. I.V. Subba Rao, I.A.S.,**
Executive Officer,
Tirumala Tirupati Devasthanams,
Tirupati - 517 507

*Printed at*
Keerthi Offset
103, Prakasam Road, Tirupati

# பதிப்புரை

''எதனைத் தின்றால் பித்தம் தெளியும் '' என்ற நிலையில் மனிதன் இன்று விளங்குகின்றான். ஆம், பிரச்சனைகளே அவனது வாழ்க்கையாக விளங்கிவிட்டது. எது பிரச்சனை? பிரச்சனைகளுக்கு யார் காரணம்? பிரச்சனைகள் தீர வழி என்ன? எனும் கேள்விகளை மனிதன் ஒருநாளும் நடுவுநிலையில் நின்று தன்னைக் கேட்டுக் கொண்டதில்லை. அதுபோது அவனே அவனுக்கு ஒரு பிரச்சனையாகத் திகழ்கின்றான்! அவ்வாறின்றி ஒருமுறை அமைதியாக அவன் தன்னைப்பற்றி அறிந்துகொள்ள முயற்சித்தானாயின் வாழ்க்கை அவனுக்கு ஒரு பூந்தோட்டமாக விளங்கிவிடும். அன்பு, இரக்கம், தியாகம், பொறுமை, கடமை, நேர்மை எனும் பண்புக்கூறுகள் அவனுள் இல்லாவிட்டால், அவற்றை தன்னுள் வளர்த்துக்கொள்ளாவிட்டால், பொறாமை, கோபம், ஏமாற்றம், தோல்வி ஆகியனவே அவனிடம் குடிகொள்ளும். இதனால் உறவுகள் கசந்திடும்; காண்பனவும், கேட்பனவும் எரிச்சலையே தரும். இறுதியில் இவற்றின் விளைவாக அவன் பிறர்க்கும் தனக்கும் பிரச்சனைகளின் மொத்த உருவமாக இருந்திடுவான்.

ஏதோ மனிதனின் பிரச்சனைகள் இந்த யுகத்தில் மட்டுமே ஏற்பட்டன என்பது இல்லை. உலகம் தோன்றியது முதல், அவனுள் ஆசைகள் பிறந்தது முதல், அவ் ஆசைகளை அடக்கத் தவறியது முதல் பிரச்சனைகள் தோன்றின என்றே கூறவேண்டும். ஆம் ஆசைகளை அடக்கத்தவறியதால் கடமையை மறந்தான்; கோபத்தைத் துறக்க மறந்ததால், பெருமையை இழந்தான்; அன்பினைக் காட்டத் தவறியதால் வன்முறைக்கு வழி தந்தான். இதனால் தவறுகளை செய்து கொண்டே போக, சுயநலத்திற்கு அடிமையாகி தீவிரவாதத்திற்குத் துணையாகி ஏமாற்றங்களுக்கு இருப்பிடமாகி இறுதியில் அவன் ஒரு 'சமூக பிரச்சனை'யாக விளங்கிவிட்டான்.

அத்தகு மனிதனை திருத்திடும் வகையில் அவனுள் இறை நம்பிக்கையினையும், தன்னம்பிக்கையினையும், கடமை உணர்வினையும் விளங்கச் செய்து அவனுக்குத் தியாகத்தின் பெருமையினையும், அன்பின் அருமையினையும், தொண்டின் சீர்மையினையும், ஆன்றோர் மற்றும் சான்றோர் நட்பின் அவசியத்தையும் உணர்த்தி அவன் தன் பிறவி பயனுள்ளதாகத் திகழவே அக்கண்ணபெருமான்'கீதை' எனும் வாழ்க்கை இலக்கண அமுதினை, போர்க்களத்தில் கடமையை மறந்து, பாசத்திற்கும் இடையில் அகப்பட்டு அமைதி இழந்து, குழப்பத்தின் உச்சியில் இருந்த அர்ச்சுனனுக்கு உபதேசிக்கும் முகத்தான், நமக்கு அளித்துள்ளான்.

அத்தகு பெருமைமிகு கீதைக்குக் காலம் காலமாக ஆசார்யர்களும், அடியார்களும் அறிஞர்களும் பல மொழிகளில் பல விளக்கவுரைகளை வழங்கி அக்கீதைக்கு உயர்வு தந்து தங்களை இனங்காட்டிக் கொண்டனர்.

இனிப்பு என்றாலே நமக்கு உடன் நினைவுக்கு வருவது தேன் ஆகும். பல மலர்களிலிருந்து சேகரித்துப் பெறப்படும் தேன் ஒரு மருந்தாகவும் பயன்படுகிறது. அதை உண்பதற்கு வயது வரம்பில்லை அத்தகு தேனாக - இந்து சமயத்தேனாக – ஒப்பற்ற ஆன்மீகத்தோனாக – வாழ்க்கை இலக்கணத் தேனாக கீதைக்கு ஓர் அருமையான விளக்கவுரையினை 'கீதா மகரந்தம்' எனும் தலைப்பில், திருப்பதி அடுத்துள்ள திருக்காளத்தி நகரை ஒட்டி ஓடிடும் ஸ்வர்ணமுகி நதிக்கரையில் அமைந்துள்ள ஸ்ரீசுகப்பிரம்ம ஆஸ்ரமத்தின் ஸ்தாபகரும், அதன் தலைவருமாக விளங்கி ஒப்பற்ற சமயத்தொண்டினைத் தன் இறுதி மூச்சு உள்ள வரை மேற்கொண்டு, அண்மையில் மறைந்த ஸ்ரீவித்யா பிரகாஸானந்த சுவாமிகள் நமக்கு வழங்கி அதனால் படித்து அறிந்து நாம் உயர்ந்திட , நமக்கு ஓர் அரிய வாய்ப்பினை நல்கியுள்ளார். அவர்தம் மூல நூலான இத்தெலுங்கு கீதா மகரந்தத்தினை டாக்டர் எம். சர்வோத்தமராவ் அவர்கள் தமிழில் தெளிவாகவும், எளிமையாகவும் மொழிபெயர்த்து தமிழர்களின் 'கீதா தாகத்' தினை தீர்த்து வைத்துள்ளார் எனில் அது மிகையாகாது. இந்நூலுக்கு நூலாசிரியர் தந்துள்ள முன்னுரையே ஒரு நூல் அளவில் வெளியிடும் அளவிற்கு கீதையின் பெருமையும், சிறப்பும் பரக்கப்பேசப் பெற்றுள்ளன. கீதை எனும் மாளிகையின் அடித்தளமாக சுவாமிகளின் முன்னுரை அமைந்துள்ளது.

வேதங்களின் சாரமாகத் திகழ்ந்திடும் கீதையின் பெருமை பேசும் இக்கீதா மகரந்தம் எனும் இந்நூலினை திருப்பதி தேவஸ்தானம் தன் வெளியீடாக வெளிக்கொணர்வதில் மிகவும் பெருமிதம் கொள்கிறது. இந்நூலின் முதல் நான்கு பகுதிகள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன. தற்போது இறுதிப் பகுதியாக 16, 17, 18 அத்தியாயங்கள் கொண்ட ஐந்தாம் பகுதியாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்க வேண்டிய இந்நூலினை அனைவரும் பெற்றுப் பயன்பெறுவார்களேயாயின் அதுவே தி.தி. தேவஸ்தானம் தனது சமய நூல் வெளியீட்டுப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதில் முழு வெற்றி அடைந்துள்ளது என்றே கருதும்.

**செயலாட்சித்தலைவர்,**

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்.**

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பதினாறாம் அத்தியாயம்

## தெய்வாசுர ஸம்பத் விபாகயோகம்

### இவ்வத்தியாயத்தின் பெயர் விளக்கம்

'தெய்வாசுர சம்பத் விபாக யோகம் - 'சம்பத்' என்றால் ஐசுவரியம்; தெய்வ சம்பத் என்றால் தெய்வீகமான நற்குணங்களின் செல்வம், தெய்வீக குண இராசி, ஜீவனையும், இறைவனையும் அருகில் இணைக்கும் சீலகுணச்செல்வம். 'அசுர சம்பத்' என்றால் அசுர குணங்கள், துர்குணங்களே. இறைவனைத் தொலைதூரமாக்கும் துர்குணங்கள். இவ்வத்தியாயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தெய்வீக குணங்களை, அசுர குணங்களை இரண்டையும் குறித்து விரிவாகத் தெரிவிக்கிறார். ஏனெனில் இவ்விரண்டையும் அறிந்திருந்தால், சாதகன் தன் இதயத்தை நன்கு பரிசோதித்துக் கொண்டு, தெய்வ குணங்கள் இல்லாவிடில் அவற்றைச் சம்பாதித்துக் கொண்டு இருப்பின் இன்னும் அவற்றைப் பெருக்கிக் கொண்டு, அசுர குணங்கள் இருப்பின் அவற்றை விடுப்பதற்கு இயலும். எனவே இரண்டையும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வாறாக ஆன்மீக அரங்கில் அனைவருக்கும் பயன்படும் வகையில் பகவான் நற்குண, துர்குணங்கள் இரண்டையும், தெய்வ, அசுர இயல்புகள் இரண்டையும் நன்கு பிரித்துச் சொல்லப்பட்ட அத்தியாயமாதலால் இதற்குத் தெய்வாசுர சம்பத் விபாக யோகமெனப் பெயர் பெற்றது.

## இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விஷயங்கள்

1. தெய்வ இயல்புகள் (தெய்வீக குணங்கள்) (1 முதல் - 3 வரை)
2. அசுர இயல்புகள் (அசுர குணங்கள்) (4-ஆவது சுலோகம்)
3. இவ்விரண்டின் பலன்கள் (5-ஆவது சுலோகம்)
4. சுர இயல்புடையோரின் இலட்சணம் அவர்களுக்கு நேரும் கதி (6 முதல் 20 சுலோகங்கள் வரை)
5. நரகத்தின் வழி... (21-ஆவது சுலோகம்)
6. சாஸ்திரத்திற்குப் புறம்பான நடவடிக்கையை விடுத்து, சாஸ்திரத்திற்குட்பட்ட நடவடிக்கையை மேற்கொள்வது குறித்து போதனை (22 முதல் 24 வரை)

## முன் அத்தியாயத்திற்கும் இவ்வத்தியாயத்திற்குமுள்ள தொடர்பு

இதற்கு முன்பு 7-ஆவது அத்தியாயத்தில் 15-ஆவது சுலோகம் 'ந மாம் துஷ்க்ருத்னோ மூடாஹ' என்றவிடத்து, 9-ஆவது அத்தியாயத்தில் 11, 12-ஆவது சுலோகமான, 'அவாஜானந்திமாம் மூடாஹ... '' 'மோஹ சாயோஹ கர்மாணோ!... என்றவிடத்தில் பகவான் தன்னைச் சிந்தியாதவர்களும், அசுர குணங்கள் உள்ளவரைக் குறித்தும் சொல்லியுள்ளார். மறுபடியும் உடனேயே 9-ஆவது அத்தியாயம் 13, 14-ஆவது சுலோகங்களில் தன்னைச் சேவிக்கும் நற்குணமுடையோரைப் பற்றியும் 'மஹாத்மானஸ்து மாம்பார்த்த...! 'சததம் கீர்த்தயந்தோமாம்...' என்றவிடத்தில் கூறியுள்ளார். இவையனைத்தையும் கேட்டவர்க்கு தெய்வீக இயல்பு, அசுர இயல்பு இவற்றைக் குறித்து விவரமாக அறிய வேண்டுமென்ற ஆர்வம் எழுதல் இயல்பு. எனவே அவற்றை விவரமாகத் தெரிவிக்கக் கருதி பகவான் இவ்வத்தியாயத்தைத் தொடங்குகிறார். மேலும் முன் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட புருஷோத்தமனை அடைவதற்கு நற்குணங்களை மேற்கொள்ளுதல், துர்க்குணங்களைத் தியாகம் செய்தல் மிக மிக அவசியம். இக்காரணத்தினால் புருஷோத்தமனை அடைவதற்கு எந்தெந்த நற்குணங்களைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும் எந்தெந்த துர்குணங்களை விலக்குதல் வேண்டுமென்பது முமுக்ஷு அறிந்திருந்தல் வேண்டும். எனவே அத்தகைய குணங்களைப் பற்றிய அறிவு உண்டாக்குவதற்காக அத்தகைய போதனைகளுடன் கூடிய இவ்வத்தியாயம் தொடங்கப்பட்டது எனலாம். இங்கு முதன் முதலில் தெய்வீக குணங்களை வரிசைப்படுத்துகிறார்.

## ஸ்ரீ பகவானுவாச

*அபயம் ஸத்வஸம் சுத்திர் ஞானயோகவ்ய வஸ்திதிஹ!*
*தானம் தமஸ்ச யக்ஞஸ்ச ஸ்வாத்யாயஸ்தப ஆர்ஜவம்!!* (1)

*அஹிம்ஸா ஸத்யமக்ரோதஸ் த்யாகஹ சாந்திரபைசுனம்!*
*தயா பூதேஷ்வயோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீர சாபலம்!!* (2)

*தேஜஹ க்ஷமாத்ருதிஹ சௌசமத் ரோஹோ நாதி மானிதா!*
*பவந்தி ஸம்பதம் தைவீமபி ஜாதஸ்ய பாரத!!* (3)

## சொற்பொருள்

பாரத - அர்ஜுனா!, அபயம் - பயமின்மை, ஸத்வஸம்சுத்தி - உள்ளத்தூய்மை, ஞான யோகவ்யவஸ்திதிஹ - ஞானத்திலும் யோகத்திலும் நிலைத்திருத்தல், தானம் - கொடை, தமஹ்ச - புறக்கா ரணங்களையடக்குதல், யக்ஞஹ்ச யாகம், ஸ்வாத்யாஹ - (வேத சாஸ்திர) அத்யயனம், தபஹ - தபம், அர்ஜவம் - நேர்மை (கபட மின்மை) அஹிம்சா - எவ்வுயிர்க்கும் தீங்கிழையாமை, சத்யம் - உண்மைப் பொருளான இறைவனை நாடுதல் அல்லது உண்மை யையே பேசுதல், அக்ரோதஹ - கோபமின்மை, தியாகஹ - தியாக புத்தியுடன் இருத்தல், சாந்திஹ அமைதியுடன் இருத்தல், அபைசு னம் - கோள் சொல்லாமை, பூதேஷு - உயிர்களிடத்து இரக்கம், ஆலோலுப்தவம் - பிறர் பொருளை விரும்பாமை, தேஜஹ - ஒளி (அல்லது பிரம்ம தேஜஸ்), க்ஷமா - பொறுமை (துன்பங்களை சகித் துக் கொள்ளுதல்), த்ருகிஹ தைரியம், சௌசம் - உள்ளும் புறமும் தூய்மை, அத்ரோஹஹ - வஞ்சகமின்மை, நாதி, மானிதா - செருக் கின்மை (என்ற இந்நற் குணங்கள்) தெய்வீம் - தெய்வீக இயல்பு டைய ஸம்பதம் - சம்பத்துடன் - (செல்வத்தை அடையத்தக்க) அவிஜாதஸ்ய - பிறந்தவனுக்கு, பவந்தி - இயல்பாகின்றன.

## கருத்துரை

ஏ அர்ஜுனா 1. பயமின்மை, 2. உள்ளத் தூய்மை, 3. ஞானயோ கத்திலிருத்தல், 4. கொடை, 5. வெளிகரணங்களின் கட்டுப்பாடு, 6. (ஞான) யக்ஞம், 7. (வேதசாஸ்திர) அத்யயனம், 8, தவம், 9. நேர்மை (கபடமின்மை), 10. தியாக[illegible] 11. அமைதியுடன் இருத்தல், 12. கோள் சொல்லாமை, 13. உ[illegible]த்து கருணை, 14. விஷயங்களின் மீது பற்றின்றிருத்தல், 15. [illegible]மையாக இருத்தல், 16. நாணம் (தர்மத் திற்கு எதிரானவற்றைச் செய்வதில்), 20. மனத்திட்பம், 21. பிரம்ம

தேஜஸ், 22. உள்ளும் புறமும் தூய்மை, 23. பொறுமை, 24. தைரியம், 25. துரோகமின்மை, 26. செருக்கின்மை என்ற இந்நற்குணங்கள் தெய்வ இயல்புடன் பிறந்தவனுக்கு உண்டு.

**விளக்கம்**

கீதையில் சாதனைக்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. சித்தம் நிர்மலமாக இருப்பின், அதன்பின் ஆன்மீக இலக்கினை அடைந்தாற் போன்றதே. எனவே அத்தகைய சித்தத் தூய்மையைப் பெறுவதற்கான நியமங்கள் பல கீதையில் சொல்லப் பட்டுள்ளன. இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்திலுள்ள தெய்வீக குணங்களைப் பெறுவது அந்நியமங்களில் அடங்கும். 26 நற்குணங் களை பகவான் இங்குத் தெரிவித்துள்ளார். அவையனைத்தையும் முமுட்சு மாணவனின் பாடத்தைப் போன்று நுணுக்கமாகக் கற்ற றிந்து தூய்மையடைந்ததால் மோட்ச இலக்கிணை அடைந்தாற் போன்றதேயாகும். எனவே சாதகன் இந்த நற்குணங்களை ஏற்று அவற்றை எச்சரிக்கையுடன் காப்பாற்றிக் கொள்ளுதல் வேண்டும்.

'சம்பத்' என்றால் செல்வம், ஐசுவரியம், 'தெய்வ சம்பத்' என் றால் தெய்வதனம், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தெய்வதனத்தை மக்க ளுக்கு வாரி வழங்கி, 'ஜீவர்களே' அழியக்கூடிய உலகியல் செல்வங் களின் மீது ஆசையுற்று, அதனைப் பெறுவதிலேயே வாழ்நாள் முழு வதும் வீணாகக் கழித்து, துக்கத்தினையும், பிறவியினையும் தொடர்ந்து பெறுதல் வேண்டும். இதோ எடுத்துக் கொள்ளுங்கள்! தெய்வதனமும், ஆன்மீக இரத்தினமும் பெற்றுக் கொள்ளுங்கள்' என்கிறார். இத்தெய்வதனம் முன்பு உலகியல் செல்வம் வஜ்ர, வைடூ ரியம் ஆகியவை என்ன மதிப்பு பெறும்? எனவே விவேகிகள் இந்த தெய்வ தனத்தை விரைவில் அடைந்து ஞானச் செல்வத்தைப் பெற்று பிரம்மசாயுஜ்யத்தை அடைவராக!

'அபயம்' - ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு பலவித மான நற்குணங்களைப் பற்றிக் கூறக்கருதி, முதன் முதலில் நற்கு ணங்களின் அரசன், நற்குணங்களின் சிம்மம் ஆன பயமின்மையை முதன் முதலில் கூறுகிறார். நற்குணங்கள் இருப்பினும், பயன மின்மை ஏன் முதலில் கூறுகிறார்? இதற்குக் காரணமுண்டு, 1. எல்லா துர்குணங்களுக்கும் பயமே அடிப்படை; எனவே அறிஞர்கள் அதனை ஒதுக்கிவிட்டால், பயமின்மையைக் கைக் கொண்டால் ஏனைய நற்குணங்களனைத்தும் அவையவை இயல்பாக வந்து சேரும். இதனால் அதை முதன்முதலில் கூறியிருக்கக் கூடும்.

கயிற்றைக் கட்டியிருக்கும் போட்டியில் (Tug of war) முதலில், இறுதியிலும் மிகவும் பல சாலிகளாக இருப்பவர்களையே அமர்த்து வர். அவ்வாறே அசுர குணங்களுக்கு எதிரான போட்டியில்தெய்வ குண இயல்புகளில் 'பயமின்மை' என்ற நற்குண அரசனை பகவான் அவற்றின் தலைவனாக்கி (Captain) போர்க்களத்தில் நிறுத்துகிறார். 3 'அபயம் வை ஜனா ப்ராப்தோஅஸி - என்ற உபநிஷத் போன்றவை பயமின்மையை சாட்சாத் பிரம்ம வாக்கியமாகவே வர்ணித்துக் கூறு கின்றன. எனவே கீதையில் பகவானால் முக்கியத்துவம் - அளிக்கப் பட்டுள்ள பயமின்மை என்னும் குணரத்தினத்தை அனைவரும் நன்கு பயின்று தெய்வ தனத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

'ஸத்வ ஸம்சுத்திஹ் - 'சுத்திஹ்' என்று சொல்லாது ஸம்சுத்திஹ்' என்றதால் சித்தம் மிகவும் தூய்மையாக இருத்தல் வேண்டும் என்பது பொருள். மனதில் எத்தகைய உலகியல் எண்ணங்களுக்கு, கெட்ட நடவடிக்கைகளுக்கு, பாவங்களுக்கு இடம் கொடாது பார்த்துக் கொள்ள வேண்டும். தூய்மையான கண்ணாடியிலேயே பிம்பம் தெளிவாகப் பிரதிபலிக்கும். தூய்மையான சித்தத்தினாலேயே ஆத் மாவை நன்கு உணர முடியும்.

ஞான யோக வ்யவஸ்திதிஹ் - பகவான் கீதையில் பலவித யோகங்களைப் போதித்திருப்பினும், அங்கங்கு ஞான யோகத்தி னைப் அதிகமாகக் குறிப்பிட்டுள்ளார். (ஆத்ம ஞானானுபூதியே எல் லாவற்றின் குறிக்கோளும் ஆகையால்), எனவேதான் தெய்வ தனத் தில் முதன் முதலில் அவற்றைக் குறித்துக் குறிப்பிடுகிறார். 'ஸர்வம் கர்மாலம் பார்த்த ஞானே பரி ஸமாப்யதே! என்றபடி எல்லாவித மான கர்மங்களும், எல்லாவிதமான யோகங்களும் இறுதியில் ஞானத்திலேயே அடங்குகிறது. எனவே அத்தகைய ஞான யோகத் தில் நிலைத்த தன்மையைப் பெறுதல் வேண்டுமென பகவான் இங்கு ஆணையிடுகிறார்.

'தானம்' - பூதானம், பொருள்களைத்தானம் செய்தல், அன்னதா னம், ஜலதானம், ச்ரம தானம், வித்யாதானம், ஞான தானம் இவைய னைத்தும் தானத்தோடு சேர்ந்தவையே.

'தமஸ்ச' - 'சம' என்னும் உள்கரணங்களின் கட்டுப்பாடு 'சத்வ ஸம் கத்திஹ்' என்ற வாக்கியத்தினால் இதற்கு முன்பே சொல்லப்பட் டதால் இங்கு 'தம்' என்ற வெளிக் கரணங்களின் கட்டுப்பாட்டினை மாத்திரம் கூறுகிறார். இந்திரியக்கட்டுப்பாடு இல்லாவிடில் ஆன்மீக அரங்கில் எவராயினும் முன்னேறுதல் கடினம் என்று அறைந்து கூற

லானது. எனவே கீதையில் உள் வெளி கரணங்களின் கட்டுப்பாட்டிற்கு உயர்ந்தஸ்தானம் அளிக்கப்பட்டுள்ளது.

'யக்ஞஸ்ச' இங்கு யக்ஞமென்றால் தபோயக்ஞம், யோகயக்ஞம், ஸ்வாத்யாய யக்ஞம், ஞான யக்ஞம் முதலானவை மாத்திரமே என்று அறிதல் வேண்டும்.

'கல்வாத்யாயஹ்' - கீதை, உபநிஷத்துக்கள், பிரம்ம சூத்திரங்கள், யோக வாசிஷ்டம், பாரதம், பாகவதம் ராமாயணம் - முதலான ஆன்மீக கிரந்தங்களைப் படித்து அதிலுள்ள சத்தினை நினைத்துப் பார்த்தல் ஸ்வாத்யாய எனப்படும்.

'த்யஹ்'தவமென்றால் தலைகீழாக நின்று கால்களை மேல் வைத்துநிற்றல் அல்ல. கீதையின் 17ஆவது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட மனம், வாக்கு, காயத்தால் ஆனதவம் என்பது பொருள்.

'ஆர்ஜவம்' மனம் வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் ஒரே மாதிரியான செயலாற்றுதல். அதாவது திரிகரண சுத்தியுடன் இருத்தல் என்பது பொருள். விஷஜந்துக்களான சர்ப்பம் முதலானவை வக்கிரமாக இருக்கும். எனவே வக்ர இயல்படையோரை மாக்களுக்குச் சமமானவர்களேயாவர்.

'அஹிம்சா' - மனம், வாக்கு, காயம் இவற்றால் எந்த உயிருக்கும் கிம்சை செய்யாதிருத்தல்; எதனையும் பாதிப்புக்குள்ளாக்காமல் இருப்பது.

'சத்யம்' - 1 மனம், வாக்கு, காயம் இவற்றால் பொய்மை இல்லாதிருத்தல், 2. உண்மைப் பொருளான பரமாத்மாவிடத்து நிலையான பக்தி பூண்டிருத்தல்.

'அக்ரோதஹ்' குரோதம் மிகவும் தீயகுணம். ஆன்மீக சாதனை செய்பவர் மாத்திரமன்று, ஒவ்வொரு மனிதனுக்கும் குரோதமின்மை மிகவும் அவசியம். குரோதத்தால் மனிதன் கேடு கெட்டுப்போவான். எனவேதான் 'க்ரோ தோபவதி ஸம்மோஹாஹ் ப்ரணஸ்யதி' - என்று இதன் தன்மையைக் குறித்து இதற்கு முன்பே தெளிவாகக் கூறியுள்ளார். குரோதம் ரஜோ குணத்துடன் தொடர்புடைய தீயகுணம். எனவே அது மனிதனைத் தாக்கும் போது கண்கள் சிவந்து, உடலெங்கும் வியர்வை பெருகும். இறுதியில் விகாரமான உருவத்துடன் அரக்கன்போல ஆகிவிடுவான். இக்காரணத்தினால் ஆன்மீக நிலையில் மேன்மையுறுவதற்கு குரோதமின்மை மிகவும் அவசி

யம். எனவே தான் இது தெய்வ இயல்புடைய குணமாக மதிக்கப்படுகிறது.

'தியாகஹ்' - 'த்யாகேனை நே அம்ருத த்வமானசுஹ்' - தியாகத்தினால் மோட்சம் கிடைக்கும். எண்ணங்களினால் அலைமோதுதல் கூடாது. முழுமையான அமைதிசித்தம் பரமாத்மாவிடம் லயிக்கும் போதே நேரும். சாந்தியில்லையேல் சுகமில்லை. (அஸாந்தஸ்ய குது ஸுகம்) இறைவனைச் சரணடைதல் காட்சிப் பொருள்களின் விஷயங்களை ஒதுக்குதல் ஆகிய இரண்டும் அமைதிக்கான வழி.

'அபைசுனம்' - ஏனையோரின் குற்றங்களைக் கருதாதிருத்தல், கோள் சொல்லாமை, பிறரது நற்குணங்களை நாம் நோக்குதல் வேண்டுமே தவிர அவர்களது குற்றங்களையல்ல. மக்கள் தத்தம் இதயத்தில் மறைந்துள்ள கோடானுகோடி குற்றங்களை முதலில் ஒழித்துவிட்டால் போதும். பிறரது குற்றங்களைப் பற்றி எண்ண வேண்டிய அவசியமில்லை.

'தயாபூதேஷு' - எல்லா உயிர்களிடத்தும் கருணை கொள்ளுதல் சாதகனுக்கு மிகத் தேவையான நற்குணமாகையால் கீதையின் பல விடங்களிலும் அது குறிப்பிடப்பட்டுள்ளது. பிரம்மஞானமெனும் மருந்திற்கு 'பூததயை' என்னும் பத்தியம் இருந்தேயாகவேண்டும். அப்போதே மருந்து நன்றாக வேலை செய்யும். எனவே, பத்தி, ஞானம், வைராக்யம் முதலியவற்றுடன் கருணை என்பதைக்கூட சாதகர்கள் நன்கு பயிற்சி செய்தல் வேண்டும்.

'அலோலத்வம்' - இந்திரியங்களை அதன் விருப்பத்திற்கு விட்டுவிடாதிருத்தல். விஷயங்களின் மீதான சபலமின்றி இருத்தல். இந்திரியங்களின் சக்தியனைத்தையும் விஷய போகங்களில் வீணாக்கி விட்டால் ஆத்ம சிந்தனையில் அது நிலைபெறாது. எனவே பிரத்தியாகாரத்தினால் அவ்விந்திரியங்களை, விஷயங்களினின்றும் திருப்பி, ஆன்மாவில் நிலைநிறுத்துதல் வேண்டும். மனம் சலனமின்றி, சபலமின்றியிருத்தல் வேண்டும்.

'மார்த்தவம்' பேச்சில் நடவடிக்கையில் கடினத்தன்மையின்றி மென்மையாக இருத்தல். இது சாத்வீக குணமுடையோரின் இலட்சணம.

'ஹ்ரீ' - நாணம் - 1. பாவகாரியங்களைச் செய்வதற்கு நாணுதல் வேண்டும். (அதாவது அதனைச் செய்யக் கூடாது). 2. 'நான் இது வரை ஆன்மீக அரங்கில் எந்த மேன்மையையும் அடையவில்

லையே?' என்று நம்மை நாமே கேட்டுக் கொண்டு, மேன்மைய டைய வில்லையெனின் நாணுதல் வேண்டும்.

3. மகனீயர்களையும், அனுபவ ஞானிகளையும் சாதுமகாத்மாக் கள், பக்தர்கள் இவர்களைக் கண்டு தன் சம்சார நிலையைக் கீழான நிலைமையைக் கண்டு நாணுதல்வேண்டும். மேலும் அவர்களைப் போன்ற உன்னத நிலையை அடைவதற்கு ஆன்மீக சிகரத்தினை எட்டிப்பிடிப்பதற்கு முயல வேண்டும்.

'அசாபலம்' - சலனத்தன்மை ரஜோ குண இயல்பு - மனதினை ஆத்மாவினின்றும் விலகுதற்கு இடம் கொடாதிருத்தல் வேண்டும்.

'தேஜஹ்' - பிரம்ம தேஜஸ் பெற்றிருத்தல் வேண்டும்.

'க்ஷமா' - பொறுமை, சகிப்புத்தன்மை, இருமைகளில் விகார மற்று பூமியைப் போன்று பழம்தரும் மரங்களைப் போன்று பொறு மையுடன் இருத்தல் வேண்டும். சுகர், யேசுகிறிஸ்து, முதலானவர்க ளின் பொறுமையுடன் இருத்தல் வேண்டும். சுகர், யேசுகிறிஸ்து, முதலானவர்களின் பொறுமை, சகிப்புத் தன்மை, இவற்றை அவ்வப் போது எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

'த்ருதிஹ்' - தைரியத்துடன் இருத்தல் வேண்டும். உண்மை சொரூபமான ஆத்மாவைக் குறித்துச் சிந்தித்திருத்தல், உலகிலுள்ள அழியக்கூடிய மாயப் பொருள்களைப் பற்றியும் அறிந்திருந்தால், மனிதன் தைரியத்துடன இருப்பான். எத்துணை விபத்துக்கள், துன் பங்கள் நேரிட்டாலும், மேருவைப் போன்று கம்பீரமாக நிற்பான்.

'சௌசம்' 1. புறத் தூய்மை (சரீரம், இருக்குமிடத்தின் தூய்மை) 2. உட்தூய்மை (இந்திரிய, மனம் இவற்றின் தூய்மை, தீய எண்ணங் கள் இல்லாதிருத்தல்).

'அத்ரோகஹ்' - எவருக்கும் துரோகம் மனங்கலங்கச் செய் யாமை, துரோக சிந்தனை கூட எழாமை.

'நாதி மானிதா' - தான் பூசிக்கத் தக்கவன் என்று எப்போதும் கர்வம் கொள்ளலாகாது. தன்னைப் பிறர் கௌரவிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தல் கூடாது. இதுமிகவும் தேவையான நற்குணம். இது இல்லாத காரணத்தால் பலரும் கர்வம், சுயகௌரவம் இவற் றால் அழிகின்றனர்.

'ஆஞ்சநேயருக்கு இருந்த பணிவு, தன்னடக்கம், தெய்வபக்தியு டையவனே ஆன்மீக அரங்கில் முன்னேற முடியும்.

இவ்விருபத்தாறு நற்குணங்கள் தெய்வ இயல்புடன் பிறந் தோர்க்கு இயல்பாகும். இவை இல்லாதவர் முயற்சி செய்து அவற் றைப் பெறுதல் வேண்டும். அவை மிகமிக அவசியம்.

**வினா :** *ஸ்ரீ கிருஷ்ண பகவானால் எத்துணை தெய்வகுணங்கள் சொல் லப்பட்டுள்ளன? அவை யாவை?*

**விடை :** *இருபத்தாறு. அவை வரிசையாக 1. பயமின்மை, 2. சித்த சுத்தி, 3. ஞான யோக நிலை, 4. தானம், 5. வெளி கரணங்களின் கட்டுப்பாடு, 6. ஞானயக்ஞம், 7. சாஸ்திர அத்யயனம், 8. (ஞான) தவம், 9. நேர்மை, 10. அகிம்சை, 11. உண்மை, 12. குரோதமின்மை, 13. தியாகம், 14. சாந்தி, 15. கோள்சொல்லாமை, 16. கருணை, 17. விஷயங்களின் மீது பற்றின்மை, 18. மென்மை, 19. நாணம், 20. சபல மின்மை, 21. ஒளி (பிரம்மதேஜஸ்), 22. பொறுமை, 23. தைரியம், 24. தூய்மை, 25. துரோக புத்தியின்மை, 26. கர்வமின்மை, இந்நற்கு ணங்களே தெய்வதனம், எனப்படும்.*

## முன்னுரை

*இனி அசுர இயல்பினை (அசுர குணங்களைக்) கூறுகிறார்.*

*தம்போ தர்போ அபிமானஸ்ச க்ரோதஹ் பாருஷ்யமேவ ச!*
*அக்ஞானம் சாபிஜாதஸ்ய பார்த்த ஸம்பத மாஸுரீம்!!* (4)

## சொற்பொருள்

*பார்த்த - அர்ஜுனா! தம்பஹ் - பகட்டு (கபட வேஷம்) தர்பஹ் - கர்வம் (இறுமாப்பு) அபிமானஹ் ச- தற்பொருமை (தானே சிறந்த வன் என்ற துர் அஹங்காரம்), க்ரோதஹ் கோபம், பாருஷ்யம் ஏவச - (வாக்கு முதலானவற்றில்) கடினம், அக்ஞானம் ச - விவேகமற்ற தன்மையும், ஆசுரீம் - அசுரத் தன்மையோடு கூடிய, ஸம்பதம் - இயல்பு என, ஆயிதாஸ்ய - பிறந்தோனுக்கு (பவந்தி - ஏற்படுகின் றன).*

## கருத்துரை

*ஓ அர்ஜுனா! பகட்டும், இறுமாப்பும், தற்பெருமையும், சின மும், கடுமையும், அக்ஞானமும் அசுர குணத்தோடு பிறந்தவனுக்கு இயல்பாகின்றன.*

**விளக்கம்**

இதுவரை சொல்லப்பட்ட நற்குணங்களைத் தெய்வ நிட்டையர், பக்தர்கள் எங்ஙனம் இயல்பாகவும், பெரிய தனமாகவும் கருதுவார்களோ, அவ்வாறே இச்சுலோகத்தில் சொல்லப்பட்ட அந்தக் குணங்களை அசுரர்கள், கெட்ட நெறியில் செல்வோர் பெரிய தனமாகக் கருதுபவர். எனவேதான் அவற்றிற்கு அசுர செல்வம் என்று பெயர் சொல்லப்பட்டது. உண்மையில் அவை தனமல்ல. உண்மையில் அவை பரமதரித்திரம் வாய்ந்த குணங்கள். இதற்கு முன் 26 நற்குணங்களைக் கூறி இப்போது 6 துர்குணங்களைக் கூறுகிறார். சாதகன் மாயையோடு பிரகிருதியோடு அவித்தையோடு செய்யப் போகும் போரில் தன் பக்க வீரர்களைப் பற்றியம், எதிர்ப் பக்க வீரர்களைப் பற்றியும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். எதிரிப் படையின் வீரர்களைத் தோற்கடிப்பதற்கு நம் பக்க வீரர்களைப் பலப்படுத்துவதற்கு அப்போதே இயலும். எனவே தான் பகவான் இங்குத் தெய்வ பண்புடைய நற்குணங்களைச் சொல்லி அசுர குணங்களையும் கூறுகிறார்.

ஒரு வீடு தூய்மையாய் இருக்க வேண்டுமெனில், அதற்கு முன்பிருந்த தூசி, ஒட்டடை, அசுத்த நீர் இவற்றை நீக்க வேண்டும். மேலும் தூபம், ஊதுவத்தி முதலானவற்றைப் பயன்படுத்தி வாசமுள்ளதாக்க வேண்டும். சுத்தமான தண்ணீர் அருந்துவதற்குக் கொணர வேண்டும். சரீரம் தூய்மையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டுமெனில் உள்ளிருக்கும் மலமூத்திரம் முதலான அசுத்தங்கள் வெளியேற வேண்டும். அவ்வாறே மனத்தூய்மைக்காக அம்மனத்தில் பல காலமாக இருக்கும் கெட்ட எண்ணங்களை, துராசைகள், துர்குணங்கள் இவற்றை முழுமையாக வெளியேற்ற வேண்டும். அதாவது அசுரகுணங்களுக்கு விடை கொடுத்து, நற்குணங்களைத் தெய்வ இயல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

துர்குணங்களில் முதன் முதலில் பகட்டு என்பது சொல்லப்பட்டுள்ளது. ஆன்மீக நெறியிலோ அல்லது வேறு எந்நெறியிலாயினும் கபடம், வேஷம், மோசம் இவை உதாவது, தாம் மிகச் சிறந்தவர் என்று நடித்தால் ஒரு வேளை உலகில் பலரை ஏமாற்றக் கூடுமே ஆயின் இறைவனை ஏமாற்ற முடியாது. அவரது இதயக் குகையில் உள்ள எண்ணங்கள் பலவற்றையுமே இறைவன் அறிவார். எனவே பகட்டு எனும் தீயகுணத்தினை அடியோடு களைதல் வேண்டும். கர்வத்தை ஒழிக்க வேண்டும். தனக்கேதாவது வித்தையோ அதிகா

ரமோ வந்தால் கர்வம் கொள்ளாது அவையனைத்தும் சர்வேசுவர னின் அருளினால் கிடைத்ததென பாவித்து வினயத்துடன் இருத்தல் வேண்டும். தெய்வ குணத்தில் குரோதமின்மை அசுர குணத்தில் 'குரோதம்' சொல்லப்பட்டமை கவனிக்கத்தக்கது. குரோதமின் மையை வளர்த்துக் கொள்க எனினும், குரோதத்தை ஒழித்துவிடுக என்றாலும் ஒன்றே. தெய்வ அசுர குணங்கள் இரண்டிலும் குரோதத் தைப் பற்றிச் சொல்லப்பட்டதால், குரோதமின்மை ஆன்மீகத்தில் எத்துணை அவசியம் என்பது தெள்ளத் தெளிவாகிறது. மேலும் சாதகன் முரட்டுத்தனமாக இருத்தல் கூடாது. வாக்கு முதலியவற்றில் கடினமிருத்தல் கூடாது. தெய்வ குணத்தில் சொல்லப்பட்ட மென் மையையே கொள்ள வேண்டும்.

**வினா :** *அசுர குணங்கள் எத்தனை? அவையெவை?*

**விடை :** *அவை ஆறு. அவை முறையாக 1. பகட்டு, 2. கர்வம், 3. தற்பெருமை, 4. கோபம், 5. கடுமை, 6. விவேகமின்மை.*

**வினா :** *இத்துர்குணங்களை என்ன செய்ய வேண்டும்?*

**விடை :** *முழுமையாக ஒதுக்கித்தள்ள வேண்டும்.*

**முன்னுரை**

தெய்வ இயல்பு மோட்சத்தினையும் அசுர இயல்பு பந்தத்தை யும் ஏற்படுத்த வல்லது என்கிறார்.

*தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா!*
*மாசுசஹ் ஸம்பதம் தைவீ மபிஜா தோஅஸி பாண்டவ!!* (5)

**சொற்பொருள்**

தெய்வீக - தெய்வீக இயல்பு. விமோக்ஷாய - முழுமையான (சம்சார) பந்த நிவர்த்தியின் பொருட்டு, அசுரீ (சம்பத்) - அசுர இயல்பு, நிபந்தயா - பந்தத்தின் பொருட்டு என்றும், மதா - (காரண மானவை) கருதப்படுகிறது. பாண்டவர் -அர்ஜுனா (த்வம் - நீ). வைம் - தெய்வ சம்பந்தமான, சம்பதம் - சம்பதத்தை (அடைவதற் காக) அபிஜாதுஹ் - பிறந்தவன், அபி - ஆக இருக்கிறாய், மாசுஹ் - (எனவே) வருந்தாதே!

**கருத்துரை**

*அர்ஜுனா! தெய்வ சம்பத்து மோட்சம் தருவதென்றும், அசுர சம்பத்து சம்சார பந்தத்தை ஏற்படுத்துவதென்றும் கருதப்படுகின் றன. நீ தெய்வ சம்பத்தினை அடைந்தவனாகவே பிறந்துள்ளாய். எனவே வருந்தாதே!*

**விளக்கம்**

*இதுவரை தெய்வ அசுர சம்பத்துக்களை விவரித்துக் கூறி, இனி அதன் பலன்களைப் பற்றிக் கூறுகிறார். ஏனெனில் பலனைப் பற்றி நன்கு அறிந்திருந்தால், அவற்றை கிரகித்துக் கொள்வதற்கோ, ஒதுக் குவதற்கோ இயலும். தெய்வ சம்பத்து மோட்சத்தினை அதாவது பந்தவிமுக்தியினை, அசுர சம்பத்து பந்தத்தினையும் அடையச் செய் யும் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஒன்று விடுதலையளிக் கும். இன்னொன்று கட்டுப்படுத்தும். எனவே இவற்றில் எது சிறந் ததோ, எதனைப் பின்பற்றுதல் வேண்டுமென்பதை அறிஞர்களே யோசித்துக் கொள்ளக்கூடும். துன்பத்தினை எவரேனும் விரும்பு வரா? சங்கிலியால் கட்டப்படுவதை எவரேனும் வேண்டுவரா? எனவே பலனில் ஒன்று மோட்சம், மற்றொன்று பந்தத்தை ஏற்படுத் துவது என்றதால் விவேகிகள் மோட்ச பதவியையளிக்கவல்ல தெய் வசம்பத்தையே வேண்டுவர். பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய அசுர இயல்பினை ஒதுக்குவர். இப்போதே பல கோடிப் பிறவிகள் பந்தத் தில், சங்கிலியால் பிணைக்கப்பட்டு அடிமையாயுள்ள ஜீவன் இப் போதாவது விடுதலையடைதற்கு ஆசைப்படுவது சிறந்தது. எனவே மேன்மையைக் கோரும் ஒவ்வொருவரும் முயற்சியினால் இறைவ னிடம் சேர்க்கும் தெய்வ குணங்களை வளர்த்துக் கொண்டு அசுர குணங்களை விட்டுவிடுதல் நலம்.*

*இதற்கு முன்பு நான்கு சுலோகங்களால் அவ்வக் குணங்க ளோடு பிறந்தவர்க்கு அவ்வவ்குணங்கள் ஏற்படுகின்றன என்பதன் பொருள், அவ்வவ் இயல்புகளை வருங்காலத்தில் அடைவதற்குத் தகுதியானவராகப் பிறந்தவர்க்குக் கிடைக்கின்றன என்பதே. அவர் கள் பிறந்தபின் முயற்சி செய்து அக்குணங்களைச் சம்பாதித்துக் கொண்டனர் என்பதே அதன் பொருள். அவ்வக் குணங்கள் வம்ச பாரம்பரியாக, குலம் மீது ஆதாரப்பட்டுள்ளது என்பதல்ல. அர்ஜு னன் தெய்வ இயல்புடன் பிறந்தவன் கேட்பதற்கு அவன் தகுதியுடை யவன் என்றும், நற்குணங்கள் நிரம்பப் பெற்றவன் என்பதும் தெளி*

வாகிறது. அத்தகைய நல்லியல்பு உடையோன் ஆனதால்தான் இறைவனின் முகார விந்தத்தினின்றும் வெளிப்பட்ட போதனைகளை நேரிடையாகப் பெறும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது.

''மாசுசஹ'' - என்ற வாக்கியம் கீதையின் செய்தி அது. கீதையில் துன்புற வேண்டாம் - அர்ஜுனா! நீ தெய்வ இயல்புடன் பிறந்திருக்கிறாய். எனவே துக்கப்படுதல் வேண்டாம்! என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்வதால் துக்கமின்மைக்கு தெய்வ இயல்பே காரணமென்பதும், தூய்மையான நெறிமுறைகளே இதயத் தூய்மைக்குக் காரணமென்பதும் தெரிகிறது. அதுவுமின்றி, அசுர இயல்பு துக்கத்திற்குக் காரணமென்றும், அவ்வியல்புடையோர் எப்போதும் துக்கம் அடைந்தே தீருவர் என்பதும் இவ்வாக்கியத்தில் தொனிக்கிறது. எனவே துக்கமின்மை, ஆனந்தம் அடைவதற்கு விரும்புவோர் இறைவனுக்குப் பிடித்தமான தெய்வ இயல்பினை அடைவதற்கு, அசுர இயல்பினை ஒதுக்குவதற்கு முயல வேண்டும்.

இங்கு 'மோக்ஷாய' என்று கூறாது 'விமோக்ஷாய' என்று சொல்வது, 'பந்தாய' எனாது 'நிபந்தாய' என்பது கவனிக்கத்தக்கது. அதாவது, தெய்வ இயல்புடையோர் தவறாது விமுக்தியையும், அசுர இயல்புடையோர் எல்லாம் பந்தத்தையும் பெறுவர் என்பது பொருள்.

**வினா :** அசுர இயல்பின் பலன் என்ன?

**விடை :** பந்தம்.

**வினா :** இதனின்றும் மோட்சத்திற்கு வழி எதுவெனத் தெரிகிறது?

**விடை :** தெய்வ இயல்புகளை நன்கு பயிலுதலே முக்திக்கு வழி.

**வினா :** பந்தம் (துக்கம்) எதனால் ஏற்படுகிறது?

**விடை :** அசுர குணம் பெற்றிருப்பதால்.

**வினா :** அர்ஜுனன் எத்தகைய இயல்புடன் பிறந்தவன்?

**விடை :** தெய்வ இயல்புடன் பிறந்தவன்.

### முன்னுரை

தெய்வீக குணமுடையவர், அசுர குணமுடையவர் என இரண்டு வகையாக உயிர்கள் விளங்குகின்றன என்கிறார்.

*த்வௌ பூத ஸர்கௌ லோகேஅஸ்மின் தைவ ஆஸுர ஏவச!*
*தைவோ விஸ்தரசஹ் ப்ரோக்த ஆஸுரம் பார்த்த மேச்ருணு!! (6)*

### சொற்பொருள்

பார்த்த! - ஓ அர்ஜுனா! அஸ்மின் லோகே - இவ்வுலகில், தெவஹ் - தெய்வ குணங்களுடன் கூடியது என்றும், ஆஸுரஹ் ஏவ - அசுர குணங்கள் உடையவையென, த்வௌ - இரண்டு விதமான, பூத ஸர்கௌ - உயிர்சிருஷ்டிகள் (ஸ்திரஹ் இருக்கின்றன), (அதில்), தெய்வத்தை - தெய்வ சம்பந்தமானது, விஸ்தரஸஹ் - விரிவாக ப்ரோக்தஹ் (உனக்கு) சொல்லப்பட்டது. (இனி) அசுரம் - அசுர இயல்புடையவற்றைப் பற்றி, மே - என்னால், ச்ருணு - கேள்.

### கருத்துரை

அர்ஜுனா! இவ்வுலகில் தெய்வீகம், அசுரம் என்றும் இருவகை உயிர்ப்பிறப்புகள் உண்டு. தெய்வ இயல்பு விரிவாகச் சொல்லப்பட்டது. அசுர இயல்பை இனி என்னிடம் கேள்.

### விளக்கம்

உண்மையில் உலகில் இரண்டே இரண்டு ஜாதிகள் உள்ளன என்பது இச்சுலோகத்தின் மூலம் தெரிய வருகிறது. 1. தெய்வ ஜாதி, 2. அசுர ஜாதி அதாவது ஒன்று ஆர்ய ஜாதி, இன்னொன்று ஆரியரல்லாதார். ஏனைய ஜாதிகள் மக்களால் ஏற்படுத்தப்பட்டவையே. எனவே ஒவ்வொருவரும் தாம் எந்த ஜாதியைச் சேர்ந்தரென்பதை தாமே பரீட்சித்துக் கொண்டு தம்மிடத்து ஏதேனும் அசுர குணமிருப்பின் அதற்கு விடை கொடுத்து தெய்வ குணத்தை அபிவிருத்தி செய்து கொண்டு தெய்வ ஜாதியில் சேர்ந்து மேன்மையடைதல் வேண்டும்.

### முன்னுரை

இனி அசுர இயல்புடையோரைக் குறித்து 12 சுலோகத்தில் விவ

*ப்ரவிருத்திம் ச நிவிருத்திம் சஜனாந விதுராஸுராஹ்!*
*ந சௌசம் நாபி சாசாரோ நஸத்யம் தேஷு வித்யதே!! (7)*

## சொற்பொருள்

ஆஸுராஹ் - அசுர இயல்புடைய, ஜனாஹ் - மக்கள், ப்ரவிருத்திம்ச - செய்யத் தகுந்த நல்வினையையோ, நிவ்ருத்திம்ச - விலக்குவதற்கான தீவினையையும், ந விதுஹ் - அறியார், தேஷு - அவர்களிடம் சௌசம் - தூய்மை, நவிவ்யிதே - இல்லை, அசாஹ்ச - நல்லொழுக்கமுமில்லை, சத்யம் - வாய்மையும், ந - இருப்பதில்லை.

## கருத்துரை

அசுர இயல்புடை மக்கள் செய்யத் தகுந்த நல்வினையையோ, செய்யத் தகாத தீவினையையோ அறியார். அவரிடத்து, தூய்மை, நல்லொழுக்கம், உண்மை இவை இருப்பதில்லை.

## விளக்கம்

அசுர இயல்புடையோர் தர்ம காரியங்களைச் செய்வதோ, அதர்ம காரியங்களினின்றும் விலகுவதோ இல்லை. வேறொருவர் சொல்வதையும் கேளார் கீழானோர். தம் தவறை இன்னொருவர் சுட்டிக் காட்டினால் அதனை மாற்றிக் கொள்பவர் இடைத்தரத்தவர். தவறே செய்யாதவர் மேலானவர். இந்த சுலோகத்தில் கீழானவர்களைப் பற்றியே சொல்லப்பட்டது. மேலும் பிரவிருத்தி, நிவிருத்தி என இரண்டும் சொல்லப்பட்டுள்ளது. இங்கு பிரவிருத்தியென்றால் செய்யத் தகுந்தவையென்றும், நிவிருத்தியென்றால் செய்யத் தகாதவையென்றும் பொருள். இரண்டையும் அறிஞன் அறிதல் வேண்டும். அதாவது தெய்வத் தொடர்பான காரியங்கள் தெய்வ குணங்கள் முதலான கொள்ளத் தகுந்தவை பற்றியும், விஷயங்களையே பின் தொடர்தல்; அதர்ம காரியங்கள், அசுர குணங்கள் முதலான ஒதுக்கத் தக்கவை பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். அசுர இயல்புடையோர் அவற்றை அறியார் என இங்குச் சொல்லப்பட்டது.

**வினா :** *அசுர இயல்பின் இலட்சணங்களைக் கூறுக?*

**விடை : 1. அவர்கள் செய்யத் தகுந்தவையோ, பாவ காரியங்களையோ அறிய மாட்டார், 2. தூய்மை, நல்லொழுக்கம், உண்மை இவை அவர்களிடத்து இராது.**

*அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுர் நீச்வரம்!*
*அபரஸ்பர ஸம்பூதம் கிமன்யத்காமஹைதுகம்!! (8)*

## சொற்பொருள்

*தே - அவர்கள், ஜகத் - உலகம், அசத்யம் - உண்மையில்லாதது அப்ரதிஷ்டம் - நிலையில்லாதது (தர்மானுஷ்டான்கள் இல்லாதது என்றும், அநீச்வரம் - கடவுளில்லாதது என்றும், காமஹைதுகம் - காமத்தைக் காரணமாகக் கொண்டது என்றும், அபரஸ்பர ஸம்பூதம் - ஆண், பெண் இணக்கத்தாலானது அன்றி, அன்யத் வேறு, கிம் - என்ன உள்ளது என்றும், அஹுர் - சொல்கிறார்கள்.*

## கருத்துரை

*அவர்கள் உலகம் உண்மையில்லாதது என்றும் (வேதங்கள் முதலானவற்றை) தர்மம், அதர்ம விவஸ்தைகள் இல்லாதது, (கர்த்தாவான) ஈசுவரன் இல்லாதது காமமே காரணமாக ஆண், பெண் இணக்கத்தினாலேயே ஆனதன்றி வேறு காரணமில்லாததுஎன்றும் சொல்கின்றனர்.*

## விளக்கம்

*அசுர இயல்புடையோர், இவ்வுலகம் வேதங்கள் முதலான பிரமாணங்களுடன் கூடி, தர்ம, அதர்ம செயல்களுடன் கூடி, இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதை ஒப்புக் கொள்ளாது, இவ்வுலகமனைத்தும் தானாகவே தோன்றுகின்றது. கண்ணில்புரையோடிய நிலையில் உள்ள பொருள்கள் சரியாகப் பார்க்க முடியாது போவதைப் போல அஞ்ஞானத்தினால் மூடப்பட்ட ஜீவன் உண்மையைக் காண இயலாது.*

**வினா :** *அசுர இயல்புடையோரின் இலட்சணங்கள் சிலவற்றைக் கூறுக?*

**விடை :** *அவர்கள் 1. இவ்வுலகம் வேதம் முதலான பிரமாணம் என்றும், தர்ம அதர்மமென்பது இல்லையென்றும், கர்த்தாவான ஈசுவரன் இல்லையென்றும் சொல்வர். 2. காமமே காரணமாக ஆண், பெண் தொடர்பால் தான் இவ்வுலகமே ஏற்பட்டதேயன்றி வேறு விதமாக இல்லை என்பர்.*

*ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மானோ அல்பபுத்தயஹ!*
*ப்ரபவந்த்யுக்ரகர் மாணஹ க்ஷயாய ஜகதோ அஹிதாஹ்!! (9)*

## சொற்பொருள்

*(தே - அசுர இயல்புடைய அவர்கள்) ஏதாம் த்ருஷ்டம் - இந் (நாஸ்திக) பார்வையை, வைஷ்டப்ய - பிடித்துக் கொண்டு, நஷ்டாத் மானஷ் - கெட்ட மனதையுடையவர்களாய், அல்ப புத்தயஹ் - அற்ப புத்தியுடைவர்களாய், (ஏனையவர்களை ஹிம்ஸிப்பவர்கள்), அஹி தாஹ் - (உலகிற்கு) பகைவர்களாய், ஜகதஹ் - உலகின், க்ஷயாய - அழிவிற்கென்றே, ப்ரபவந்தி - பிறக்கிறார்கள்.*

## கருத்துரை

*அவர்கள் இத்தகைய நாஸ்திக நோக்குடையவராய்த் தீயமனது டன் புல்லறிவு கொண்டவராய், கொடும் செயல்கள் புரிபவராய், உலகிற்குப் பகைவர்களாய், அதன் அழிவிற்கென்றே பிறக்கின்றனர்.*

## விளக்கம்

*'நஷ்டாத்மானஹ்' என்ற இச்சொல்லினால் நாஸ்திக நோக்கு, காம இயல்பு, உடையோரின் மனம் தவறாது நஷ்டமடைகிறது என் பது தெளிவு. மேலும் அத்தகையோரின் புத்தி அற்பமாகவே இருக் குமே அன்றி பரந்தமனமாக இருக்காது என்பது தெளிவு. அவர்களது நோக்கு குறுகியது. இவ்வாறாக நாஸ்திகம், காமநோக்கு, சித்தவி னாசத்திற்கு காரணமாவதால் ஒழிக்கத்தக்கது என்றும் மேற்சொல் லப்பட்ட பகவானது வாக்கியத்தினால் நிரூபிக்கப்படுகிறது. மேலும் நாஸ்திகர்கள் காயமே ச்ருஷ்டிக்கு மூலகாரணம் என்றெண் ணித் தம்மைக்குறித்து விவேகமின்மையால் பெரிதாக எண்ணி இருப்பினும், இறைவனது பார்வையால் அற்பபுத்தி உடையவர் களே.*

*க்ஷயாய ஜகதீஹ - உலகின் அழிவிற்கே அவர்கள பிறக்கின்ற னரே அன்றி மேன்மைக்கு அல்ல. இதர உயிர்களை ஹிம்ஸிப்பதே அவர்களது வேலையன்றி உதவி செய்வதல்ல. அவர்கள் உலகிற்குப் பகைவர்களே அன்றி நண்பர்கள அல்ல. அவர்கள் பூமிக்கு பாராமா கின்றார்கள்.*

**வினா :** *அரசு இயல்புடையோரின் இலக்ஷணங்கள் இன்னும் சிலவற் றைக் கூறுக?*

**விடை :** *அவர்கள் 1. நாஸ்திக நோக்கினை உடையவராய் மனத்தைக் கெடுத்துக் கொள்கின்றனர். 2. அல்பபுத்தி உடையவர், 3. கொடும்*

செயல் புரிபவர், 4. உலகின் பகைவர்கள், 5. உலகின் அழிவிற்கா கவே பிறக்கின்றனர்.

*காமமாச்ரித்ய துஷ்பூரம் தம்பமானமதான்விதாஹ்*
*மோஹாத் க்ருஹீத்வா அஸத்க்ராஹான் ப்ரவர்தந்தே அசுசி வ்ரதாஹ*

## சொற்பொருள்

துஷ்பூரம் - பூர்த்தி செய்ய இயலாத, காமம் - காமத்தினை, ஆச்ருத்ய - சார்ந்து, தப்பமான மதான்விதாஹ் - ஆடம்பரம், தற்பெருமை, மதம், இவற்றை உடையவராய், மோஹத் - மதிமயக்கம் உடையவராய், அஸத்க்ரா ஹான் கெட்ட எண்ணங்களை, க்ருஹீத்வா - க்ரஹித்தவர்களாய், அகசிவ்ருதாஹ் - தீய தொழில் உடையவர்களாய், ப்ரவர்தன்தே - தொழில் புரிகிறார்கள்.

## கருத்துரை

அவர்கள் நிறைவேறாத நெடும் காமம் உடையவர்களாய், ஆடம்பரம், பெருமை, மதம் பொருந்தியவர்களாய், விவேகம் இன்மையால், கெட்ட எண்ணங்களைக் கொண்டு, தீய தொழில் புரிபவராய் இருக்கின்றனர். 'துஷ்பூ ரோனான லேனா' என்று இதற்குமுன் மூன்றாவது அத்யாயத்தில் இதனைக் குறித்துச் சொல்லப்பட்டது. இத்தகைய நிறைவேறாத காமத்தைக் கொண்டவராதலால் எப்போதும் அமைதி இன்றி இருக்கின்றனர். 'தம்பமானமத அன்விதாஹ்' - ஆடம்பரம் தற்பெருமை, மதம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிருந்தாலும், ஜீவனுக்கு அழிவே ஏற்படும். அவ்வாறிருக்கையில் மூன்றும் சேர்ந்திருந்தால் அவனது நிலை எவ்வாறிருக்கும்? இருப்பது மோஹாத் - விவேஹமின்மையால் அக்ஞானத்தின் மயக்கத்தில் அவர்கள் செய்யக்கூடாதவற்றைச் செய்பவர் என்றும் க்ரஹிக்கக் கூடாதவற்றை க்ரஹிப்பவர் என்றும் பொருள்.

அசுசவ்ருதாஹ் - அவர்கள் தீயதீர்மானங்களை உடையவராய், தூய்மை அல்லாத மாமிசம் புசிப்பவராய், அதாவது தினமும் அவற்றைச் செய்ய வேண்டும் என்ற பற்றுடையவராய் இருப்பர். விரதங்கள் தூய்மையான காரியங்களுடன் தொடர்புடையவையாய் இருக்கும் போதே நற்பலனை அளிக்கும். எனவே நன்மை செய்யும் விதரங்களை மேற்கொள்ள வேண்டுமே அன்றித் தூய்மை அற்றவைகளை அல்ல. நல்ல தீர்மானங்களையே க்ரஹிக்க வேண்டுமே அன்றித் தீயவைகளை அல்ல.

**வினா :** *காமம் எத்தகையது?*

**விடை :** *நிறைவேற்ற இயலாதது.*

**வினா :** *அரசு இயல்புடையவர்கள் இயல்புகள் மேலும் சிலவற்றைக் கூறுக?*

**விடை :** *அவர்கள் 1. நிறைவேறாத காமம் பிடித்தவர்கள், 2. ஆடம்பரம் தற்பெருமை, மதம் இவை உடையவர்கள், 3. விவேகமற்றவர்கள், 4. தீயதொழில் புரிபவர்கள்.*

*சிந்தாம பரிமேயாம் ச ப்ரலயாந்தாமு பாச்ரிதாஹ!*
*காமோபபோக பரமா ஏதாவதிதி நிஸ்சிதாஹ!!*

*ஆசாபாச சதைர்பத்தாஹ காமக்ரோத பராயணாஹ!*
*ஈஹந்தே காம போகார்த்தமன்யாயேனார்த்த ஸஞ்சயான்!!*

சொற்பொருள்

*ச - மேலும், அபரிமேயாம் - அளவு கடந்த, ப்ரலய அந்தாம் - சாகும் வரை, விடமுடியாத, சிந்தாம் - கவலையை, உபாச்ருதாஹ் - அடைந்தவர்களாய், மேலானதாகக் கருதி, ஏதாவத் இதி காமபோகமே நிலையானது என்றெண்ணி, நிஸ்சிதாஹ் - தீர்மானம் செய்தவர்களாய், காமக்ரோதம் இவற்றையே முக்யமாக அதன் வசப்பட்டவராய், காமயோகார்தம் - காமத்தை அனுபவிப்பதற்காக (அன்யாயேன - ந்யாயமற்ற வழிகளில் அர்த்த ஸஞ்சயான் - பொருள் குவியல்களை, ஈஹந்தே - தே முயல்கின்றனர்).*

கருத்துரை

*மேலும் அவர்கள் அளவுகடந்ததும் சாகும் வரையிலும், கவலையை உடையவர்களாய் காம நுகர்ச்சியையே அனைத்திலும் மேலானதாகக் கருதி அதைவிட மேலானது ஒன்றும் இல்லை என்று தீர்மானம் செய்தவர்களாய், மிக்க ஆசை, பாசம் என்ற கயிறுகளால் கட்டப்பட்டவராய், காமக் க்ரோதம் இவற்றில் வசப்பட்டவராய் காம போகத்தின் பொருட்டுச் செல்வக் குவியலைத் தேட முயல்கின்றனர்.*

**விளக்கம்**

அத்தகைய உலகியல் மனிதர்களின் சிந்தனை, ஆசைகளுக்கு அளவில்லை. அவர்களது சிந்தனைகளுக்கு மரணம் அல்லது மஹாப்ரளயமே முடிவு.செய்ய இயலும் அன்றி அவர்கள் சுயமாக நிறுத்தமாட்டார்கள் பக்தர்கள், முமுக்ஷுக்கள், தெய்வத்தையே மேலான கதியாக வாழ்க்கை லக்ஷியமாக எவ்வாறு எண்ணுகின்ற னரோ ?அவ்வாறே அசுர இயல்புடையோர் காமயோகத்தை மேலா னதாகக் கருதி உலகில் காமமே உயர்ந்தது, சுகத்தை அளிக்கக் கூடி யது என்று எண்ணுகின்றனர். பலவிதமான துன்பங்கள் அனுபவிக் கையில் இவர்கள் நூற்றுக்கணக்கான ஆசைகள் என்னும் கயிற்றில் கட்டப்பட்டிருப்பதால் (ஆசாபாசத்தைஹ் பத்தாஹ்) இனி அவர்க ளின் துன்பங்கள், அமைதி இன்மை இவை வர்ணிக்க இயலாதது என்பதை ஊஹித்துக் கொள்ள முடியும். இத்தகையோர் காமக்ரோ தங்களைவிட இயலாதவர்களாய் அதன் நுகர்ச்சிக்காகவே ஞாயமற்ற வழியில் தொழில் புரிபவர். 'அரத்த் சஞ்சயான்' என்று சொல்வதால் அவர்கள் ஏதோ சிறிது பொருளுடன் திருப்தி அவைதில்லை என் றும், செல்வக்குவியல்களை வேண்டுகின்றனர் என்றும், அதனை யும் நற்காரியங்களுக்காக அன்றி விஷய போகங்களுக்காகவே என்ப தும் தெரியவருகிறது. இதனின்றும் இவர்கள் கோரமான வழிகளில் செல்கின்றனர் என்பதும் தெளிவாகிறது. 1. காமத்தின் இருப்பிடம், 2. நேர்மையற்ற வழி. எனவே சாதகர்கள், முமுக்ஷுக்கள் இத்தகை யோரின் தொடர்பின்றி வெகு எச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

**வினா :** அசுர இயல்புடையோர் எவ்வாறிப்பார்?

**விடை :** 1. முடிவுறாத ஆசை சிந்தனைகள் உடையவர், 2. காமபோ கமே மேலானதாகக் கருதுபவர், 3. மிகுந்த ஆசை பாசங்களால் கட்டுப்பட்டவர், 4. காமக்ரோதமுடையவர்கள், 5. விஷயபோகங் களை அனுபவிப்பவராய் அதற்காக ஞாயமற்ற வழியில் செல்பவர்.

*இதமத்ய மயாலப்தமிதம் ப்ராப்ஸ்யே மனோரதம்!*
*இதமஸ்தீதமபி மே பவிஷ்யதி புனர்தனம்!! (13)*
*அஸௌ மயா ஹதஹ சத்ருர்ஹனிஷ்யே சாபரானபி!*
*ஈச்வரோஹ மஹம் போகீஸித்தோ அஹம் பலவான்ஸுகீ!! (14)*
*ஆட்யோ அபிஜனவானஸ்மி கோஅன்யோ அஸ்தி ஸத்ருசோமயா!*
*யக்ஷ்யே தாஸ்யாமி மோதிஷ்ய இத்ய க்ஞான விமோஹிதாஹ்!! - (15)*
*அநேகசித்த விப்ராந்தா மோஹஜால ஸமாவ்ருதாஹ்*

*ப்ரஸக்தாஹ் காமபோகேஷு பதந்தி நரகே அசுசௌ!! (16)*

## சொற்பொருள்

இதம் - இது (விருப்பம்), அத்ய - இப்போது, மயா - என்னால், லப்யம் - அடையப்பட்டது. இதம் மனோரதம் - இவ்விருப்பத்தை, ப்ராப்ஸ்யே அடையப்பெறுவேன், இதம் - இது (தனம்), அஸ்தி - இருக்கிறது. இதம் தனம் - அபி - இந்த தனமும், மே - எனக்கு, புஹ மறுபடியும், பவிஷ்யதி - வந்து சேரும், அசௌ சத்ருஹ - இந்த பகைவனும், மயா - என்னால், ஹதஹ் - கொல்லப்பட்டான், அப ரான் அபிச - மற்றவர்களையும், ஹனிஷ்யே - கொல்லுவேன், அஹம் நான், ஈசுவரஹ் - ஆள்பவன், அஹம் - நான், போகீ, போகத்தை அனுபவிப்பவன், அஹம் - ஆள்பவன், அஹம், சித்தஹ் - நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் சக்தியுடையவன், பல வான் - பலமுடையவன், சுகீ - இன்புறுவோன், அயே - தனவான், அபிஜணவான் - உயர் குலத்தோன், அஸ்மி இருக்கிறேன். மயா - எனக்கு, ஸத்ருஸஹ் - சமானவான், அன்யஹ் - வேறொருவன், கஹ - எவர், அஸ்தி- இருக்கிறார்? யேக்ஷ்ய - யாகம் செய்வேன், தாஸ் யாமி - தானங்கள் செய்வேன், மோதிஷ்யே - மகிழ்வடைவேன். இதி - இவ்வாறு, அக்ஞான விமோதாஹ் - அஞ்ஞானத்தினால் மோஹம் (பிரமை) அடைந்தவர், அநேக சித்த விப்ராந்தா - அநேக விதமான சிந்தனைகளால் குழப்பமடைந்தவர்களாய், மோஹ ஜால ஸமாவ்ருதாஹ் மோஹம் (மனைவி, மக்கள், சரீரம் இவற்றின் மீது பற்று), என்னும் வலையால் கட்டுண்டவர்களாய், காம - போகேஷு - காமத்தை (விஷயங்களை) அனுபவிப்பதில், ப்ரஸக் தாஹ் - அதிகமான விருப்பமுடையவர்களாய் (ஸன்தஹ் - ஆசி), அசுசௌ - கீழ்த்தரமான, நரகே நரகத்தில், ப - தந்தி - வீழ்கின்றனர்.

## கருத்துரை

''இன்று நான் விரும்பியதை அடைந்தேன். என் விருப்பங்கள் இனியும் நிறைவேறும். இந்தச் செல்வம் எனக்குள்ளது. இனியும் எத்துணையோ செல்வத்தை நான் அடைவேன். இந்தப் பகைவனை நான் கொன்றேன். ஏனைய பகைவர்களையும் என்னால் கொல்ல முடியும்; நான் தலைவன்; எல்லாப் போகங்களையும அனுபவிப்ப வன். நினைத்த காரியத்தை நிறைவேற்றும் சக்திபடைத்தவன்; பல வான்; சுகத்தையனுபவிப்பவன், தனவான், சிறந்த குலத்தில் பிறந்த வன்; எனக்கு சமமானவர் வேறொருவரும் இல்லை. நான் யக்ஞங் கள் செய்வேன். தானங்கள் கொடுப்பேன். ஆனந்தத்தை அனுபவிப்

பேன்'' என்று இவ்வாறாக அக்ஞானத்தினால் மோகமடைந்தவர்கள், பலவிதமாக சித்தம் குழப்பமடைந்து, மோகத்தினாலும், வலையால் மூடப்பட்ட, காமத்தினையனுபவிப்பதில் மிக்க ஆசையுடையவர்கள் மிக்க கீழ்த்தரமான நரகத்தையடைகின்றனர்.

**விளக்கம்**

அசுர இயல்புடையோன் குணம், சித்தம் எவ்வாறிருக்குமென்பதை ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா இச்சுலோகத்தில் மிக விரிவாக வர்ணிக்கிறார். அசுரகுணமுடையோர் காணப்படும் உலகினை நிலையென நம்பி, கணநேரமேயுள்ள பொருள்களின் மீதே பேராசை கொண்டு, அப்பொருள்களைச் சம்பாதிப்பதிலேயே பெரிதாக நினைத்து கடத்துடன் சொல்லும் வாக்கியங்கள் இங்கு உதாரணமாக வகுத்துக் காட்டப்பட்டுள்ளன. அசுர குலத்தின் அகம்பாவம், கர்வம், தற்பெருமை இவை நன்கு காட்டப்பட்டுள்ளன.

ஆசைகளை அனுபவித்தவுடன், அவை இன்னும் பெருகுகின்றனவே தவிர குறைவதில்லை. எனவேதான் ஒவ்வொன்றையும் அனுபவித்து இன்னும் அனுபவிக்க வேண்டும் என்ற மகிழ்ச்சியுடன் இருப்பர் எனப்பட்டது. மேலும் நான் சிறந்தவன் என்னுடன் சமானமானவர் எவர்?' என்ற தற்பெருமையுடனும் அகங்காரத்துடன் அவர்கள் சித்தம் குழப்பமடைந்து அமைதியின்றி இறுதியில் கோரமான நரகத்தையே அடைவர் எனப்பட்டது. துர்குணங்களனைத்தையும் விவேகிகள் தவறாது ஒழித்தல் வேண்டுமென்பது தெளிவாகிறது. இந்த சுலோகத்தில் அவர்களது குற்றங்கள் அதன் பலன்,இரண்டும் சொல்லப்பட்டன. நரகத்தை அடைவதேஅதன் பலன். அஞ்ஞானிகள் இவ்வுலகில் எத்துணையோ சுகங்கள இருப்பினும், மேலுக்கு சுகம் போல் தோன்றும் உள்ளுக்குள் பலவிதமான மனோ வியாதிகள், குழப்பங்கள் இவற்றை அனுபவித்து இறுதியில் தூய்மையற்ற நரகத்தினையே அடைகிறார்கள். அவர்கள் அனுபவிக்கும் விஷய சுகங்கள் ராஜஸசுகங்களேயன்றி சாத்வீக சுகங்கள் அல்ல. ராஜஸசுகம் இறுதியில் துன்பத்தையே தோற்றுவிக்கும். யக்ஞங்களை நான் செய்வேன். தானங்கள் அளிப்பேன் என்று அவர்கள் சொல்வதற்கு ஆடம்பரமே காரணமேயன்றி, உண்மையல்ல. ஒரு வேளை அவர்கள் யக்ஞங்கள் முதலானவற்றைச் செய்யினும் அது பெயரளவில் தான் என்று இனி வரும் 17வது சுலோகத்தில் சொல்கிறார் (நாம யக்ஞன்தே) இங்கு 'ஸக்தாஹ' எனாது 'ப்ரஸக்தாஷ் ' என்றதால் அவர்கள் விஷய போகங்களில் மூழ்கியிருப்பர் என்பது தெரிகிறது.

மேலும் வதந்தி, என்று சொல்வதால் அவர்கள் அழிவையே அடைகிறார்கள் என்பது அதன்பொருள். இந்த சுலோகத்திலிருந்து மக்கள் எத்துணை பலம், செல்வம், புகழ், ஐசுவ்ரியம் இவை பெற்றிருந்தாலும் சித்தசுத்தியில்லாவிடில் அகங்காரம், கர்வம் அழியாவிடில் இறுதியல் அழிவையே அடைகிறார்கள் என்பது தெளிவு.

**வினா :** அசுர இயல்புடையோர் இன்னும் எங்ஙனம் இருப்பர் என்பதைத் தெரிவிக்கவும்?

**விடை :** அவர்கள் இந்த ஆசை இப்போது நிறைவேறியது. வேறு ஆசை விரைவில் நிறைவேறும். இந்த தனம் இப்போது கிடைத்தது. இன்னும் அதிகதனம் விரைவில் கிட்டும். நான் இந்தப் பகைவனைக் கொன்றேன். இனியும் ஏனைய பகைவர்களைக் கொல்வேன். நான் பிரபு, நான் போகீ, சுகீ, தனவான், பலவான். நான் உயர்ந்த குலத்தில் பிறந்தவன். என்னோடு சமமானவர் இவ்வுலகில் இல்லை. நான் யோகங்கள், தானங்கள் செய்வேன். நான் மகிழ்வேன் என்று கர்வத்துடன் அக்ஞானத்தினால் சொல்வர். பலமனக் குழப்பங்களை அடைவதிலிருந்து மோகமெனும் வலையால் மூடப்படுவர்.

*ஆத்மஸம் பாவிதாஹ் ஸதப்தா தனமான மதான்விதாஹ!*
*யஜந்தே நாமயக்ஞஸ்தே தம்பேனா விதி பூர்வகம்!!* (17)

*அஹங்காரம் பலம் தர்பம் காம் க்ரோதம் ச ஸம்ச்ரிதாஹ!*
*மாமாத்ம பரதே ஹேஷு ப்ரத் விஷந்தோ அப்யஸூய காஹ!!* (18)

சொற்பொருள்

ஆத்மஸம்பாவிதாஹ் - தம்மைத் தாமே புகழ்ந்து கொள்வோராய், ஸ்தப்த்ா - பணிவு, பெரியோர்களிடத்து மரியாதை இல்லாதவராய், தனமான மத அன்விதாஹ் - செல்வச் செருக்கினால் மதம்பிடித்தவர்கள், அஹங்காரம் - அகங்காரம் - பலம் - பலத்தையும், தர்பம் - தற்பெருமையையும், காமம் - காமத்தையும், குரோதம் - குரோதத்தினையும், தம்சரீரத்திலும், ஏனையோரது சரீரத்திலும், உள்ள (காட்சியாய்) மாம் -என்னை, (ப்ரத் விஷந்தஹ் - வெறுப்பற்றவர்களாய், அப்யஸூயகா - அவமதிப்பவர்களாகிறார்களே, தே - அசுர இயல்புடைய அவர்கள், தம் பேன ஆடம்பரத்துடன், அவிதிபூரகம் - விதியினின்றும் வழுவி, நாம யக்ஞஸ்தே - பெயரளவில் யாகம், யஜந்தே செய்பவர்.

**விளக்கம்**

'ஆத்மஸம்பாவிதா', 'ப்ரதிவஷந்தஹ்' என்ற சொற்களின் மூலம் தன் புகழ்ச்சி, ஏனையோரை நிந்தித்தல் என்ற இரண்டு குற்றங்கள் இங்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அஞ்ஞானிகள் தம்மைத் தாமே பெரிதாக நினைத்துக் கொள்வர். அதுமட்டுமின்றி ஏனையோரைக் கீழாக எண்ணி வெறுப்புக் கொள்வர். எல்லா உயிர்களின் சரீரத்திலுமுள்ள சாட்சியாய் ஒளிருகின்ற பரமாத்மாவினைகூட அவர்கள் வெறுப்பர். அவனது யக்ஞங்களையும் அவனது வாக்கான வேதங்களையும், சாஸ்திரங்களையும் இழித்துப் பேசுவர். செல்வச் செருக்கால் கண் மண் தெரியாமல் திரிவர். பெயரளவில் ஆடம்பரத்திற்காக யக்ஞங்களைச் செய்பவர். அவற்றை பக்தியுடனோ, இறைவனைத் திருப்திக்காகவும் செய்வதில்லை. பெயர் பெறவேண்டும் என்ற ஆசையினால் செய்பவர்.

'மாமாத்ம பரதேகேஷு'-ம் தேகத்திலும், இதர...ின் தேகத்திலுமுள்ள என்னை வெறுப்பவர் என்று சொல்வதால், பகவான் எல்லா உயிர்களின் சரீரத்திலுள்ளும் வசிக்கிறார் என்பது தெளிவாகிறது. இறைவன் எங்கிருக்கிறான் என்ற வினாவிற்கு விடை இங்குள்ளது. அத்தகைய வியாபித்துள்ள எல்லா உயிர்களின் சரீரத்திலுமுள்ள பரமாத்மாவை அறிந்து கொள்ள இயலாமல் ஒருயிர் மற்றொரு உயிரை வெறுக்கிறது. சாட்சாத் இறைவனையே அது வெறுப்பதாகிறது. அதே விதமாக ஒருவருக்கு உதவி செய்தால் அவனின் இதயத்திலுள்ள இறைவனைப் பூசித்தவன் ஆகிறான். எனவே இங்கு 'ப்ரத்வி ஷந்தி' என்னும் பதம் அவர்களை வெறுப்பதால், நிந்திப்பதால், இறைவனை வெறுக்கிறார்கள். நிந்திக்கிறார்கள் எனலாம்.

'சீரிதாஹ்' எனாது! சம்ச்ரிதாஹ் என்றதால் அவர்கள் காமம் முதலான துர்குணங்களைப் பற்றிக் கொள்கின்றனர் என்பதும், 'த்விஷ்யந்தவர்' என்று சொல்லாமல் 'ப்ரத்விஷ்யந்தஹ்' என்றதால் இறைவனை நிந்திப்பவர்கள் என்பதும் தெரிகிறது. அவர்களின் மிகவும் இழிவான செயல் இச்சொற்களில் வெளிப்படுகின்றது.

**வினா :** அசுர இயல்புடையோரின் இன்னும் சில இலட்சணங்களைக் கூறுக.

**விடை :** அவர்கள் 1. தற்புகழ்ச்சியுடையவர்கள், 2. பெரியோர்களிடத்துப் பணிவு, மரியாதையற்றவர்கள், 3. செல்வச் செருக்கு, 4. ஆடம்பரத்திற்குப் பெயரளவில் சாஸ்திரத்திற்கு விரோதமாக யக்ஞங்களைச்

செய்பவர், 5. அகங்காரம், கர்மம், குரோதம், இவற்றின்மீது அனைத் துயிர்களின் சாட்சியாய் இருக்கும் இறைவனை துவேஷிப்பர். வெறுப்பு கொள்வர்.

வினா : இறைவன் எங்கிருக்கிறான்?

விடை : எல்லா உயிர்களின் சரீரத்திலும்

அசுர இயல்புடையோரின், இலட்சணங்களை 10 சுலோகங்க ளின் மூலம் சொல்லி, இறுதியில் அத்தகைய துர்குணங்களையுடை யோர் நரகத்தினையே அடைவர் - என்று பலனையும் கூறி அத்துடன் நின்றுவிடாமல், மறுபடியும் இரண்டு சுலோகங்களில் அவர்களது தீய செயல்களை, தீய இயல்பை வர்ணிப்பதை நோக்க அசுர குணங்க ளுக்கு மக்கள் எவ்விதத்திலும் இடமளித்தல் கூடாது. அவற்றை முழுமையாக ஒதுக்கி இறைவனைச் சரணடைதல் வேண்டும் என் பது வெளியாகின்றது.

இச்சுலோகத்துடன் அசுர இயல்புடையாரின் இலட்சணங்கள் முடிவடைகின்றன. இவ்வியல்புகள் எவரிடத்து இருப்பினும் அவர் கள் பண்டிதர்கள், செல்வந்தர்கள், பலவான், அழகன், எவராயினும், அவர்கள் அரக்கர்களுடன் சேர்ந்தவர்களே. சுரலோகத்தில் இருப்பவ ராயினும், அசுரர்களாகவே கருதப்படுவர். சாதாரணமாக அசுரர்கள் பாதாள லோகத்தில் இருப்பவர் என்று சொல்வர். ஆயின் அவர்கள் மக்களது இயத்திலும்கூட இருப்பர், காமம் முதலான துர்க்குணங் களே அந்த அரக்கர்கள். ஒவ்வொருவரும் தம் இதயத்தைப் பரிசோ தித்துக் கொண்டு தன்னிடத்துக் குடியிருக்கும் அசுரர்களை விரட்டிய டிக்க வேண்டும். பகவான் இந்த அத்தியாயத்தில் இதுவரை எத்து ணையோ அசுர குணங்களைச் சொல்லியுள்ளார். அவற்றில் அனைத் தையுமோ, அல்லது சிலவற்றையோ இதயக் குகையில் மறைந்திருக் கும் ஒன்றையோ - மந்திர உச்சாடனத்தினால் பூதங்களை விரட்டிய டிப்பது போல் இவற்றை விரட்டியடித்தல் வேண்டும். பின்னர் இறைவன் சொன்ன பயமின்மை முதலான தெய்வகுணங்களை, தெய்வ சம்பத்தினைப் பெறுதல் வேண்டும்.

ஆகமார்த்தம் து தேவானாம் கமனார்த்தம் ரக்ஷம். தேவர்களே! வாரும்!! அசுரர்களே! விடை பெறுங்கள்! என்று இந்த ஆகம வாக்கி யத்தினையனுசரித்து தம்சித்தத்தில் துஷ்டகிரகங்களுக்கு விடைய ளித்து, தூய்மையான தெய்வ சிந்தயை வரவேற்று - இதயத்தினை தெய்வத்தின் இருப்பிடமாகச் செய்து கொண்டு பரபிரம்மத்தை

அடைதல் வேண்டும்.

### முன்னுரை

இதுவரை அசுர இயல்புடையோரின் இலட்சணங்களைக் கூற இனி இரண்டு சுலோகங்களில் அவர்கள் அடையும் கதியினைக் கூறுகிறார்.

*தானஹம் த்விஷதஹ் க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான்!*
*க்ஷிபாம்யஜஸ் ரமசுபானா ஸுரீஷ்வேவ யோனிஷு!! (19)*

### சொற்பொருள்

த்விஷதஷ - த்வேஷமுடையவர்களை, க்ரூரான் - கொடிய கடின சித்தம் உடையவர்களை, அசுபான் - அமங்களகாரியங்களைச் செய்பவர்களை, அல்லது பாவ எண்ணங்கள் உடையவர்களை, தான் நராதமான் - தடையவர்களை, அஹம் - நான், ஸம்சாரேஷு - பிறப்பு இறப்புடன் கூடிய இச்சம்சாரத்தில், ஆ சுரீஷுயோன ஷு ஏவ - அசுரவம்சத்திலேயே, அஜஸ்ரம் எப்பொழுதும், க்ஷிபாமி - தள்ளுகி றேன்.

### கருத்துரை

எல்லாப் பிராணிகளிடத்தும் ஆத்மாவாக இருக்கும் என்னை, வெறுப்போரை, கொடியவர்களை, பாவகாரியங்கள் செய்வோரை, இழிந்தோரை, தான் பிறந்து இறந்து உழலும் இவ்வுலகில் அசுரப் பிறவியிலேயே, திரும்பத்திரும்ப அவர்களைத் தள்ளுகிறேன்.

### விளக்கம்

விஷதஹ - பிறரைவெறுத்தால் அவர்களது இதயத்தில் உள்ள இறைவனை வெறுத்ததாகும்.

மேற்சொன்ன விதமாக அசுர குணத்துடன் இறைவனை வெறுக் கும் கீழ்த்தரமான மக்களுக்கு ஏற்படும் பயங்கரமான மாற்றத்தை இங்குக் கூறுகிறார். உலகில் நற்காரியங்களைச் செய்வோருக்கு நற் கதி, தீய செயல் புரிவோருக்கு துர்கதி என்னும் பலன் இயற்கையி லேயே ஏற்பட்டது. அது இறைவனின் நியதி. அந்நியதியில் தலை யிட்டால் அதன் தீய பலனை அவர்களே அனுபவிப்பர். எனவேதான் பகவான் முதன்முதலில் பலவிதமான தெய்வ குணங்களைக் கூறிஅ வற்றை விடுத்து அசுர குணங்களைப் பற்றிஅதன் பலனாய் இழிபிற

வியையும், தொடரும் துக்கத்தினையும் தவறாது அடைவர் என்று இங்குக் கூறுகின்றார். அவர்கள் பிறப்பு இறப்பு என்னும் சம்ஸார சக்கரத்தில் உழன்று பலவிதமான துன்பங்களை அனுபவிப்பர். எனவே அனைவரும் தெய்வ குணங்களையே பற்றி முக்தி அடைதல் வேண்டும். 'தான்ஹம்' - நானே அவர்களை கர்மபலாபலனுக்கு ஏற்பப் புழுபூச்சிகள் அசுரர்கள் முதலான பிறவிகளில் தள்ளுகிறேன் என்று பகவான் சொல்வதால், உலகமனைத்தையும் நியமிப்பவன், அதிகாரி, கர்மபலனைத் தருபவன், எல்லா ஜீவர்களின் கதியையும் நிர்ணயிப்பவன் ஆன பரமாத்மாவே க்ருஷ்ணர் என்பது தெளிவாகிறது.

'நராதமான்', மனுஜாதம் - போன்ற கடினமான பதங்களைப் பயன்படுத்துவதால் பகவான் பாவிகளின் மீது, தெய்வத் வேஷிகளின் மீது, அசுர இயல்புடையவர் மீதுஎத்துணை கோபம் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது. 'வினாஸாய சுதுர்க்குதாம்' என்று இதற்கு முன் பாபாத்மாக்களைத் தண்டிப்பதற்காக (புண்யாத்மாக்களைக் காப்பதற்காக) தான் அவதரிப்பதாகக் கூறிய வாக்யங்களை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். மனிதன் நராதவன் (கீழோனாக) இருத்தல் கூடாது. நரோத்தமான இருத்தல் வேண்டும். ஒரு வேளை பாவ காரியங்களைச் செய்து கீழோனாக இருப்பின் அதற்குரிய தண்டனையைப் பெற்றேதீர வேண்டும். எனவே பயபக்தியுடன் அறிவை உபயோகித்து அசுர குணங்களுக்கு எவ்விதத்திலும் இடம் கொடாது தெய்வ குணங்களையே வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஸம்சாரேஷு ஆஸுரிஷு, ஏவயோனிஷு என்று பன்மைகளைப் பயன்படுத்துவதால் அவர்கள் ஓரிரு ஜன்மங்கயேன்றிப் புழு பூச்சிகளினின்றும் எல்லாப் பிறவிகளையும் பெறுவர் என்பது தெளிவாகின்றது. ஓடிப்போகும் குதிரையைக் கசாப்புகடைக்காரன் மறுபடியும் பிடித்து வதைப்பதைப் போல கீழ்த்தரமான பக்தியுடையவர் துக்கத்தினின்றும் சம்சார பந்தத்தினின்றும், தப்பிக்க எண்ணினாலும் அவர்களது கர்ம புலனினால் மறுபடியும் மறுபடியும் பிறக்கின்றனர். கருட புராணத்தைப் படித்தால் எந்தெந்த பாபம் செய்தவர் எந்தத்துன்பங்களை அனுபவிப்பவர் என்பது தெரியவரும். 'க்ஷிபாமி' - வீசுகிறேன். பாபத்மாக்களை, அசுர குணமுடையவர்களை கீழ்ப்பிறவியில் சேர்க்கிறேன் என்று சொல்லாமல் வீசி எறிகிறேன் எனச் சொல்வதால் துன்மார்க்கத்தின் மீது பகவானுக்குத் தீவிரமான வெறுப்பு உள்ளது என்பது தெரிகிறது. ஒரு கல்லை விட்டெறிவது

போல நரகம் முதலான லோகத்தில் கீழப்பிறவியில் வீசி எறிகிறேன் என்று ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா சொல்கிறார்.

'அஜஸ்ரம்' - எப்போதும் மக்களிடத்து எத்தனைகாலம் கெட்ட நடவடிக்கைகள் இருக்குமோ அத்துணை காலம் துக்கம் அவர்களைத் தொடர்ந்துவரும், நிழலைப் போல சோகம் அவர்களை ஆக்ரமித்துக் கொள்ளும் என்பது 'அஜஸ்ரம்' என்ற சொல்லினால் தெளிவாகிறது. மக்கள் காமம் துன்மார்க்கம், கெட்ட நடவடிக்கை, அக்ஞானம் ஆகியவை எதுவரைக்கும் உள்ளதோ அதுவரை துக்கம் விடுவதில்லை. அஜ்ரஸம் என்ற பதத்தினால் பாபத்மாக்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்ற இந்த ஸாஸனம் உலகில் எப்போதும் அமுல் செய்யப்படும் - என்ற பொருள் இதில் தொக்கி நிற்கிறது.

**வினா :** *அசுர குணம் உடையோருக்கு, தெய்வத் வேஷிகளுக்கு எத்தகைய பலன் கிடைக்கும்?*

**விடை :** *அவர்கள் தெய்வநியதியால் அசுர இயல்புடைய கீழான பிறவியை மறுபடியும் மறுபடியும் அடைகின்றனர். இறைவனே அவர்களை அவ்வப்பிறவியில் தள்ளுகின்றார்.*

**வினா :** தெய்வ ஸாஸனம் எத்தனை காலம் இருக்கும்?

**விடை :** எப்போதும் இருக்கும்.

*ஆஸுரீம் யோனிமாபன்னா மூடாஜன்மனி ஜன்மனி!*
*மாமப்ராப்யைவகௌந்தேய ததோ யாந்த்ய தமாம்கதிம்!! (20)*

**சொற்பொருள்**

*கௌந்தேய! - குந்தியின் மைந்தா!, அசுரீம் - அசுர இயல்புடைய, யோனிம் - பிறவியினை, ஆபன்னாஹ் - அடைந்தவர்களான, மூடாஹ் - மூடர்கள், (விவேகமற்றோர்கள்), ஜன்மனி ஜன்மனி - ஒவ்வொரு பிறவியிலும், மாம் - என்னை, அப்ராப்ய ஏவ - அடைய முடியாமல், ததஹ் - அதைவிட, அதமாம் - கீழ்த்தரமான, கதிம் - பிறவியை, யாந்தி - அடைகிறார்கள்.*

**கருத்துரை**

*அர்ஜுனா! அசுர இயல்புடைய கீழ்த்தரமான பிறவியை அடைந்த அந்த மூடர்கள் ஒவ்வொரு பிறவியிலும் என்னை அடைய முடியாது. அதனைவிட கீழ்த்தரமான பிறவியையே அடைகிறார்கள்.*

**விளக்கம்**

பாவாத்மாக்களை, அசுர இயல்புடையோரைக் கீழ்ப்பிறவியில் தள்ளுகிறேன் என்று இதற்கு முன் சுலோகத்தில் பகவான் தெரிவித்துள்ளார். அவர்களதுநிலை என்னவாகும் என்பதை இங்குத் தெரிவிக்கிறார். தம் கர்மபலனால் அவர்கள் பகவானை அடையும் பாக்கியத்தினைப் பெற இயலாது. ஆனந்தத்தினை அடைய இயலாது. தாம் இதுவரை அடைந்துள்ள பிறவிகளைவிட ஈனமான பிறவியையே அடைகின்றனர். ஐயகோ! பாவத்தின் பலன் எத்தகைய கொடுமையானது! எனவே இத்தகைய இறைவாக்குகளைக் கேட்ட பின்பாவது கெட்ட நடவடிக்கைகளை விட்டு இனியேனும் நன்னெறியில் செல்லுதல் மேன்மையானது.

மாம்' பாப்பைய்வ - (என்னை அடைவதற்கே) - என்று சொல்வதால் அவர்களுக்கு தெய்வ பிராப்தியின்றி, இனியும் ஈனமான ஜன்மத்தினை எடுக்கிறான் என்பது பொருள். எனவே 1. மனிதன் ஈனப்பிறவி அடையாமல் இருக்குமாறு, 2. தெய்வத்தினை அடையுமாறும் ஒரே சமயத்தில் முயற்சி செய்தல் வேண்டும். இத்தகைய சௌபாக்கிய நிலை ஜீவனை நன்னெறியிலேயே உய்க்கும். இவ்விஷயத்தினை இதற்கடுத்த சுலோகத்திலும் கூறுகிறார்.

**வினா** : அசுரப் பிறவியடைந்த மூடர்களின் நிலை எவ்வாறு இருக்கம்?

**விடை** : அவர்கள் பரமாத்மாவினை அடைய இயலாது, தாம் இதுவரை அடைந்த கீழ்ப்பிறவிகளைவிட இன்னும் கீழான பிறவியையே அடைவர்.

**வினா** : எனவே ஜீவன் கடைத்தேற வழியென்ன?

**விடை** : அசுர இயல்பினை விடுத்து 'தெய்வ இயல்பினை' (நற்குணங்களை, நன்னெறிகளை)ப் பின்பற்ற வேண்டும்.

*த்ரிவிதம் நரகஸ்யேதம் த்வாரம் நாசன மாத்மனஹ!*
*காமஹ் க்ரோத ஸ்ததா லோபஸ்தஸ் மாதேதத் த்ரயம் த்யஜேத்!!* (21)

**சொற்பொருள்**

காமஹ் - காமம், க்ரோதஹ் - கோபம், தத - அவ்வாறே லோபஹ் - லோபம் (இதி - என) இதம் - இது, த்ரிவிதம் - மூன்று விதமான, நரகஸ்யத்வாரம் - வாயில்களையுடையது நரகம். ஆத்ம

னஹ - தனக்கு (ஜீவனுக்கு), நாசனம் - அழிவைத் தரக்கூடியது. தஸ்மாத் - அக்காரணத்தினால், ஏதத் த்ரயம்- இம்மூன்றையும், த்ய ஜேத் - விட்டு விடுதல் வேண்டும்.

**கருத்துரை**

காமம், குரோதம், லோபம் என்ற இம்மூன்றும் மூன்றுவித மான நரகத்தின் வாயில்கள். இவை தனக்கு (ஜீவனுக்கு) அழிவைத் தருவது - எனவே இம்மூன்றையும் துறத்தல் வேண்டும். (அல்லது காமம், குரோதம், லோபம் ஆகிய மூன்றுவிதமான அசுர இயல்பு 'களை நரகத்தின் வாயில்கள் - என்றும் சொல்லலாம்)

**விளக்கம்**

நரகத்தினை அடைவதற்குக் காரணமான துஷ்டத்திரயத்தினை இந்த சுலோகம் தெரிவிக்கின்றது. அவை மூன்றும் நரகத்தின் வாயில் கள் எனப்பட்டது. அதாவது அக்குணங்களையுடையோருக்கு நரகத் தின் வாயில் திறந்திருப்பதைப் போலவே அம்மூன்றும் இல்லாத வர்க்கு அவ்வாயில்கள் மூடப்பட்டிருக்கும். ஆதலால் அவர்கள் நர கத்தில் நுழைந்ததில்லை என்பது பொருள். அத்தகைய துர்க்குணமு டையோர் கீழான உலகங்களில் ஈனமான பிறவிகளில் பிறந்து நாநா வித துக்கங்களையும் அனுபவிப்பர் என்று தெரிவித்தார். அப்படியா யின் அவர்கள் கதி அதோ கதிதானா? அவர்கள் மேன்மையடைவ தற்கு வழியே யில்லையா? என்று கேட்பின், உண்டு என கீதாச் சார்யன் கூறுகிறார். அசுர குணங்களனைத்தையும் மூன்றாகப் பிரித்த றிதல் கூடும். அவையே 1. காமம், 2. குரோதம், 3. லோபம். எவர் இம்மூன்றையும் முயற்சித்து துறக்கின்றனரோ அவர் நரகத்தின் பிடி யிலிருந்து தப்பித்துக் கொண்டு ஊர்த்தவ கதியினை அடைய முடி யும். எனவே இனி பாவாத்மாக்கள் எவரும் தன் அழிவைக் குறித்துத் திகிலடையாமல், தாம் எந்தநிலையில் இருப்பினும், அந்நிலையிலி ருந்தே பகவான் தெரிவித்த இக்காமக் குரோதம், லோபம், என்னும் இவற்றைத் தியாகம் செய்ய முயல வேண்டும். அவர்களது இறுதிக் காலத்திலேயே நரகத்தினின்றும் விமுக்தியடைந்து துக்கமின்றி மேலான நிலையை அடைவர். எனவே ஒவ்வொருவரும் அவரவர் இதயத்தினை நன்கு 'பரிசோதித்துக் கொண்டு காமகுரோதம், லோபம் எனும் மூன்று திருடர்களையும், கண்டுபிடித்து, விவேகத் தின் உதவியால் அவர்களைத் தூரத்தில் துரத்தியடிக்க வேண்டும்.

இச்சுலோகத்தில் 'த்ரிவிதம்', என்பதற்கு 'நரகம்' என்பதின்றி 'இதம்' என்ற பதத்திற்குச் சிறப்பித்துக் கூறி மூன்று விதமாகவுள்ள அசுர இயல்பினை 'நரகத்துவாரம்' என்று பொருள் சொல்லலாம்.

**வினா :** *நரகத்திற்கு எத்துணை வழிகள்? அவை எவை?*

**விடை :** *மூன்று அவையாவன 1. காமம், 2. குரோதம், 3. லோபம் ஆகியவை.*

**வினா :** *இவற்றால் ஜீவனுக்கு ஏற்படும் தீமை என்ன?*

**விடை :** *அவனை நாசம் செய்யும்.*

**வினா :** *எனவே மேன்மையை விரும்புவோர் எனன செய்தல் வேண்டும்.*

**விடை :** *மூன்று துர்க்குணங்களையும் ஒதுக்குதல் வேண்டும்.*

**வினா :** *அசுர இயல்புகளின் பலவற்றையும் எதில் அடக்கலாம்?*

**விடை :** *1. காமம், 2. குரோதம், 3. லோபம்.*

**முன்னுரை**

இக்காமம் முதலானவற்றை விடுத்தவர் மேன்மையையடைவர் என்கிறார்.

*ஏதைர் விமுக்தஹ கௌந்தேய தமோத்வாரை ஸ்த்ரிபிர்நரஹ!*
*ஆசரத் யாத்மனஹ ச்ரேயஸ்ததோ யாதி பராம் கதிம்!!* (22)

**சொற்பொருள்**

*கௌந்தேய - அர்ஜுனா! ஏதைஹ் - இந்த, திரிபிஹ் - மூன்றான, தமோ த்வாரைஹ் - (அஞ்ஞான தாபங்களான), நரகத்தின் வாயில்களினின்றும், விமுக்தஹ - விடுபட்ட, நரஹ் - மனிதன், ஆத்மஹ - தனக்கு, ச்ரேயஹ் - மேன்மையை, (நன்மையை) அசரதி - செய்து கொண்டவனாக, ததஹ் - அதனால், பராம்கதிம் - மிக உத்தமமான மோட்சகதியினை அடைகிறான்.*

**கருத்துரை**

*அர்ஜுனா! 'இம்மூன்று நரகத்தின் வாயில்களினின்றும் விடுபட்டவன் தனக்கு நலனைச் செய்து கொண்டவனாகிறான். அதனால்*

*மிக மேன்மையான மோட்ச பதவியை அடைகிறான்.*

**விளக்கம்**

*காம, குரோதம், லோபம் என்னும் இம் மூன்று துர்குணங்கள் இருக்கும் வரை எவனும் முன்னேற முடியாது. நன்மையடைய முடியாது. தனக்கு மேன்மையைக் கோர இயலாது. எனவே முதலில் அம்மூன்றையும் விடுத்தல் வேண்டும். அப்போதே மோட்ச பதவி கிட்டும் என பகவான் இங்குப் போதிக்கிறார். சூரிய சந்திரர்கள் ராகுவிடமிருந்து விடுதலை பெறுவதைப் போல கஜேந்திரன் முதலையினின்றும் விடுதலை பெற்றதைப்போல, கள்ளன், சிறையினின்றும் விடுதலை பெறுவதை போல ஜீவன் மூன்று துர்க்குணங்களினின்றும் விடுதலை பெறவேண்டும். 'முக்தஹ்! எனாது விமுக்தஹ்' என்றதால் அவற்றினின்றும் முழுமையாக விடுதலை பெறுதல் வேண்டுமென்பதாலும், அவற்றின் தன்மை, சிறிதளவும் இதயத்தினுள் இருத்தல் கூடாது என்பதும் பொருள். மேலும் அவை 'தமோத்பாரம்' என்று சொல்வதால், காமம் முதலானவை அஞ்ஞான வடிவமானவையே என்றும், இருள் நிறைந்தது, நரகத்திற்குக் காரணமானவை என்பதும் தெளிவாகிறது. அது 'தமோத்வாரம்' ஆதலால் அவையுடையவன் இருள் நிறைந்த வீட்டில் குடியிருப்பவனேயாகிறான். அதாவது அவன் துக்கத்தையேயனுபவிப்பான்.*

*'அசர த்யாத்மனாஹ்' ச்ரேயஹ - காமம் முதலானவை இருக்கும் வரை எவரும் தனக்கு மேன்மை கிட்டும் என எண்ணலாகாது. ஆன்ம முன்னேற்றம் அடைய முடியாது. தான் எவர்? தனது நிலை என்ன என்பதையறியார்? அதாவது வாசனைகள் தொலையும் வரை ஆத்ம ஞானம் முழுமையாகத் தோன்றாது. ஆத்மானுபூதி கிடைப்பதில்லை என்பது பொருள். எனவே சாதகன் முதன் முதலில் அம் மூன்று துர்க்குணங்களையும் விட்டுவிடுதல் வேண்டும். 'பராம்கதிம்' - என்றதால் மோட்சம் எல்லாப் பதவிகளைவிட கதிகளைவிட மேலானது என்பது தெரிகிறது. மேலும் காமமுடையோரின் நிலை மிகவும் துன்பத்தையளிக்க வல்லது என்பதும் தொனிக்கிறது.*

**வினா :** *காமம் முதலானவை எத்தகையது?*

**விடை :** *நரகத்தின் வாயில்கள்.*

**வினா :** *மோட்சமென்னும் நன்மையை எவர் அடைய முயல்வர்?*

**விடை :** *காமம் முதலானவற்றினின்றும் விடுதலை பெறுபவன்.*

**வினா :** அவ்வாறு முயற்சிப்பவனுக்குக் கிடைக்கும் நற்பலன் என்ன?

**விடை :** அவன் மோட்சத்தினை அடைவான்.

**வினா :** மோட்சம் எத்தகையது?

**விடை :** அனைத்திலும் மேலனாது.

முன்னுரை

இவ்வாறு (சாஸ்திரங்களுக்கு ஒப்ப) நடக்காமல் தன் இஷ்டப் படி நடப்பின் மனிதன் மேன்மையடைதல் இல்லை என்கிறார்.

*யஹ் சாஸ்திரவிதி முத்ஸ்ருஜ்ய வர்ததே காம காரதஹ!*
*நஸ ஸித்தி மவாப்னோதி ந ஸுகம் ந பராம் கதிம்!!* (23)

சொற்பொருள்

யஹ் - யார், சாஸ்த்ரவிதிம் - சாஸ்திர விதியை மீறி, உத்ஸ்ருஜ்ய - புறக்கணித்து காம - காரதஹ - காமத்தால் தூண்டப்பெற்று, வர்ததே - வினையாற்றுகிறார்களோ, ஸஹ் - அவர்கள், ஸத்திம் - சித்தியை (புருஷார்த்த நிலை அல்லது ஞான நிலையை), ந அவாப்னோதி - அடைகிறாரில்லை. ந ஸுகம் - ஸுகத்தை அடைவதில்லை, பராம் கதிம்ப மேன்மையான மோட்சத்தையும் அடைவதில்லை.

கருத்துரை

எவன் சாஸ்திரங்களின் ஆணையைமீறித் தன் இஷ்டத்திற்கு நடக்கிறானோ, அவன் புருஷார்த்த ஸ்திதியையோ, சுகத்தினையோ, மோட்சத்தினையோ அடை பான்.

கருத்துரை

அவரவர் இஷ்டப்படி நடத்தல் இச்சுலோகத்தில் கண்டிக்கப் பட்டுள்ளது. அவரவர் வழியே சரி என வாதிப்பது நல்லதல்ல. ஒருவரது நடவடிக்கை சரியா தவறா எனச் சோதித்தறிய சாஸ்திரங் கள் தேவை. தமது அனுபவம் சாஸ்த்ரங்களுடன் ஒத்துப் போகுதல் தனது நடவடிக்கை சரியானது என்று நிர்ணயித்துக் கொள்ளுதல் வேண்டும். சாஸ்த்ரவாக்யங்கள் அனுபவம் பெற்ற மஹா ரிஷிகளின் நிர்ணயமாதலால், இறைவாக்கிற்கு ஒப்பானவை. ஆதலால் அவற்றை எவரும் அவமதித்தல் கூடாது. எனவேதான் சாஸ்திரத்தின்

படி நடவாதோர் மோக்ஷத்தினை அடையார், சுகத்தினை அடையார் என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கூறுகிறார்.

**வினா :** மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்.

**விடை :** சாஸ்தர விதிப்படி நடக்க வேண்டும்?

**வினா :** அவ்வாறின்றித் தன் இஷ்டப்படி நடந்தால்?

**விடை :** அவ்வாறு நடப்பின் அவன் புருஷார்த்த நிலையையோ சுகத்தினையோ, மோக்ஷத்தினையோ அடையான்.

**முன்னுரை**

எனவே சாஸ்திர முறையை அனுசரித்தே காரியங்களைச் செய்ய வேண்டும் என அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் போதிக்கின்றார்.

*தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய வ்யவஸ்தி தௌ!*
*ஞாத்வா சாஸ்த்ர விதா னோக்தம் கர்ம கர்து மிஹார்ஹஸி!* 24

**சொற்பொருள்**

தஸ்மாத் - ஆகையினால், தே - உனக்கு, கார்ய அகார்ய வியவஸ் திதா - செய்யத்தகாதது,செய்யத் தகுந்தது, என்பதை நிர்ணயிக்கையில், சாஸ்த்ரம் -சாஸ்த்திரம் - ப்ரமாணம் - பிரமாணமாகிறது, சாஸ்த்ர விதான உக்த்தம் - சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதை, த்வா - அறிந்து, இஹ - இவ்வுலகில், கர்ம - கர்மத்தினை, கர்தும் - செய்வதற்கு, (த்வம் - நீ), அர்ஹஸி - கடமைப்பட்டிருக்கிறாய்.

**கருத்துரை**

ஆகையினால் உனக்குச் செய்யத்தகுந்தது, செய்யத் தகாதது இரண்டையும் நிச்சயிப்பதில் சாஸ்திரம் ப்ரமாணமாகிறது. சாஸ்திரத்தில் சொல்லப்பட்டவற்றை அறிந்து நீ கர்மம் செய்யக் கடவாய்.

**விளக்கம்**

எதனைச் செய்யலாம் எதனைச் செய்தல் தகாது என்ற ஐயம் எழுந்தபோது சாஸ்திரமே அதற்குப் பிரமாணமாகிறது.

'தஸ்மாத்' அதாவது இதற்கு முன் ச்லோகத்தில் சொல்லப்பட்ட விதமாக ஸாஸ்திரத்திற்குப் புறம்பாக நடந்தால், சுகமோ,

மோக்ஷமோ கிடைப்பதில்லை என்பது பொருள். சாஸ்திரங்கள் மேலான ப்ரமாணங்கள் என்று சாக்ஷாத் பகவானே சொல்வதால் மக்கள் அதன்மீதுஎத்துணை நம்பிக்கை வைத்தல்வேண்டும் என்பதை ஆலோசிக்க வேண்டும். மாறாத நம்பிக்கையுடன் சாஸ்திரங்களில் போதிக்கப்பட்டவற்றைப் பின்பற்றி வந்தால் போதும். மனிதன் மேன்மை அடைவான்.

'ஞாத்வா சாஸ்த்ர விதா னோக்தம்' என்று சொல்வதால் கர்மங்களைச் செய்வதற்கு முன் சாஸ்திர ஞானம் அவசியம் என்பது தெரிகிறது. சாஸ்திரங்களை அறிவதால் அதாவது அபாரவித்தையினால் சித்தம் கர்மம் செய்வதுண்டு.

(படிப்படியாகச் சித்தம் சுத்தியடைகிறது பாராவித்தை அதாவது ப்ரம்மானுபூதி, இறுதியில் கிடைக்கிறது?

'கர்ம கர்தும் அர்ஹஸி' - என்று போதிப்பதால் கர்மம் செய்தல் தவறில்லை என்றும், ஆயின் அது சாஸ்திரத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் என்றும் கூறுகிறது.

**வினா :** செய்யத் தகுந்தது, செய்யத் தகாதது என்பதை அறிவதற்குப் ப்ரமாணம் எது?

**விடை :** சாஸ்த்ரம். எனவே சாஸ்திரத்தின் படியே நடக்கவேண்டும்.

**வினா :** கர்மம் எப்போது செய்ய வேண்டும்?

**விடை :** சாஸ்திரத்தினை அறிந்து பின்னர் செய்ய வேண்டும்.

**வினா :** கர்மம் எவ்வாறு செய்ய வேண்டும்?

**விடை :** சாஸ்திரத்தில் சொல்லப்பட்டவாறு செய்ய வேண்டும்.

ஓம்

**இது உபநிஷத் எனப்படும் ப்ரம்மவித்தை, யோக சாஸ்த்ரம், இரண்டும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்வாதமாக வந்துள்ள ஸ்ரீ பகவத் கீதையின் தெய்வாசுர சம்பத் விபாகயோகம் என்னும் 16 ஆவது அத்தியாயம்.**

ஓம் தத் ஸத்

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பதினேழாம் அத்தியாயம்

## *சிரத்தாத்ரய விபாக யோகம்*

### இவ்வத்தியாயத்தின் பெயர் விளக்கம்

*'சிரத்தாத்ரய விபாக யோகம் - சிரத்தை மூன்று விதமாக இருக்கும். அவை சாத்வீக சிரத்தை, ராஜஸ சிரத்தை, தாமஸ சிரத்தை என்று மூன்று விதமானவை. எந்தெந்த சிரத்தை உடையவர் இலட்சணம் எவ்வெவ்விதமாக இருக்கும் என்பது இவ்வத்தியாயத்தில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான மூன்று விதமான சிரத்தை (குணங்களை)யைக் குறித்துச் சொல்லப்பட்டதால் இதற்கு சிரத்தா திரய விபாக யோகமென்ற பெயர் கூறப்பட்டது.*

### இவ்வத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ள முக்கிய விஷயங்கள்

1. *மூன்று விதமான சிரத்தை பற்றிய விஷயங்கள் (1 முதல் - 3 சுலோகங்கள் வரை)*
2. *மூன்று விதமான ஆராதனைகள் - சாஸ்திரத்திற்கு விரோதமான கோரத்தவம் - (4 முதல் 6 வரை)*
3. *மூன்று விதமான உணவு - (7 முதல் 10 வரை)*
4. *மூன்று விதமான யக்ஞங்கள் - (11 முதல் 13 வரை)*

5. *மூன்று விதமான தவங்கள் - (14 முதல் 19 வரை)*

6. *மூன்று விதமான தானங்கள் - (20 முதல் 22 வரை)*

7. *'ஓம் தத் ஸத்' என்ற மந்திரத்தின் விளக்கம் - (23 முதல் 27 வரை)*

8. *சிரத்தையின்றிச் செய்யப்படும் காரியத்தின் பலன் - (28-வது சுலோகம்)*

## இவ்வத்தியாயத்திற்கும் முன் அத்தியாயத்திற்குமுள்ள தொடர்பு

*இதற்கு முன் அத்தியாயத்தின் இறுதியில் சாஸ்திரத்திற்குப் புறம்பாக நடத்தல் கூடாது என்றும், சாஸ்திர விதிகளை மீறி நடந்தால் மோட்சம் சித்திக்காது என்று சொல்லவும் அவ்வாக்கியத்தைக் கேட்டு அர்ஜுனனின் மனத்தில் ஒரு ஐயம் எழுந்தது. அது எதுவெனின் - எவரேனும் அஞ்ஞானத்திலோ, அல்லது வேறு எதாவது காரணத்தினாலோ, சாஸ்திர விதிகளை விட்டு, சிரத்தையுடன் பூசைகள், யக்ஞங்கள் இவற்றைச் செய்து வந்தால் அத்தகையோர் நிலை என்ன? அவர்களது நடவடிக்கை சத்வ குணங்களோடு சேர்த்தல் இயலுமா? அல்லது ரஜோ குண சம்பந்தமானதா? அல்லது தமோகுணத் தொடர்புடையதா என்பது அவனது ஐயம்? அவ்ஐயம் எழுந்தவுடனேயே பகவானை வினவினான். அர்ஜுனனது அவ்வினாவுடன் இவ்வத்தியாயம் தொடங்குகிறது.*

### அர்ஜுனோஉவாச

*யே சாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய யஜந்தே ச்ரத்த யான்விதாஹ!*
*தேஷாம் நிஷ்டா துகா க்ருஷ்ண ஸத்வமாஹோ ரஜஸ்தம ஹ!! (1)*

### அர்ஜுனன் சொன்னது -

### சொற்பொருள்

*கிருஷ்ண - கிருஷ்ணா! யே - எவர், சாஸ்திரவிதிம் - சாஸ்திர விதிகளை, உத்ஸ்ருஜ்ய - மீறி, சிரத்தையா அன்விதாஹ் - சிரத்தையோடு கூடியவர்களாய், யஜந்தே - ஆராதிக்கின்றார்களோ, தேஷாம் - அவர்களுடைய, நிஷ்டாது - நிலை, கா - எத்தகையது?, ஸத்வம் - சாத்வீகமா, ஆஹோ - அல்லது, ரஜஸ - ராஜஸமா (அல்லது) தமஹ - தாமஸமா?*

**கருத்துரை**

*கிருஷ்ணா! யார் சாஸ்திர விதியை மீறி, ஆனால் சிரத்தையோடு கூடியவர்களாய் உபாசிக்கிறார்களோ அவர்களது நிலை சத்துவமா, ரஜஸா, தமஸா? ஏதுவாக உள்ளது?*

**விளக்கம்**

*இதற்கு முன் அத்தியாயத்தின் இறுதியில் சாஸ்திரங்களை ஒதுக்கித் தன் வழியில் நடப்பவர்க்கு மோட்ச நிலை கிட்டாது எனப்பட்டது. ஆயின் சிலர் சாஸ்திர விதிகளை ஒதுக்கித் தள்ளுதல் மேல் என நினைத்தோ அல்லது உதாசீனத்தாலோ அவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் கூட முயலாது, சிரத்தையோடு கூடியவராய், ஆஸ்திக புத்தியுடன் தேவதைகளைப் பூசிக்கின்றார்களல்லவா? அத்தகையோரது நடவடிக்கை எத்தகையது? அது சாத்வீகமா, ராஜஸமா அல்லது தாமஸமா என்பது அர்ஜுனனின் வினா - இறைவனின் பதில் -*

**ஸ்ரீ பகவானுவாச -**

*த்ரிவிதா பவதி ச்ரத்தா தேஹினாம் ஸா ஸ்வபாவஜா!*
*ஸாத்விகீ ராஜஸீசைவ தாமஸீ சேதி தாம்ச்ருணு!! (2)*

**சொற்பொருள்**

*தேஹிநாம் - உயிர்களுக்கு, ஸ்வபாவஜா - இயல்பினால் (முன் பிறவியின் தொடர்பினால்) ஏற்பட்ட, ஸா ஸ்ரத்தா - அந்த ச்ரத்தையானது, ஸாத்விகீ - ஸாத்வீகம் என்றும், ராஜஸீசஏவ - ராஜஸம் என்றும், தாமஸீசஇதி - தாமஸம் என்றும், த்ரிவிதா - மூன்று விதமாக, பவதி - இருக்கின்றது. தாம் - அதனை, ஸ்ருணு - கேள்.*

**கருத்துரை**

***உயிர்களின் முன் பிறவியின் தொடர்பின் இயல்பினால் ஏற்பட்ட அந்த ச்ரத்தையானது, ஸாத்வீகம் என்றும், ராஜஸம் என்றும், தாமஸம் என்றும் மூன்றுவிதமாய் இருக்கிறது. அதனைக்கேள்.***

**விளக்கம்**

***'ஸாஸ்வபஸஜா' என்று சொல்வதால் முன்பிறவியின் தொடர்பால் ஜன்மாந்திர வாசனைகளினால் அத்தகைய சிரத்தை அவர்களி***

டத்து இயல்பாகவே தோன்றுகின்றது என்பது பொருள்.

**வினா :** *ச்ரத்தை எத்தனை விதங்கள்? அவை எவை?*

**விடை :** *3 விதங்கள், 1. சாத்வீகம், 2. ராஜஸம், 3. தாமஸம்*

**வினா :** *அத்தகைய சிரத்தை ஜீவனுக்கு எவ்வாறு தோன்றுகிறது?*

**விடை :** இயல்பாகவே தோன்றுகிறது. அதாவது முன்பிறவியான தொடர்பினாலோ அல்லது இந்தப் பிறவியின் முயற்சியினாலோ தோன்றுகிறது.

### முன்னுரை

*சிரத்தையே (பண்பாடு அல்லது குணம்) மனிதனின் இயல்பென்று சொல்கிறார்.*

*ஸத்வானுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதிபாரத!*
*ஸ்ரத்தாமயோ அயம்புருஷோயோ யச்ச்ரத்தஹ ஸஏவஸஹ!!* (3)

### சொற்பொருள்

*பாரத - அர்ஜுனா! ஸர்வஸ்ய - எல்லா ஜீவர்களுக்கும் ஸத்வானுரூபா - அவரவர் (முன் பிறவி தொடர்புடைய) அந்தஹகரணத்தில் ஏற்பட்ட, ச்ரத்தா - சிரத்தை, பவதி - அனுஸரித்ததாக இருக்கிறது, அயம் - இந்த புருஷஹ - ஜீவன், ஸ்ரத்தா மயஹ் - ச்ரத்தை வடிவமானவன், யஹ் - யார், யத்ச்ரத்தஹ - எத்தகைய சிரத்தை உடையவனோ, ஸஹ் - அவன், ஸஹ்ஏவ - அத்தகைய சிரத்தையே, பவதி - ஆகிறான்.*

### கருத்துரை

*அர்ஜுனா! ஒவ்வொருவருக்கும் அவரவர் மனப்பாங்கிற்கு ஏற்ப சிரத்தை அமைகிறது. மனிதன் சிரத்தைமயமானவன். எவன் எத்தகைய சிரத்தையுடன் இருக்கிறானோ,அத்தகைய சிரத்தையும் அவனே ஆவான்.*

### விளக்கம்

*மனமே (அந்தஹ்கரணமே) மனிதன் (ஜீவனின் ப்ரதிபிம்பம்) எனவே மனம் தூய்மையாக இருப்பின் மனிதனும் தூய்மையே உருவானவனாகிறான். இங்கு 'ஸத்வானுரூபா' என்ற சொல்லில் 'ஸத்*

வம்' என்பது அந்தஹ்கரணம். ஒவ்வொருவரும் அவரவர் பிறவியின் தொடர்பால் அந்தஹ்கரணம் அதாவது மனப்பாங்கு எவ்வாறு இருக்கிறதோ அத்தகைய குணமுடையவனாகவே இருப்பான். எனவே முதலில் மனிதன் தன் அந்தஹ்கரணத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டு சாத்வீக மனோபாவம் இருக்குமாறு பார்த்துக் கொண்டு, சாதனைகள் மூலம் படிப்படியே நிர்குணவடிவினனாய் ஆவதற்கு முயல வேண்டும். எவன் எத்தகைய சிரத்தை குணம் கொண்டிருப்பினும் அதன் இயல்பையே கொண்டிருப்பதால் ராஜஸ தாமஸ ச்ரத்தைகளை விடுத்து ஸாத்வீக சிரத்தையைப் பின்பற்றி விசுத்த சத்வ நிலையைச் சேர்தல் வேண்டும். அதுவே அவனது இயல்பான வடிவம், நிலை.

**வினா :** ஜீவர்களுக்கு எத்தகைய சிரத்தை ஏற்படுகிறது?

**விடை :** அவர்களது அந்தஹ்கரணம் எவ்வாறு இருக்கிறதோ அத்தகைய சிரத்தை ஏற்படுகிறது?

**வினா :** மனிதனின் ஸ்வரூபம் எத்தகையது?

**விடை :** அவன் எத்தகைய ஸ்வரூபத்துடன் இருக்கிறானோ அதுவே அவனது இயல்பு. ஆயின் இது பிரதிபிம்ப வடிவம். உண்மையில் அவன் ஆத்ம வடிவினன்.

*ய ஜந்தே ஸாத்விகா தேவான் யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸாஹா!*
*ப்ரேதான் பூதகணான்ஸ்சான்யே யஜந்தே தாமஸா ஜனாஹ!!* (4)

### சொற்பொருள்

ஸத்விகாஹ் - ஸாத்வீகர்கள், தேவான் - தேவர்களை, யஜந்தே - வணங்குகிறார்கள். ராஜஸாத் - ரஜோ குணமுடையவர்கள். யக்ஷரக்ஷாம்ஸி - யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் ('யஜந்தே' பூஜிக்கிறார்கள்) அன்யே - ஏனைய, தாஸோஹ் ஜனாஹ - தமோ குணமுடைய மக்கள், ப்ரேதான் - பிரேதங்களையும் பூதகணன் - பூதகணங்களையும் வணங்குகிறார்கள்.

### கருத்துரை

ஸாத்வீகர்கள் தேவர்களை, ரஜோ குணமுடையவர்கள், யக்ஷ ராக்ஷஸர்களையும், தமோ குணமுடையார்கள், பிரேத பூத குணமுடையவர்களையும் வணங்குகிறார்கள்.

விளக்கம்

அவரவர் குணம், இயல்பு, நடவடிக்கை, உண்ணும் உணவு, பேச்சு, தோற்றம், படிக்கும் புத்தகம், பூஜிக்கும் தேவதைகள் இவை யாவும் அவரவர் குணங்களுக்கு ஏற்பவே இருக்கும். இவ்விஷயத்தை இதற்கு முன் 14-காம் அத்தியாயத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னுரை

அசுர இயல்புடையோர் மேற்கொள்ளும் கோர தவத்தைப் பற்றி அடுத்து வரும் 2 சுலோகங்களில் கூறுகிறார்.

*அசாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தேயே தபோஜனாஹ!*
*தம்பாஹங்கார ஸம்யுக்தாஹ காமராகபலான் விதாஹ!! (5)*

*கர்ஷயந்தஹ சரீரஸ்தம் பூதக்ராமமசேதஸஹ!*
*மாம் சைவாந்தஹ சரீரஸ்தம்தான் வித்தியாஸீர நிஸ்சயான்!! (6)*

சொற்பொருள்

யேஜனாஹ - எந்த மக்கள், சரீரஸ்தம் - சரீரத்தில் இருக்கின்ற, பூத கிராமம் - பஞ்ச பூதங்களின் கூட்டத்தை அல்லது இந்திரியங்களை, கர்ஷ்யந்த - (உபவாசங்கள் முதலியவற்றால்) துன்புறுத்தி, அந்தஹ் சரீரஸ்தம் - சரீரத்தினுள் வீற்றிருக்கும், மாம் சஏவ - என்னையும், கர்ஷயந்தஹ - துன்புறுத்துபவர்களும், தம்ப அஹங்கார ஸம்யுக்தா - ஆடம்பரம் அகங்காரம் உடையவர்களாய், காமராகபலான் விதாஹ - காமமும் பற்றுதலும் வலுபட்டவர்களாய், அசேத ஸஹ - விவேகமற்றவர்களாய், அஸாஸ்திரஹிதம் - ஸாஸ்த்ரங்களில் விதிக்கப்படாத, கோரம் - தனக்கும் பிறர்க்கும் துன்பம் தரக்கூடியவையான, தபஹ் - தபத்திதை தப்யந்தே - செய்கிறார்களோ, தான் - அவர்களை, அசுர நிஸ்சயான் - அசுர இயல்புடையவர்களாக, வித்தி - அறிவாயாக.

கருத்துரை

எந்த மக்கள் உடலில் உள்ள இந்திரியங்களையும் உள்ளத்தில் உறையும் என்னையும் துன்புறுத்தி, வீம்பும் அஹங்காரமும் உடையவர்களாய், காமமும் பற்றுதலும் வலுத்தவராய், ஸாஸ்திரத்திற்கு ஒவ்வாத கொடுந்தவம்புரிகிறார்களோ அவர்களை அசுர இயல்புடையவராக அறிக.

**விளக்கம்**

'அஸ்ஸாஸ்த்ரவிஹிதம்' - ஸாஸ்த்திரத்தில் விதிக்கப்படாத வற்றை எவரும் செய்தல் வேண்டாம் என கீதை ஆணை இடுகின் றது. கொடும்தவம் பயங்கரமான ராஜஸ தாமஸ கிரியைகள் ஸாஸ்த் ரங்களில் சொல்லப்பட்டவை அல்ல. எனவே அவை ஒதுக்கப்பட்ட வையே.

'தப்யந்தே ஏ தபோஜனாஹ' - உண்மையில் தவம் என்றால் அந்தஹ்கரணத்தில் உள்ள குற்றங்களை எறித்துச் சாம்பலாக்குவதே அன்றி தேஹத்தினை வருத்திக் கொள்வது அல்ல. எனவே அத்த கைய தவத்தையே மேற்கொள்ள வேண்டுமே அன்றித் துன்பம் தரக் கூடிய கொடூர தவத்தினை அல்ல (ராவணன் ஹிரண்யகசிபு போன்ற வர்கள் செய்த தவத்தைப் போல் அல்ல).

'காமராக பலாவிதாஹ' - உலகியல் பலங்கள் எத்துணை இருப் பினும், தெய்வ பலம் இல்லாவிடில் அனைத்தும் பலனற்றவையே. தீயசக்தி உடையவர்களும் தெய்வத்தின் தொடர்பு இல்லாதவர் எவ ராயினும், அரக்கர்களுடன் சேர்ந்தவர்களே. காமம் பற்று இவை மனிதர்களின் மனிதத் தன்மையை குலைத்து, தெய்வத் தன்மையை மறைத்து, ஆத்மீகத்தைச் சீரழித்து, உண்மையான ஆத்மஸ்வரூ பத்தை மறைத்து, அவர்களை அரக்கர்களாக மாற்றக்கூடியது. எனவே அவற்றைத் தள்ளுதல் வேண்டும். அரக்க இயல்புடையோ ருக்கு பக்தி, ஞானம் இவையே பலம். ஆகவே காமம், பற்று இவற்றை விடுத்து பக்தி ஞானபலத்தைப் பெற வேண்டும்.

'கர்ஸயந்தஹ ஸரீரஸ்தம் பூதக்ராமம்' - பொய்யான உபவாசங்க ளினால் இந்திரியங்களைத் துன்புறுத்துவோர் அசுர இயல்புடைய வர் என்கிறார். தேக ஆரோக்கியத்திற்காக விரதங்கள் உபவாசங்கள் அவ்வப்போது இருத்தல் நன்மை. ஆயினும், அவை அளவிற்கு மீறுதல் கூடாது. அவ்வாறு அளவுக்கு அதிகமானால், அது அசுர தபஸ் ஆகும். புற்றினை அழித்தால் பாம்பு சாகாது. எனவே சரீரத்தை துன்புறுத்துவதால் மட்டும் உள்ளிருக்கும், துர்வாசனைகளால் ஏற் பட்ட பண்பு ஏதும் அழியாது. சிலர் அவரவர் மேற்கொள்ளும் உப வாசங்களைப் பற்றிப் பெருமையாகக் கூறிக் கொள்வர். ஆயின் பக வான் இச் சுலோகத்தில் அவர்களை மெச்சவில்லை. மேலும் அவர் களை அசுர இயல்புடையவராகக் கூறுகிறார். எனவே பகவான் கூறி யபடி சரியான வழியில் சென்று மனித நிலையிலிருந்து இறைநி லைக்கு உயர வேண்டுமே தவிர, அசுர நிலைக்கு இறங்குதல் கூடாது.

'மாம்சைவாந்தஹ சரீரஸ்தம்' - இத்தகைய கொடூரமான உபவாசங்களிலும் சரீரத்தின் உள் இருக்கும் இறைவனைக் கூட துன்புறுத்துகிறார் என்று பகவான் கூறுகிறார். உண்மையில் பகவானுக்குத் துன்பம் இல்லை. ஆயின் அத்தகையோரது செயலைக் கண்டிக்கும் விதமாக பகவான் இவ்வாறு கூறுகிறார்.

அந்தஹஸரீரஸ்த்தம்' - என்பதால் இறைவன் ஒவ்வொருவரின் சரீரத்துள்ளும் பஞ்ச கோசங்களைத் தாண்டி மறைந்துள்ளார் என்பது தெளிவு. எனவே பாப காரியங்களை ஒதுக்கி விவேகம், விசாரணை இவற்றின் மூலம், பஞ்ச கோசங்களை வேறுபடுத்தி, நம் சரீரத்தினுள்ளேயே இறைவனைக் கண்டு தன்யமடைதல் வேண்டும். கொடும் உபவாசங்களால் ஆத்மாவைத் துன்புறுத்தாது மிதமான, சாத்வீகமான உணவை உட்கொண்டு தியானம் முதலியவற்றால் தெய்வ அனுபவம் அடைய வேண்டும்.

**வினா :** அசுர இயல்புடையோர் எவர்?

**விடை :** (1) ஆடம்பரம், அஹங்காரம் உடையவர், (2) காமம், பற்று இவற்றுடன் கூடிய பலம் உடையவர், (3) விவேகமற்றவர், (4) ஸாஸ்த்ரங்களில் விதிக்கப்படாத, கோர இந்திரியங்களையும் சரீரத்தின் உள்ளிருக்கும் பரமாத்மாவையும் துன்புறுத்துவோர் அசுர இயல்புடையோர்.

**வினா :** எனவே அறிவுடையோர் என்ன செய்தல் வேண்டும்?

**விடை :** ஆடம்பரம், அஹங்காரம், காமம், பற்று இவற்றை ஒழித்து விவேகத்துடன், சாஸ்திரங்களை அனுசரித்து, மிதமான சாத்வீக உணவை உண்டு இறைவனைப் பக்தியுடன் பூஜித்தல் வேண்டும்.

முன்னுரை

இனி 3 விதமான உணவு, யக்ஞம், தவம், தானம் இவற்றைக் குறித்துக் கூறுகிறார்.

*ஆஹாரஸ்த்வபி ஸர்வஸ்ய த்ரிவிதோ பவதி ப்ரியஹ!*
*யக்ஞஸ்த பஸ்ததா தானம் தேஷாம் பேதமிமம் ச்ருணு!!* (7)

*சொற்பொருள்*

*ஆஹாரஹ து அபி* - ஆகாரமும் கூட, *ஸர்வஸ்ய* - ஒவ்வொருவர்க்கும், *த்ரிவிதஹ* - (மூன்று குணங்களின்படி) மூன்று விதமாக, *ப்ரியஹ பவதி* -

இஷ்டமாகின்றது. ததா - அவ்வாறே, யக்ஞ - யக்ஞம், தவஹ - தவம், தானம் - தானம் கூட, திரிவிதஹ் ப்ரியஹ்பவதி - மூன்று விதமாக இருக்கின் றது.தேஷாம் - அவற்றின், இமம் - இந்த, பேதம் - பேதத்தினை, ச்ருனு - கேட்பாயாக.

கருத்துரை

ஒவ்வொருவருக்கும் விருப்பமான உணவும் (முக்குணங்களின்படி) மூன்று விதமாகின்றது. அவ்வாறே, யாகம், தவம், தானமும் மூன்று வகைப் படுகின்றன. அவ்வுணவின் பேதங்களைக் (கூறுகிறேன்) கேட்பாயாக!

விளக்கம்

உணவு யாகம் முதலான நான்கினைப் பற்றிக் கூறக் கருதி பகவான் அவற்றில் உணவைக் குறித்தே முதலில் கூறுதல் கவனிக்கத்தக்கது. ஆன்மீக சாதனை முறையில் உணவின் தூய்மை முதலாகக் கருதப்படுகின்றது. உண வின் தூய்மையால் சித்த சுத்தி, சித்தசுத்தியினால் ஞானோதயம் ஏற்படும். உணவு தூய்மையாக இல்லாவிடில் மனதும் தூய்மையற்று இருப்பதால் இலக்கினை அடைதல் கடினம்.

வினா : உணவு, யாகம், தவம், தானம் இவை எத்துணை விதமாக விரும்பப் படுகின்றது?

விடை : அவரவர் குணங்களைப் பொறுத்து மூன்று விதமாக விருப்பம் அமையும் (சத்வ குணமுடையோர்க்கு சாத்வீக ஆகாரம் - இவ்வாறு அமை யும்).

முன்னுரை

அடுத்து சாத்வீக உணவைக் குறித்துக் கூறுகிறார்.

*ஆயுஹ ஸத்வபலாரோக்ய ஸுகப்ரீதிவிவர்தனாஹ!*
*ரஸ்யாஹ் ஸ்நிக்தாஹ் ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாராஹ ஸாத்விக ப்ரியா!!* (8)

## சொற்பொருள்

ஆயுஸத்வபலா ஆரோக்கியசுக ப்ரீதிவிவர்த்னாஹ் - ஆயுள், அறிவு, பலம், மனோபலம், சரீர பலம், ஆரோக்கியம், சுகம், விருப் பம் ஆகியவற்றை விருத்தி செய்கின்றவைகள் ரஸ்யாஹ - ரசமுள்ள வைகள், ஸ்நிக்தா - பசையுள்ளவைகள், ஹ்ருத்யா - இன்பமானவை கள், ஆஹாரா - ஆகாரங்கள், ஸாத்விகப்ப்ரியா - சாத்வீகர்களுக்குப்

பிரியமானவைகள்.

**கருத்துரை**

ஆயுள், அறிவு, மனோபலம், தேக பலம், ஆரோக்கியம், சுகம், ருசி ஆகியவற்றை வளர்ப்பவை, ரசமுள்ளவை, பசையுள்ளவை, தேகத்திற்கு வலிவு தருபவைகள், இன்பமானவைகள் ஆகிய ஆகாரங்கள் சாத்வீகர்களுக்கு மிகவும் பிரியமானவைகள்.

**விளக்கம்**

மக்களிடையில் ஸத்வ குணம் வளர்ந்தால் அவர்களுக்கு இத்தகைய உணவு ருசிகரமாக இருக்கும். அதாவது காரம், புளிப்பு இவை ரஜோ குணத்தோடு கூடிய அல்லது தாமஸ குணத்தைத் தரக்கூடியதும் ஆகும் உணவினை அவர்கள் ஒருபோதும் விரும்பார். மேற்சொன்ன சாத்வீக உணவையே அவர்கள் விரும்புவர். தியானம் முதலானவற்றிற்கு இத்தகைய உணவே அனுகூலமானது. உணவு விஷயத்தில் ஆன்மீக அரங்கில் மிகவும் முக்கியமானது எனவேதான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் பலவிடங்களில் அதனைப் பற்றிக் கூறுகிறார். எனவே முமுக்ஷுக்கள் உணவு விஷயத்தை அலட்சியம் செய்யாது பிரம்ம மார்க்கத்தில் முக்கியமானதாகக் கருதி சாத்வீக உணவையே உட்கொள்ளுதல் வேண்டும்.

**வினா :** சாத்வீக உணவு எத்தகையது?

**விடை :** (1) ஆயுள் மனோபலம், சரீரம், ஆரோக்கியம், சுகம், விருப்பம் இவற்றைப் பெருக்கக்கூடியது, (2) ரசமுள்ளவை, (3) பசையுள்ளவை, (4) தேகத்திற்கு வலிவு தரக்கூடியவை, இன்பமானவை ஆகியவை சாத்வீக உணவு எனப்படும்.

**முன்னுரை**

இனி ராஜஸ உணவைப் பற்றிக் கூறுகிறார்.

*கட்வம் லவணாத்யுஷ்ண தீக்ஷ்ண ரூக்ஷ விதாஹினஹ!*
*ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா துக்க சோகாமயப் ப்ரதாஹ்!!* (9)

**சொற்பொருள்**

கடு - கசப்பு, அம்ல - புளிப்பு, லவனா - உவர்ப்பு, அதியுஷ்லா - அதிக உஷ்ணம், தீக்ஷ்ண் - காரம், ரூக்ஷ - உலர்ந்தவை, விதாஹி

- அதிக தாகத்தை உண்டு பண்ணக்கூடியவை, துக்க சோகாமய ப்ரதாஹ் - (சரீரத்திற்கு) துக்கத்தினையும் (மனத்திற்கு), சோகத்தையும், நோயையும் உண்டு பண்ணுபவைகள், ஆஹாரா - ஆகாரங்கள், ராஜஸஸ்ய - ரஜோ குணமுடையவர்களுக்கு, இஷ்டா - இஷ்டமானவைகள்.

**கருத்துரை**

கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, பெருவெப்பம், காரம், வறட்சி, எரிச்சல் மிகுந்தவையும், துன்பம், சோகம், நோய் இவற்றை உண்டு பண்ணக்கூடிய விருப்பமானவைகள். அவை எப்போதும் தள்ளத்தக்கவை.

உணவு வகைகள் ரஜோ குணத்தார்க்கு,

**விளக்கம்**

இச் சுலோகத்தில் தெரிவிக்கப்பட்ட உணவு வகைகள் ராஜஸமெனப் படுவதால் அவை 'துக்க சோகாம ய ப்ரதா' - இங்கு துக்கமென்றால் உண்டவுடனேயே சரீரத்திற்கு ஏற்படும் உபாதைகள் என்றும், சோகமென்றால் புசித்தபின் மனதில் ஏற்படும் குழப்பம் என்றும் கொள்ள வேண்டும்.

சிலர் 'உஷ்ண' என்ற சொல்லிற்கு முன்னுள்ள 'அதி' என்னும் சிறப்புச் சொல்லை 'கட்வம்' முதலானவற்றோடும் கொண்டு கூட்டிப் பொருள் சொல்கின்றனர். ஆயின் அவ்வாறு கொள்ளுதல் சரியாகப்படவில்லை. அதனால் 'மிக்க கசப்பு ஒதுக்கத்தக்கது, சிறிதளவு கசப்பு கொள்ளக்கூடியது' என்ற பொருள் வரும். அது பொருத்தமானதல்ல. (சிறிதளவு கசப்பைக் கூட எவரும் விரும்பார்) மேலும் 'விதாஹினஹ்' என்ற பதத்திற்கு 'அதி' என்பதைச் சேர்த்தால் 'அதிவிதாஹின' ஆகும். அப்போது 'வி' என்ற உபசர்க்கத்தின் மீது மறுடியும் 'அதி' என்ற பண்புச் சொல்லைச் சேர்த்தால் அந்த இடத்திற்குப் (இரண்டும் ஒரே பொருளையே தருவதால்) பொருந்ததாதகையால்.

ராஜஸ சுகத்தின் இலட்சணம் - ஆரம்பத்தில் அமிருதம் போன்றிருந்து இறுதியில் விஷத்தை அளிப்பதாக மாறுவதே என்று 18-ஆம் அத்தியாயத்தில் சொல்லப் போகிறார் - ''விஷயேந்த்ரியஸம் யோகாத்ய த்ததக்ரே அம்ருதேபமம், பரிணாமேமிஷமிவ தத்சுகக ராஜஸம் ஸம்ருதம்'' - அவ்வாறே ராஜஸ உணவும் ஆரம்பத்தில் இனிமையாக, சுவையாகத் தோன்றி உண்டவுடனேயே சிறிது நேரத்

தில் துக்கத்தையும், சோகத்தையும் உண்டாக்கும். தினசரி வாழ்க்கையில் பலரும் இதனை அனுபவிக்கின்றனர். மேலும் ராஜஸ உணவை உட்கொள்பவர்க்கு தியானத்தில் மனம் சரியாக ஈடுபடாது. சித்தம் விகாரமடைந்து, சலனப்படும். சிறிது நேரம் கூட மனம் சலனமின்றி இருக்காது. விலங்குகளில் கூட ராஜஸ உணவான மாம்சத்தைப் புசிக்கும் சிங்கம், புலி, பன்றி, இவை மிகவும் சஞ்சலத்துடனும், குரூரத்துடனும் இருக்கும். செடி கொடிகளை, இலைகளைத் தின்னும் பசு, ஆடு இவை சாத்வீக சித்தத்துடன் இருக்கும்.

'ஆமயப்ரதாஹ்' - என்றதால் ராஜஸ ஆகாரம் ஆரோக்கியத்தினையும் கொடுத்து வியாதிக்கும் இடமளிக்கக்கூடியது. எனவே ஆரோக்கியத்திற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய, தியானத்திற்கு இடையூறு அளிக்கக்கூடிய ராஜஸ ஆகாரத்தை முமுக்ஷு உட்கொள்ளுதல் கூடாது. அத்தகைய ராஜஸ ஆகாரத்தின் மீது விருப்பம் ஏற்படின் தன்னிடத்தே இன்னும் ரஜோ குணத்தின் சாயை படிந்துள்ளது என நிச்சயித்து அதனை ஒதுக்குதவதற்கு முயல வேண்டும்.

'தா' என்றது 'ப்ரதாஹ்' என்று சொல்வதால் வியாதிகளை அவையுண்டாக்கும் என்பது பொருள்.

**வினா :** *ராஜஸ உணவு எத்தகையது?*

**விடை :** *(1) கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, காரம் இவற்றோடு கூடியது, (2) அதிக உஷ்ணம் உள்ளது, (3) பசையற்று உள்ளது, (4) மிக்க தாகத்தையுண்டாக்கக் கூடியது.*

*யாத யாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் சயத்!*
*உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜனம் தாமஸ ப்ரியம்!!* (10)

சொற்பொருள்

யத்யாமம் - சமைத்து ஒரு யாமம் கழிந்த உணவு (அல்லது நன்கு வேகாதது), கதிரஸம் - சுவையற்றது, பூதி - துர்நாற்றமெடுத்த, பர்யுஷிதம்ச - பழைய உணவு, அமேத்யம்ச - தூய்மையற்றதும், போஜனம் - ஆகாரம், தாமஸப் ப்ரியம் - தமோகுணத்தாருக்குப் பிரியமானது.

**கருத்துரை**

*சமைத்து ஒரு யாமம் கழிந்த உணவு, சுவையற்ற, துர்நாற்றமுடைய, பழைய, எச்சிலான, தூய்மையற்ற உணவு தமோ குணத்தாருக்குப் பிரியமானது.*

**விளக்கம்**

*ஆரோக்கியத்தின் படி பார்த்தாலும் இத்தகைய தாமஸ உணவு, மேற்சொன்ன ராஜஸ ஆகாரம் இரண்டுமே ஒதுக்கக்கூடியவையே. சுவையற்ற உணவைத் தின்றால் கெட்ட உணவின் அணுக்கள் சரீரத்தில் நுழைந்து ரத்தத்தைக் கெடுத்து ஆரோக்கியத்தையும் கெடுக்கும். அவற்றின் சூட்சும அணுக்கள் மனத்திலும் நுழைந்து அதனையும் தூய்மையற்றதாக ஆக்கிவிடும். எனவே முமுக்ஷு அத்தகைய உணவை எக்காலத்தும் உட்கொள்ளுதல் கூடாது. இனி யாகங்களைப் பற்றித் தொடங்கி முதலில் சாத்வீக யக்ஞத்தைப் பற்றிக் கூறுகிறார் -*

*அபலா காங்க்ஷிபிர்யக்ஞோ - விதித்ருஷ்டோ ய இஜ்யதே!*
*யஷ்டவ்யமேவேதி மனஹ ஸமாதாயஸ ஸாத்விகஹ!! (11)*

**சொற்பொருள்**

*யஷ்டவ்யம் ஏவ - செய்தே ஆக வேண்டும், இதி - என்று, மனஹ - மனத்தில், ஸமாதாய - ஸமாதானம் செய்து கொண்டு, விதித்ருஷ்ட - சாஸ்திரத்திற்கு உட்பட்ட, யஹ்யக்ஞஹ - எந்த யாகம், அபல ஆகாங்க்ஷிபிஹி - வினைப்பயனை விரும்பாதவர்களால், இஜ்யதே - செய்யப்படுகிறதோ, ஸஹ - அது, சாத்வீகஹ - சாத்வீகமானதாக (பவதி - ஆகிறது).*

**கருத்துரை**

*'இது செய்யத் தகுந்ததே என்று மனம் ஸமாதானம் அடைந்து சாஸ்திரத்திற்கு ஒத்த எந்த யாகம் பலனைக் கருதாதவர்களால் செய்யப்படுகின்றதோ அது சாத்வீக யாகம் எனப்படும்.*

**விளக்கம்**

*ஒவ்வொருவரும் தான் செய்யும் காரியம் சாஸ்திரத்திற்கு ஒத்ததா, அல்லவா என்று நன்கு விசாரித்து அறிந்து சாஸ்திரத்திற்குப் புறம்பானதை ஒதுக்கி ஒத்ததையே செய்தல் வேண்டும். எனவே*

தான் 'விதித்ருஹ்டஹ்' எனச் சொல்லப்பட்டது. மேலும் இது 'செய் யத்தகுந்தது' என்று மனத்தில் நிச்சயித்துக் கொண்டு பலனைக் கரு தாது செய்தல் வேண்டும். அப்போது அது சாத்வீக கார்யத்துடன் சேரும். இங்கு 'யக்ஞும்' என்று சொல்லப்படுவது பசுவை இம்சித் துச் செய்யப்படும் யாகமல்ல. பகவத் தியானம், பரோபகாரம், இறை தொடர்பான காரியங்கள் முதலானவை, அல்லது நற்காரியங் களும் - யக்ஞும் எனப்பட்டது.

'மனஹ் ஸமாதாய' - என்றதால் ஒவ்வொருவரும் தாம் காரியத் தைச் செய்யத் தொடங்குவதற்கு முன் மனதினைத் திடப்படுத்திக் கொண்டு ஐயத்திற்கு இடம்கொடாமல் நிச்சயமான புத்தியுடன் அத னைத் தொடங்க வேண்டுமென்பது தெரிகிறது. மனதினை சமாதா னப்படுத்தாமல், காரியங்களின் ஒவ்வொரு பகுதியும் நன்கு நிர்ண யித்துக் கொண்டு சாஸ்திரங்களின் மூலம், தெரிந்தவர்களின் மூலம் நிச்சயப்படுத்திக் கொண்டு மனதினை நிலைப்படுத்தி நிஷ்காம புத் தியுடன் அத்தகைய யாகங்களைச் செய்தால் அற்புதமான பலன் கிட்டும். அதுவே நிலையான காரியம், சாத்வீக யக்ஞுமாகும்.

வினா : சாத்வீக யக்ஞும் எத்தகையது?

விடை : (1) சாஸ்திரத்திற்கு உட்பட்டது, (2) பலனைக் கருதாது செய்யப்படுவது (3) இது செய்யத்தகுந்தது என மனத்தை சமாதானப் படுத்திக் கொண்டு மனிதனால் செய்யத்தக்கதும் ஆகியவையே சாத் வீக யக்ஞும் எனப்படும்.

முன்னுரை

ராஜஸ யக்ஞுத்தைக் குறிக்கிறார் -

*அபி ஸந்தாய துபலம் தம் பார்த்த மபி சைவயத்!*
*இஜ்யதே பரத சிரேஷ்ட தம் யக்ஞும் வித்திராஜஸம்!!* (12)

சொற்பொருள்

பரத சிரேஷ்ட - பரத குலச் சிரேஷ்டனான அர்ஜுனா! பலம் - பயனை, அபிஸந்தாயது - விரும்பியோ, தம்பார்த்தம் அபிஏவச - ஆடம்பரத்துக்காகவோ, யத் - எது, இஜ்யதே - செய்யப்படுகி றதோ, தம்யக்ஞும் - அந்த யக்ஞுமானது, ராஜஸம் - ராஜஸமான தென்று, வித்தி - அறிக.

**கருத்துரை**

*பரதகுலசிரேஷ்டனே! பலனைக் கருதியும், ஆடம்பரத்துக்காகவோ செய்யப்படுகின்ற ஆராதனையை ராஜஸமானதென்று அறிக.*

**விளக்கம்**

*பலனைக் கருதிச் செய்யப்படும் கர்மாவினால், சித்தம் சுத்தியடைவதில்லை. அதனால் ஆத்மதத்துவம் ஒளிர்வதில்லை. எனவே அத்தகைய பலனைக் கருதும் கர்மாக்கள் ராஜஸமென்று சொல்லப்பட்டது. மேலும் பெயர் பெறுவதற்காக, வெளிவேடத்திற்காக, ஆடம்பரத்திற்காகச் செய்யப்படும் காரியங்களும் ராஜஸமேயென்று இங்குச் சொல்லப்பட்டது. எனவே அவற்றை எவரும் செய்தல் வேண்டாம்.*

**வினா :** *ராஜஸ யக்ஞ மெத்தகையது?*

**விடை :** *(1) பலனைக் கருதியும் (2) ஆடம்பரத்திற்காகவும் செய்யப்படும் யக்ஞம் ராஜஸமென்று சொல்லப்படும்.*

*விதிஹீனம் அஸ்ருஷ்டான்னம் மந்த்ரஹீன மதக்ஷிணம்!*
*ச்ரத்தாவிரஹிதம் யக்ஞம் தாமஸம் பரிசக்ஷதே!! (13)*

**சொற்பொருள்**

*விதிஹீனம் - சாஸ்திர விதிகளை மீறியது, அஸ்ஸீருஷ்ட அன்னம் - அன்னதானம் இல்லாதது, மந்த்ரஹீனம் - மந்திரமற்றது, அதக்ஷிணம் - தக்ஷிணையில்லாதது, ச்ரத்தா விரஹிதம் - சிரத்தையற்றதுமான, யக்ஞம் - யக்ஞாம் - யக்ஞமானது, தாமஸம் - தாமஸமென்று, பரிசக்ஷதே - பகரப்படுகிறது.*

**கருத்துரை**

*சாஸ்திரநெறி வழுவியதும், அன்னதானமில்லாததும், மந்திரமற்றதும், தக்ஷிணை இல்லாததும், சிரத்தையற்றதுமான யக்ஞம் தாமஸ யக்ஞம் எனப்படுகிறது.*

**விளக்கம்**

*'அஸ்ஸீருஷ்டா அன்னம்' - அன்னதானமென்பது நடைமுறை வேதாந்தத்தின் வடிவமெனலாம். எல்லா உயிர்களிடத்தும் பர*

மாத்மா உள்ளான் என்னும் உண்மையை அறிந்தவன் பரோபகாரி தவறாது செய்வான். அதுவே நடைமுறை வேதாந்தம். அதனால் தானோ என்னவோ எல்லாவிதமான புண்ய காரியங்களிலும், சிரார்த் தங்களிலும், யக்ஞங்களிலும் அன்னதானம் செய்தல் வேண்டுமெனப் பெரியோர்கள் விதித்தனர். தன்னைப் போன்றே பிற உயிர்களையும் மதிக்கும் பெரிய சாதனை இந்த அன்னதானத்தினால் நாம் உணர முடியும். எனவே இத்தகைய புனிதமான அங்கம் குறைவுள்ள யக்ஞம் தாமஸ யக்ஞமேயென்று பகவான் கூறுகிறார்.

'அதக்ஷிணம்' - இதுவும் அன்னதானம் போன்றதே. தனது சம்பாத்தியத்தில் ஒருசிறிது பாகத்தை ரித்விக்குகள், ஏழைகள், தரித்திரர்களுக்கு தக்ஷிணையாகக் கொடுத்தல் வேண்டும். அது தியாகத்தின் சின்னம். எனவே இத்தகைய தியாக உணர்வு இல்லாத யக்ஞம் தாமஸமேயென்கிறார்.

'சிரத்தாவிரஹிதம்' - எந்தக் காரியமாயினும், சிரத்தையுடனும் பக்தியுடனும், பூரணமான நம்பிக்கையுடனும் செய்யப்பட்டால் தான் நல்ல பலனைக் கொடுக்கும். (சிரத்தையில்லாது செய்யப்படும் காரியம் செய்யாததற்குச் சமானமே யென்று இவ்வத்தியாயத்திலேயே சொல்லப்போகிறார்) (அசிரத்தையாஹூதம். அஸதித்யுச்யதே) எனவே சிரத்தையில்லாத தாமஸ காரியங்களை விடுத்து மக்கள் சிரத்தையோடு எல்லாவற்றையும் செய்து நல்ல பலனை அடைய வேண்டும்.

**வினா :** தாமஸ யக்ஞம் எத்தகையது?

**விடை :** 1. சாஸ்திரத்திற்கப் புறம்பானது, 2. அன்னதானமில்லாதது, 3. மந்திரமில்லாதது அல்லது குறைவுள்ளது, 4. தக்ஷிணையில்லாதது, 5. சிரத்தையில்லாது செய்யப்படும் யக்ஞமாகும்.

**முன்னுரை**

இனி சரீர, மானசீக, வாக்குமயமான தவங்களைப் பற்றிக் கூறப் போகிறார்.

*தேவத்விஜ குருப்ராக்ஞபூஜனம் சௌச மார்ஜவம்!*
*ப்ரஹ்மசர்யமஹிம்சா ச சாரீரம் தப உச்யதே!* (14)

**சொற்பொருள்**

தேவத்விஜ குருப்ராக்ஞ பூஜனம் - தேவர்கள், பிராம்மணர், குருக்கள், ஞானிகள் (பிரம்மஞானிகள்) முதலான பெரியோர்களைப் பூசித்தல், சௌசம் உள்ளும் புறமும் தூய்மையாய் இருத்தல், ஆர்ஜவம் - நேர்மையுடன் இருத்தல், (மனோ, வாக்கு, சரீரத்தால் ஒரே மாதிரியாக நடந்து கொள்ளுதல்), பிரம்மசரியம் - பிரம்மச்சரியம், அஹிம்சா ச - ஏனைய உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை, ஆகியவை சாரீரம் - சரீரத்தால் செய்யப்படுகின்ற, தபஹ - தவமென்று, உச்யதே - சொல்லப்படுகின்றது.

**கருத்துரை**

தேவர்கள், பிராம்மணர், குருமார், ஞானிகள், ஆகியவர்களைப் போற்றுவதும், உள்ளும் புறமும் தூய்மையாய் இருத்தலும், நேர்மையுடனும் பிர்ம்மச்சரியம், அஹிம்சை இவற்றுடன் இருப்பதும் சரீரத் தவம் எனப்படுகின்றது.

**விளக்கம்**

சரீரம், வாக்கு, மனம் இவற்றைப் பற்றிய தவங்களைக் குறிக்கும். இப்பகுதி (14,15,16) மிகவும் முக்கியமானது. சாதகர்கள் இம் மூன்றுவித தவங்களை நன்கு பின்பற்றி திரிகரண சுத்தியுடையவர்களாய் இருப்பின் நிர்மலமான ஆடியின் பிரதிபிம்பம் போல ஆத்மானுபவம் எளிதாகக் கிட்டும். இவ்வத்தியாயத்தில் உணவு, யக்ஞம், தானம் இவற்றைப் பற்றிச் சொல்கையில் அவற்றில் சாத்வீக, ராஜஸ, தாமஸ என்பதேயன்றி அவற்றின் தொடர்பான சரீர, வாக்கு, மனம் இவற்றால் ஆன தவத்தினைக் கூட விளக்குகிறார். உபாதியில் (இந்திரியங்களில்) உள்ள அசுத்தத்தை, நன்கு எரித்து அவற்றை நீக்குவதே தவம், அதுவே மோட்சத்திற்கு வழி. ஆன்மீக சாதனையில் அது மிகவும் முக்கியமானது, அதனால்தான் கீதாச்சாரியன் தவத்தைப் பற்றிக் கூறுகையில் பிறவற்றைப் போன்று சாதாரணமாகச் சொல்லிச் சென்று விடாமல், மூன்று விதமாக தனிப்பட்ட விதத்தில் சொல்கிறார். மக்களில் சிலர் தவமென்றாலே நடுங்குவர். கடும் வெய்யிலில், மழையில் துன்புறுவதே தவமென்பது அவர்களதுஎண்ணம். ஆயின் இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் தவமென்பதற்குத் தரும் விவரங்கள், விளக்கம் இவற்றை நோக்குகையில் அத்தகைய பயம் கொள்ள

வேண்டிய அவசியமில்லை என்பது தெளிவு. மிகவும் எளிதான, அனைவரும் பின்பற்றக் கூடிய இம்மூன்று விதமான தவத்தினை ஆண், பெண், அனைவரும் பின்பற்றி திரிகரணசுத்தியுடன் மோட்சத் தினை அடைய வேண்டும்.

இந்த சுலோகத்தில் சரீர சம்பந்தமான தவம் சொல்லப்படுகின் றது. இதில் ஐந்துவிதமான சாதனைகள் விளக்கப்பட்டுள்ளன. 1. முதலில் பெரியோர்களைச் சேவித்தல், பூசித்தல், சொல்லப்படுகின் றது. (தேவர், பிராம்மணர், குருமார், ஞானிகளைப் பூசித்தல்) பெரி யோர்களையும் ஞானிகளையும் பூசிப்பதால் இரண்டு உன்னதமான நற்பலன்கள் கிட்டும். அவையாவன 1.அவர்கள் அனுகிரஹம், 2. நமது அஹங்காரம், அபிமானம் இவையடங்கும். ஆன்மீக மார்க்கத் தில் இறைவன், சத்குரு, மகான்களின் ஆசியும் அனுக்கிரஹமும் இல்லாவிடில் கொடுமையான மாயை எவருக்கும் வழியளிப்ப தில்லை. பந்தங்கள் தொலையாது. அதனால் ஆன்மீக வழியில் அவர் கள் முன்னேறுவது மிக்க கடினமாகிவிடும். எனவே அவர்களைப் பூசித்தல், அவர்களிடத்து பணிவு, அடக்கம், இவற்றோடு இருந்து அவர்களது அனுகிரஹம், ஆசீர்வாதம் இவற்றைப் பெற வேண்டும். அவர்களது கருணை முமுட்சுவிற்குப் பெரும் மேன்மையைத் தர வல்லது. அதுமட்டுமில்லாமல் பெரியோர்களைச்சேவிப்பதால் தன் னிடம் உள்ள அகங்காரம் கர்வம், தற்பெருமை விரைவில் ஒடுங்கிவி டும். எனவே இச்சாதனை மிகவும் தேவை. அதனால்தான் பகவான் முதன் முதலில் அதனைக் கூறுகிறார்.

'த்விஜ' - இரண்டாம் பிறவி எடுத்தவர் என்பது பொருள் - அதாவது பிறவியுடன் இந்த ஜன்மமேயன்றி, பண்பாட்டினால், சாத னையால் இரண்டாம் பிறவியெடுப்பவர் என்பது பொருள். அஞ்ஞா னத்தை விலக்கி, அஞ்ஞானத்துடன் கூடிய பழைய சரீரத்தை, மனத்தை விலக்கி, பிரம்ம ஞானத்துடன் கூடிய புதிய சரீரம் அடைந் தவன் என்று பொருள். அவர்களது முன்பிருந்த வாழ்க்கையைப் போல இருக்காது. அவர்களிடம் ப்ரும தேஜஸ் ஒளிவிடும்.

'ப்ராக்ஞ' - பிரக்ஞை உடையவன் ப்ராக்ஞன். அதாவது ஞானம். 'ப்ரக்ஞானம் ப்ரஹ்ம' என்ற மஹாவக்யத்தில் தெரிவிக்கப் பட்ட ப்ரம்மவடிவமான ப்ரக்ஞையை, சித்வஸ்துவை அறிபவரே ப்ராக்ஞன் எனலாம். அத்தகைய ஞானிகளைப் போற்றுதல் பூஜித் தல் இவை ஒரு விதமான தவமே என்று சொல்லப்படுகிறது.

'சௌசம்' - மனத்தூய்மை, சரீரத் தூய்மை சுற்றுப்புறத் தூய்மை இவை நம் தேவையே. தூய்மை அற்ற சூழ்நிலையில் இருப்பவனுக்கு ஆரோக்யம் கெடுவதுடன் தூய்மையற்ற எண்ணங்களே ஏற்படும். தூய்மையற்ற சரீரம் உடையவனுக்கு துர்வாசனைகள் வருவதால் நிஷ்டையில் விக்னம் ஏற்படும். இனி தூய்மையற்ற மனமுடையவனுக்கு தெய்வ மார்க்கமே புலப்படாது. எனவே சாதகர்கள் தூய்மையைப் போற்ற வேண்டும். தான் இருக்குமிடத்தைத் தூய்மையாக வைத்திருப்பதுடன், நீராடல், சாத்வீக உணவு உட்கொள்ளுதல் மூலம் சரீரத்தை, கெட்ட எண்ணங்களை ஒதுக்கி தெய்வீக எண்ணங்களை எண்ணுவதன் மூலம் மனத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.

'ஆர்ஜவம்' - நேர்மை - குற்றம் கபடம், வஞ்சகத் தன்மை இவை இன்றி இருத்தல் - பாம்பு போன்று வக்தமாக இருப்பவனிடம் விஷம் (பாவம் அக்ஞானம்) இருந்தே தீரும். எனவே மனம், வாக்கு, செயல் அனைத்தும் ஒரே விதமாக இருத்தல் வேண்டும். வக்ரமான செயல்களை விடுத்தல் வேண்டும்.

'ப்ரம்மசரியம்' - திரிகரணங்களில் பிரம்மசரியத்தைப் பின்பற்றுதல் ஒரு பெரிய தவம். ப்ரம்மசரியம் என்றும் விஷயதோஷம், காமபாவனை, காமவிவஹாரம் இன்றி இருத்தல். மேலும், ப்ரம்மத்தைக் குறித்துச் சிந்தித்து இருத்தல். எல்லா சாதனைகளுக்கும் அடிப்படை ப்ரம்மசரியமே. இவ்விஷயத்தில் சிரத்தை இன்றி இருத்தல் மனிதன் ஆன்மீகத்தில் உன்னத நிலையை அடைவது துர்லபம். ஆன்மீக நிலையில் ப்ரம்ம சரியம் முதன்மையான ஸ்தானம் வகிக்கின்றது (Main Switch)

'அஹிம்ச' - வாக்கு, சரீரம், மனம் இவற்றால் எந்த உயிருக்கும் துன்பம் இழையாது இருத்தல். அக்ஞானத்துடன் இருந்தால் தன் ஆத்மாவைத்தானே இம்சிப்பதற்கு ஒப்பாகும். ஆதலால் அக்ஞானத்தை விலக்கி ஞானத்தைப் பெறுவதன் மூலம், அஹிம்சையைப் பின்பற்றியவர் ஆவார். ஆயின் இது அஹிம்சையின் மிக உன்னதமான நிலை என்று அறிய வேண்டும்.

**வினா :** *சரீத்தவம் என்றால் என்ன?*

**விடை :** 1. தேவர்கள், குருமார், ப்ரம்ம ஞானிகள், ப்ராமணர்கள் முதலிய பெரியோர்களை வணங்குதல். 2. உள்ளும் புறமும் தூய்மையாய் இருத்தல், 3. நேர்மை, 4. ப்ரம்மசரியம், 5. அஹிம்சை இவற்றுடன் இருத்தலே சரீரத்தவம்.

### முன்னுரை

இனி வாக்குமயமான தவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

*அனுத்வே ஹ கரம் வாக்யம் சத்யம் ப்ரியஹிதம் சயத்!*
*ஸ்வாத்யாயாப்ய ஸனம் சைவ வாங்மயம் தபஉச்யதே!!* (15)

### சொற்பொருள்

அனுத் ககரம் - பிறருடைய மனதினை துன்புறுத்தாததும், சத்யம் - வாய்மையானது, ப்ரியஹிதம்ச - இனியதும், நலம் தருவதும் ஆன வாக்யம் - வாக்கியத்தினை ஸ்வாத்யாயா ப்யஸனம் யேவ - வேதம் ஓதுதலும், (வேதம், உபயனம் செய்தல், ப்ரணவ மந்திரங்கள், ஓதுதல், யத் - எவை உள்ளதோ (தத் - அது), வாங்மயம் - வாக்குசம்வந்தமான, தபஹ் - தவம் என்று, உச்ய தே - சொல்லப்படுகிறது.

### கருத்துரை

பிறருடைய மனதைத் துன்புறுத்தாத வாய்மையும் இனிமையும் நலனும் தரக்கூடிய வார்த்தை, மற்றும், வேதம் ஓதுதல் ஆகிய இவை வாக்குமயமான தவம் எனப்படுகிறது.

''வேதாந்த ஸதருத்ரீய ப்ரணவாதி ஜபம் புதாஹ்
சத்வசுத்திகரம் பும்ஸாம் ஸ்வாத்யாயம் பரிஸ க்ஷதே''

### விளக்கம்

'அனுத்வீககரம் வாக்யம்' - உச்சரிகப்படுகின்ற வாக்யம் பிறரது மனதிற்குத் துன்பம் தருவதாக இருத்தல் கூடாது. மேலும் அது உண்மையாகவும் இருத்தல் வேண்டும். உண்மையையும், இனிமை இன்றிச் சொல்லுதல் தகாது. அன்புடனும் இதத்துடனும் பேசுதல் வேண்டும்.

ஸ்வாத்யாய அப்யஸனம்' அப்யஸனம் என்பதால் வேதம் ஓதுதல் முதலானவற்றைத் தினம் ஓதுதல் வேண்டும் என்பது தெளிவாகிறது. த்யானமே முக்யமல்லவா? சாஸ்த்ர அப்யாஸம் எதற்கு என்று கேட்பவர்க்கு பகவான் த்யானம் முக்யமாயினும் ஓய்வு நேரத்தில் சாஸ்திரங்களைக் கற்றல் அத்யயனம் செய்தல் பரிசீலித்தல் இவை நெருப்பிற்குக் காற்று உதவுவது போல த்யானம் முதலியவற்றிற்கு இவை உதவும் என்று அறிதல் வேண்டும். இத்தகைய அத்யயனம் ப்ரணவ மந்திரங்களை ஜபித்தல் சத்ய வாக்கு இவற்றால் வாக்குத்

தூய்மை ஏற்படும்.

**வினா :** வாக்குமயமான தவம் என்றால் என்ன?

**விடை :** (1) ஏனையோரைத் துன்புறுத்தாத சத்யமான இன்பமான நலத்தைத் தருவதான வாக்கும் (2) வேதம் முதலானவற்றை ஓதுதலும், வாக்குமயமான தவம் ஆகும்.

**முன்னுரை**

இனி மானஸீக தவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

*மனஹ் ப்ரஸாதஹ ஸௌம்யத்வம் மௌனமாத்ம விநிக்ரஹஹ!*
*பாவஸம் சுத்திரித்யேதத்தபோ மானஸமுச்யதே!!* (16)

**சொற்பொருள்**

*மனஹ்ப்ரஸாதஹ - மன அமைதி (கலக்கம் இன்றி இயல்பாக இருத்தல்), ஸௌம்யத்வம் - இனிமையான தோற்றத்துடனும் (க்ரே பாவம் இல்லாதிருத்தல்), மௌனம் - இவற்றினைக் குறித்த நற்காரியங்களைக் குறித்த நினைவுடன் இருத்தல், அதாவது ஆத்ம த்யானத்தில் சித்தத்தை நிலைநிறுத்தல், ஆன்ம வினிக்ரஹஹ - தன்னடக்கம் பயிலுதல், பாவ ஸம்ஸுத்தி - தூய்மையான நோக்கம் கொண்டிருத்தல், இதியேதத் - ஆகியவை, மானஸம் - மனம் சம்பந்தமான தபஹ் - தபம் என்று, உச்யதே - சொல்லப்படுகிறது.*

**கருத்துரை**

*மன அமைதி, அன்புடைமை, இனிய தோற்றம், மௌனம், தன்னடக்கம், தூய நோக்கம் ஆகிய இவை மானஸதவம் எனப்படுகிறது.*

**விளக்கம்**

*'மனஹ் ப்ரஸாதஹ' - மனம் சோர்வடையாது, குழப்பம் அடையாது, தூய்மையாக, அமைதியுற்றிருத்தல், வேண்டும். மனதில் ரஜோகுண தமோ குணங்களின் ஆதிக்கத்தினால் அது சலனமுற்றோ அல்லது செயலற்றோ இருக்கும். எனவே ஸத்வகுணத்தையும், விசுத்த ஸத்வகுணத்தையும், மேலோங்கச் செய்து, மனத்தினைச் சலனமற்று வைத்திருத்தல் வேண்டும். தேய்த்தான் கொட்டையைத் தேய்த்து நீரில் கலந்தால் நீர் எவ்வாறு தெளிவடைகிறதோ அவ்*

வாறே பக்தி ஞானம் வைராக்யம் இவற்றுள் மனத்தில் உள்ள மாசினை நீக்கிச் சித்தத்தைத் தெளிவாக்க வேண்டும். இதுவே மான ஸீக தபஸ்.

'ஸௌம்யத்வம்' - ஸாதாரணமாக உள் மனத்தின் எண்ணங்கள் முகத்தில் பிரதிபலிக்கும். முகம் இனிமையாக மலர்ந்திருந்தால் சித் தமும் தூய்மையாக சலனமற்று மலர்ந்து இருக்கிறது என ஊகித்துக் கொள்ளலாம். 'மௌனம்' - வாக்மௌனம், மானஸீக மௌனம் என்று 2 வகைப்படும். இங்கு மௌனம் என்று மானஸீக தவத்தில் சொல்லப்படுவதால் இதனை மானஸீக மௌனம் என்றே கொள்ள வேண்டும். வாக்கினால் மட்டும் மௌனம் ஸாதித்து மனத்தினால் மௌனம் இன்றி இருந்தால் மனமானது பலவித எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டு ஸஞ்சலப்படும். எனவே மனோமௌன மும், மிகத் தேவை என்பதை ஊகித்தறிய இயலும். மௌனத்திற்கு முக்யமான பொருள் மனோவிருத்திகளைக் கட்டுப்படுத்துதல் சலன மற்று இருத்தல் இவையே ஆகும். எனவேதான் மௌனத்தினை பகவான் வாக்குத்தவத்தில் சேர்க்காமல் மானஸீகத்தவத்தில் சேர்க்கி றார்.

'ஆத்மாவினிக்ரஹ' - இங்கு ஆத்மா என்பதற்கு மனம் என்னும் இந்திரியங்கள் என்றும் பொருள். இங்கு வினிக்ரஹம் என்று சிறப் பித்துச் சொல்வதால் இந்திரிய மனங்களை நன்கு கட்டுப்படுத்துதல் வேண்டும் என்பது தெளிவாகிறது. 'பாவஸம்சுத்தி' என்ற இடத்தில் இவ்வாறே எண்ணங்களில் முழுமையான தூய்மை இருத்தல் வேண் டும் என்பதை 'ஸம் சுத்தி' என்று சிறப்பித்தும் சொல்கிறார். ஞான சித்திக்கு எண்ணத் தூய்மை மிக அவசியம். தூய்மையான தெளி வான நீரில் சூரியன் மிகவும் ஒளியுடன் பிரகாசிப்பதைப் போல தெளிவான இதயத்தில் ஆத்ம சூரியன் நன்கு ஒளிர்வான்.

**வினா :** மானஸீகத் தவம் என்றால் என்ன?

**விடை :** 1. மனம் தெளிவாக இருத்தல், 2. ஒளியுடன் கூடிய முகம்., 3. மௌனம் ஆகிய இவை மான்ஸீகத்தவம் எனப்படும்.

**முன்னுரை**

இனி சாத்வீக, ராஜஸ, தாமஸ தவங்களைப் பற்றி விவரிக்கிறார்.

*ஸ்ரத்தையா பரயா தப்தம் தபஸ்தத் த்ரிவிதம் நரைஹ!*
*அபலா காங்க்ஷி பிர்யுக்தைஹ ஸாத்விகம்பரி சக்ஷதே!! (17)*

### சொற்பொருள்

*'அபல ஆகாங்க்ஷிபிஹ்' - பலனைக் கருதாதவர்களும், யுக்தைஹ் - சலனமற்ற சித்தமுடையவர்களும் ஆன, நரைஹ் - மனிதர்களால் பரயா - அதிகமான, ச்ரத்தையா - சிரத்தையுடன், தப்தம் - செய்யப்படுகின்ற, தத்த்ரிவிதம் - மேலே சொல்லப்பட்ட 3 விதமான, தபஹ் - தவத்தினை, ஸாத்விகம் - ஸாத்வீகமானதென்று, பரிசக்ஷதே - சொல்லப்படுகின்றது.*

### கருத்துரை

*பலனைக் கருதாத, உறுதி உடைய நரர்களால் பெருமுயற்சியுடன் செய்யப்படும் மேற்சொன்ன மூன்றுவிதமான தவங்களும், ஸாத்வீகமானதென்று சொல்லப்படுகின்றது.*

### விளக்கம்

*'ச்ரத்தையா' என்ற சொல்லுடன் 'ப்ரயா' என்பதைச் சேர்த்துச் சிறப்பித்து சொல்வதால் சாதாரணமான சிரத்தை போதாது என்பதும், அதிகமான சிரத்தை வேண்டும் என்பதும் தெளிவாகிறது. ஏனெனில் சாதகர்களுக்கு இடை இடையே ஏதேனும் சிறிது தடங்கல் ஏற்பட்டாலும், சிரத்தை குறையும். அதனால் தீவிரமான நம்பிக்கை, அதிக சிரத்தைப் பிடிப்பு இருந்தால் மாத்திரமே மாயையை வெல்லுதல் இயலும்.*

*'நரைஹ்' - மனிதனாகப் பிறந்தவர் அனைவரும் பரமார்த்த இலக்கினை அடைவதற்கு அருகதை உடையவர்கள் என்பதைக் குறிக்கும் வகையில் கீதாச்சாரியன் இங்கு நரர்கள் என்று பொதுவாகக் குறித்துள்ளார். 'யுக்தைஹ்' - இறைவனுடன் ஆத்ம தத்துவத்துடன் ஆன்மீக சாதனையில் நிலைத்தவர்கள், உலகியல் காட்சி ஜாலங்களில் கூடுவதைக் குறைத்துக் கொண்டு சலனமற்ற சித்தத்தை உடையவர்கள் யுக்தர்கள் எனப்படுவர். இதனால் ஸாத்வீகத் தவத்தினை மேற்கொள்வோர் 3 நற்குணங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. அவை எவை எனில் 1. மிக்க சிரத்தையுடன் இருத்தல், 2. பலனைக் கருதாது கர்மங்களைச் செய்தல், 3. இறைத்தியானத்திலேயே நிலைத்திருத்தல் - இத்தகைய நல்லியல்புகளுடன் மேற்சொன்ன சரீர, வாக்கு, மானஸிக தவங்களைச் செய்து வந்தால் அது*

சாத்வீகத்தவம் எனப்படும்.

வினா : சாத்வீகத்தவம் எத்தகையது?

விடை : 1. மிக்க சிரத்தை, 2. பலனைக் கருதாமை, 3. தெய்வத்தியானத்தில் நிலைத்திருத்தல் ஆகிய மூன்றுவித தவமே சாத்வீகத்தவம் எனப்படும்.

## முன்னுரை

அடுத்து ராஜச தவத்தினைப் பற்றிக் கூறுகிறார்.

*ஸத்காரமான பூஜார்த்தம் தபோ தம்பேன சைவயத்!*
*க்ரியதே ததிஹ ப்ரோக்தம் ராஜஸம் சலமத்ருவம்!!* (18)

## சொற்பொருள்

ஸத்காரமான பூஜார்த்தம் - பிறரால் பாராட்டுதலையும் பெருமையையும், போற்றுதலையும் கருதி, தம்பேன ச ஏவ - ஆடம்பரத்தோடு மட்டும், யத் - எந்த, தபஹ - தவம், க்ரியதே - செய்யப்படுகின்றதோ, தத் - அது சலம் - தற்காலிகமான, சத்ருவம் - உறுதியற்ற பலமுடையதாய், ராஜஸம் - ராஜஸதவமென்று, இஹ இவ்வுலகில் ப்ரோக்தம் - சொல்லப்படுகிறது.

## கருத்துரை

பிறரால் பாராட்டுதலையும், பெருமையையும் போற்றுதலையும், கருதி ஆடம்பரத்தோடு செய்யப்படும் தவம், நிலையற்ற, உறுதியற்ற பலனை யுடையதான அது ராஜஸ தவம் எனச் சொல்லப்படுகிறது.

## விளக்கம்

சிலர் தம் தவத்தைக் கண்டு பிறர் தம்மைப் பாராட்டிப் போற்றுதல் வேண்டுமெனக் கருதித் தவம் செய்வர். இது நற்பலனைக் கருதியோ, இதயபூர்வமாகவோ, பக்தி சிரத்தையுடனும் செய்யப்படும் தவமல்லவாதலால், ஆடம்பரத்திற்காகவே செய்யப்படுவதால் நிலையாக இராது. அதன் பலனும் அவ்வாறே பலமற்று, நிச்சயமின்றி இருக்கும். எனவே அறிஞர்கள் இதனை அனுசரித்தல் தகாது.

வினா : ராஜஸ தவம் எத்தகையது?

விடை : பிறர் போற்றுதலுக்காக ஆடம்பரமாகச் செய்யப்படும் தவம் ராஜஸ தவமெனப்படுகிறது.

'வினா : நிலையற்று, நிச்சயமற்று பலனைக் கொடுக்கும், சலனத்துடன் நிச்சயமற்ற சொரூபமுடையது.

முன்னுரை

இனி தாமஸ தவத்தைப் பற்றிக் கூறுகிறார்.

*மூடக்ராஹேணாத்மனோ யத்பீடயா க்ரியதே தபஹ!*
*பரஸ்யோத்ஸாதனார்த்தம் வா தத்தாமஸமுதாஹ்ருதம்!!* (19)

சொற்பொருள்

யத் தபஹ - எந்தத் தவமானது, மூட க்ராஹேண - மூடத்தனமான பற்றுதலுடனும், ஆத்மனஹ பீடயா - தன்னைத் துன்புறுத்தியோ, (கடுமையான விரதங்களால்), பரஸ்ய - பிறரை, உத்ஸாதன அர்த்தம் வா - அழித்தற் பொருட்டோ, கிரியதே - செய்யப்படுகின்றதோ; தத் - அது, தாமஸம் - தாமஸ தவமென்று, உதாஹ் ருதம் - சொல்லப்படுகின்றது.

கருத்துரை

மூர்க்கத்தனமான பற்றுதலுடன் தன் சரீரத்தை (கடுமையான உபவாசங்களால்) துன்புறுத்தியோ, அல்லது பிறரை அழிப்பதற்காகவோ செய்யப்படும் தவம் தாமஸத்தவம் எனச் சொல்லப்படுகின்றது.

விளக்கம்

'மூடக் ராஹேண' - மூர்க்கத்தனமான பற்றுதலுடன் - பற்றுதல் தேவையெனினும் விவேகத்துடன் அது இருந்தால்தான் நற்பலனைக் கொடுக்கும். மூர்க்கத்தனமான முட்டாள்தனமானபற்றுதல் உபயோகமில்லை.

'ஆத்மனோ யத்பீடயோ' - சிலர் மூர்க்கத்தனமான பற்றுதலுடன் கடும் உபாசனைகளால் தம் சரீரத்தை வருத்திக் கொண்டு தவம் புரிவர். அதுவும் விவேகத்துடன் கூடியிருந்தால்தான் சோபிக்கும். இல்லையெனில் அவர்கள் தீய வழியில் செல்லக் கூடிய வாய்ப்புண்டு. விவேகமின்மையால் சிலர் பிறரை அழிப்பதற்கெனச் செய்

கின்றனர் எனப்பட்டது. அவ்வாறு செய்வோர், தீய முறையில் பயன் படுத்துகின்றனர். இதற்கு அவர்களது மூடத்தன்மையே காரணம். எனவே ராஜஸ தாமஸ தவத்தை விடுத்து, சன்மார்க்க நெறியில் நடந்து, தெய்வத்தை அடைய வேண்டுமானால் சாத்விகமான தவத்தையே மேற்கொள்ள வேண்டும். இச்சுலோகத்தினால் கீழ்வரும் அம்சங்கள் புலப்படுகின்றன. 1. மூர்க்கத்தனமான பற்றுதல் கூடாது., 2. கடுமையான உபாசனைகளின் மூலம் தனது சரீரத்தையோ, மனத்தையோ துன்புறுத்திக் கொள்ளக் கூடாது. 3. இதர உயிர்களுக்குத் தீங்கு செய்தல் கூடாது.

வினா : தாமஸத் தவம் எத்தகையது?

விடை : 1. மூர்க்கத்தனமான பிடிவாதத்துடன் தன் சரீரத்தைத் துன்புறுத்துவதன் மூலமாகவோ, 2. பிறரது அழிவிற்காகவோ செய்யப்படும் தவம் தாமஸத்தவம் எனப்படும்.

முன்னுரை

இனி முவ்வகைத் தானங்களைக் கூறுகிறார்.

*தாதவ்யமிதி யத்தானம் தீயதே அனுபகாரிணே!*
*தேசே காலே சபாத்ரே சதத்தானம் ஸாத்விகம் ஸ்ம்ருதம்!!* (20)

சொற்பொருள்

தாதவ்யம் இதி- கொடுத்தல் கடமையென்று நிச்சயத்துடன், யத்தானம் - எந்த தானமானது, தேசே (புண்யத்தை) தகுந்த பிரதேசத்தில், காலேச (புண்ய) காலத்தில், பாத்ரேச - தகுதியுடையவனிடத்தில், அனுபகாரிணே - பிரதி யுபகாரம் செய்யக் கூடிய சக்தியிலலாதவர்க்காக, தீயதே - கொடுக்கப்படுகின்றதோ, தத் தானம் - அந்த தானமானது, ஸாத்விகம் - (இது) சாத்விகம் என்று ஸம்ருதம் - கருதப் படுகின்றது.

கருத்துரை

தக்க இடத்திலே, புண்ய காலத்தில், தகுந்தவனுக்கு, பிரதியுபகாரம் செய்யும் சக்தியற்றவனுக்கு, கொடுத்தல் கடமையென்ற நிச்சயத்துடன் கொடுக்கப்படும் தானம் சாத்விக தானமென்று சொல்லப் படுகின்றது.

### விளக்கம்

'தாத வ்யமிதி' - ஒவ்வொருவரும் தானம் செய்தல் தனது தர்ம மெனக் கருதி தானம் செய்தல் வேண்டும். அவ்வாறின்றிப் பிறர் மெச்ச வேண்டுமென்பதற்காகவோ, பிரதிபலனை எதிர்பார்த்தோ செய்தல் கூடாது. ''இன்று தானம் செய்யப் போகிறாயா? என்று எவரேனும் கேட்பின், 'இது எனது தர்மம் தானம் செய்ய வேண்டியதே (தாதவ்யயம்), எனவே செய்கிறேன்'' என்றே சொல்ல வேண்டும். தியாகம் செய்தல், தியானம் செய்தல் இது அவரவர் நன்மைக் கேயாகும். பிறருக்கு உபகாரம் செய்தால் அதனால் கிடைக்கும் புண்யத்தினால் நமக்கு நாமே செய்து கொள்ளும் உபகாரமேயாகிறது. எனவே தானம் செய்பவர் பிறரது மேன்மைக்காக மட்டுமேயெனக் கருதாது தத்தம் நன்மைக்காகவே எனவும் கருதுதல் வேண்டும்.

'அனுபகாரிணே' - என்பதால் பிரதியுபகாரம் செய்ய இயலாதவர்க்கு, ஏழைக்கு, ஆசையற்றவர்க்கு, ஊனமுற்றவர்க்கு, தரித்திரர்களுக்குச் செய்யப்படும் தானம் மேன்மையானது. சக்தியுள்ளவர்க்கு, பிரதியுபகாரம் செய்யக்கூடிய தகுதியுடையவர்க்கு தானம் செய்தல் தகாது என்பதும் இச்சுலோகத்தினால் புலனாகின்றது.

'தேசே' - என்றால் புண்ய க்ஷேத்ரங்களில், தீர்த்தங்களில், புனிதமான ஆசிரமங்களில் அல்லது தெய்வீகச் சூழ்நிலையில் என்பது பொருள். 'காலே' என்றால் கிரகணம், சங்கராந்தி, அல்லது ஏதேனும் புண்ய காரியங்களைச் செய்யும்போதும் ஆகிய புனிதமான காலத்தில் என்று பொருள் 'பாத்ரே' யென்றால் யோக்யதை - தகுதியுடைவர்க்கு என்று பொருள். பாத்திரமறிந்து பிச்சையிடு என்று பெரியோர் சொல்வர். தகுதியற்றவர்க்குத் தானம் செய்தால் அளித்தவர்க்கு நல்ல பலன் கிடைக்காது என்பது பொருள்.

**வினா :** *சாத்விக தானமென்றால் என்ன?*

**விடை :** 'தானம் செய்ய வேண்டியதே' என்று நிச்சயித்துக் கொண்டு 1. பிரதியுபகாரம் செய்ய இயலாத தீனர்களுக்கு, உதவியற்றவர்களுக்கு, 2. நேரம், காலம், இவற்றை நோக்கிச் செய்யப்படும் தான்ம் சாத்விக தானமெனப்படும்.

### முன்னுரை

இனி ராஜஸ தானம் பற்றிச் சொல்கிறார்.

*யத்து ப்ரத்யுபகாரார்த்தம் பலமுத்திச்ய வா புனஹ!*
*தீயதேச பரிக்லிஷ்டம் தத்தானம் ராஜஸம் ஸ்ம்ருதம்!!* (21)

## சொற்பொருள்

*ப்ரத்யுகார்த்தம் - பிரதி உபகாரத்தை எதிர் பார்த்தாவது, புனஹ் - மேலும், பலம் - பலனை, உத்திஸ்சவ - உத்தேசித்தாவது, பரிக் லிஷ்டம் ச - மனவருத்தத்தோடும், எத்து - எதுவவோ, தீயதே - தரப்படுகிறதோ, தத் தானம் - அத்தகையதானம், ராஜஸம் (இதி) ராஜஸ தானம் என்று, ஸம்ருதம் கருதப்படுகிறது.*

## கருத்துரை

*கைமாறு கருதியோ பலனைக் கருதியோ மன வருத்தத்தோடு வழங்கப்படும் தானம் ராஜஸதானம் என்று சொல்லப்படுகிறது.*

## விளக்கம்

*கைம்மாறு கருதிச் செய்யப்படும் தானம் உத்தம தானம் அல்ல என்று கூறுகிறார். அது ஒருவியாபாரம் போன்று ஆகிவிடும். மேலும் நமக்குப்பின்னால் மேலுலகில் ஏதோ பலன் கிடைக்கும் என்று கருதிச் செய்யப்படும் தானம் உத்தமமானது அல்ல நிஷ்காம மாக இறைவனுக்குத் திருப்தி தரும் விதமாகச் செய்யப்படும் தானமே உத்தமமானது.*

*'பரிக்லிஷ்டம்' - சிலர் தானம் செய்யும்போது அய்யோ இந்தப் பொருள் நம் கைவிட்டுப் போகிறதே என்று மனதில் வருத்தத்துடன் அளிப்பர். இன்னும் சிலர் பிறரது பலவந்தத்தால் தானம் செய்வர். இவ்வாறு மனக் கிலேசத்துடன் செய்யப்படும் தானம் நற்பலனை அளிக்காது. தானம் செய்வது தனது கடமை, தர்மம் என்று எண்ணி ஆனந்தத்துடன் அளிப்பதே சாத்வீக தானம் எனவே அறிவுடையோர் சாத்வீக தானத்தையே செய்ய வேண்டும்.*

**வினா :** *ராஜஸதானம் எத்தகையது?*

**விடை :** *1. பிறதி உபகாரம் கருதி, 2. பலனைக் கருதி, 3. மனத்துன்பத் துடன் அளிக்கப்படும் தானம் ராஜஸ தானம்.*

## முன்னுரை

*இனி தாமஸ தானம் குறித்துக் கூறுகிறார்.*

*அதேசகாலே யத்தான மபாத்ரே இப்யஸ்ச தீயதே!*
*அஸத் க்ருதமவக்ஞாதம் தத்தாமஸமுதா ஹ்ருதம்!! (22)*

சொற்பொருள்

*'அதேசகாலே' - தகாத இடத்திலும், காலத்திலும் அபாத்ரேப்யஹ்ச தகுதியற்ற மனிதர்களுக்கும் அசத்க்ருதம் - பணிவின்றி, அவக்ஞாதம் - இகழ்ச்சியுடன் அவமானப்படுத்தி, யத்தானம் - எந்த தானம். தீயதே - தரப்படுகின்றதோ, தத் - அது, தாமஸம் - தாமஸ தானம் என்று, உதாஹ்ரு தம் - சொல்லப்படுகிறது.*

கருத்துரை

*தானத்திற்கு (புனிதமற்ற) இடத்திலும், காலத்திலும் தகுதியற்றவர்க ளுக்குப் பணிவின்றி இகழ்ச்சியுடன் செய்யப்படும் தானம் எதுவோ அது தாமஸம் எனப்படுகிறது.*

விளக்கம்

*தானம் அளிக்கும் போது பணிவுடனும், மரியாதையுடனும், வணக்கத் துடனும் செய்ய வேண்டுமே தவிர அலக்ஷ்ய பாவத்துடன் செய்தல் தகாது. 'இந்தா எடுத்துக் கொண்டு போ!' என்று பணத்தை வீசி எறிதல், திட்டிக் கொண்டே கொடுத்தல் தகாது. இவ்வாறு தாமஸ லக்ஷணத்துடன் தானம் அளித்தால் அது பலனின்றிப் போகும். சிரத்தை இன்றிக் கொடுக்கப்படும் பொருள் ஈயாதததற்கு ஸமானமே என்று பகவான் இவ்வத்தியாயத்தின் இறுதியில் சொல்லியுள்ளார். (அஸ்ரத்தையாஹுதம் தத்தம்... அஸத்த்யு ச்யதே) எனவே இத்தகைய தானத்தினை எவரும் செய்யலாகாது.*

வினா : *தாமஸதானம் எத்தகையது?*

விடை : *(1) இடம், காலம், தகுதி இவற்றைப் பார்க்காது செய்யப்படுவது (2) பணிவின்றிக் கொடுத்தல் (3) அலக்ஷியபாவத்துடன் கொடுத்தல் தாமஸ தானம் எனப்படும்.*

முன்னுரை

*ப்ரம்மத்தின் நாமத்தினை ஐந்து ஸ்லோகங்களின் மூலம் தெரிவி... றார்.*

*ஓம் தத் ஸதிதி நிர்தேசோ ப்ரஹ்மணஸ்த்ரிவிதஹ்ஸ்ம்ருதஹ!*
*ப்ராஹ்மணாஸ்தே னவேதாஸ்ச்சயக்ஞாஸ்ச விஹிதாஹ புரா!! (23)*

## சொற்பொருள்

ப்ராஹ்மணாஹ் - ப்ரம்மத்தினுடைய, ஓம் இதி - ஓம் என்ற, தத் - தத் என்னும், ஸத் - ஸத் என்னும், த்ரிவிதஹ் - மூன்று விதமான, நிர்தேசஹ - பெயர்கள், ஸ்ம்ருதஹ - சொல்லப்பட்டுள்ளது, தேன - அதனால், ப்ராஹ்னுஹ் - பிராமணர்களும், வேதாஹ்ச - வேதங்களும், யக்ஞாஸ்ச - யாகங்களும், புரா - பண்டைய காலத்தில், விஹிதாஹ் - வகுக்கப்பட்டன.

## கருத்துரை

பரப்ரும்மத்திற்கு ஓம், தத், ஸத் என்ற 3 விதமான, பெயர்கள் மொழியப்பட்டுள்ளது. இப் பெயர்களினின்றே (அதன் உச்சாரணையினால்) பண்டைக் காலத்து பிராமணர்களால் (ப்ரம்ம ஞானியர்) வேதங்கள் யாகங்கள் படைக்கப்பட்டன.

## விளக்கம்

பரப்ரும்மம் உண்மையில் நாம ரூபமற்றதாயினும் பக்தர்கள் த்யானிப்பதற்கு, சிந்திப்பதற்கு அதற்கு நாமங்கள் அளிக்கப்பட்டன. அவையே ஓம், தத், ஸத் என்று சொல்லப்படுகிறது. இம்மந்திரங்களின் வழியே இலக்கான பரப்ரும்மத்தை மக்கள் சிந்திக்கிறார்கள். சாக்ஷாத் பரப்ரும்மத்தின் வாக்கே ஆதலால் இம்மூன்று பெயர்களும் மஹாசக்தி வாய்ந்தது. புனிதமானது. வேதசாஸ்த்ரங்களில் இந்த ப்ரணவாதி மந்திரங்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

''தஸ்யவாசகஹ ப்ரணவஹ'' - அந்தப் பரமாத்மாவின் நாமம் ஓம்காரம்.

''தஜ்ஜ பஸ்த தர்த்த பாவனம்'' - அந்த நாமத்தினை ஜபித்த வண்ணம் அதன் பொருளை நினைத்துப் பார்த்தல் வேண்டும் என்று பதஞ்சலிமகரிஷி ஓம்கார மஹிமையைக் குறித்து விவரித்துள்ளார். கர்மானுஷ்டானங்களில் ஏதாவது குறை, தடங்கல், குற்றம் முதலானவை இருப்பின் அவை அனைத்தும் உச்சரிப்பதற்கு சமானம்.

ஓம் தத் ஸத் என்பதற்கு வேறொரு பொருள் உண்டு. ''ஓம்'' என்றால் பரப்ரும்மம். ''தத்'' என்றால் அது ஒன்றே, ''சத்'' என்றால் சத்பொருள் அதாவது, ஏனைய வஸ்துக்கள் அனைத்தும் காணப்படும் உலகம் அனைத்தும் பொய்மையானவையே என்பது பொருள்.

எனவே ஓம் தத்ஸத் என்ற மந்திரத்தை உச்சாடனையால் ப்ரம்மம் உண்மை. உலகம் பொய் என்ற சர்வவேதாந்த சித்தாந்த சாரத்தின் சுருக்கம் வெளிப்படுகிறது. ஸத்வஸ்து பாவனை, ஆத்ம பாவனை இவற்றை வைராக்யத்துடன் திடப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஓம் தத் ஸத் என்பதற்குக் கீழ்க்கண்டவாறு 2 விதமான பொருள் சொல்ல இயலும்.

| | |
|---|---|
| 1. ஓம் - பரப்ரும்மம் (உள்ளது) | 2. தத் - அந்த |
| தத் - அந்தப் பரப்ரும்மம் | 3. ஸத் - உண்மைப்பொருள் |
| ஸத் - உண்மை வடிவானது | 3. ஓம் -பரப்ரும்மம் |

**வினா :** பரபிரும்மத்திற்கு எத்துணை பெயர்கள் உண்டு? அவை யாவை?

**விடை :** மூன்று பெயர்கள் உண்டு. அவை முறையே (1) ஓம் (2) தத் (3) ஸத் எனப்படுகின்றன.

**வினா :** அவற்றின் மகிமை எத்தகையது?

**விடை :** அவற்றினின்றே (அவற்றின் நாம உச்சாடனத்தினால்) பண்டைக் காலத்தே (1) பிராம்மணர்கள் (2) வேதங்கள் (3) யக்ஞங்கள் தோன்றின.

**வினா :** எனவே பிரம்மஞானிகள், வேதங்கள், யக்ஞங்கள் இவற்றின் மூலம் எது?

**விடை :** ஓம் காரமே. அதன் வடிவான பரபிரம்மமே.

*தஸ்மாதோமித்யுதாஹ்ருத்ய யக்ஞதானதபஹ்க்ரியாஹ!*
*ப்ரவர்தந்தே விதாநோக்தாஹ ஸததம் ப்ரஹ்மவாதினாம்!!* (24)

**சொற்பொருள்**

தஸ்மாத் - ஆகையினால், பிரஹ்ம வாதினாம் - வேதங்களை நன்கு அறிந்தவர்களின், நாதாநோக்தாஹ - சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட, **யக்ஞதான தபஹக்ரியாஹ் - யக்ஞம், தானம், தவம் எனப்படும் கர்மங்கள், ஸததம் - எப்போதும், ஓம் இதி - 'ஓம்' என்று, உதாஹ்ருத்ய - உச்சரித்து, (அதன் பின்னரே) ப்ரவர்தந்தே - தொடங்குகின்றன.**

கருத்துரை

ஆகையால் வேதமறிந்தவர்கள் வேத விதிப்படி செய்யும் யக்ஞ-தான - தவக்கிரியைகள் எப்போதும் 'ஓம்' என்று உச்சரித்துத் தொடங்குகின்றன.

விளக்கம்

'ஓம் தத் ஸத்' என்னும் மூன்றில் முதலானதான 'ஓம்' என்ற பதத்தின் மகிமையை வெளிப்படுத்துகின்றார். பரபிரம்மத்தின் வாசகமான அது புனிதமானதாகவும், மஹாசக்திபடைத்ததாகவும் இருப்பதால் வேதமறிந்தவர் அனைவரும் தாம் செய்யும் யக்ஞம், தானம், தவம் முதலிய கிரியைகள் அனைத்திலும் முதலில் 'ஓம்' என்ற ஒரே அக்ஷரத்தினை உச்சரித்துத் தொடங்குகின்றனர். (அக்கிரியைகளின் முடிவிலும் 'ஓம்' என்று உச்சரித்து முடிப்பர்). அவ்வாறு செய்வதால் அக்கிரியைகளில் ஏதேனும் குற்றங்குறைகள் இருப்பின் அவை அம் மந்திரத்தின் பலத்தால் எரிந்து சாம்பலாகி கிரியைகளின் பூரண பலனை அளிக்கும்.

'ஸததம்' எப்போதும் வேத வித்தகர்கள் தாம் செய்யும் கிரியைகளின் ஆரம்பத்தில் அவ்வாறே உச்சரிப்பர். இஞ்சினால் இரயில் பெட்டிகள் நகர்வதைப் போல, 'ஒன்று' என்னும் எண்ணால் பக்கத்தில் உள்ள பூஜ்யங்கள் அனைத்தும் சக்தியுடையனவாக ஆவதைப் போல, முதலில் உள்ள ஓம்காரத்தினால் ஏனைய மந்திரக் கிரியைகள் அனைத்தும் ஒளியுடையனவாக அழகுடையனவாக, சக்தியுடையனவாக ஆகிவிடும்.

வினா : 'ஓம்காரத்தின்' மகிமையைத் தெரிவிக்கவும்?

விடை : வேத வித்தகர்கள் தாம் செய்யத் தொடங்கும், யக்ஞம், தானம், தவம் அனைத்தையும் 'ஓம்' என்ற பிரணவத்துடனேயே எப்போதும் தொடங்குவர்.

*ததித்யன பிஸந்தாய பலம் யக்ஞதபஹ க்ரியாஹ!*
*தானக் கிரியாஸ்ச விவிதாஹ க்ரியந்தே மோக்ஷ காங்க்ஷிபிஹி!!* (25)

## சொற்பொருள்

*மோக்ஷ காங்க்ஷிபிஹி - முமுக்ஷுக்களினால், 'தத்' இதி - 'தத்' என்று (உதாஹ்ருத்ய - பிரம்மத்தின் நாமத்தை உச்சரித்து), பலம் - பலனை, அனபிஸந்தாய - கருதாமல், விவிதாஹ - பலவிதமான யக்ஞதபஹ கிரியாஹ - யக்ஞங்கள், தவங்கள், முதலான கிரியைகளை, தான கிரியாஹ்ச - தானம் முதலான கிரியைகளும், கிரியந்தே - செய்யப்படுகின்றன.*

## கருத்துரை

*அவ்வாறே 'தத்' என்னும் பதத்தினை உச்சரித்த பின்னரே முமுக்ஷுக்கள் பலனைக் கருதாது பலவிதமான யக்ஞங்கள், தானங்கள், தவம், முதலான கிரியைகளைச் செய்கின்றனர்.*

## விளக்கம்

*முமுக்ஷுக்களைப் பலனைக் கருதாது, யக்ஞம், தானம், தவம் முதலான கிரியைகளைச் செய்வர் என்று சொல்வதால், பலனைக் கருதாது செய்யும் போதே சித்த சுத்தி பெற்று அக்கிரியைகள் மோட்சத்திற்கு வழி வகுக்கும் என்பது தெரிகிறது. இத்தகைய கர்ம பலத் தியாகமே கீதையின் முக்கிய போதனைகளில் ஒன்று. மேலும் முமுக்ஷுக்களுக்கு அது மிக மிக அவசியமாகிறது.*

*இங்கு 'மோஹ காங்க்ஷர்கள்' மோட்சத்தினை விரும்புவோர் தவம் யக்ஞாதி கிரியைகளை நிஷ்காமமாகச் செய்வர் என்பதால் சித்த சுத்தியடைவதால் அவை மோட்சத்திற்கு உதவும் என்பதும், அத்தகைய கிரியைகளை முமுக்ஷு முக்தி வடிவான தன் இலட்சியத்தினை அடைவதற்காகத் தவறாது அனுசரித்தல் வேண்டுமென்பதும் இங்குச் சொல்லப்பட்டது. இக்கருத்தையே அடுத்த அத்தியாயத்திலும், 'யக்ஞ தான தபஹ கர்ம நத்யாஜ்யம் கார்யமேவ தத்' என்னும் சுலோகத்தினால் தெளிவுபடுத்துகிறார். தானம், தவம், முதலியவற்றைச் செய்வதை விட்டு விடுதல் கூடாது என்கிறார்.*

**வினா :** *மோட்சத்தை அடைய விரும்புபவர் என்ன செய்வர்?*

**விடை :** *'தத்' என்ற பிரம்ம வாசகத்தை உச்சரித்துப் பின் பலவிதமான யக்ஞம், தவம் போன்ற புண்ய காரியங்களைச் செய்வர்.*

**வினா :** *அதனை அவர்கள் எவ்வாறு செய்வர்?*

**விடை :** *பலனைக் கருதாது செய்வர்.*

**வினா :** *எனவே மோட்சத்தை அடைவதற்கு வழியெதுவெனத் தெரிகிறது?*

**விடை :** *'ஓம்', 'தத்', 'ஸத்' என்னும் பரபிரம்மத்தின் மந்திரங்களை உச்சரித்து பலனைக் கருதாது தானம் முதலான கிரியைகளைச் செய்தல் வேண்டும். அதனால் சித்தம் சுத்தியடைந்து ஞானம் பெற்று அதன் மூலம் மோட்சம் சித்திக்கும்.*

*ஸத்பாவே ஸாது பாவே சஸதித்யேதத் ப்ரயுஜ்யதே!*
*ப்ரசஸ்தே கர்மணிததா ஸச்சப்தஹ பார்த்த யுஜ்யதே!!* (26)

## சொற்பொருள்

*பார்த்தா + அர்ஜுனா! ஸத்பாவே - உண்மையில் உளது என்ற கருத்திலும், ஸாது பாவேச - நன்மை என்ற கருத்திலும், ஸத் இதி ஏதத் - 'ஸத்' என்ற இச்சொல்லானது, ப்ரயுஜ்யதே - வழங்கப்படுகின்றது, ததா - அவ்வாறே, ப்ரசஸ்தே கர்மணிச - உத்தமமான மங்களகரமான கர்மங்களிலும், ஸத்சப்தஹ - 'ஸத்' என்ற சொல், யுஜ்யதே - வழங்கப்படுகின்றது.*

## கருத்துரை

*அர்ஜுனா! 'உளது' என்ற பொருளிலும், 'நன்மை' என்ற பொருளிலும், 'ஸத்' என்னும் இந்த பரபிரம்மத்தின் நாமம் உபயோகிக்கப் படுகின்றது. அவ்வாறே மங்களகரமான கர்மங்களிலும் 'ஸத்' என்ற சொல் வழங்கப்படுகின்றது.*

## விளக்கம்

*பரபிரம்ம வாசகமான 'ஸத்' என்னும் பதம் இருப்பையும், நன்மையையும் சுட்டுகிறது (உதாரணத்திற்கு சத்+கர்ம - நல்ல செயல், ஸத்+பாவம் - நல்லெண்ணம்).*

**வினா : பரபிரம்ம வாசகமான 'ஸத்' என்னும் பதம் எந்தப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது?**

**விடை : (1) 'உள்ளது' என்ற பொருளிலும் (2) 'நன்மை' என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது.**

*யக்ஞே தபஸிதானே சஸ்திதி ஸதிதிசோச்யதே!*
*கர்ம சைவ ததர்த்தீயம் ஸதித்யேவாபிதீயதே!! (27)*

### சொற்பொருள்

யக்ஞே - யக்ஞத்திலும், தபஸி - தவத்திலும், தானே ச - தானத்திலும் உள்ள, ஸ்திதி - நிலைத்திருக்கும் நிஷ்டை, ததர்த்தீயம் கர்ம சஏவ - அந்த பிரம்மத்தின் பொருட்டு (இறைவனின் திருப்தியின் பொருட்டு) செய்யப்படும் கர்மாவும், ஸத் இதி ஏவ - 'ஸத்' என்று அபிதீயதே - சொல்லப்படுகின்றது.

### கருத்துரை

யக்ஞத்தில், தவத்தில், தானத்தில் நிலைத்திருப்பது 'ஸத்' எனப் படுகிறது. மேலும் பிரம்மத்தின் பொருட்டு (இறைவனின் திருப்திக் காக) செய்யப்படும் கர்மங்கள் கூட 'ஸத்' என்று சொல்லப்படுகின் றது.

### விளக்கம்

கீதையில், தவம் யக்ஞம் முதலான புண்ய காரியங்களை பக வான் செய்யுமாறு உற்சாகப்படுத்துகிறார். அவற்றில் நிலைத்திருப் பது பிரம்ம வாசகமான 'ஸத்' என்று இச்சுலோகத்தில் சொல்வதால் அப்புண்ணிய காரியங்களுக்கு எத்தகைய முக்கியத்துவம் அளிக்கப் படுகின்றது என்பது தெரிகிறது.

மேலும் 'த தர்த்தீயம் கர்ம' என்றால் இறைவனைத் திருப்திப டுத்துவதற்காக (இறை சம்பந்தமான) கர்மங்களும் 'ஸத்' என்று சொல்வதால் அத்தகைய கர்மமும் மேற்சொன்ன யக்ஞம் முதலான கர்மங்களைச் சித்த சுத்தியினால் உண்மை வடிவான பிரம்மத்தையே அடைவான் என்பது தெளிவாகிறது. இவ்விதமாக, ஸத் வஸ்துவான பிரம்மத்தை அடைவதற்குக் காரணமாவதால் புண்ணிய காரியங் களை, அவற்றில் நிலைத்திருப்பதை சாட்சாத் பிரம்மத்தின் நாம

மான 'ஸத்' என்பதாகவே இங்கு வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆயின் கர்மங்களை 'தத்தீர்த்தி'யமாக இருக்கும் போதே, அதாவது பகவத் சம்பந்தமானதாக பகவானை திருப்திபடுத்துவதாக இருந்தால் மட்டும், நிஷ்காமமாகச் செய்யப்பட்டால் மாத்திரமே அந்த கர்மாவிற்கு புனிதத்தன்மை, உன்னதத்துவம் ஏற்படும். இல்லையெனில் அது சாதாரணமான கர்மாவாகுமே தவிர, 'சத்' கர்மாவாகாது, எனவே உண்மையில் கர்மாவில் தவறில்லை. அதனைச் செய்யும் விதத்திலேயே குறையுள்ளது. தெய்வ நினைப்புடன் செய்தால் கர்மாவும் 'ஸத்' ரூபமாக மாறும் என்பது தெளிவாகிறது. எனவே யக்ஞம் முதலானவற்றைத் தெய்வத்தைத் திருப்தி செய்யும் வகையில் நிஷ்காமமாகச் செய்து சித்த சுத்தியடைந்து பிரம்மத்தை அடைதல் வேண்டும். இச்சுலோகத்தில் பகவான் கர்மாவில் தெய்வத்தன்மையைப் போதித்துள்ளார்.

வினா : யக்ஞம், தியானம், தவம் இவற்றை நிலைத்திருப்பதை பெரியோர்கள் என்னவென்று சொல்வர்?

விடை : பரபிரம்ம வாசகமான 'ஸத்' என்று சொல்வர். (அவையும் தெய்வச் சொரூபமே என்பது பொருள்).

## கருத்துரை

சிரத்தையின்றிச் செய்யப்படும் காரியம் அஸத்தேயென்று செய்யாதனவற்றுடன் சமமேயாகும் என்றும், அவை பிரம்ம சம்பந்தமுடையவையல்ல என்றும் கூறுகிறார்.

*அச்ரத்தயா ஹுதம் தத்தம் தபஸ்தப்தம் க்ருதம் சயத்!*
*அஸதித்யுச்யதே பார்த்த நச தத்ப்ரேத்ய நோ இஹ!!* (28)

## சொற்பொருள்

பார்த்தா - அர்ஜுனா! அச்ரத்தயா - சிரத்தையின்றி, ஹுதம் - ஹோமம் செய்ததும், தத்தம் - தானம் செய்யப்பட்டதும், தப்தம் தபஹ்ச - செய்யப்பட்ட தவத்தினை, க்ருதம்ச - செய்யப்படும் ஏனைய கர்மங்களும், யத் - எதுவோ, (தத் - அது), 'அஸத்' இதி - 'அஸத்' என்று, உச்யதே - சொல்லப்படுகின்றது. தத் - அது, ப்ரேத்ய - பரலோகத்துக்கும், ந - உதவாது, இஹச - இவ்வுலகிற்கும், ந - பயன்படாது.

**கருத்துரை**

*அர்ஜுனா! சிரத்தையின்றிச் செய்யப்பட்ட யாகமும், தானமும், தவமும், ஏனைய கர்மங்களும் 'அஸத்' எனப்படும். அது மறுமைக்கும் உதவாது, இம்மைக்கும் பயன்படாது.*

**விளக்கம்**

*ஆன்மீக சாதனையிலோ அல்லது உலக விவகாரங்களிலோ சிரத்தைக்கு மதிப்புண்டு. அசிரத்தையுடன் செய்யப்படும் காரியம் எதுவாயினும், பலனற்றதேயாகும். இனி ஆன்மீக விஷயத்தில் மட்டும் வேறாக எப்படி இருக்க முடியும்? எனவேதான் பகவான் கீதையில் பலவிடங்களில் சிரத்தையின் அவசியத்தை வலியுறுத்திக் கூறுகின்றார். கீதையின் முடியப் போகும் இத்தருவாயில் கூட ஸ்ரீ கிருஷ்ணர் சிரத்தையைக் குறித்துச் சொல்வதை விடவில்லை. எக்காரியமாயினும் அது சிரத்தையுடன் செய்யப்படாவிடில் பயனற்றுப் போகும். தெய்வ சம்பந்தமில்லாது போகும். அசத்தே ஆகிவிடும். (Zero) அதாவது செய்யாததற்கு ஒப்பேயாகும். இங்குப் பலனின்றிப் போனாலும் மேலுலகத்திலாவது பலன் கிட்டுமாவெனில் அங்கும் பலன் இராது என்று உறுதியாகச் சொல்லப்பட்டுள்ளது. சமையல் செய்பவருக்குச் சிரத்தை இல்லையெனில் சமையல் எவ்வாறு கெட்டு விடுமோ, அவ்வாறே ஆன்மீக அரங்கில் முமுக்ஷுவிற்கு ஏனைய நற்குணங்கள் அனைத்தும் இருந்தும் சிரத்தையென ஒன்று இல்லாவிடில் சாதனையின் பலன் இராது. அது வீண் முயற்சியேயாகும். சிரத்தையின்றிச் செய்யப்படும் காரியம் அஸத்தாக ஜகத்ருவாகவேயிருக்குமேயன்றி உண்மையான தெய்வத்தின் உருவத்தை அடைய முடியாது எனலாம். இவ்வாறாக இகத்திலும், பரத்திலும் நன்மையையளிக்க இயலாத சிரத்தையை முமுக்ஷுவானவன் விடுத்து, எல்லாவிதமான காரியங்களையும் சிரத்தையுடன் செய்தல் வேண்டும். அப்போதே தெய்வப் பதவியை விரைவில் அடைய முடியும்.*

**வினா :** *அசிரத்தையுடன் செய்யப்படும் தவம், யக்ஞம் முதலான கர்மங்கள் எத்தகைய பலனைக் கொடுக்கும்?*

**விடை :** *எந்தவிதமான பலனையும் கொடுக்காது. அது செய்யாததற்குச் சமமேயாகும். அஸத் ரூபமேயாகும்.*

**வினா :** *அவை பரலோகத்திலாவது பலன் அளிக்குமா?*

**விடை :** *எங்கும் பலன் தராது.*

**வினா :** எனவே அதனால் தெரிந்து கொண்டது என்ன?

**விடை :** ஒவ்வொருவரும் சிரத்தையுடன் அவரவர் ஆன்மீகக் காரியங்களைச் செய்தல் வேண்டும்.

ஓம்

இது உபநிஷத், பிரம்ம வித்தை, யோக சாஸ்திரம் இவற்றுடன் கூடிய ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமாக வந்துள்ள ஸ்ரீ பகவத் கீதையின் சிரத்தாத்ரய விபாகயோகம் என்னும் பதினேழாம் அத்தியாயம்.

ஓம் தத் ஸத்

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## பதினெட்டாம் அத்தியாயம்

## மோக்ஷ ஸந்யாஸ யோகம்

### இவ்வத்தியாயத்தின் பெயர் விளக்கம்

'மோக்ஷ ஸந்யாஸ யோகம்' - (1) மோக்ஷம் என்றால் விடுதலை. சம்சார துக்கத்தினின்றும், பிறப்பு இறப்புகளினின்றும் விடுதலை. அதாவது பந்த விமுக்தி யென்று பொருள். அத்தகைய பந்த விமுக்தி தியானத்தினால்தான் கிட்டும். தியாகமெனினும், சந்நியாசமெனினும் ஒன்றே. தியாகமென்றால் உண்மையில் காட்சி எண்ணத்தைக் கை விடுதல், பற்றுகள் அனைத்தையும் துறத்தல். உலகம், உடல், மனம் போன்ற எல்லாவிதமான காட்சிப் பொருள்களின் மீதான பற்றை விட்டொழித்து மோட்ச வடிவான கடவுள் ஒருவனையே, ஆத்ம பொருளையே சரணடைய வேண்டும். காட்சிப் பொருள்கள் தொடர்புடைய எண்ணங்களனைத்தையும் எந்தக் கணத்தில் மனிதன் விட்டொழிக்கிறானோ அந்தக் கணத்திலேயே அவன் ஆன்மாக வாக நிலைபெறுவான். அதுவே மோட்ச நிலை. அதாவது (க்ஷேத்ரம்) உடலைத் துறப்பதால் (க்ஷேத்ரத்ஞன்) ஆன்மா ஒன்றே எஞ்சி நிற்கும் என்பது பொருள். காட்சிகளைத் துறப்பதால் நோக்கான மோட்சம் (தெய்வம், ஆன்மா) கிட்டுமென்பது பொருள். இவ்வாறாக சந்நியாசம் கிட்டுமென போதிக்கப்பட்ட அத்தியாயமாதலால் பற்றினைத் துறப்பதால் இதற்கு மோக்ஷ சந்நியாச யோகமென்ற பெயர் ஏற்பட்டது.

2) மோட்ச சந்யாசத்திற்கு இன்னுமொரு பொருள் - மோட்சம் என்றால் தெய்வம், இறைவன். சந்யாசமென்றால் எல்லா கர்மங்களையும் அர்ப்பணம் செய்தல். எல்லாக் கர்மங்களை, அக் கர்மங்களின் பலனையும் இறைவனுக்கு அர்ப்பித்தலே மோட்சசந்நியாசமெனலாம்.

3) இன்னுமொரு பொருள் - மோட்சத்தினை துறத்தல், விட்டு விடுதல் மோட்ச ஸந்நியாசம். ஒவ்வொருவரும் மோட்சத்தை பெற வேண்டுமென விரும்புவரேயன்றி, விட்டுவிடுதற்கு விரும்பாரல்லவா? அப்படியாயின் அடைய விரும்புவோர் யார்? மோட்சத்தை விரும்புவது பந்தத்தில் சிக்கியிருப்போரே. தளைகளில் கட்டுப்பட்டவனே விடுதலையை விரும்புவான். ஆயினும் கீதையின் 17 அத்தியாயங்களில் தெரிவிக்கப்பட்ட போதனைகள் அனைத்தையும் நன்கு ஜீரணித்துக் கொண்டவன் பந்தங்களுக்குக் கட்டுப்பட்டவனாக எவ்வாறாவான்? 'அஜோ நித் சாஸ்வதோ அயம் புராணோ' என்று நிலைத்த உண்மையை, சநாதனமான தன் ஆன்மாவை அறிந்தவனுக்கு பந்தம் எங்கே? பந்தமே இல்லாதபோது மோட்சத்தினைக் குறித்த கேள்வியே இல்லையல்லவா? எனவே அத்தகைய முக்தி நிலையில் ஜீவன் மோட்ச எண்ணத்தினைக் கூடத் துறந்து விடுவான். ஏனெனில் அதன்பின் தானே மோக்ஷ வடிவினனாகிவிடுவான். அல்லது 17 அத்தியாயங்களில் கூறப்பட்டவற்றை நன்கு நடைமுறையில் பயின்று விட்டால் பகவானே அவனுக்கு மோட்சத்தையளிப்பார். எனவே மோட்சத்தினைக் குறித்த எண்ணம் கூட அவனுக்குத் தேவையில்லை. அப்போது மோட்ச எண்ணத்தைத் துறந்து விடக்கூடும். அதுவே மோட்ச சந்நியாசம்.

இதுவரை 17 அத்தியாயங்களில் கூறப்பட்ட போதனைகளனைத்தும் இவ்வத்தியாயத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன. மேலும் இதுவரை கூறப்படாதவை எவையேனும் விடப்பட்டிருந்தால் அவையும் இங்கு முழுமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இவ்வத்தியாயத்தினை கீதையின் சாரமென்றோ, சுருக்கமான கீதையென்றோ சொல்லலாம். இத்தகைய அபூர்வமான ஆன்ம போதனையைப் பெற்றவன் முக்தியடையாது இருப்பானா? எனவே அத்தகையோன் இனி மோட்சத்தைக் குறித்து எண்ணத்தைக் கூட விட்டுவிடலாம். அதாவது மோட்ச சந்நியாசத்தை மேற்கொள்ளலாம். இத்தகைய கருத்தை மறைமுகமாத் தெரிவிப்பதால் கூட இதற்கு மோட்ச சந்நியாசயோகம் என்ற பெயர் உண்டாகியிருக்கக்கூடும்.

4) இதுவரை சொல்லப்பட்ட பதினேழு அத்தியாயங்களின் பெயர்கள் கூட ஞான யோகம், கர்ம யோகம், பக்தி யோகம் - என இவ்வாறு இருப்பதால் அவ்வப் பெயர்களின் பொருள் - ஞானத்தினால் இறைவனைச் சேருதல் (யோகம்), கர்மாவினால் இறைவனைச் சேர்தல், பக்தியினால் இறைவனைச் சேர்தல் என்பதைக் காட்டும் அத்தியாயங்கள் எனச் சொல்லி வந்தோம். அவ்வாறே இங்கு 'மோட்ச சந்நியாச யோகம்' என்னும் போது 'மோட்ச சந்நியாசம்' என்னும் கிரியையின் மூலம் இறைவனைச் சேர்தலைக் கூட்டுவிக்கும் யோகமென்று இவ்வத்தியாயத்தைக் குறித்துச் சொல்லலாம். இவ்வாறாக சாட்சாத் மோட்ச வடிவான அல்லது மோட்சத்தையளிக்கவல்ல சந்நியாசத்தின் வழி, தியாகத்தின் வழி அல்லது இறை அர்ப்பணத்தினால், எல்லா விதமான பற்றினைத் துறப்பதன் மூலம் யோகம் (பகவத் ஐக்கியம்) கிட்டும் என்று தெரிவிக்கும் அத்தியாயமாதலாலும் இதற்கு மோட்ச சந்நியாச யோகமென்ற பெயர் ஏற்பட்டிருக்கக் கூடும்.

1) சந்நியாசத்தினால், தியாகத்தினால் எல்லாவிதமான பற்றினையும் துறப்பதால் மோட்சம் கிட்டும்.

2) மோட்சத்தினையும் (மோட்ச எண்ணத்தினையும் கூட) துறந்து விடுதல்.

3) மோட்ச வடிவினனான இறைவனுக்கே எல்லா காரியகாரணங்களையும் துறந்துவிடுதல்.

4) மோட்சத்தை அளிக்கவல்ல, மோக்ஷ வடிவான சந்நியாசத்தினால் (தியாகத்தினால்) இறைவனைச் சேர்தல் சித்திக்கும் (யோகம்).

என்று போதிக்கும் அத்தியாயமாதலால் இதற்கு மோட்ச சந்நியாச யோகமென்ற பெயர் வந்தது.

### இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள முக்கிய விஷயங்கள்

1) தியாகத்தைப் பற்றிய சொற்பொழிவு (1 முதல் 12 சுலோகங்கள்)

2). சாங்கிய கோட்பாட்டின்படி கர்மாவிற்குக் காரணம் கூறுதல். ஆன்மா கர்த்தாவல்ல எனப் போதித்தல் (13 முதல் 18 வரை)

3) ஞானம், புத்தி, தைர்யம், சுகம் ஆகியவற்றின் சாத்வீக, ராஜஸ, தாமஸ வடிவங்கள் (19 முதல் 40 வரை)

4) நான்கு வர்ணத்தாருடைய தர்மங்கள் (41 முதல் 48 வரை)

5) பிரம்ம சாட்சாத்கார நிலையையடையும் வழிகள் - ஞான நிட்டையைக் குறித்த விளக்கம் - (49 முதல் 55 வரை)

6) பக்தியுடன் கூடிய நிஷ்காம கர்ம யோகத்தினைப் பற்றிய வர்ணனை (56 முதல் 50 வரை)

7) பகவத் சரணாகதி, கீதையின் சாரத்தின் சுருக்கம் (61 முதல் 66 வரை)

8) கீதையின் மகிமை (67 முதல் 73 வரை)

9) சஞ்சயன் கீதையைத் துதித்தல் (74 முதல் 78 வரை)

## முன் அத்தியாயத்திற்கும் இதற்குமுள்ள தொடர்பு

இதுவரை பகவான் பல யோகங்களை அர்ஜுனனுக்குப் போதித்தார். அவையனைத்தையும் கேட்டவுடன், அவற்றின் சாரத்தை அறிய - ஸந்நியாசம், தியாகம், தத்துவம் ஆகியவற்றைப் பற்றிய விளக்கத்தை பகவானிடம் கேட்கிறான். அர்ஜுனனின் கேள்வியுடன் இவ்வத்தியாயம் தொடங்குகிறது.

## அர்ஜுனன் உவாச

*ஸந்யாஸஸ்ய மஹாபாஹோ தத்வமிச்சாமி வேதிதும்!*
*த்யாகஸ்ய ச ஹ்ருஷீகேச ப்ருதக் கேசி நிஷூதன!! - (1)*

### சொற்பொருள்

ஹ்ருஷீகேச-இந்திரியங்களை வென்றவனும், மஹாபாஹோ-நீண்ட தோள்களையுடையவனும், கேசிநிஷூதனா-'கேசி' என்ற அரக்கனைக் கொன்றவனுமாகிய கிருஷ்ணா!, ஸந்யாஸஸ்ய-சந்நியாசத்தில், தியாகஸ்ய-தியாகத்தின், தத்வம்-தத்துவத்தினை, ப்ருதக்-தனித்தனியாய், வெவ்வேறாக, வேதிதும்-அறிய, இச்சாமி-விரும்புகிறேன்.

### கருத்துரை

நீண்ட தோள்களையுடையவனும், இந்திரிங்களை வென்றவனும், கேசி என்ற அரக்கனைக் கொன்றவனுமாகிய ஏ கிருஷ்ணா! சந்நியாசத்தின், தியாகத்தின் தத்துவத்தை வெவ்வேறாகத் தனித்தனியே அறிந்துகொள்ள விரும்புகிறேன்!

**விளக்கவுரை**

*கீதையில் இதுவரை பலவிடங்களில் கண்ணன் சந்நியாசம், தியாகம் ஆகிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.*

*(3-30, 4-20, 4-41, 9.28, 12-6, 12-11, 12-12, 12-16, 13-25) ஆனால் அவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறவில்லை. அதனால் அர்ஜுன னுக்கு அவற்றின் விளக்கங்களை அறிய வேண்டுமென்ற ஆவல் தோன்றவே பகவான் அடுத்து விளக்குகிறார்.*

*(உபநிடதங்களில் சந்நியாசம், தியாகம் ஆகிய இவ்விரண்டும் மோட்சத்திற்கான ஏதுக்கள் எனக் கூறப்பட்டது.*

*(1) 'த்யாகேனநகே அம்ருதத்வமான ஸுஹ' - (2) சந்யாஸ யோகாத்யத யசு சுத்த ஸத்வாஹ்... போன்ற வாக்கியங்கள் பலவும் உபநிஷத்தின்கண் உள்ளன).*

*இச்சுலோகத்தில் அர்ஜுனன், பகவானை மூன்று சிறப்பான அடைகளால் போற்றித் துதித்து அழைக்கிறான். இத்தகைய போற்று தல்களால் அர்ஜுனன் தனது முழுமையான பக்தியை வெளிப்படுத்த துகிறான். இவ்வாறாகப் பணிவுடன் முழுமையான பக்தியுடனும் கேட்பதையே 'பரிப்ரஸ்ன' என்பர். சீடன் குருவினிடத்தில் இவ்வா றாகப் பக்தியுடனும் சிரத்தையுடனும் நடந்து கொள்ள வேண்டும். அப்போதே ஆசான் அகமகிழ்ந்து சீடனின் நன்மைக்காக ஞான போதனைகளைப் பொழிவான்.*

**வினா :** *அர்ஜுனன் பகவானிடம் எவ்வெவற்றைப் பற்றி அறிய விரும்பினான்?*

**விடை :** *சந்நியாசம், தியாகம் ஆகிய இரண்டின் இயல்பினை அறிய விரும்பினான்.*

**முன்னுரை**

*அர்ஜுனனின் கேள்விக்கான விடை அடுத்து வருகிறது.*

**ஸ்ரீ பகவானுவாச**

*காம்யானாம் கர்மணாம் ந்யாஸம் ஸந்யாஸம் கவயோ விதுஹ!*
*ஸர்வகர்ம பலத்யாகம் ப்ராஹுஸ்த்யாகம் விசக்ஷணாஹ்!! - (2)*

## சொற்பொருள்

பகவான் சொன்னது- காம்யானாம்-பலனை விரும்பிச் செய்யப் படும், கர்மணாம்-கர்மங்களின், ந்யாஸம்-துறவை, ஸந்நியாசம்- சந்நியாசமென்று, கவயஹ-சில ஞானிகள், விசஹ்-அறிகிறார்கள், ஸர்வகர்ம பலத்யாகம்-செயல்கள் அனைத்தின் பலனையும் விடு வதை, த்யாகம்-தியாகமென்று, விசக்ஷணா-மேலும் சில தீர்க்கதரிசி கள், ப்ராஹு ஹ-பகர்கிறார்கள்.

## கருத்துரை

அர்ஜுனனே! பலனை விரும்பிச் செய்யப்படும் கர்மங்களைத் துறப்பதை சந்நியாசமென்று ஞானிகள் அறிகிறார்கள். எல்லாக் கர் மங்களின் பலனையும் துறத்தலைத் தியாகமென்கின்றனர் தீர்க்க தரி சிகள்.

## விளக்கவுரை

கீதையில் ஸந்நியாசமென்றால் முற்றும் துறந்து காடுகளுக்குச் செல்ல வேண்டுமென்று கூறப்படவில்லை. பயன் கருதிச் செய்யப்ப டும் காமிய கர்மங்களை விட்டு விடுதலே சந்நியாசமென்று கூறப்ப டுகிறது. அதாவது இத்தகைய சந்நியாசத்தை இல்லறத்தாரும் கடை பிடிக்கலாமென்பது கருத்து. பலன் விரும்பாமல் வினைகளைச் செய்பவன், பலன் கருதிச் செய்யப்படும் வினைகளைத் துறப்பவன் இருவரும் சந்நியாசியேயென்பது பொருள். அவ்வாறே எல்லா வினைகளின் பலன்களையும் துறப்பவன் அவன் எந்த ஆசிரமத்தில் இருப்பின் தியாகியேயாவான்.

**வினா :** சந்நியாசமென்றால் என்ன?

**விடை :** பலன் விரும்பிச் செய்யப்படும் வினைகளை விட்டு விடு தலே சந்நியாசம்.

**வினா :** தியாகமென்றால் என்ன?

**விடை :** எல்லா வினைகளின் பலன்களையும் துறப்பதே தியாகம்.

## முன்னுரை

கர்மாவைப் பற்றிய சில கருத்துகளைச் சொல்கிறார்.

*த்யாஜ்யம் தோஷவதித்யேகே கர்ம ப்ராஹுர் மனீஷிணஹ!*
*யக்ஞ தான தபஹ கர்ம ந த்யாஜ்யமிதி சாபரே!! - (3)*

### சொற்பொருள்

ஏகே-சிலர், மனீஷினஹ-அறிஞர்கள், தோஷவத்-தோஷமுடைவையான கர்மா-எல்லா கர்மங்களையும், த்யாஜ்யம்-விட்டு விடத்தக்கவை, இதி-யென்று, ப்ராஹு-பகர்கிறார்கள். அபரே-இன்னும் சிலரும், யக்ஞ தான தபஹ கரிம-யக்ஞம், தானம், தபம் ஆகிய கர்மங்கள், நதியாஜ்யம்-துறக்கப் படலாகாது, குதி-என்று, ப்ராஹு-பகர்கிறார்கள்.

### கருத்துரை

*சில அறிஞர்கள் (சாங்கியர்கள்) கர்மங்களெல்லாம் குற்றமுடையவைகளாதலால் துறத்தற்குரியவைகளென்று பகர்கின்றனர். இன்னும் சிலர் வேள்வி, தானம், தவம் ஆகிய கர்மங்கள் துறக்கப்படலாகாது என்கின்றனர்.*

### விளக்கவுரை

*கர்மா, உபாதிக்கு உடல், புலன்கள், மனம் ஆகியவற்றிற்குத் தொடர்புடையதல்ல வாதலாலும், உபாதி பிரமையில் தோன்றியதாதலாலும், ஆன்மா எல்லாவற்றிற்கும் சாட்சியாதலாலும், கர்மா குற்றமுடையவைகளாகச் சிலரால் கருதப்பட்டு (சாங்கியர்கள்) விட்டு விடத்தக்கவையாகச் சொல்கின்றனர். கர்மாவை முழுவதுமாக விட்டுவிட்டால் ஜீவனுக்கு சித்த சுத்தி எங்ஙனம் ஏற்படும் என்றும், வாழ்க்கையே எங்ஙனம் நடக்கும் என்றும் கருதுவோராய்ச் சிலர் சித்த சுத்தியளிக்க வல்ல கர்மாக்களான யக்ஞம், தானம், தவம் இவற்றைத் துறக்கலாகாது என்றும் சொல்கின்றனர். இவ்வாறாக மக்களில் கர்மாவைக் குறித்து வெவ்வேறு கருத்துக்களையும் பக; வான் தெரியப்படுத்தி, இவ்விஷயத்தில் தனது கருத்தினை அடுத்துள்ள சுலோகத்தில் தெரிவிக்க இருக்கிறார்.*

**வினா :** *கர்மாவைக் குறித்த கருத்துக்கள் யாவை?*

**விடை :** *சிலர் கர்மாவைக் குற்றமுள்ளவையாகக் கருதி அவற்றினை துறத்தல் வேண்டுமென்றும், இன்னும் சிலர் யக்ஞம், தானம், தவம் இவைகளைத் துறத்தல் கூடாது என்றும் சொல்கின்றனர்.*

*நிஸ்சயம் ச்ருணுமே தத்ர த்யாகே பரதஸத்தம!*
*த்யாகோ ஹி புருஷவ்யாக்ர த்ரிவிதஹஸம் ப்ரகீர்த்திதஹ!! - (4)*

## சொற்பொருள்

பரத சத்தம-பரதகுலத்தில் சிறந்தோனே, த்த்ரத்யாகே-அந்த கர்மத் தியாக விஷயத்தில், மே-என்னுடைய, நிஸ்சயம்-தீர்மானத்தை, ஸ்ருணு-கேட்பாயாக, புருஷ வ்யாக்ர-புருஷர்களில் புலியான (சிறந்தவனான) அர்ஜுனனே!, த்யாகஹி-தியாகமானது, த்ரிவிதஹ்-மூன்றுவிதமாக, ஸம்ப்ரகீர்த்திஹஹி-சொல்லப்பட்டிருக்கிறது.

## கருத்துரை

பரதகுலத்துச் சிறந்தோனும், புருஷர்களுள் புலியும் ஆன அர்ஜுனா! கர்ம தியாகத்தைக் குறித்து என்னுடைய சித்தாந்தத்தைக் கேள். தியாகமானது மூன்றுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளது.

## விளக்கவுரை

கர்மாக்களை முழுமையாக விட்டு விட வேண்டும். தவம், யக்ஞம், தானம் ஆகிய கர்மாக்களை விட்டு விடலாகாது என்ற இரண்டு வாதங்களைக் கூறி பகவான் இவ்விஷயத்தில் தனது முடிவைத் தெரிவிக்கிறார். 'நிஸ்சயம் ஸ்ருணுமே' - என்று சொல்வதால் பகவான் தான் முழுமையாக நம்பித் திடப்படுத்திக் கொண்டு மனத்தில் நிச்சயித்துக் கொண்டதையே கூறுகிறார் என்று பொருள். ஆஹா! பகவானின் திடமான எண்ணத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏன் இருத்தல் கூடாது? சாதாரண மக்கள் இயற்கைக்கும், மாயைக்கும் உட்பட்டவர்களாதலால் அவர்களின் கருத்துகளில் பிழைகள் இருக்கக்கூடும். இயற்கைக்கப்பாற்பட்டு மாயையெனும் குற்றமற்ற (சைதன்ய வடிவினனாகிய) பரம்பொருளான பகவானின் கருத்துக்கள் குற்றமற்றவையாகவேயிருக்கும். அத்தகைய சைதன்ய வடிவினன் 'என்னுடைய கருத்தைக் கேளுங்கள்' என்று சொல்கையில் உயிர்கள் எத்துணை சிரத்தையுடன் செவிமடுக்க வேண்டுமென்பதைச் சிந்தியுங்கள். எனவே பகவான் இனிச் சொல்லப்போகும் தியாகம் போன்றவற்றின் உயர்ந்த கருத்துக்களை மிகவும் எச்சரிக்கையுடன் கேட்டு அதன்படி நடந்து மக்கள் கடைத்தேறுதல் வேண்டும்.

**வினா:** தியாகம் எத்தனை வகைப்படும் என பகவான் என்கிறார்?

**விடை: மூன்று வகைப்படும் என்கிறார்.**

*யக்ஞ தான தபஹ கர்ம ந த்யாஜ்யம் கார்யமேவ தத்!*
*யக்ஞோ தானம் தபஸ்சைவ பாவனானி மனீஷிணாம்!! - (5)*

**சொற்பொருள்**

யக்ஞ, தான, தபஹ கர்ம-யக்ஞம், தானம், தவம் என்கிற கர்மம், நத்யாஜ்யம்-விடப்படுவதன்று, கார்யம் ஏவ-செய்ய வேண்டியதே, யக்ஞஹ-வேள்வி, தானம்-தானம் (கொடை), தபஸ்சைவ-தவமும், மனீஷினாம்-பயன்கருதாத அறிஞர்களுக்கு, பாவனானி-புனிதத் தன்மையை (மனத் தூய்மையை) உண்டாக்குபவை (ஆக இருக்கின் றன).

**கருத்துரை**

வேள்வி, தானம், தவம் ஆகிய கர்மாக்கள் விட்டுவிடத் தக் கவை அல்ல. செய்யத்தக்கவையேயாகும். ஏனெனில் அவை அறி ஞர்களுக்கு மனத்தூய்மையை யுண்டாக்குபவையாக இருக்கின்றன.

**விளக்கம்**

பகவான் இந்த சுலோகத்தில் கர்மாக்களைப் பற்றிய தனது முடிவை அறிவிக்கிறார் (1) நதியாஜ்யம்-யக்ஞம், தானம், தவம் இவற்றைத் துறத்தலாகாது. (2) 'கார்ய மேவ தத்' - அவற்றைத் தவறாமல் செய்ய வேண்டும்.

'புண்ணிய கர்மாக்களை விட்டுவிடலகாது' என்ற வாக்கியத்தி லேயே அவற்றைச் செய்து தீர வேண்டுமென்ற பொருள் அடங்கியி ருக்கிறது. ஆயினும் பகவான் அத்துடன் திருப்தியடைந்துவிடாமல் அவற்றைத் தவறாமல் செய்ய வேண்டுமென மீண்டும் வலியுறுத்து வதால் இதில் அவர் எந்த அளவிற்கு முக்கியத்தும் காட்டுகிறார் என்பது புலனாகிறது. இப் புண்ணியச் செயல்களைச் செய்தல் 'மு முட்சுக்களுக்கு' எத்துனை தேவை என்பதும் தெளிவாகிறது. சாதார ணமாக உலகில் சிலர் புண்ணிய கர்மாக்களைச் செய்தாலும் மீண்டும் பிறக்க வேண்டும் என்று தீய போதனைகளைச் செய்து அப்பாவி மக்கள் அவற்றினைச் செய்ய விடாது விலகியிருக்கச் செய்கிறார்கள். இது மிகவும் தவறானது. ஏனெனில் அவ்வாறு செய்தல் கடவுளின் எண்ணத்திற்கு நேர்மாறானது. பகவான் கீதையின் பல்வேறு இடங்க ளில் புண்ணிய காரியங்களை, (யக்ஞம், தானம், தவம்) செய்யுமாறு

தூண்டுகிறார். இந்த சுலோகத்திலும் அவற்றைத் தவறாமல் செய்ய வேண்டுமென்று எச்சரிக்கிறார். அவற்றை விட்டுவிடலாகாது எனக் கட்டளையிடுகிறார். இவ்வாறு சாட்சாத் இறைவனே கூறுகையில் சாதாரண மனிதர்களின், உண்மைக்குப் புறம்பான சொற்களை எதற்கு நம்பி கீழ்நிலையையடைய வேண்டும்? வேள்வி, தானம், தவம் ஆகிய புண்ணிய செயல்களைப் பயன் கருதாமல் செய்தால் மக்களுக்கு மனத்தூய்மையுண்டாகும். அதனால் ஆன்ம ஞானம் பெருகும். ஆன்ம ஞானத்தால் மோட்சம் கிட்டும். எனவே இத்தகைய புண்ணிய கர்மாக்கள் உண்மையில் மோட்சத்திற்கான வழிகளேயாகும். எனவே அறிஞர்கள் அதனை எப்போதும் விட்டுவிடலாகாது.

'பாவனானி' - என்று கூறுவதால் வேள்வி முதலிய கர்மாக்கள் புனிதமானவை என்பது தெளிவு. அவை செய்யக்கூடாதவை, குற்றமுடையவையாயின் அவற்றைக் குறித்து பகவான், 'பாவனானி' என்று கூறியிருக்கமாட்டார்.

'மனீஷினாம்'-அறிவுடையவர்கள், புத்திமான்கள் என்றால் பலனைக் கருதாமல் செய்பவர் என்று பொருள். பலனைக் கருதிச் செய்வோர் அறிவு வளர்ச்சி இல்லாதவர்களாதலால் புத்திமான்களல்லர்.

இங்கு 'யக்ஞம்' என்றால் ஞான யக்ஞம் என்றும், இதுவரை 4 ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்ட ஓதுதல் முதலான மனத்தூய்மையை உண்டாக்கவல்ல பல்வேறு யக்ஞங்கள் என்றும் பொருள்.

வினா : யாகம், தவம், தானம் முதலிய நற்செயல்களைச் செய்தல் வேண்டுமா? விட்டுவிடுதல் வேண்டுமா?

விடை : அவற்றைத் துறக்கலாகாது, தவறாமல் செய்ய வேண்டும்.

வினா : எதற்காக?

விடை : அவை மக்களின் மனத்தூய்மையாக்கவல்லவை.

வினா : எவ்வாறு செய்தால் மனத்தூய்மையுண்டாகும்?

விடை : பயனைக் கருதாது (நிஷ்காமமமா) செய்தால் (மனீஷ்-அறிவுடன் அவற்றை எச்சரிக்கையாகச் செய்தால்).

**முன்னுரை**

*தன் கருத்தை இன்னும் உறுதிப்படுத்துகிறார்.*

*ஏதான்யபி துகர்மாணி ஸங்கம் த்யக்த்வா பலானிச!*
*கர்த்தவ்யானீதி மே பார்த்த நிஸ்சிதம் மத முத்தமம்!! - (6)*

**சொற்பொருள்**

*பார்த்த-ஓ அர்ஜுனா!, ஏதானி கர்மாணி அபிது-இந்த (யக்ஞ, தான தவங்களை) கர்மாக்களை ஸங்கம்-பற்றினை, (நானே கர்த்தா என்ற எண்ணத்தினை), பலானிச-பலன்களை, த்யக்த்வா-துறந்து, கர்த்தவ்யானி-செய்யத்தக்கன, இதி-என்று, மே-என்னுடைய, நிஸ் சிதம்-நிச்சயமான, உத்தமம்-மேன்மையானதுமான, மதம்-கொள்கை.*

**கருத்துரை**

*அர்ஜுனா! பற்றுதலையும் பயனையும் துறந்தே இக்கர்மங்கள் யாவும் செய்யப்பட வேண்டும் என்பது எனது நிச்சயமான உத்தம மான கொள்கை.*

**விளக்கவுரை**

*இதற்கு முன் சுலோகத்தில் யக்ஞ, தான, தவங்களைத் தவறா மல் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டது. அவற்றை எவ்வாறு செய்தல் வேண்டுமென்பது இங்கே கூறப்படுகின்றது. அக்கர்மங்க ளைப் பயன் கருதாமல் செய்ய வேண்டும் எனக் கூறப்படுள்ளது. (நானே கர்த்தா என்ற எண்ணத்துடன்) பற்றறிவுடன் செய்வதால் பலனைக் கருதிச் செய்வதால் செயலின் புனிதத் தன்மை குறைந்துவி டுகின்றது. செயலின் குற்றமில்லாவிடினும், அதன் பற்றுடன் செய்ப வன் தான் என்ற அகங்காரத்துடன் செய்வதால் குற்றம் ஏற்படுகிறது. எனவே முமுட்சும், பற்றின்றி, பயன் கருதாது, தானம், தவம் முத லான புண்ணிய கர்மாக்களைச் செய்தல் வேண்டும். இந்த தனது கொள்கையை முடிவானதும், மேன்மையானது என பகவான் கூறுவ தால் அதன் மாபெரும் சக்தி கண்கூடாகத் தெரிகிறது. இதனை பக வானே நன்கு நிச்சயித்துக் கொண்டு சொன்ன பகுதியாதலால், மிக வும் அப்பழுக்கற்றதாகையால் அறிஞர்கள் இதனைக் கடைபிடித்தல் வேண்டும்.*

வினா : யக்ஞம், தானம், தவம் இவற்றை எவ்வாறு செய்தல் வேண் டும்?

விடை : பற்றின்றி (நானே கர்த்தா என்ற எண்ணமின்றி) பயன் கருதாது ஆற்ற வேண்டும்.

வினா : இந்தக் கொள்கை எப்படிப்பட்டது?

விடை : சாட்சாத் பகவான் நன்கு நிரூபிக்கப்பட்டுச் சொன்னதாகை யால் அனைத்திலும் சிறந்தது.

முன்னுரை

அடுத்து சாத்வீக, ராஜஸ, தாமஸ தியாகங்களைப் பற்றிக் கூறத் தொடங்கி முதலில் தாமஸ தியானத்தைப் பற்றிக் குறிக்கிறார்.

*நியதஸ்ய துஸந்யாஸஹ கர்மணோ நோப பத்யதே!*
*மோஹாத்தஸ்ய பரித்யாக ஸ்தாமஸஹ பரிகீர்த்திதஹ!! - (7)*

சொற்பொருள்

நியதஸ்ய-வேதம், சாஸ்திரம் முதலியவற்றால் விதிக்கப்பட்ட, கர்மணஹ-கர்மத்தின், ஸந்யாஸஹ து-சந்நியாசமானது, ந உபபத் யதே-தக்கதல்ல, மோஹாத்-அறியாமையினால், தஸ்ய-அத்தகைய கர்மத்தின், பரித்யாக-துறவு, தாமஸஹ-தாமஸமானதென்று (தபோ குணத்தின் பாற்பட்ட தியாகமென்று) பரிகீர்த்திதஹ-கூறப்பட்டுள்ளது.

கருத்துரை

வேத சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட நித்ய கர்மங்களை விடு வது பொருந்தாது. அறியாமையினால் அத்தகைய கர்மங்களை எவ ரேனும் விட்டுவிட்டால் அது தாமஸத்தியாகம் என்று கூறப்படுகி றது.

விளக்கவுரை

சாஸ்திரம் கூறும் கர்மத்தை எவரும் விட்டு விடலாகாது. சாஸ்தி ரங்களில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்கள் அனைத்தும் ஜீவனின் தார் மீக, ஆன்மீக மேன்மைக்கு அடிகோலுபவையாதலால் அவற்றை எவரும் விட்டு விடலாகாது. அது விவேகமின்மையேயாகும். எனவே 'மோஹாத்' என்று இங்குக் கூறப்பட்டது. அதாவது அஞ்ஞா

னத்தால் சூழப்பட்டபோது மாத்திரமே அத்தகைய அறநெறியினின்றும் வழுவும் எண்ணம், தர்மத்தை விட்டு விட வேண்டுமென்ற எண்ணம் ஜீவனுக்கு உண்டாகுமென்பது பொருள். எனவே விவேகத்துடன் அத்தகைய கர்மங்களை விடாது ஆற்றுவதே நன்மை பயக்கும். சோம்பேறித்தனத்தினாலோ, அறியாமையினாலோ வேறு எந்தக் காரணத்தினாலோ அவற்றை விட்டால் அது தாமஸத் தியாகமே யாகும்.

இதற்கு முன் யக்ஞம், தானம், தவம் இவற்றைப் பற்றி விவரிக்கையிலும், இனி ஞானம், தைரியம் இவற்றைக் குறித்துச் சொல்லும் போதும், முதலில் சாத்வீகம், அதன் பின் ராஜஸம், இறுதியில் தாமஸ மென்று சொல்பவர். இந்த தியாகத்தைப் பற்றிக் குறிக்கையில் மாத்திரம் முதலில் தாமஸ மானதைச் சொல்லுதல் கவனிக்கத் தக்கது. தாமஸத்தியாகத்தைக் கண்டித்தல் வேண்டுமென்ற எண்ணத்தில் பகவான் இங்ஙனம் சொல்லியிருத்தல் கூடும்.

**வினா :** தாமஸத் தியாகம் எத்தகையது?

**விடை :** சாஸ்திரங்களில் கூறப்பட்ட கர்மாக்களை விட்டு விடுதல் தகாது. அதுவே தாமஸத் தியாகமெனப்படும்.

**வினா :** எதனால் மக்கள் தமக்குரிய கர்மங்களினின்றும் விலகுகின்றனர்? விட்டு விடுகின்றனர்?

**விடை :** விவேகமின்மையால், அறியாமையினால்.

**வினா :** எனவே சாஸ்திரங்களில் கூறப்பட்ட கர்மாக்களைச் செய்யாதவர்களை எத்தகையோர் எனக் கருத வேண்டியிருக்கும்?

**விடை :** விவேகமற்றவர்களென்றும் மோஹத்தின் வயப்பட்டவர்கள் என்றும் கருத வேண்டியிருக்கும்.

**முன்னுரை**

அடுத்து ராஜஸத்தியாகத்தை வர்ணிக்கிறார்.

*துஹ்ற கமித்யேவ யத்கர்ம காயக்லேச பயாத் த்யஜேத்!*
*ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவத்யாகபலம் லபேத்!! - (8)*

**சொற்பொருள்**

யஹ்ற-எவன், பத்கரம்-எந்த கர்மாவை, காயக்லேச பயாத்-உடல்

உழைப்பினால், துன்பம் ஏற்படும் என்ற அச்சத்தால், துக்கம் இதி ஏவ-துக்கத்தை உண்டாக்குவதென நினைத்து, த்பேஜேத்-விட்டு விடுவானோ, ஸஹ-அவன், ராஜஸம்-ரஜோகுண சம்பந்தமான, த்யாகம்-தியாகத்தை, க்ருத்வா-செய்து, த்யாக பலம்-தியாகத்தின் பலனை, கு லபேத் யேவ-அடைவதேயில்லை.

## கருத்துரை

எவன் உடம்பின் வருத்தத்துக்கு அஞ்சித் துக்கத்தை உண்டாக்குவது எனக் கருதி அதை விடுகிறவன் ரஜோகுண தியாகம் செய்கிறான். அதனால் அவன் தியாக பலனை அடைவதேயில்லை.

## விளக்கவுரை

தமோ குணத் தொடர்புடைய தியாகத்தைச் செய்பவன் அறியாமையினால் வேத சாஸ்திர நெறிகள் கூறும் கடமையினின்றும் வழுவுகின்றான். ரஜோ குணத் தொடர்புடைய தியாகியோ அதனை ஆற்றுவது கடினமென்று கருதி விட்டு விடுகிறான். அதாவது சோம்பலால் விட்டு விடுகிறான். மேலான சுகத்தை அளிக்கக்கடிய செயல்கள் துக்கத்தில் கடினமாகத் தோன்றும். எனினும் இறுதியில் எல்லையற்ற சுகத்தையே தரும். எனினும் ரஜோ குணத் தொடர்புடைய தியாகி முதலில் உள்ள கஷ்டத்திற்கும் பயந்து, சோம்பலால் சிறிதேனும் உழைக்காமல் அந்த கர்மங்களையே விட்டுவிடுகிறான். பிரம்ம முகூர்த்தத்தில் (வைகறையில்) எழுதல், குளிர்ந்த நீரில் குளித்தல், பிரம்மசரிய விரதத்தை மேற்கொள்ளுதல் முதலிய நல்வினைகள் கடினமாகத் தோன்றலாம். ஆயினும் அவை இறுதியில் மிக்க ஆனந்தத்தை அளிக்கும். ரஜோ குணத்தான் சோம்பலினால் அவற்றை விட்டு விடுகிறான். அவனுக்கு தியாகத்தின் பலன் எதுவும் கிடைப்பதில்லை. ஏனெனில் தியாகம் என்றால் பற்றின்மையே தவிர கர்மத்தியாகமல்ல. அவர்களோ கர்மங்களையே துறந்து விடுகின்றனர். இவ்வாறாக தாமச குணமுடையோன், ராஜஸ குணமுடையோன் வெவ்வேறான காரணங்களால் கடமைகளை விட்டு, நற்பலனை அடைய இயலாமல் இருக்கிறார்கள்.

**வினா :** ராஜஸதியாகத்தின் இலட்சணம் என்ன?

**விடை :** காரியங்களைக் கடினமாகக் கருதி (சோம்பலால்) அதனை விட்டு விடுதல் ராஜஸதியாகமெனப்படும்.

**வினா :** அத னால் அவனுக்கு ஏற்படும் நஷ்டமென்ன?

**விடை :** *அவன் தியாகத்தின் நற்பலன்கள் எதனையும் பெறுவ தில்லை.*

**முன்னுரை**

*இனி சாத்வீக தியாக்த்தை விவரிக்கிறார்.*

*கார்ய மித்யேவ யத்கர்ம நியதம் க்ரியதோ அர்ஜுன!*
*ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாகஹ ஸாத்வீகோ மதஹ!! - (9)*

**சொற்பொருள்**

*அர்ஜுனா! நியதம்-சாஸ்திரத்தினால் நியமிக்கப்பட்ட, யத் கர்மா-எந்த கர்மா, கார்யம் இத் ஏவ-செய்யத்தக்கவை என்று (அறிந்து) ஸங்கம்-பற்றினையும், பலம் ஏவ-பலனையும், த்யக்த்வா-விடுத்து, க்ரியதோ-செய்யப்படுகிறதோ, ஸம்த்யாகம்-அத்தகைய தியாகம், ஸாத்வீக-சாத்விகமானது என்று, தேஹ்-நிச்சயிக்கப்பட்டது.*

**கருத்துரை**

*அர்ஜுனா, இது செய்தற்குரியதென்று கருதி சாஸ்திரத்தால் விதிக்கப்பட்ட எந்த நித்திய கர்மம் செய்யப்படுகிறதோ, அந்தத் தியாகம் சாத்வீகமானது என்று கருதப்படுகிறது.*

**விளக்கம்**

*தியாகமெனில் பற்றை விட்டு விடுதலேயொழிய பலனை விட்டு தலேயொழிய கர்மங்களை விட்டு விடுவதன்று என்பது இச்சுலோகத்தின் வாயிலாகத் தெளிவாகிறது. மேலும் 'கார்யம்' என்று சொல்வதால் சாஸ்திரத்தால் கூறப்பட்டுள்ளது தெரியாமல் அறியாமையால் அவற்றைச் செய்யாதிருப்பான், ரஜோ குணமுடையவன் தெரிந்திருந்தும் அதனை ஆற்றுவது கடினமென்று கருதி அதனை ஆற்றாமலேயே இருப்பான். சாத்வீக குணமுடையவன் அதனைப் பற்றி அறிந்து, துன்பங்களுக்கு அஞ்சாமல் பற்றினையும், பலனையும் உதறித் தள்ளிவிட்டு அதனைச் செய்வான். சத்துவ குணத்தான் ஆற்றும் தியாகமே சிறந்த தியாகமென்றும், அதுவே முறையானது என்பதும் இச்சுலோகத்தினால் புலனாகிறது.*

**வினா :** *சத்துவ குணத்தின் இயல்பு யாது?*

**விடை :** சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்ட கர்மாவைத் தவறாமல் செய்ய வேண்டியவையென்று நினைத்துப் பற்றினையும் விட்டுப் பலனையும் கருதாது அதனைச் செய்தலே சாத்விகமானத் தியாகம் எனப்படும்.

### முன்னுரை

அத்தகைய தியாகசீலன் கர்மாக்களின் விருப்பு வெறுப்புக ளின்றி இருப்பானென்று தெரிவிக்கிறார்.

*நத்வேஷ்ட்யகுசலம் கர்மகுசலே நானுஷஜ்ஜதே!*
*த்யாகீ ஸத்வஸ மாவிஷ்டோ மேதாவீ சின்னஸம்சயஹ!! - (10)*

### சொற்பொருள்

ஸத்வ ஸமா விஷ்டஹ-சத்வம் மேலோங்கப் பெற்றவனும், மேதாவி-பேரறிஞனும், சின்ன ஸம்சயஹ-ஐயங்களைப் போக்கிக் கொண்டவனும், தியாகி-தியாக சீலனும் (பற்றையும், பலனையும் விட்டு), அகுசலம் கர்ம-துன்ப வினையை, நத்வேஷ்டி-இகழான், குசலே-நன்மையையும், சுகத்தையும் அளிக்கவல்ல கர்மாக்களில், ந. அனு ஷஜ்ஜதே-விருப்பம் வைப்பதில்லை.

### கருத்துரை

சத்வம் நிறைந்தவனும், பேரறிஞனும், ஐயத்தை அகற்றியவ னும் ஆகிய தியாகியானவன் துன்ப வினையை வெறுக்கமாட்டான். நன்மையையும், சுகத்தையும் அளிக்கவல்ல இன்ப வினையை விரும்ப மாட்டான்.

### விளக்கவுரை

சத்வ குணத்துடன் கூடிய கர்மபலத்தியாகி இருமைகளில் சம மாக புத்தியுடையவனாயிருப்பான் என்று சொல்லப்படுகிறது. ஒன்றை வெறுப்பதோ மற்றொன்றில் பற்றுடன் ஈடுபாடு கொள் வதோ, சிக்கிக் கொள்வதோ அவனுடைய இயல்பு அல்ல. அவன் விருப்பு வெறுப்பற்றவன். அசுவ கர்மங்களை, கர்ம காரியங்களை வெறுக்க மாட்டான் என்று சொன்னதால், அதனை அவன் விரும்பு வான் என்பது பொருளல்ல. ஜீவன் முக்தனைப் போல அதன்பால் ஒன்றாது, தான் என்ற எண்ணத்துடன் செல்லாது, தூய காரியங்களை, நிஷ்காம கர்மங்களையே செய்வான். அதன் மீது பற்றின்றி இருப் பான்.

**வினா :** *சத்வ குணமுடைய கர்ம பலத்தியாகியின் இயல்பு எவ்வாறிருக்கும்?*

**விடை :** *அவன் (1) சத்வ குணமுடையோனாய் (2) மேதையாய் (3) ஐயங்களற்றவனாய் (4) சுபமற்ற (காம்ய) கர்மங்களின் மீது வெறுப்புறாமலும், சுத்த (நிஷ்காம) கர்மங்களில் சிக்காதும் (பற்றினின்றியும்) இருப்பான்.*

**முன்னுரை**

*கர்ம பலனைத் தியாகம் செய்பவனே உண்மையில் தியாகி யென்கிறார்.*

*ந ஹி தேஹப்ருதா சக்யம் த்யக்தும் கர்மாண்ய சேஷதஹ!*
*யஸ்து கர்மபலத்யாகீ ஸ த்யா கீத்யபீீயதே!! - (11)*

**சொற்பொருள்**

*கர்மாணி-கர்மாக்களை, அசேஷதஹ-முற்றிலுமாக, த்யக்தும்-துறப்பதற்கு, தேஹப்ருதா-உடலெடுத்துள்ள ஜீவனுக்கு, நஸக்யம் ஹி-சாத்தியபடாதல்லவா, யஹ்து-எவனொருவன், கர்ம பலத்யாகி-கர்மங்களின் பலன்களை விட்டு விடுகிறானோ, ஸஹஅ-அவன், த்யாகீ இதி-தியாகி என்று, அபிதீயதே-சொல்லப்படுகிறான்.*

**கருத்துரை**

*கர்மாக்களை முற்றிலும் விட்டுவிடுதல் என்பது உடலெடுத்த ஜீவனுக்கு சாத்தியமாகாது. எவனொருவன் கர்மாக்களின் பலன் களை விட்டு விடுகிறானோ அத்தகையோனே தியாகியெனப்படுகிறான்.*

**விளக்கம்**

*உடலைத் தாங்கிய ஜீவன், உடலைக் காப்பாற்றிக் கொள்வதற்கு கர்மங்கள்ள செய்தே தீர வேண்டியிருக்கும். எனவே கர்மங் களை முற்றிலும் விடுவதென்பது இயலாது. இந்தக் காரணத்தால் அவ்வக் கர்மாக்களைச் செய்த வண்ணம் அவற்றின் பலன்களைத் துறப்பதே மிகச் சிறந்த முறை. அத்தகையோன் அக் கர்மாக்களினால் பந்திக்கப்பட மாட்டான். மேலும் அவனே தியாகி எனப்படுகிறான். தியாகிஎன்றால் புறப் பொருட்களைத் துறப்பவனல்லன் என்பதும், கர்மாக்களைச் செய்து அவற்றின் பலன்களைத் துறப்பவனே தியாகி*

யென்பதும், பற்றினைத் துறப்பவனே தியாகி என்பதும் இச்ச்லோ கத்தின் வாயிலாகப் புலனாகிறது. கர்மாக்களை விட்டொழித்தால் மாத்திரம் தியாகத்தின் பலனை அடைய முடியாது. கர்மாக்களைச் செய்து அவற்றின் பலனைத் தியாகம் செய்பவன் தியாக பலனையும் அடைகின்றான். இதனால் உள் மனத்தில் உள்ள தியாகத் தன்மை பலனைக் கருதும் (தேக அபிமான வடிவில்) அந்தரஸஅதே மனோ நிலையில் தியாகத்திலேயே அடங்கியுள்ளதேயன்றிப் புறப் பொருட்களைத் துறப்பதல்ல. எனவே கர்மங்களைச் செய்ய வேண் டுமென்றும், பலனில் ஒன்றாமல் செய்யவேண்டும் என்பதும் பக வானின் கருத்து போலும்.

**வினா :** கர்மாக்களை முற்றிலும் துறப்பதற்கு இயலுமா?

**விடை :** உடலைத் தாங்கிய ஜீவனுக்கு இயலாது.

**வினா :** தியாகி என்றால் எவன்?

**விடை :** எவன் செயல்களைச் செய்தவண்ணம், அவற்றின் பலனை விட்டு விடுகிறானோ அவனே தியாகி.

முன்னுரை

கர்ம பலன்களைத் துறப்பதால் கர்ம பந்தங்களினின்றும் மனி தன் ஏன் விடுபடுகிறான் என்பதை அடுத்துக் கூறுகிறார்.

*அனிஷ்டமிஷ்டம் மிச்ரம் ச்த்ரிவிதம் கர்மணஹ பலம்!*
*பவத் யத்யாகினாம் ப்ரேத்ய நது ஸந்யாஸினாம் க்வசித்!! - (12)*

சொற்பொருள்

அனிஷ்டம்-துக்கத்தையளிக்க வல்லது (நரகம், நீசப் பிறவி இவற்றையளிக்கவல்லது), இஷ்டம்-சுகத்தை யளிக்கவல்லது (சுவர்க்கம், மேலான தெய்விகப் பிறவியை யளிக்கவல்லது), மிஸ் ரம் ச-இன்ப, துன்பம் இரண்டும் கலந்த (மனிதப் பிறவியை அளிக்க வல்லது) ஆக, த்ரிவிதம்-மூன்று விதங்களாக, கர்மணஹ பலம்- கர்மத்தின் பலனைத் துறக்காதவர்களுக்கு, பரேத்ய-மரணத்திற்குப் பிறகு, பவதி-ஏற்படுகிறது. சந்நியாசினாம் து-கர்ம பலனைத் துறப் பவர்களுக்கோ, க்வசித்-ஒரு போதும், ந-இல்லை (ஏற்படாது).

**கருத்துரை**

*துக்கத்தைத் தருவது, இன்பத்தைத் தருவது, இவ்விரண்டையும் கலந்து தருவது என மூன்றுவிதமான வினைப்பயன் தியாகிகளல்லா தார்க்கு ஏற்படுகின்றது. தியாகிகளுக்கு ஒருபோதும் ஏற்படாது.*

**விளக்கம்**

கர்மா பந்தங்களை ஏற்படுத்தக் கூடியன என்றும், பிறவிக்குக் காரணமாகுமென்றும், அதனால் செய்யக்கூடாதவையென்றும் சொல்பவர்க்கு பகவான் சரியான விடையளித்துள்ளார். கர்மா அனைவருக்கும், பற்றுடன், சுயநலத்துடன் செய்பவனுக்கு, தானே கர்த்தா என்ற எண்ணத்துடன் செய்பவனுக்கு மட்டுமே பந்தத்தை ஏற்படுத்தும். பலன் கருதாது செய்பவர்க்கல்ல. சுவர்க்கம் முதலிய சுகங்கள் போன்ற விரும்பக்கூடிய பலனோ, நரகம், நீசப்பிறவி போன்ற வேண்டாத விரும்பத்தகாத பலனோ, அல்லது இரண்டும் கலந்த மனிதப் பிறவியோ பலன் கருதி செய்பவர்க்கே கிடைக்குமே யொழிய பலன்களைத் தியாகம் செய்தவர்க்கல்ல, (ந து ஸந்நியாசி னாம் க்வசித்), 'க்வசித்'-என்று கூறுவதால் எக்காலத்தும் அவர்க ளுக்கு பந்தம் ஏற்படாது என்பது பொருள். ஏனெனில் கர்ம பல னைத் துறப்பவர்க்கு மனத்தூய்மை ஏற்பட்டு அதன் வாயிலாக மோட்சமே கிடைக்கும். பிறவியற்ற நிலையே சித்திக்கும். அவர்க ளுக்கு 'உலகியல்' (பிறவி) என்பதே இராது. சம்சார சக்கரத்தின் சுழற்சியனைத்தும் பலனைக் கருதி கர்மங்களைச் செய்பவர்க்கேய கும். இதானல் பலனைக் கருதாத (நிஷ்காமமான) கர்மா எத்தனை மகிமையுடையதோ, பகவானுக்கு அதன் மீது எத்துணை ஈடுபாடு என்பது தெளிவாகிறது.

**வினா :** மூன்றுவிதமான பலன்களை எவர் அடைவர்?

**விடை :** கர்ம பலன்களைத் தியாகம் செய்யாது, கர்ம பலனைக் கருதிச் செய்வோர்க்கே கிடைக்கும்.

**வினா :** எப்போது கிடைக்கும்.

**விடை :** மரணத்திற்குப் பின்.

**வினா :** கர்மாவின் பலன்கள் யாருக்கு ஏற்படா?

**விடை :** *பலன்களைத் துறந்து கர்மாக்களைச் செய்வோர்க்கு ஏற்பட மாட்டா. (அவர்களுக்கு மனத்தூய்மையானால் மோட்சமே கிட்டும்).*

## முன்னுரை

*கர்மாக்களை நிறைவேற்றுவதற்கான ஐந்து காரணங்களைக் கூறுகிறார்.*

*பஞ்சை தானி மஹாபாஹோ காரணானி நிபோதமே!*
*ஸாங்க்யே க்ருதாந்தே ப்ரோக்தானி ஸித்தயே ஸர்வ கர்மணாம்!! - (13)*

## சொற்பொருள்

*மஹாபாஹோ!-பெருந்தோளுடைய அர்ஜுனனே!-ஸர்வ கர்மாணாம்-கர்மங்கள் எல்லாம், ஸித்தயே-ஈடேறுவதற்காக (நிறைவேற்றுவதற்காக) க்ருதாந்தே-கர்ம காண்டத்தின் முடிவைக் கூறும், ஸாங்க்யே-சாங்கிய சாஸ்திரத்தில், (வேதாந்த சாஸ்திரத்தில்), ப்ரோக்தானி-கூறப்பட்ட, ஏதானி-இந்த, பஞ்ச காரணானகி-ஐந்து காரணங்களை, மே (வசனாத்)-என்னுடைய மொழிகளில், நியோத-அறிந்துகொள்.*

## கருத்துரை

*பெருந்தோளுடைய அர்ஜுனா! கர்மத்தின் முடிவுகாட்டும் சாங்கிய சாஸ்திரத்தில் சகல கர்மங்களின் சித்திக் கென்று பகரப்பட்டுள்ள இந்த ஐந்து காரணங்களையும் என்னிடம் அறிந்து கொள்.*

## விளக்கம்

*க்ருத-அந்த-க்ருதாந்தோ, ஸாங்க்யே-என்றால் கர்மத்தின் பகுதியை இறுதியையுணர்த்தும் வேதாந்த சாஸ்திரம் என்று பொருள். வேதாந்தத்தில் ஆத்ம சொரூபத்தினை நிர்ணயிக்கையில் அது இயற்கைக்குப் புறம்பாய் உள்ளது என்பதும், எல்லா கர்மாக்களும் இயற்கையினால் தான் நிகழும் என்பதும், ஆன்மாவானது சாட்சியாய் கிரியைகளின்றி இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே எல்லா கர்மங்களும் முடிவடையும் வேதாந்த சாஸ்திரம் எனப்பட்டது. மேலும் 'ஸர்வம், கர்மாகிலம்' 'பார்த்தக்ஞானே', 'பரிஸமாப்யதே' என்று கூறப்பட்டிருப்பதால், கர்மாக்கள் அனைத்தும் ஞானத்தில் லயித்த பின் நிறைவடைகின்றன என்பது தெரிகின்றது. ஏனெனில் சைதன்ய நிலைய (ஆன்மநிலையில், உடல், புலன்கள், மனம்,*

எண்ணம் இவை இல்லாததால் அங்கு கர்மா பலனற்றதாகிவிடும். கர்மாவைக் கடந்த நிலை அது. எனவே இந்த ஞானம் வேதாந்த சாஸ்திரத்தில், கர்மாவின் முடிவு 'க்ருதாந்தம்' என்று கூறப்படுகிறது.

**வினா :** எந்த கர்மா நிகழ வேண்டுமெனினும் எத்துனை காரணங்கள் இருத்தல் வேண்டும்?

**விடை :** ஐந்து

**வினா :** அவற்றைக் குறித்து எங்குச் சொல்லப்பட்டுள்ளது?

**விடை :** கர்மாவின் இறுதியான ஞானத்தினைப் போதிக்கும் சாங்கிய (வேதாந்த) சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.

### முன்னுரை

அவ்வைந்து காரணங்கள் எவையெனக் கூறுகிறார்.

*அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம்!*
*விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்!! - (14)*

### சொற்பொருள்

அத்ர-இந்த கர்மாக்களைச் செய்கின்ற விஷயத்தில், அதிஷ்டானம்-இருப்பிடமாகிய உடல், ததா-அவ்வாறே, கர்த்தா-செய்பவன், ப்ருதக் விதம்-வெவ்வேறு விதமான, கரணம் ச-புலன்கள், விவிதா-பலவிதமான, ப்ருதக்-வேறுபட்ட, சேஷ்டாச-செயல்கள், பஞ்சமம்-ஐந்தாவது, தை வம்ச-தெய்வமும், (பவந்தி காரணங்களாகின்றன).

### கருத்துரை

கர்மங்களைச் செய்யும் விஷயத்தில் (1) உடல் (2) கர்த்தா (செய்வோன்) (3) வெவ்வேறு புலன்கள் (4) வெவ்வேறான கிரியைகள் (5) தெய்வம் இவை காரணமாகின்றன.

### விளக்கம்

கரணங்கள் என்றால் பன்னிரெண்டு செயல்கள் (5 கன்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், மனம், புத்தி) ஆகியவற்றின் தொழில்கள். இங்கு 'தைவ்-தெய்வம் என்றால் அவ்வவ் இந்திரியங்களின் அதிஷ்டான தேவதைகள் என்றோர் முற்பிறவியின் வாசனைகள் (புண்ணிய பாவங்கள்) என்றே கூறலாம்.

**வினா: கர்மா நிகழ்வதற்குத் தேவையான ஐந்து காரணங்கள் யாவை?**

**விடை :** *(1) உடல் (2) கர்த்தா (3) வெவ்வேறு இந்திரியங்கள், (4) அவற்றின் செயல்கள் (5) தெய்வம்.*

முன்னுரை

*எந்த கர்மாக்கள் செய்யப்பட்டாலும் இவ்வைந்தும் அவற்றிற்குக் காரணங்கள் என்று கூறுகிறார்.*

*சரீரவாங் மனோபிர்யத் கர்ம ப்ராரபதே நரஹ!*
*ந்யாய்யம் வா விபரீதம் வா பஞ்சை தே தஸ்ய ஹேதவஹ!! - (15)*

சொற்பொருள்

*நரஹ்-மனிதன், சரீர வாக்மனோபிஹி-மெய், வாய், மனம் இவற்றுடன், நீயாய்யம் வா-நியாயமான வையோ (சாஸ்தீரியமானதோ), விபரீதம் வா-அநியாயமானதோ (சாஸ்திரங்களுக்கு அப்பாறப்பட்டதோ), யத்கர்மா-எந்த கர்மாவை, ப்ராரபதே-தொடங்குகிறானோ, தஸ்ய-அந்தச் செயலுக்கு, ஏதே பஞ்சஹ-இந்த ஐந்தும், ஹேத்வஹ-காரணங்களாகின்றன.*

கருத்துரை

*மனிதன் உடல், வாக்கு, மனம் ஆகியவற்றால் நேர்மையானது, நியாயமற்றதோ ஆகிய எந்தக் கர்மாவைத் தொடங்கினாலும் இதற்கு இவை ஐந்தும் காரணமாகின்றன.*

முன்னுரை

*சாட்சியாகிய ஆன்மாவைக் கர்த்தா என்று நினைப்பவன் விவேகமற்றவன் என்கிறார்.*

*தத்ரைவம் ஸதி கர்தார மாத்மானம் கேவலம் துயஹ!*
*பச்யத்யக்ருத புத்தித்வான்ன ஸ பச்யதி துர்மதிஹி!! - (16)*

சொற்பொருள்

*தத்ர-அவ்விஷயம் ஏவம்ஹி-இவ்வாறிருக்கையில், (மேற்கூறிய ஐந்தும் காரணங்களாக இருக்கையில்), யஹ்-எவன், அக்ருத, புத்தித்வாத்-பண்படுத்தப்படாத புத்தியுடையவன் ஆதலால் (புத்தி தெளிவடையாமையினால்) கேவலம் ஆத்மானம் து*

முழுமுதற்பொருளாகிய ஆத்மாவை, கர்த்தாரம்-கர்த்தாவாக, பச் யதி-பார்க்கிறானோ, ஸக்ஷுர்மதி-அறிவிலியாகிய அவன், நபச்யதி-கர்மாவின் சொரூபத்தையோ ஆன்மாவினையோ அறியாமல் இருக் கிறான்.

**கருத்துரை**

அது அங்ஙனமிருக்க (மேற்கூறிய ஐந்தும் காரணங்களாக இருக் கையில்) எவனொருவன் புத்தி பண்படாத நிலையில் உடல் இல் லாத ஆன்மாவைக் கர்த்தாவாகக் கருதுகிறானோ அத்தகைய அறி விலி கர்மத்தைப் பற்றியோ ஆன்மாவைப் பற்றியோ அறியாமல் இருக்கிறான்.

**விளக்கம்**

ஆன்மா கர்த்தாவல்ல, மேற்கூறிய ஐந்து மட்டுமே கர்த்தாக்கள். ஆன்மானவது சாட்சி, உடல் இல்லாதவன், பற்று இல்லாதவன், ஆயினும் கர்த்தாவின் தன்மையை ஆன்மாவுடன் தொடர்பு படுத்துப வன் விவேகமற்றவனேயாகிறான். அவன் பரம்பொருள் தத்து வத்தை உணராதவன். கேள்வி இல்லாதவன், துர்மதி தீய மனத் தினை, எண்ணத்தினையுடையவன். தொடர்பற்ற ஆன்மாவை கர்த் தாவாகக் கருதுபவன், கண்ணிருந்தும் குருடனேயாவான். ஏனெ னில் அவன் உண்மையை யுணர்வதில்லை, (அக்ருத புத்திதத்வாத்) புத்தி தெளிவின்றி எத்துனை புலமை பெற்றிருந்தாலும், உலகியல் வித்தைகளைக் கற்றிருந்தாலும் உண்மை நோக்கு அற்றவனாக இருந் தால் அவன் கண்ணிருந்தும் குருடனேயாவான். ஞானக்கண் இல் லையேல் இருட்டில் இருப்போரைப் போல் உண்மை இலக்கினை உணராமல் இருப்பர். எனவே உலகியல் விவேகம் எத்துனை இருப் பினும் ஆன்ம அறிவில்லாதோர் தீய மனமுடையோர், பார்வையற் றோரே யாதலால் உலகியல் நோக்கில் எத்துனைச் சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் ஆன்மீக நோக்கத்தில் அவர்கள் குறிப்பிடத்தக்கவ ரல்லர். எனவே மக்கள் ஆன்ம தத்துவத்தை யுணர்ந்து கடவுளின் அன்பிற்குப் பாத்திரர்களாக வேண்டும்.

**குற்றம் :** தொடர்பற்ற ஆன்மாவைக் கர்த்தாவாகக் கருதுவது.

**குற்றத்தின் காரணம் :** புத்தி, கல்வி, கேள்வி முதலியவற்றால் பண்ப டாமல் இருப்பதே காரணம்.

**குற்றத்தின் பலன் :** *அஞ்ஞான வடிவிலான அந்தகத் தன்மை - (சரி யான நோக்கு இல்லாமற் போதல்)*

**வினா :** *ஆன்மா எப்படிப்பட்டது?*

**விடை :** *அனைத்திற்கும் அப்பாற்பட்டதாய், தொடர்பின்றிச் சாட்சி யாய் இருப்பது.*

**வினா :** *அத்தகைய தொடர்பற்ற ஆன்மாவை மனிதன் ஏன் கர்த்தா எனக் கருதுகிறான்?*

**விடை :** *அஞ்ஞானத்தினால், புத்தி தெளிவின்மையால்.*

**வினா :** *ஆகவே அவனுடைய நிலையென்ன?*

**விடை :** *அவன் குருடனைப் போல இருக்கிறான். அவனால் உண் மையைக் காண முடிவதில்லை.*

## முன்னுரை

*அகந்தை, கர்த்ருத்வ புத்தி இல்லாதவன் கர்மாக்களினால் தீண் டப்படமாட்டான் என்கிறார்.*

*யஸ்ய நாஹம் க்ருதோ பாவோ புத்திர்யஸ்ய நலிப்யதே!*
*ஹத்வாபி ஸ இமாந் லோகாந் ந ஹந்தி ந நிபத்யதே!! - (17)*

## சொற்பொருள்

*யஸ்ய-யாருக்கு, அஹங்க்ருதஹ பாவம்-நானே எல்லாவற்றிற் கும் கர்த்தா என்ற பாவனை, ந-இல்லையோ, யஸ்ய-யாருக்கு, புத் திஹ்-புத்தி, நலிப்யதே-பற்றுவதில்லையோ, ஸங்-அவன், இமான் லோகான்-இவ்வுலகத்தாரை, ஹத்வா அபி-கொன்றாலும், ந ஹந்தி-கொல்லுவதில்லை, ந நிபத்யதே-கர்மங்களால் பந்தப்படுவது மில்லை.*

## கருத்துரை

*யாருக்குத் தானே கர்த்தா என்ற எண்ணம் இல்லையோ, யாரு டைய புத்தி விஷயங்களையும் கர்மங்களையும் தீண்டுவதில் லையோ அவன் இவ்வுயிர்கள் அனைத்தையும் கொன்றாலும் உண் மையில் எதையும் செய்வதில்லை. மேலும் அவன் கர்மாவினாலும், பாவங்களினாலும் பந்திக்கப்படுவதுமில்லை.*

**விளக்கம்**

*அகங்காரமோ, தானே கர்த்தாவென்ற எண்ணமோ இல்லாதவனுக்கு, புத்தியானது விஷயங்களிலோ, கர்மாவிலோ பற்றுக் கொள்ளாதவனுக்கு இந்த உயிர்கள் அனைத்தையும் கொன்றாலும் அவன் பாவத்தால் சூழப்படமாட்டான் என்றும் அவன் பந்தப்படுவதில்லை எனவும் இங்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த சுலோகத்தில் பொருளை மிகவும் எச்சரிக்கையுடன் சிந்தித்தல் வேண்டும். இல்லையேல் மனிதன் அஞ்ஞானத்தில் அழிந்துவிடும் அபாயம் இருக்கிறது.*

*கர்ம பந்தத்திற்குக் காரணம், கர்மாக்களில் நானே கர்த்தா என்ற எண்ணம் கொண்டிருத்தல், புத்தி அவ்வவ் விஷயங்களிலும் கர்மாக்களுடன் தொடர்பு கொண்டிருத்தல் ஆகும். கர்த்தா என்ற எண்ணமின்றி விஷயங்களில் புத்தி ஒட்டாமல் கர்மாக்களைச் செய்பவர்க்கு அக்கர்மாக்களின் வினையோ, சுகதுக்கங்களோ புண்ணிய பாவங்களோ சேரா. அந்த உண்மையே இங்குக் கூறப்பட்டது. அவ்வளவேயன்றி உயிர்களைக் கொல் என்றோ, கொல்வது சரியானதென்றோ இங்குப் போதிக்கப்படவில்லை. மேலும் அனைத்தையும் ஆன்ம வடிவாகக் காண்பவன் கர்த்தா என்ற எண்ணமில்லாதவன், பற்றில்லாதவன், தான் மனம் இல்லையென்று எண்ணுபவன் எப்போதும் ஆன்மாவிலேயே நிலைபெற்றிருப்பான். ஆதலால், அத்தகையோன் எல்லா உயிர்களிலும் தனது ஆன்மாவையே பார்ப்பதால் ஓர் உயிரை எப்படித் துன்புறுத்துவான்? எனவே அத்தகைய பற்றில்லா மனமுடையவன், ஆன்மாவில் நிலைப்பவன் மக்களுக்கு உதவுவானே தவிர தீங்கு செய்யான். உயிர்களை இம்சிக்க மாட்டான். ஒரு கால் அவன் இம்சித்தால் இன்னும் ஞானம் ஏற்படவில்லை என்றுதான் கருத வேண்டியிருக்கும்.*

*உண்மையில் உடலோ மனமோ அன்றி ஆன்மாவையையே கர்த்தா என்ற எண்ணமும், அகந்தையும் இல்லாதவன் ஆன்மாவில் தான் நிலை பெற்றிருப்பான். அத்தகையோன், புத்தியினால் செய்யப்படும் கர்மாக்களுடனோ, அதன் விளைவாக ஏற்படும் பந்தத்துடனோ, எந்தத் தொடர்புமின்றியிருப்பான். எனவே அவன் ஒரு உயிரை மாத்திரமல்ல எல்லா உயிர்களையும் ஒருகால் கொன்றாலும் புத்தியுடன் எவ்விதத் தொடர்பும் இன்மையால் கர்த்தாவின் தன்மையின்மையால், ஆன்மாவில் நிலைத்து இருப்பதால் அவன் கொல்லாதவனேயாவான் அதனால் ஏற்படும் பாவத்தால் பந்தத்தாலும் தீண்*

டப்படாமலிருப்பான். இங்கு ஆன்மாவில் நிலைத்திருப்பவனின் பற்றற்ற தன்மையைக் குறித்த ஒரு கோட்பாடு, உண்மை சொல்லப் பட்டதேயொழிய இம்சையைப் போதிப்பதற்காக அல்ல. உண்மை யில் பற்றற்ற நிலையைப் பெற்றிருப்பவன், ஆன்மாவில் நிலைத்தி ருப்பவன் இடைவிடாது கோடிக்கணக்கான உயிர்களுக்கு நன்மை செய்வானேயொழிய அவற்றை எந்த விதத்திலும் பாதிக்கமாட் டான். இதனை மோட்சத்தை விரும்பும் முமுக்ஷுக்கள் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

புண்ணிய பாவங்களுக்குக் காரணம், கர்த்தா என்ற எண்ணம், பற்று அதாவது ஜீவன் தனது ஆன்மநிலையை விட்டு இறங்கி, காட்சியுடனும் புத்தியுடனும் சேர்ந்து 'நானே கர்த்தா' என்று நினைப் பதே. எப்போது பற்றுவிடுத்து கர்த்தா என்ற மனப்பான்மையையும் விடுத்து கர்மங்களைச் செய்கிறானோ அப்போது புண்ணிய பாவங் களோ அதன் விளைவாக ஏற்படும் சுக துக்கங்களோ, பந்தங்களு டனோ அவனுக்குத் தொடர்பு இராது. எனவே அத்தகையோன் அனைவரையும் கொன்றாலும் கொல்லாதவனே என்று கூறப்படுவ தற்குக் காரணம் - 'எத்துனை பாவம் செய்தாலும் அது அவனை அண்டாது' - என்பதற்கு ஓர் உதாரணமாக, கூறப்பட்டதேயன்றி அவர்கள் கொல்ல வேண்டுமென்று போதிக்கப்படவில்லை.

அர்ஜுனன் க்ஷத்திரியன், தீயோரைத் தண்டித்தல் அரசர்களின் தர்மமும் கடமையும் ஆகும். கௌவரவர்கள் அதர்மத்தைக் கடைபி டித்து துஷ்டர்களாக மாறினர். எனவே அத்தகைய தீயோர் அனைவ ரையும் 'அர்ஜுனா! பற்றின்றி, அகந்தையின்றி நீ கொன்றாலும் கொல்லாதது போன்றதேயாகும்' என்று பகவான் அர்ஜுனனுக்குப் போதித்தாகும் இது என்று கருதக்கூடும். புத்தியைக் கடந்து, அகந் தையைக் கடந்து ஆன்மாவில் நிலைத்திருப்போருக்கு எதனைச் செய் தாலும் செய்யாதது போன்றதேயாகுமல்லவா? எனினும் அந்நிலை யில் இருப்போர் அநாகரிகமான, அதர்மமான, இம்சையுடன் கூடிய துன்பகரமான செயல்கள் எவற்றையும் செய்ய மாட்டார்கள். 'இமாம் லோகான்' என்று அர்ஜுனனுக்குச் சொல்லப்பட்டதால் 'இதோ உன் எதிரிலிருக்கும் கௌரவர்கள்' எனக் குறிப்பிடப்பட்ட தாகவும் கொள்ளலாம். அரசர்கள் துஷ்டர்களுக்கு, துரோகிகளுக்கு அளிக்கும் தண்டனை பாவமாகக் கருதப்படமாட்டாது. எனவே அது அவர்களைக் கட்டுப்படுத்தாது. மேலும் அத்தகைய செயல்களைப் பற்றின்றிச் செய்யும் போது பந்தத்தின் விளைவை ஏற்படுத்தாது.

எனவே பகவான் தெரிவித்த இந்த சுலோகத்தின் பொருளை மிக்க ஆழமாகச் சிந்தித்து ஏனைய உயிர்களுக்கு எவ்வித துன்பமும் தீங்கும் விளைவிக்காது, ஆன்மாவில் நிலைத்து, பற்றின்றி, ஒட்டாது அவ்வக் காரியங்ளை நிறைவேற்றியபடி பந்தங்களினின்றும் விடு பட்டு விளங்க வேண்டும்.

**வினா :** பாவத்திற்கும், பந்தத்திற்கும் காரணமென்ன?

**விடை :** (1) அகம்பாவம் (நானே கர்த்தாவென்ற எண்ணம்) (2) புத்தியின் சேர்க்கை (விஷயம் முதலியவற்றுடனும், கர்மம் முதலிய வற்றுடன் பற்று கொள்ளுதல்).

**வினா :** பாவமும், பந்தமும் நீங்குவதற்கான உபாயம் எது?

**விடை :** தானே கர்த்தா என்னும் மனப்பான்மை, ஒட்டாத தன்மை, இவற்றுடன் எக் காரியங்களை ஆற்றினும் அவற்றில் அவன் பந்திக் கப்படமாட்டான்.

## முன்னுரை

கர்மாவிற்கான காரணத்தையும் ஆதாரத்தையும் தெரிவிக்கிறார்.

*ஞானம் நேயம் பரிக்ஞாதா த்ரிவிதா கர்மசோதனா!*
*கரணம் கர்ம கர்த்தேதி த்ரிவிதஹ கர்மஸங்க்ரஹஹ!! - (18)*

## சொற்பொருள்

கர்ம சோதனா-கர்மாவினை நடத்துவதற்கு, ஹேது-காரணம், ஞானம்-அறிவு, நேயம்-அறியத்தக்கப் பொருள், பரிக்ஞாதா-அறிபவனும், (என்ற) த்ரிவிதாஹ்-மூவகைப்படும், கர்மஸங்க்ர ஹஹ-கர்மத்திற்கு ஆதாரமும், கரணம்-உபகரணம் (சாதனம், அகப் புறப் புலன்கள்), கர்ம-கிரியை (வினை), கர்தா-செய்வோன், இதி-என்று, த்ரிவிதஹ-மூவகைப்படும்.

## கருத்துரை

அறிவு, அறியப்படும் பொருள், அறிபவன் என கர்மாவிற்குத் தூண்டுதல் மூன்று வகைப்படும். கருவி, கர்மா, கர்த்தா எனக் கர்மத் திற்கு இருப்பிடம் ஆதாரம் மூன்று வகைப்படும்.

**வினா :** கர்மத்திற்கு ஆதாரம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

**விடை :** மூவகைப்படும். அவையாவன (1) கருவி (2) கர்மம் (3) கர்த்தா ஆகியவை.

**முன்னுரை**

ஞானம், கர்மா, கர்த்தா ஆகியவற்றின் சாத்வீக ராஜஸ, தாமஸ வடிவங்களைத் தெரிவிக்கிறேன் என்று பகவான் கூறுகிறார்.

*ஞானம் கர்ம ச கர்த்தா ச த்ரிதைவ குணபேததஹ!*
*ப்ரோச்யதே குண ஸங்க்யானே யதாவச்ருணு தான்யபி!! - (19)*

**சொற்பொருள்**

குணஸங்க்யானே-குணங்களைப் பற்றி விவரிக்கும் சாங்கிய சாஸ்திரத்தில், கர்மச-கர்மாவையும், கர்தாச-கர்த்தாவையும், குண பேததஹ-சத்வம் முதலிய குணங்களின் வேறுபாட்டையும் அனுச ரித்து, த்ரிதா ஏவ-மூவகையாகவே, ப்ரோக்யதே-சொல்லப்படுகிறது, தானி அபி-அவற்றையும், யதாவத்-நெறிப்படி (சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி) ஸ்ருணு-கேட்பாயாக.

**கருத்துரை**

குணங்களைப் பற்றி விவரிக்கும் சாங்கிய சாஸ்திரத்தில் ஞானம், கர்மம், கர்த்தா ஆகியவை சத்வம் முதலிய குணங்களின் வேறுபாட்டின் அடிப்படையில் மூன்று விதமாகக் கூறப்படுகிறது. அவற்றையும் சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளபடி கூறுகிறேன் கேள்.

**வினா :** பகவான் குணங்களின் பேதத்தின் அடிப்படையில் மூவகை யாக எவற்றைக் குறித்துச் சொல்ல நினைத்தார்?

**விடை :** (1) ஞானம் (2) கர்மா (3) கர்த்தா ஆகியவற்றைக் குறித்து.

**வினா :** அவற்றைக் குறித்து எங்குச் சொல்லப்பட்டுள்ளது.

**விடை :** சாங்கிய சாஸ்திரத்தில்.

**முன்னுரை**

அதில் முதலில் ஞானத்தின் சாத்வீக ஞானத்தைக் குறித்துத் தெரிவிக்கிறார்.

*ஸர்வபூதேஷு யேனைகம் பாவமவ்யய மீக்ஷதே!*
*அவிபக்தம் விபக்தேஷு தஜ்ஞானம் வித்தி ஸாத்விகம்!! - (20)*

### சொற்பொருள்

*விபக்தேஷு-வகைப்படுத்தப்பட்டு வெவ்வேறு வேறாக இருக்கும். ஸர்வபூதேஷு-பலகோடி உயிர்களில், ஏகம்-ஒன்றான, அவ்யயம்-அழிவில்லாத, பாவம்-ஆன்மாவை (தெய்வத்தின் இருப் பிடத்தை), யேந-எந்த ஞானத்தினால், அவிபக்தம்-வகைப்படுத்தப்படாது ஒரே விதமாக, ஈக்ஷதே-பார்க்கிறானோ, (அறிந்து கொள்வானோ) தத்ஞானம்-அந்த ஞானம், சாத்வீகம்-சாத்விகமென்று, வித்தி-அறிவாயாக.*

### கருத்துரை

*வேறு வேறாய் வகை செய்யப்பட்டுள்ள உயிர்களில், (பூதங்க ளில்) வேறுபடாத, அழியாத ஏக வஸ்துவை எதனால் பார்க்கிறாயோ அந்த ஞானத்தை சாத்விகமானதென்று அறிக.*

### விளக்கவுரை

*அஞ்ஞானிகளின் பார்வைக்கு இவ்வுலகம், அதிலுள்ள பொருள்கள், பலவகையான உயிரினங்கள் ஆகியவை வகை செய் யப்பட்டுப் பலவாறாகக் காட்சி அளிக்கின்றன. ஆயின் ஞானிகள் பார்வையில் அவையனைத்தும் ஒருமையாக்கப்பட்டதாகவும், அழி வில்லாத ஒரே ஆன்ம வஸ்துவாகவும் அதாவது பரபிரம்மமே அனைத்திலும் வியாபித்திருப்பதாகத் தோற்றமளிக்கிறது. எந்த ஞானத்தினால் அப்படிப்பட்ட ஒற்றுமை அவர்களுக்குத் தெரிகின் றதோ, அந்த ஞானம் சாத்வீக ஞானமெனப்படும்.*

*'ஸர்வபூதேஷு' என்று சொல்லப்படுவதால் பகவான் (ஆன்மா) எல்லா வகையான பிராணிகளிலும் வியாபித்திருப்பதாகத் தெரிவிக்கிறது. ஆதலால் எத்துனை கீழ்த்தரமானவனாகட்டும், தன் னில் இருக்கும் பரமனை அறிந்து கொண்டும், தனது உண்மை நிலையை அறிந்து கொண்டும் மேன்மையடைக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது. அலை சிறிதாயினும் அதற்கு ஆதாரமாகிய கடலுடன் ஒன் றுவதற்கும், அதன் வடிவத்தைப் பெறவும் அதற்கு உரிமை உள்ளது. ஆதலால் கீழான பிறவியாயினும் மனதில் அதைரியப்படவேண்டிய தில்லை. இதயத்தைத் தூய்மையாக்கிக் கொண்டு தன்னுடைய சுய உருவான ஆன்மாவை அறிந்தால் போதும். அவனது வாழ்க்கை மேன்மையுறும்.*

அலைகள் பல நிறைந்திருப்பினும் அவற்றின் பெயரையும் உருவையும் விட்டுவிட்டுத் தண்ணீரை மாத்திரம் காணும் விதமாக, பல மண் பாண்டங்கள் இருப்பினும் அவற்றில் உள்ள மண்ணை மட்டுமே நோக்குவது போல, பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையில் பூக்களைப் பாராது, அவை கோர்க்கப்பட்ட நூலைப் பார்ப்பது போலவும், உலகில் ஜீவராசிகளின் உடல், பெயர், வடிவம் ஆகியவற்றை விட்டு எல்லாவற்றிலும் ஊடுருவிப் பிரிக்கப்படாத ஒன்றேயாகிய ஆன்மாவைப் பார்ப்பவன் சாத்வீகமான ஞானமுடையவன் என்று கூறப்படுவான். அதாவது பன்மையில் ஒருமை, அழிவில் அழிவின்மை, பிரிக்கப்பட்ட பொருள்களில் பிரிக்கப்படாத தன்மையைப் பார்த்தல் என்பது சிறந்த ஞானம் என்பது பொருள். இதனின்றும் உலகில் பல்வேறாகப் பிரித்துப் பன்மையாகப் பார்த்தல் அஞ்ஞானமே என்பது தெரிய வருகிறது.

இச்சுலோகத்தில் ஆன்மாவின் மூன்று பண்புகள் சொல்லப்பட்டன:-
(1) ஒன்றேயானது (2) அழியாதது (3) பிரிக்க முடியாதது.

உலகில் பொருள்களுக்கும் ஆன்மாவிற்குமுள்ள வேறுபாடு கீழே காட்டப்படுகிறது.

| உலகியல் பொருள்கள் | ஆன்மா |
|---|---|
| 1) பன்மையானவை | 1) ஒன்றேயாகியது (ஏகம்) |
| 2) அழிக்கக்கூடியன | 2) அழிவில்லாதது (அவ்யயம்) |
| 3) பிரிக்கப்படுவன | 3) பிரிக்கப்படாதது (அவ்யக்தம்) |

'உலகியலில் பலவித ஞானங்கள் உண்டு. சங்கீத ஞானம், அரசியல் ஞானம், இலக்கிய ஞானம் முதலானவை. ஆயின் எந்த ஞானத்தினால் மனிதன் பன்மையில் ஒருமையை, மரணத்தில் அமுத நிலையை, பிரிவினையில் பிரிக்கவியலாத தன்மையைக் காண்கிறானோ' அந்த ஞானமே எல்லா ஞானங்களிலும் சிறந்தது. சாத்வீகமென்று கூறப்படுவது எனப் பகவான் தெரிவித்துள்ளார். அதுவே ஆன்மீகக் கல்வி. எனவே அறிஞர்கள் பகவத் வாக்கியங்களில் நம்பிக்கையுடையவர்களாய் மிகச் சிறந்த ஞானத்தைப் பெற்று தன்மையடைதல் வேண்டும். உலகில் எத்தனை மேதைகளாகக் கருதப்படினும், சகல வல்லவர்களாயினும் ஆன்ம ஞானம் இல்லையேல் கடவுளின் பார்வையில் உண்மையான ஞானம் அற்றவர்களாகவே கருதப்படுகிறார்கள். எனவே ஒவ்வொருவரும் இத்தகைய சாத்வீக

ஞானத்தைப் பெற்று, எல்லா ஆன்ம மயமாகக் கருதும் பார்வையு டையவராய் வாழ்க்கையில் ஈடேறுதல் வேண்டும். இல்லையேல் சம்சாரத்தில் கட்டுண்டு, பிறப்பு, இறப்பு, மரணம், வியாதி இவற் றில் உழல வேண்டியதுதான். இக்கருத்தையே உபநிஷத்துக்கள் இங் ஙனம் தெரிவிக்கின்றன.

'ம்ருத்யோஹோ ஸம் ம்ருத்யும் ஆப்னோதி ய இஹ நாநேவ பச்யதி'. எனவே உலகத்தில் எந்த உயிரைப் பார்த்தாலும், அவனை, பௌதீக, மானசீகப் பார்வையின்றி உள்ளுறையும் ஆன்மாவில் மட் டுமே பார்வையைச் செலுத்த வேண்டும். உடலை மட்டும் பார்ப்ப வர்கள் அதமர்கள். மானசீகப் பார்வையுடையவர்கள் இடைப்பட்ட வர். ஆன்மீகப் பார்வை, தெய்வப் பார்வையுடையவர்கள் உத்தமர் கள். இக்கருத்தே இச்சுலோகத்தில் தெரிவிக்கப்பட்டது. இத்தகைய ஆன்மீகப் பார்வையை, சாத்வீக ஞானத்தைப் பெறுவதற்கே அனை வரும் முயற்சிக்க வேண்டும்.

**வினா :** *சாத்வீக ஞானத்தின் இலட்சணம் யாது?*

**விடை :** *எந்த ஞானத்தினால் உலகில் வெவ்வேறாகவுள்ள எல்லா உயிர்களிலும் ஒன்றேயான அழிவில்லாத பிரிக்கப்படாததாகவுள்ள ஆன்மாவைக் காண்கிறானோ அந்த ஞானமே சாத்விகமான ஞானம்.*

**வினா :** *பகவான் எங்கிருக்கிறார்?*

**விடை :** *அசையும், அசையாப் பொருள்களனைத்திலும் இருக்கிறார்.*

**வினா :** *ஆன்மாவின் சுய வடிவம் யாது?*

**விடை :** *1) ஒன்றேயானது 2) அழிவற்றது 3) பிரிக்கவொண்ணாதது.*

**வினா :** *இவ்வுலகில் காணப்படும் பன்மை உண்மையா?*

**விடை :** *இல்லை. ஆன்மா ஒன்றே உண்மையானது (மணியின் இடையேயுள்ள நூலைப் போல)*

**முன்னுரை**

*ராஜஸ ஞானத்தைப் பற்றிக் கூறுகிறார்.*

*ப்ருதக்த்வேன து யஜ்ஞானம் நானாபாவான் ப்ருதக் விதான்!*
*வேத்தி ஸர்வேஷு பூதேஷு தஜ்ஞானம் வித்திராஜஸம்!! - (21)*

## சொற்பொருள்

*யத்ஞானம்-எந்த ஞானம், ஸர்வேஷு-எல்லாவிதமான, பூதேஷு-உயிர்களிலும், ப்ருதக்விதான்-வெவ்வேறாக இருக்கும். நாநா பாவான்-பல்வேறு உயிர்களை, ப்ருதக்த்வேன-தனித்தனியாக, வேத்தி-அறிகிறதோ, தத்ஞானம்-அந்த ஞானம், ராஜஸம்-ராஜஸமென்று, வித்தி-அறிவாயாக.*

## கருத்துரை

*எந்த ஞானத்தினால் மனிதன் எல்லா உயிர்களிலும் வெவ்வேறு விதமாக உள்ள அநேக உயிர்களை வெவ்வேறாகப் பார்க்கிறானோ, அத்தகைய ஞானத்தினை ராஜஸமென்று அறிவாயாக.*

## விளக்கம்

*உலகத்து உயிர்களை 'இவன் வேறு, இவை வேறு' எனப் பன்மையில் பார்த்தல் உத்தம ஞானமல்ல. அது ராஜஸமென்றும் தான் கருதப்படும். அத்தகைய ஞானமுடையோர் மற்றொருவரைக் காண்கையில் அவர்களது குணங்களைப் பார்ப்பாரேயன்றி ஆன்மாவையல்ல. இத்தகைய ராஜஸ ஞானத்தையுடையோரே உலகில் மிகப்பலராக இருக்கின்றனர். ஏனெனில் உயிர்களில் அவர்கள் வேற்றுமையையே காண்கின்றனர். எனவே அதனைத் தவிர்த்து அத்வைதமான எண்ணத்தையும் நடுநோக்கையும் கடைபிடித்தல் வேண்டும் (தலையணை மேலும் அதன் உரைமேலுமின்றி உள்ளிருக்கும் பஞ்சையே பார்ப்பதைப் போல்)*

வினா : *ராஜஸ ஞானத்தின் இலட்சணமென்ன?*

விடை : *உலகில் பன்மையைப் பார்த்தல், வேற்றுமையுணர்வு கொண்டிருத்தல்.*

## முன்னுரை

*இனித் தாமஸ ஞானத்தைப் பற்றிக் கூறுகிறார்.*

***யத்து க்ருத்ஸ்ன வதேகஸ்மின் கார்யே ஸக்த மஹைதுகம்!***
***அதத் வார்த்தவதல்பம் ச தத்தாமஸ முதாஹ்ருதம்!! - (22)***

## சொற்பொருள்

*யத்து-எந்த ஞானம், ஏகஸ்மின் கார்யே-ஒரே காரியத்தினை (உடலாகிய பொம்மைகளில்) க்ருதஸ்னவத்-முழுவதும் (எல்லாம் அதுதானென்று), ஸக்தம்-பற்றுவைத்து, அஹைதுகம்-யுக்திக்குப் பொருந்தாததாய், தக்க காரணமின்றி இருக்குமோ, அதத்வார்த்தவத்-தத்துவத்தை (உண்மைப் பொருளை உணராமல் இருக்குமோ) அல்பம் ச-அற்பமானதாக (மிகக் குறைவான பலன்கள் உடையதாக இருக்குமோ, தத்-அந்த ஞானம், தாமஸம்-தாமாஸ ஞானமென்று, உதாஹ்ருதம்-கூறப்பட்டது.*

## கருத்துரை

*எந்த ஞானத்தால் ஒரு காரியத்தையே (உடலாகிய பொம்மைகளையே) எல்லாமும் அதுவேதான் என்று பற்றிக் கொண்டு, தக்க காரணமின்றியும், உண்மைக்கு ஒவ்வாததாயும், அற்ப பலன் உடையதாக இருக்குமோ அந்த ஞானம் தாமஸமென்று உதாஹ்ருதம் கூறப் பட்டது.*

## கருத்துரை

*எந்த ஞானத்தால் ஒரு காரியத்தையே (உடலாகிய பொம்மைகளையே) எல்லாமும் அதுவேதான் என்று பற்றிக் கொண்டு, தக்க காரணமின்றியும், உண்மைக்கு ஒவ்வாததாயும், அற்ப பலன் உடையதாக இருக்குமோ அந்த ஞானம் தாமஸமென்று கருதப்படுகிறது.*

## விளக்கவுரை

*தாமஸ ஞானமுடையவன் ஏதோ ஒரு காட்சிப் பொருளைப் பற்றிக் கொண்டு அதில் மட்டுமே ஆழ்ந்தபற்று கொண்டு, அதுவே அனைத்துமாக எண்ணிக்கொண்டிருப்பான். அவன் மனிதனின் வெளிப்புறத் தோற்றமான பௌதீக உடலையே பார்த்து, அதுவே ஆன்மா, அதுவே அனைத்துமாகக் கருதுவான்.*

*ராஜஸ ஞானமுடையவன் உள்ளிருக்கும் மனோநிலையை, குணத்தை மட்டுமே பார்ப்பான். சாத்விக ஞானமுடையவன் உள்ளுறையும் பிரிவினையற்ற ஆன்மாவையே பார்ப்பான். சலனமுடைய பொருட்களான உடல், மனம் இரண்டும் மாற்றங்களுக்குட்படுபவை, நிலையில்லாதவை. எனவே அவற்றையே காண்பவன் நிலையாத் தன்மையே அறிவையே, பிறப்பு இறப்பு இவற்றையே*

அடைந்து கொண்டிருப்பான் என்றும் நிலைத்திருக்கும் அழிவற்ற ஆன்மாவைக் காண்பவன் நிலையான, சுழற்சிகள் ஏதுமற்ற ஆன்ம நிலையையே யடைவான். எனவே ராஜஸ, தாமஸ ஞானங்கள் இரண்டையும் விட்டு விட்டு சாத்விக ஞானத்தையே அறிஞர்கள் கடைபிடிக்க வேண்டும்.

**வினா :** *தாமஸ ஞானம் எத்தகையது?*

**விடை :** *(1) ஏதேனும் ஒரு காட்சிப் பொருளின் மேல் பற்று கொண்டு அதுவே அனைத்துமென்று கருதுவது (உடலையே ஆன்மாவாகக் கருதுதல்).*

*(2) அதற்குத்தக்க காரணத்தைக் காட்ட வியலாதது.*

*(3) தத்துவத்தை, உண்மைப் பொருளைத் தெரிந்து கொள்ளாதது.*

*(4) அற்பமான பலன் உடையது - தாமஸ ஞானமெனப்படும்.*

முன்னுரை

*இனி மூன்று விதமான கர்மாக்களில் முதலாவதாக சாத்விகக் கர்மாவைக் குறித்துச் சொல்கிறார்.*

*நியதம் ஸங்கரஹிதம ராகத்வேஷதஹ க்ருதம்!*
*அபலப் ரேப்ஸுனா கர்ம யத்தத் ஸாத்விகமுச்யதே!!* (23)

சொற்பொருள்

*நியதம் - சாஸ்திரங்களினால் நியமிக்கப்பட்டுள்ள, யத்கர்ம - எந்த கர்மாவானது, அபலப்ரேப்ஸுனா - பலனில் விருப்பம் இல்லா தவனா, ஸங்கரஹிதம் - பற்று இன்றி (தானே கர்த்தா என்ற எண்ண மின்றி), அராகத் வேஷத்தை - விருப்பு வெறுப்பின்றி, க்ருதம் - செய்யப்படுகிறதோ, தத் - அது, சாத்விதம் - சாத்விக கர்மமென்று, உச்யதே - உரைக்கப்படுகிறது.*

கருத்துரை

*சாஸ்திரங்களால் நியமிக்கப்பட்டதும், பலனைக் கருதாது பற்றின்றி, விருப்பு வெறுப்பற்று எக்கர்மம் செய்யப்படுகிறதோ அது சாத்விகம் எனக் கருதப்படுகிறது.*

**விளக்கம்**

*கர்மாவைக் குறித்து எங்குச் சொல்ல வேண்டி வந்தாலும் 'நிய தம்' நியதம்' என்று பகவான் பலமுறை மறுபடியும் மறுபடியும் கூறுகிறார். 'நியதம்' என்றால் வேத சாஸ்திரங்களால் நியமிக்கப்பட் டது என்பது பொருள். அவரவர்க்குத் தோன்றியதே சத்தியமென்று எண்ணாமல் மக்கள் சாஸ்திரப் பிரமாணங்களைப் பின்பற்றி அதனு டன் தனது சுய அனுபவத்தையும் உணர்ந்து நடைமுறையில் கொணர்தல் வேண்டும். அவரவர் இஷ்டப்பட்ட கர்மங்களைச் செய் யாது சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களையே செய்தல் வேண்டுமென ஆணையிடுவதற்குக் காரணமாயிற்று. 'நஹிகஸ்சித் க்ஷணமபிஜாது திஷ்த்ய கர்மக்ருத்' என்றவாறு உலகில் கர்மாவை, செய்யாது எவரும் இருக்க முடியாதாகையால், கர்மா என்பது தினசரி வாழ்க்கையில் எல்லோருக்கும் தேவையான கடமையானதால் அதன் இரகசியத்தை அனைவரும் நன்கு அறிந்திருத்தல் வேண்டு மென்பதற்காக சாத்வீக கர்மாவைக் குறித்து பகவான் தெரிவித்த இப்பகுதி அனைவருக்கும் மிகமிக முக்கியமானதாயிருக்கின்றது. கர்மா எவ்வாறிருக்க வேண்டுமெனில் -*

*(1) சாஸ்திரங்களில் நியமிக்கப்பட்டுள்ளவையாக இருத்தல் வேண்டும்.*

*(2) பற்றற்று இருத்தல் வேண்டும்.*

*(3) விருப்பு வெறுப்பற்றிருத்தல் வேண்டும்.*

*(4) பலனில் இச்சையில்லாமல் இருத்தல் வேண்டும்.*

*இந்நான்கு முறைகளுக்கும் உட்பட்டுச் செய்யப்படும் கர்மா மனத்தூய்மையை உண்டாக்கி, இதயத்தின் அழுக்குகளைப் போக்கி, குற்றங்களை அகற்றி, ஞானத்தையளித்து மோட்சத்தைக் கொடுப்பதாக இருக்கும்.*

*'ஸங்க ரஹிதம்', 'புத்திர் யஸ்ய நலிப்யதே' என இதற்கு முன் தெரிவிக்கப்பட்டதைப் போல் கர்மாவில் புத்தி ஒட்டாமல் இருப்ப தால் பற்றின்மை, அதாவது 'நானே செய்கிறேன்' என்ற மமதையோ, அகங்காரமோ இருத்தல் கூடாது. அத்தகையோன் கர்ம பாசத்தில் 'ந நிபத்யதே' கட்டுண்டு அவதியுறுவதில்லை என்பது கீதையின் கருத்து. எனவே ஒட்டாது, பலனில் இச்சையின்றி கர்மாக்களைச் செய்தலைப் பழகிக் கொள்ள வேண்டும்.*

'அராகத் வேஷதஹ' பொருள்களின் மீது விருப்பு வெறுப் பின்றி இருக்கும் போதே பற்றின்றி காரியங்களைச் செய்வதற்கு இயலும். பலன் மீதான இச்சையைத் துறப்பதற்கும் ஏதுவாகும். எனவே செய்யும் கர்மாவின் தூய்மைக்கு இந்த விருப்பு வெறுப்பற்ற தன்மை மிகவும் அவசியமாகும்,

**வினா :** ஸாத்விக கர்மா எத்தகையது?

**விடை :** (1) சாஸ்திரத்தால் விதிக்கப்பட்டது (2) பற்றின்றிச் செய்யப் படுவது (3) விருப்பு வெறுப்பின்றிச் செய்யப்படுவது (4) பலனில் இச்சையின்றிச் செய்யப்படுவது - சாத்விக கர்மா எனப்படும்.

### முன்னுரை

இனி அடுத்து ராஜஸகர்மாவைப் பற்றிச் சொல்கிறார்.

*யத்து காமேப்ஸுனா கர்ம ஸாஹங்காரேண வாபுனஹ!*
*க்ரியதே பஹுலாயாஸம் தத்ராஜஸமுதாஹ்ருதம்!! (24)*

### சொற்பொருள்

காமேப்ஸுனா - பலனில் இச்சை வசப்பட்டவனால், புனஹ் - மீண்டும், ஸாஹங்காரேண வா - (நானே கர்த்தா) என்ற அஹங்கார முடையவனால், பஹுலாயசம் அதிகப் பிரயாசையுடன் கூடிய, யத்கர்ம து - எந்த கர்மாவானது, க்ரியதே - செய்யப்படுகிறதோ, தத் - அது, ராஜஸம் - ராஜஸ்கர்மா என்று உதாகந்ருதம் - உரைக்கப்படுகிறது.

### கருத்துரை

ஆசையின் வயப்பட்டவனாய் அல்லது அகங்காரமுடையவனால், பெரும் பிரயாசையுடன் எந்த கர்மம் செய்யப்படுகிறதோ அது ராஜஸகர்மா என்று சொல்லப்படுகிறது.

### விளக்கம்

(1) பலனின் ஆசையுடையவனாய் (2) அகந்தையுடனும் செய் யப்படும் கர்மா ராஜஸகர்மா எனப்படும். 'ஆயாசம்' என்று சொல் லாமல், 'பஹுலாயசம்' மிகுந்த பிரயாசையுடன் கூடிய காரியங்க ளைச் செய்து கொண்டிருப்பான் என்பது தெரிகிறது. ஆயினும் அத்த கைய கர்மாக்களால் அவனுக்குப் பிரயாசைதான் மிஞ்சும். எனவே

பந்தங்களினின்றும் விலகுதல் கிடையாது. ஏனெனில் அவை அகந்தை, பலனில் இச்சை என்ற குற்றங்களுடன் இருப்பதால் பந்தத்தினை ஏற்படுத்தக் கூடியவை. எனவே அறிஞன் அத்தகைய இராஜஸ கர்மாக்களை ஒதுக்கி, சாத்விக கர்மாக்களையே செய்து கடைத்தேற வேண்டும்.

**வினா :** *ராஜஸகர்மா எத்தகையது?*

**விடை :** *(1) பலனில் விருப்பமும் (2) அகந்தையுடனும் கூடியதும் (3) அதிகப் பிரயாசையுடன் கூடியதுமாகும்.*

**முன்னுரை**

*இனி தாமஸ கர்மாவைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.*

*அனுபந்தம் க்ஷயம் ஹிம்ஸாமனபேக்ஷ்ய ச பௌருஷம்!*
*மோஹாதாரப்யதே கர்மயத்தத் தாமஸமுச்யதே!! (25)*

**சொற்பொருள்**

*அனுபந்தம் - தான் செய்யப்போகும் வினையின் விளைவையும், க்ஷயம் - (பணம் முதலியவற்றில்) நஷ்டத்தையும், ஹிம்சாம் - (தன்னுடைய, பிறருடைய உடல் முதலியவற்றிற்கு ஏற்படும்) துன்பங்களையும், பௌருஷம் - தனது ஆற்றலையும், அனபேக்ஷ்ய - கருதாமல், மோஹாத் - மோகத்தினால், யத்கர்ம - எந்த கர்மாவானது. ஆரப்யதே - ஆரம்பிக்கப்படுகிறதோ, தத் - அது, தாமஸம் - தாமஸ கர்மா என்று, உச்யதே - சொல்லப்படுகிறது.*

**கருத்துரை**

*வினையின் விளைவையும், நஷ்டத்தையும், துன்பத்தையும் தனது திறமையையும் எண்ணிப் பாராது, மயக்கத்தால் எக்கர்மம் தொடங்கப்படுகிறதோ அது தாமஸமெனப்படும்.*

**விளக்கம்**

*தாமஸ கர்மாவைச் செய்பவன் முன்னும் பின்னும் சிந்திக்காமல் கர்மாவைத் தொடங்குகிறான். அதனால் விளையப் போகும் வினைத் தொடர்பை, பிறருக்கு ஏற்படும் துன்பங்களையும் சிந்திக்க மாட்டான். தனது சக்தியையும், திறமையையும் கருத மாட்டான். விவேகமின்றிக் குருட்டுப் போக்கில் கர்மாவைச் செய்யத் தொடங்கு*

வான். அத்தகையோன் செய்யும் கர்மா மிகுந்த அபாயகரமானது ஆதலால் அது எப்போதும் விட்டுவிடத்தக்கதேயாம்.

மேலும் கடவுளை அடைய வேண்டும் என்று விரும்பாமல், சுயநலத்திற்காகச் செய்யும் கர்மாக்கள் அனைத்தும் ராஜஸ, தாமஸ, செயல்களுக்குட்பட்டவையே. ஏனெனில் அவற்றால் தனது ஆன்மாவிற்கு ஏற்படும் நஷ்டத்தை சம்சார பந்தத்தை அவன் சிந்திப்பதில்லை.

'மோஹாத்' என்பதால் இந்த ராஜஸ, தாமஸச் செயல்கள் அனைத்திற்கும் மூலகாரணம் விவேகமின்மையென்பது தெளிவாகிறது. எனவே முதலில் விவேகத்தைப் பெற்று இத்தகைய ராஜஸ தாமஸத் தொழில்களைக் குறைத்து வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும்.

**வினா :** தாமஸ கர்மா எத்தகையது?

**விடை :** வருங்காலத்தில் ஏற்படும் நஷ்டம் முதலியவற்றை (செல்வம்) உடல் துன்பம், தனது திறமை இவற்றைக் கருதாமல் விவேக மற்றுச் செய்யப்படும் கர்மா தாமஸ கர்மா எனப்படும்.

**வினா :** இத்தகைய தாமஸத் தன்மைக்குக் காரணம் என்ன?

**விடை :** விவேகமின்மை

### முன்னுரை

இனி மூவகை கர்த்தாக்களின் இயல்பைச் சொல்லத் தொடங்கி முதலாவதாக, சாத்வீக கர்த்தாவின் இயல்பைக் கூறுகிறார்.

*முக்த ஸங்கோ அன ஹம்வாதீ த்ருத்யுத்ஸாஹ ஸமன்விதஹ!*
*ஸித்ய ஸித்யோ நிர்விகாரஹ கர்தா ஸாத்விக உச்யதே!! - (26)*

### சொற்பொருள்

முக்த ஸங்கஹ - பற்று நீக்கியவன், அனம்ஹம்வாதீ - அஹங்கார மற்றவன், த்ருத்யுத் ஸாஷமன் விதஹ - உறுதியும் ஊக்கமும் உடையவன், ஸித்தயத் ஸித்யோன் - வெற்றி தோல்வியில், நிர்விகாஹ் - வேறுபடாதவன், கர்த்தா - இத்தகைய கர்த்தா, ஸாத்விசஹ - சாத்விகமானவனென்று, உச்யதே - உரைக்கப்படுகிறான்.

**கருத்து**

*பற்று நீங்கியவன். அகங்காரமற்றவன், உறுதியும் ஊக்கமுடையவன். வெற்றி தோல்வியில் வேறுபடாதவன் இத்தகைய கர்த்தா சாத்விகன் எனப்படுகிறான்.*

**விளக்கம்**

*அன்றாட வாழ்க்கையில் மனிதன் எப்போதும் ஏதோவொரு காரியத்தைச் செய்ய வேண்டி இருப்பதால் கர்த்தாவிற்கு இருக்க வேண்டிய இலட்சணங்களைத் தெரிந்து கொண்டால் நன்கு நடந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். இங்கு கர்த்தாவிற்கான நான்கு உத்தம இலட்சணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது ஒட்டாமல் இருத்தல். அதாவது காரியத்தைச் செய்தாலும் பலனின் விருப்பம் இன்றி, எதிலும் ஒட்டாது பற்று இல்லாதவனாக இருத்தல் வேண்டும். இரண்டாவது அகம்பாவம் இன்றி இருத்தல். அதாவது நான் கர்த்தா என்ற எண்ணம் இல்லாமல் இருத்தல் வேண்டும். மூன்றாவது, தைரியம், ஊக்கம் இவற்றுடன் இருத்தல், ஆன்மீகத் துறையில் கோழைத்தனத்திற்கோ, உற்சாகமின்மைக்கோ இடமில்லை. இத்தகையோர் ஆன்மீகத் துறையில் ஓர் அடி கூட முன்வைக்க முடியாது. தான் வெறும் நித்ய, சுத்த, முக்த, ஆன்ம சொரூபமே என்று நினைத்துக் கொண்டிருப்பின் எல்லையற்ற தைரியம், ஊக்கம் ஏற்பட்டுவிடும். உண்மையில் தான் அத்தகைய தூய ஆன்மாவேயாதலால் ஊக்கத்துடன் தைரியத்துடனும் சாதனைகளில் ஈடுபட வேண்டும். சாத்விக் கர்த்தாவின் நான்காவது இலட்சணம் காரியத்தில், பலன், பலனின்மை ஆகியவற்றில் மன விகாரமடையாது நடுவுநிலையில் இருத்தல். காரியம் தோல்வியடைந்தாலோ அல்லது கைகூடாமல் போனாலோ அக்காரியத்தின் வெற்றிக்காக மீண்டும் முயற்சிக்க வேண்டுமே தவிர எத்தகைய மனச்சலனத்துக்கும் இடம் கொடலாகாது. இருமைகளைக் கண்டு எம்மாத்திரமும் அஞ்சுதல் கூடாது. இவ்வுலகனைத்தும் பொய்மையானதே என்று எண்ணித்தான் சாட்சியாய் நிற்கும் ஆன்ம சொரூபமேயென்று நினைத்து இருமைகளில் சமமான புத்தியுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.*

**வினா :** *சாத்வீக கர்த்தாவின் இலட்சணங்கள் யாவை?*

**விடை :** *(1) ஒட்டாது பலனில் விருப்பமின்றி இருத்தல்.*
*(2) நானே கர்த்தா என்ற அகங்காரமின்றியிருத்தல்.*

(3) தைரியமும், ஊக்கமும் கொண்டிருத்தல்.
(4) காரியம் கைகூடினும், கூடாவிட்டாலும் எந்தவிதமான சலனத்தையும் அடையாதிருத்தல்.

### முன்னுரை

இனி ராஜஸ கர்த்தாவைப் பற்றிச் சொல்கிறார்.

*ராகீ கர்ம பலப்ரேப் ஸீர்லுப்தோ ஹிம்ஸாத் மகோ அசுசிஹ!*
*ஹர்ஷ சோகான் விதஹ கர்தா ராஜஸஹ பரிகீர்திஹ!! - (27)*

### சொற்பொருள்

ராகம்-ஆசையுள்ளவன், கர்ம பலப் ப்ரேஸுஹி-கர்மபலனை விரும்புபவன், லுப்தவி-லோபி, ஹிம்ஸாத்மநிஹ-துன்புறுத்தும் தன்மையன், அசுசி-சுத்தமில்லாத, ஹர்ஷசோச அன்விதஹ-மகிழ்வும், சோர்வும் கொள்பவன், கர்த்தா அத்தகைய கர்த்தாவான வன், ராஜஸஹ-ராஜஸ கர்த்தாவென்று, பரிகீர்த்திதஹ-சொல்லப்படுகிறான்.

### கருத்துரை

ஆசையுள்ளவனும்; கர்ம பலனை விரும்புபவனும், லோபியும், துன்புறுத்தும் தன்மையனும், சுத்தமில்லாதவனும், மகிழ்வும் சோர்வும் கொள்பவனும் ஆகிய கர்த்தா ராஜஸ கர்த்தாவென்று சொல்லப்டுகிறான்.

### விளக்கம்

மேற்கூறிய இலட்சணங்களையுடையவன் ராஜஸ கர்த்தாவென்று கூறப்படுவதால் உத்தமமானவன் அந்த இலட்சணங்களை விட்டு விட வேண்டுமென்பது தெளிவாகிறது. அதாவது பந்தங்களிலும், உலகியல் பொருட்களிலும் ஆசையில்லாமல் இருக்க வேண்டும். கர்ம பலனை விரும்புதல் கூடாது. எந்த உயிரையும் இம்சித்தல் தகாது. தூய்மையின்றி இருத்தல் கூடாது. காரியம் பலன் அடைந்தாலும் அடையாவிட்டாலும் இன்பதுன்பங்களை அறிய மனச்சலனமுறுதல் கூடாது. இருமைகளைப் பொறுப்பவனாக சமமான மனோநிலையுடையவனாய் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தத்தம் இதயத்தைப் பரிசோதித்துக் கொண்டு மேற்கூறிய இராஜஸ கர்த்தாவின் இலட்சணங்கள் இருப்பின் அவற்றை முயற்சியினால் விட்டொழித்து சாத்வீக கர்த்தாவாக மாறுதல் வேண்டும்.

**வினா :** *ராஜஸ கர்த்தா எத்தகையவன்?*

**விடை :** *(1) பந்தம் இவற்றில் ஆசையுள்ளவன்*
*(2) கர்ம பலனை எதிர்பார்ப்பவன்*
*(3) லோபி*
*(4) பிறரைத் துன்புறுத்தும் இயல்புடையவன்.*
*(5) தூய்மையற்றவன்.*
*(6) காரியம் கைகூடின் மகிழ்ச்சியும், கூடாவிடில் துன்பமும் அடைபவன்.*
*ராஜஸ கர்த்தா எனப்படுபவன்.*

**முன்னுரை**

*அடுத்து தாமஸ கர்த்தாவின் இலட்சகணங்களைக் கூறுகிறார்.*

*அயுக்தஹ ப்ராக்ருதஹ ஸ்தப்தஹ சடோநைஷ் க்ருதி கோஅலஸஹ!*
*விஷாதீ தீர்கஸூத்ரீ ச கர்தா தாமஸ உச்யதே!! - (28)*

**சொற்பொருள்**

*அயுக்தஹ-மனத்தை அடக்க இயலதாவனும், பராக்ருதஹ அறிவு வளராத விவேகமற்றவனும், ஸ்தப்ருதஹ-பணிவில்லாத முரடனும், சடஹ-வஞ்சகனும், நைஷ்க்ருதிகஹ-பிறரை ஏமாற்றிப் பழி வாங்கும் எண்ணமுடையவனும், அஸஸஹ-சோம்பேறி, ஷிஷாதீ-எப்போதும் துயருருபவனும், தீர்க்க ஸூத்ரீ ச-காலம் நீடிப் பவனும், (ஆன) கர்த்தா-அத்தகைய கர்த்தா, தாமஸஹ-தாமஸ கர்த்தா, உச்யதே-எனக் கூறப்படுகிறான்.*

**கருத்துரை**

*மனவடக்கம் இல்லாதவனும், அறிவு பெறாதவனும், பணி வின்றி முரட்டுத் தனம் உடையவனும், வஞ்சகனும், பழிவாங்கும் எண்ணத்துடன் பிறரது வாழ்க்கையைப் பாழாக்குபவனும், சோம் பேறித்தனம் உடையவனும், எப்போதும் துயருறுவோனும், காலம் நீடிப்பவனும் ஆகிய கர்த்தா தாமஸ கர்த்தா எனப்படுகிறான்.*

**விளக்கவுரை**

*'அயுக்தஹ'-மனம் புறத்தே ஈடுபாடு கொண்டிருப்பவனும், சலனமனத்துடனும் இருப்பவன், ஆன்மாவில் நிலைத்திராதவனும், ஒருமித்த மனமின்றி, மனவடக்கம் இல்லாதவனும் 'அயுக்தன்'*

எனப்படுபவன். ஆன்மாவுடன் யோகத்தில் நிலைத்திராதவன் அயுக்தன் (தகாதவன்). அவனது மனம் அடங்காமல் வெளியே திரிந்து கொண்டிருக்கும்.

'ப்ராக்ருதஹ'-இயற்கை குணங்கள் உடையவன் ப்ராக்ருதன்-பண்பாடில்லாதவன்-பாமரன் என்று பொருள், ஒவ்வொருவரும் தன்னிடத்தேயுள்ள பாமர குணங்களை வெளியேற்றிவிட்டு அதற்கு நேர்மாறாகத் தெய்வ இயல்புடையோனாக மாற வேண்டும்.

'நைஷ் க்ருதிகஹ'-பிறரது காரியங்களைப் பாழாக்குபவன், பிறரை ஏமாற்றுபவன். மக்கள் நான்கு வகைப்படுவர் (1) தனது சுகத்தைப் பாராமல் பிறருக்கு நன்மை செய்பவர் (2) தன்னையும் கவனித்துக் கொண்டு பிறருக்கும் நன்மை செய்பவன் (3) தன் சுந்திரத்திற்காகப் பிறருக்குத் தீங்கிழைப்பவன். (4) அநாவசியமாகப் பிறருக்கு தீங்கிழைப்பவன். முதலாமவன் உத்தமன், இரண்டாமவன் இடைப்பட்டவன், மூன்றாமவன் அதமன், நான்காமவன் அதமனிலும் அதமன். இந்த சுலோகத்தில் தெரிவிக்கப்பட்ட 'நைஷ்க்ருதிகர்கள்' இறுதி இரண்டு வகுப்புகளைச் சார்ந்தவர்கள்.

'அலஸஹ'-சோம்பித்திரிதல் - பகவான் சோம்பல் எனும் தாமஸ குணத்தைத் துரத்தியடித்து விடவேண்டுமெனவும், அவன் எந்தத் துறையிலும் விருத்தியடையமாட்டான், என்றும், ஆன்மீகத் துறையில் அவனுக்கு இடமே கிடையாது என்றும் போதிக்கிறார்.

'விஷாதீ'-தாமஸ கர்த்தா ஒவ்வொரு செயலிலும் ஏதோ பறிகொடுத்தவன் போல் இருப்பான். உண்மையில் முடிவற்ற ஆனந்தத்துடன் இருக்க வேண்டிய மனிதன், சோகத்துடன் இருத்தல் அஞ்ஞானத்தினாலேயேயாகும். எனவே தனது உண்மையான ஆனந்த வடிவையுணர்ந்து சோகத்தை விரட்டியடித்தல் வேண்டும்.

'தீர்க்க ஸூத்ரி' - மந்தமாக நடந்து கொள்பவன். ஆமை வேகத்தில் சிறிய வேலையை மணிக்கணக்கில் செய்து கொண்டு இல்லையேல் அறவே செய்யாமல் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருப்பவன். தாமஸ கர்த்தா 'ஆகட்டும் பிறகு பார்க்கலாம்' என்ற எண்ணத்துடன் கூடிய வகை இருப்பான். மஹாபாரத்தில் சாந்தி பர்வத்தில் பீஷ்மர் தர்மனுக்கு 'தீர்க்கதரிசி', 'ப்ராப்த காலஜ்ஞன்' - 'தீர்க்க சூத்ரி', என்ற மூன்று மீன்களைக் குறித்துப் போதித்த விஷயம் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கோரத்தக்கது. அம்மூன்று மீன்களில் 'தீர்க்கதரிசி' தொலைநோக்கு உடையது. 'ப்ராப்த காலக்ஞன்' - சற்று முயற்சி

குறையுடையது. 'தீர்க்க சூத்ரி' - எந்த முயற்சியுமில்லாத சோம்பேறி. (கதையில் அது மீனவனின் வலையில் அகப்பட்டு செத்துவிடும்). எனவே இத்தகைய 'தீர்க்க சூத்ரம்' சோம்பலை, பாமரத்தன்மையை, வீடுபேற்றை விரும்புவோர் ஒழித்துவிட வேண்டும். விலைமதிப்பற்ற இம்மானிடப் பிறவியையடைந்து இறைவனைச் சேரும் முயற்சியில் சோம்பியிருந்து காலம் கழித்தல் மிகவும் அபாயகரமானது என்பதை அறிதல் வேண்டும்.

**வினா :** தாமஸ கர்த்தா எத்தகையவன்?

**விடை :** (1)மனக்கட்டுப்பாடில்லாதவன் (2) அறிவற்றவன் (3) பணிவற்றவன், முரடன் (4) மோசம் செய்பவன், (5) பிறரின் காரியங்களைக் கெடுப்பவன் (6) சோம்பேறி (7) எப்போதும் துக்கித்திருப்பவன் (8) நீண்ட காலம் கடத்துபவன் - தாமஸ கர்த்தாயாவான்.

### முன்னுரை

புத்தி, தைர்யம் இவற்றின் சத்வம் முதலான மூன்று விதங்களை வெவ்வேறாகத் தெரிவிக்கின்றார்.

*புத்தேர் பேதம் த்ருதேஸ்சைவ குணதஸ்த்ரிவிதம் ச்ருணு!*
*ப்ரோச்யமான மசேஷண ப்ருதக்த்வேன தனஞ்ஜய!! - (29)*

### சொற்பொருள்

தனஞ்ஜய-அர்ஜுனனே! புத்தி-புத்தியின், த்ருதேஹ்ச ஏவா-தைரியத்தின், பேதம்-வேறுபாட்டினை, குணதஹ-குணங்களின் அடிப்படையில், த்ரிவிதம்-மூன்று விதங்களாக, ப்ருதக்த்வேன-வெவ்வேறாகவும்,அசேஷேன-முழுமையாகவும்,ப்ரோச்யமானம்-சொல்லப்படுவதை, ச்ருணு-கேள்.

### கருத்துரை

அர்ஜுனனே! புத்தியின், தைரியத்தின் பேதங்களை, குணங்களின் அடிப்படையில் மூன்று விதங்களாக வெவ்வேறாகவும், முழுமையாகவும் கூறப்படுவதை இப்போது நீ கேட்பாயாக.

### முன்னுரை

முதன் முதலில் சாத்விக புத்தியைக் குறித்துச் சொல்கிறார்.

*ப்ரவ்ருத்திம் ச நிவ்ருத்திம் ச கார்யா கார்யே பயாபயே!*
*பந்தம் மோக்ஷம் ச யாவேத்தி புத்திஹ் ஸா பார்த்த ஸார்விகீ!! - (30)*

## சொற்பொருள்

பார்த்த-அர்ஜுனா! யா புத்திஹ்-அந்த புத்தியானது, ப்ரவ்ருத்திம் ச-உலகியல் கர்மத்தில், நிவ்ருத்திம்ச-மோட்சத்திற்கு ஏதுவான சந்நியாச மார்க்கத்தில் கார்யா கார்யே-செய்யத் தக்கதை, பயா அபயே-அச்சம், 'அச்சமின்மையையும், பந்தம்-பந்தத்தையும் மோக்ஷம்ச-மோட்சத்தினையும், வேத்தி-அறிகிறதோ, ஸா-அந்த புத்தியானது, ஸாத்வீகீ-ஸாத்வீகமானதேயாகும்.

## கருத்துரை

அர்ஜுனனே! எந்த புத்திகர்மத்தில் ஈடுபாட்டினையும் (உலகியல் நெறியின் அதர்மத்தில் ஈடுபாடின்மையையும், செய்யத் தக்கவை, செய்யத்தகாதவை, பயத்தையும், பயமின்மையும், பந்தத்தையும் மோட்சத்தையும் அறிந்து கொள்கிறதோ அந்தபுத்தி சாத்வீக புத்தியாகும்.

## விளக்கவுரை

சாத்வீக புத்தி நன்மை தீமைகள் இரண்டையும் பகுத்தறிந்து நல்லதை எடுத்துக் கொண்டு தீயவற்றை விட்டு விடும். அவ்வாறே பந்தம் எது, மோட்சம் எது என இரண்டையும் தெரிந்து கொண்டு, பந்தத்தைத் துறந்து மோட்சத்திற்காக முயற்சிக்கும். அவ்வாறே அச்சம் நிறைந்த இந்த சம்சாரத்தின் மீது விரக்தி கொண்டு அச்சமற்ற நித்யானந்த பரமாத்மாவையே சரணடைந்து கடைத்தேறும். அத்தகைய சாத்வீக புத்தியே மிகவும் சிறந்தது. எனவே ஒவ்வொருவரும் அந்த சாத்வீக புத்தியையே கைக்கொண்டு, பகவானின் பார்வையில் 'புத்திமான்களாக' நடந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இத்தகைய சாத்வீக புத்தி இல்லையேல் உலகியல் அறிவு எத்துணை இருப்பினும் அவர்கள் அறிவில் குறையுடையோரே ஆவர்.

**வினா :** *சாத்வீக புத்தி எத்தகையது?*

**விடை :** *(1) பிரவிருத்தி, நிவிருத்தி*
*(2) தக்கன, தகாதன*
*(3) அச்சம், அச்சமின்மை*
*(4) பந்தம், மோக்ஷம் - இவற்றை நன்கு பகுத்துணரும் புத்தியே*

சாத்விக புத்தியெனப்படும்.

**முன்னுரை**

இனி ராஜஸ புத்தியைப் பற்றித் தெரிவிக்கிறார்.

*யயா தர்ம மதர்மம் சகார்யம் சாகார்ய மேவச!*
*அயதாவத் ப்ரஜானாதி புத்திஹி ஸாபார்த்தராஜஸி !! (31)*

**சொற்பொருள்**

பார்த்தா-அர்ஜுனா! யயா-எந்த புத்தியினால், தர்மம்-தர்மத்தை, அதர்மம் ச-அதர்மத்தையும், கார்யம் ச-செய்யத்தக்கதையும், அகார்யம் ஏவச-செய்யத்தகாததையும், அயதா வத்-உள்ளது உள்ளபடி அன்றி (வேறொருவிதமாக பிழையாக) ப்ர ஜானாதி-அறிகிறானோ, ஸாபுத்திஹி-அந்த புத்தி, ராஜஸ-ராஜஸமானதாகும். (ரஜோ குணத் தொடர்புடையது).

**கருத்துரை**

அர்ஜுனனே! எந்தப் புத்தியினால் மனிதன் தர்மத்தை-அதர்மத்தை, செய்யத்தக்கதை-செய்யத்தகாததை, உள்ளது உள்ளபடி அன்றி, (வேறோர் விதமாக, பிழையாக) அறிகிறானோ, அந்த புத்தி ராஜஸ புத்தியாகவே இருக்கிறது.

**விளக்கவுரை**

சிலர் தர்ம அதர்மங்களைச் செய்யத் தகுந்தவை, தகாதவை இவற்றைச் சாத்திரங்களில் போதிக்கப்பட்ட விதமாக அல்லாமல், பிழையாகவே கிரகித்துக் கொள்வான். அத்தகைய புத்தி ராஜஸமானது, அதனைப் பண்படுத்தி சாத்வீக புத்தியாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

**வினா :** ராஜஸ புத்திஎத்தகையது?

**விடை :** தர்மத்தையும், அதர்மத்தையும், செய்யத்தக்கது, தகாதது, உள்ளது, உள்ளபடியன்றிப் பிழையாக எண்ணிக் கொள்ளும் புத்தி ராஜஸ புத்தி.

**முன்னுரை**

இனி தாமஸ புத்தியைப் பற்றிக் கூறுகிறார்.

*அதர்மம் தர்மமிதி யா மந்யதே தமஸாவ்ருதா!*
*ஸர்வார்த்தான் விபரீதாம்ஸ்ச புத்திஹ் ஸாபார்த்த தாமஸி!! - (32)*

### சொற்பொருள்

பார்த்த-பார்த்தா, யா-எந்த புத்தி, தாமஸா-விவேகமின்மையால், ஆவ்ருதா-மூடப்பட்டு, அதர்மம்-அதர்மத்தை, தர்மம் இதி-தர்மம் என்று, சர்வார்த்தான்-எல்லாப் பொருட்களையும் விபரீதாம்ஸ்ச-நேர்மாறானவையாகக் கருதுகிறதோ, ஸர் புத்திஹ்-அந்த புத்தி, தாமஸி-தாமசமானது ஆகும்.

### கருத்துரை

ஏ அர்ஜுனா! எந்த புத்தி விவேகமில்லாமல் மூடப்பட்டதாய், அதர்மத்தை தர்மம் என்று கருதுகிறதோ, எல்லாப் பொருட்களையும் விபரீதமாக நினைக்கிறதோ அது தாமஸமானது.

### விளக்கம்

தாமஸ புத்தியுடையவனுக்கு அனைத்துமே தலைகீழாகத் தோன்றும். விகாரமான கண்ணாடியில் முகம் விகாரமாகத் தென்படுவது போல், நீரில் பிரதிபிம்பம் தலைகீழாக ஒளிர்வதைப் போல் தாமஸ புத்தி உடையவனுக்கு அனைத்தும் விபரீதமாகவே தோன்றும். 'ஸர்வார்த்தான்' என்று சொல்வதினால் ஏதோ ஒரு விஷயமே மட்டுமின்றி வாழ்க்கையில் ஒவ்வொரு விஷயத்தையும் அவன் நேர்மாறாகவே பொருள் கொள்வான் என்பது தெரிய வருகிறது. இவை அனைத்திற்கும் காரணமென்ன? புத்தி, அவித்தையினால் அறியாமையால், விவேகமின்மையால் மூடப்படுவதேயாகும். கள் குடித்தவனுக்கு உலகம் சுழல்வதைப் போலத் தோன்றும். அதைப் போல் மாயம், மோஹம் என்ற மதுவருந்தியதால் இவ்வுலகம் உண்மைக்குப் புறம்பாகவே தோன்றும். உதாரணமாக,

1) இல்லாத உடல் இருப்பது போல் தோன்றும் ஆத்மா (தெய்வம்) இல்லாதது போல் தோன்றும்.

2) துக்கங்கள் நிறைந்த விஷய போகங்கள் சுகமானவையாய்த் தோன்றும். பிரம்மானந்தம் அளிக்கவல்ல ஆன்மா அவர்களுக்குச் சுவைக்காது.

3) ரத்தம், சதை இவற்றுடன் கூடிய அழியக்கூடிய தேகத்தில் அவர்கள் விருப்பம் கொள்வர்.

4) ஸச்சிதானந்தம் பொருந்தி நிலையான பரமாத்மாவினிடத்தில் வெறுப்பே கொள்வர்.

இன்னும் சொல்லப்போனால், தர்மத்தையெல்லாம் அதர்மமாகவே காண்பார்கள், அதர்மத்தைத் தர்மமாகக் கருதுவார்கள். இவையனைத்திற்கும் காரணம் விவேகமின்மையே என்று சொல்லப்பட்டது. எனவே எந்தப் புத்தியில் அறியாமை குடியிருக்குமோ அத்தகைய புத்தியுடையவன் செல்வந்தனாயினும், உடல்பலம் உடையவனாயினும் கீழ்த்தரமானவனே. எனவே விவேகத்துடன் நடந்து கொண்டு அறியாமையை விரட்டி உள்ளதை உள்ளபடி அறியும் ஆற்றலைப் பெற வேண்டும்.

**வினா :** *தாமஸ புத்தி எத்தகையது?*

**விடை :** *விவேகமின்மையால் மூடப்பட்டு, தர்மத்தை அதர்மமாகவும், எல்லாப் பொருள்களையும் நேர்மாறாகக் கிரகிக்கும் புத்தி தாமஸ புத்தியாகும்.*

**முன்னுரை**

மூன்றுவிதமான தைரியத்தைக் குறிப்பிடத் தொடங்கி முதலில் சாத்வீக தைரியத்தை விவரிக்கிறார்.

*த்ருத்யா யயா தாரயதே மனஹ ப்ராணேந் த்ரியக்ரியாஹ!*
*யோகேனாவ்ய பிசாரிண்யா த்ருதிஹஸா பார்த்த ஸாத்வீகி!! - (33)*

**சொற்பொருள்**

பார்த்தா-ஏ அர்ஜுனா! அவ்ய அபி சாரிண்யா-சலனமற்ற, யயா த்ருத்யா-எத்தகைய தைரியத்துடன் கூடியவனாய், மனஹ, ப்ராணேந்திரிய க்ரியாஹ-மனம், பிராணன், இந்திரியங்களின் கிரியைகள், யோகேன-யோக சாதனையால் (மன ஒருமைப்பாட்டினால்) தாரயதே-விஷய ரூபாகங்களிலிருந்து) திருப்பி ஆன்ம வழியில் அல்லது சாஸ்திரங்கள் கூறும் வழியில் நிறுத்துகிறானோ, ஸாத்ருஷிஹ- அந்த தைரியமானது, ஸாத்வீகி-சாத்வீகமானது.

**கருத்துரை**

ஏ அர்ஜுனா! சலனமற்ற (விஷயங்களில் ஈடுபடாது) தைரியத்தோடு கூடியவனாய் மனம், பிராணன், புலன்கள் ஆகியவற்றின் செயல்களை யோக சாதகத்தால் ஆன்ம வழியில் நிறுத்துகிறானோ

*அத்தகைய உறுதி சாத்வீகமானது.*

**விளக்கவுரை**

*தைரியமுடையார் பலர் இருப்பின், சிலர் போரில் தைரியமாகப் போராடுவார்கள். சிலர் தைரியத்துடன் இரவில் பயங்கரமான காடுகளில் திரிவர். சிலர் தைரியத்துடன் மிக உயர்ந்த மலைச் சிகரங்களில் ஏறுவர். இவையனைத்தையும் விட மேன்மையான தைரியம் சாத்வீகமான தைரியம். அதாவது எந்த தைரியத்தினால் மனிதன் தன் மனம், இந்திரியம், பிராணன் இவற்றை உலகியல் இன்பங்களினின்றும், காட்சிப் பொருள்களின் மீதான ஆர்வத்தையும் அடக்குகிறானோ அதுவே உண்மையான தைரியம் என்று பகவான் இங்கே கூறுகிறார். ஆதலின் பிறவிப் பெரும் பயனுக்குக் காரணமான தைரியத்தை மனிதன் கட்டாயம் பெறுதல் வேண்டும்.*

*ஆனால் அந்த தைரியம் இன்றிருந்து நாளை மறையும்படி நிலையில்லாமல் இருக்கக் கூடாது. ஆதலின் 'அவ்யபிசாரிண்யா' (சலனமற்று) என்று கூறப்பட்டது. ஏனெனில் சில முமுட்சுக்கள் ஏதோவொரு ஆவேசத்தினால் தைரியம் கொண்டு தமது புலன்களை அடக்கி மீண்டும் சூழ்நிலை காரணமாக அந்த தைரியத்தைக் கைவிட்டு மீண்டும் உலகியல் வாழ்க்கையில் உழல்வதைக் காண்கிறோம். ஆதலின் நிலையான சலனமற்ற தைரியத்தைக் கொள்ளுதல் வேண்டும்.*

**வினா :** *சாத்வீக தைரியமென்றால் என்ன?*

**விடை :** *சலனமில்லாத தைரியத்துடன் புலன், இந்திரிய பிராணன்களைக் கட்டுப்படுத்தி யோகத்தில் நிலைக்க முடியுமோ அதுவே சாத்வீக தைரியம் எனப்படும்.*

**முன்னுரை**

*ராஜஸ தைரியத்தைப் பற்றிக் கூறுகிறார்.*

*யயாது தர்மகாமார்த்தான் த்ருத்யா தாரயதே அர்ஜுன!*
*ப்ரஸங்கேன பலாகாங்க்ஷீத்ருதிஃ ஸா பார்த்த ராஜஸீ!! - (34)*

**சொற்பொருள்**

*பர்த்தா-பார்த்த! துபயாத்ருத்யாது-எந்த தைரியத்தால், பலாகாங்க்ஷீ-பலனில் விருப்பம் உடையவனாய், தர்மகாமரத்தான்-*

அறத்தையும், இன்பத்தையும், பொருளையும், ப்ரஸங்கேன-மிக்க ஆர்வத்துடன், தூரயதே-காக்கின்றானோ, ஸாத்ருதிஹ்-அந்த தைரியம், ராஜஸீ-ராஜஸமானது.

**கருத்துரை**

ஏ அர்ஜுனா! எந்த தைரியத்தினால் மனிதன் பலனின் விருப்பம் கொண்டு அறம் பொருள் இன்பங்களை ஒருவன் காக்கின்றானோ அந்த உறுதியானது ராஜஸ தைரியம் எனப்படும்.

**விளக்கவுரை**

அறம், பொருள், இன்பம், வீடு என புருஷார்த்தங்கள் நான்கு. அவற்றுள் முதல் மூன்றே இங்குத் தெரிவிக்கப்பட்டது. நான்காவதாகிய வீடுபேறு குறிப்பிடப்படவில்லை. இதனால் ராஜஸ தைரியம் உடையோர் மோட்சத்தைக் குறித்து அவ்வளவாக எண்ணுவதில்லை என்பது புலனாகிறது. எனவே ஆன்மீக நோக்கில்இது சிறந்ததல்ல. புலன்களை அடக்குவது வாயிலாக மோட்சத்திற்கு முயற்சி செய்யும் தைரியமே சிறந்தது.

அறம், பொருள், இன்பம் இவற்றைத் தேடுவோரைக்காட்டிலும் வீடு பேற்றினைத் தேடுபவனே மேன்மையாவன். இதில் முதல் புருஷார்த்தமான அறம் - அதாவது தர்மம் சாதாரண தர்மமென்றே கொள்ள வேண்டும். சாலச் சிறந்த தர்மம் பரமாத்தமாவை அண்டியிருத்தல். தெய்வ நிஷ்டை, ஆத்ம ஞானம் இவையேயாகும். 'ஸங்கேன' எனாது 'ப்ரஸங்கனே' என்று கூறுவதால் அத்தகையோர் புருஷார்த்தங்களில் மிக்க ஆர்வத்தினைக் காட்டுபவர்கள் என்பது தெரிகிறது.

**வினா** : ராஜஸ தைரியம் எத்தகையது?

**விடை** : எந்த தைரியத்தால் மனிதன் பலனில் இச்சை உடையவனாய் அறம், பொருள், இன்பங்களில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபடுவானோ அது ராஜஸ தைரியம் எனப்படும்.

**முன்னுரை**

இனி தாமஸ தைரியத்தைக் குறிப்பிடுகிறார்.

*யயா ஸ்வப்னம் பயம் சோகம் விஷாதம் மதமேவச!*
*ந விமுஞ்சதி துர்மேதா த்ருதிஹ் ஸா பார்த்த தாமஸி!! - (35)*

## சொற்பொருள்

பார்த்தா! யயா எந்தப் புத்தியினால், துர்மேதாஹ்-தீய புத்தியு டையவன், ஸ்வப்னம்-தூக்கத்தை, பயம்-பயத்தை, சோகம்-துக்கத்தை, விஷாதம்-வருத்தத்தை, மதம் ஏவச-ஆணவத்தை, ந விமுஞ்சதி-விட்டுவிடாது இருப்பானோ, ஸா த்ருதிஹ்-அந்த தைரியம், தாமஸா-தாமஸமானது.

## கருத்துரை

ஏ அர்ஜுனனே! எந்த தைரியத்தில் தீய புத்தியுடைய மனிதன் தூக்கத்தை, பயத்தை, வருத்தத்தை, ஆணவத்தை விட்டுவிடாமல் இருப்பானோ அத்தகைய தைரியம் தாமஸமானது.

## விளக்கம்

தைரியம் மிகச் சிறந்த நற்குணம். ஆயினும் அது தீய விஷயங்களில் பயன்படுத்தப்படும்போது வீணாகி விடும். தமோகுணமுடையவன் தைரியத்துடன் தனது அதிகமான தூக்கத்தை, பயத்தை, துக்கத்தை ஆணவத்தை விட்டுவிடாமல் இருப்பான். தைரியம் என்ற நற்குணமான உறக்கம் முதலானவற்றில் வீணே செலுத்தப்பட்டது. தைரியம் நல்லொழுக்கத்தைப் பெறுவதற்கு, மோட்சத்தை அடைவதற்கு, இறையருளைப் பெறுவதற்குப் பயன்படுத்துதல் உத்தமனின் கடமையாகும். வால்மீகி முனிவர் எல்லையில்லா தைரியத்தையும், இடைவிடா முயற்சியையும், தீய வழிகளில், வன்முறைச் செயல்களில் பயன்படுத்தித் தோல்வியடைந்தார். ஆயினும் மகான்களின் தொடர்பால் மீண்டும் அந்த தைரியத்தினையே, ராமநாம ஜபத்திலும் தெய்வத்தியானத்திலும் மேற்கொண்டு வால்மீகி முனிவரானார்.

'துக்மேதா' என்று கூறுவதால் அவனது அறிவு இருப்பினும் நேர்வழியில் செல்லாத குறுக்கு புத்தி என்பது பொருள்.

'ஸ்வப்னம்' - நித்திரை - என்றால் 'அத்நித்ரா-அதிக தூக்கமென்று கருத வேண்டும். ஏனெனில் மிதமான தூக்கம் அனைவருக்கும் அவசியமேயாகும்.

**வினா :** தாமஸ தைரியம் எத்தகையது?

**விடை :** எந்த தைரியத்தினால் தீய புத்தி, தூக்கம், பயம், துக்கம், சோகம், ஆணவம் இவற்றை விட்டு விடாமல் இருக்கிறானோ அந்த தைரியம் தாமஸ தைரியமாகும். இனி மூன்று விதமான சுகங்களைப் பற்றிக் கூறுகிறார்.

*சுகம் த்விதானீம் த்ரிவிதம் ச்ருணுமே பரதர்ஷப!*
*அப்யாஸாத்ரமதே யத்ர துக்காந்தம் ச நிகச்சதி!! - (36)*

### சொற்பொருள்

*பரத தர்ஷப-பரதகுலத்தில் சிறந்தோனே! யத்ர-எதில், அப்யாசாத்-பயிற்சியால், ரமதே-அளவில்லா ஆனந்தமும், துக்காந்தம் ச-துக்கத்தின் முடிவைக் கூட, நிகச்சதி-அடைவானோ, தத்-அந்த, சுகம்து-சுகம், இதானீம்-இப்போது, த்ரிவிதம்-மூன்றுவிதமாக, மே-என்னுடைய, வசனாத்-வாக்கியங்களை, ச்ருணு-கேட்பாயாக.*

### கருத்துரை

*பரத குலத்தில் சிறந்தோனே! ஏ அர்ஜுனா! எத்தகைய பயிற்சியினால் மனிதன் அளவில்லா ஆனந்தத்தையும், துக்கத்தின் முடிவையும் அடைகிறானோ அத்தகைய சுகம் மூன்றுவிதமாகப் பகுக்கப்பட்டுள்ளது. அதனை இப்போது என்னிடம் கேட்பாயாக!*

### விளக்கவுரை

*'அப்யாஸாத்'-சாத்வீக சுகம், தெய்வ சுகம், பிரம்மானந்தம் முதலியவை. ஜீவனுக்குப் பயிற்சியினால் கிடைக்குமென பகவான் குறிப்பிடுகிறார். ஆன்மீக அறிவு, வெறும் பேச்சினாலேயோ சொற்கள் மூலமாக அறியும் ஞானத்தினால் கிட்டுவது அல்ல. அது அனுபவ வித்தை(Practical) அதன் ஒவ்வொரு சிந்தாந்தமும் அனுபவத்தில் உணர வேண்டும். அப்போதே ஜீவன் நேரிடையான சுகம் பெறுவான். பலரும் எனக்கு நேரிடையான தெய்வ வுணர்வு எப்போது கிட்டும், துக்கம் எவ்வாறு அகலும், சுகம் பெறுவது எங்ஙனம் எனக் கேட்பர். பகவான் அதற்குப் பயிற்சி செய்தால் கிடைக்கும் என இங்குப் பதிலுரைக்கிறார். முயற்சி செய்யாமல் சாதிக்காமல் கரையில் அமர்ந்து வீண்பேச்சு பேசிக் கொண்டிருந்தால் பரம்பொருள் அனுபவம் எப்போதும் கிடைக்காது. தயிரைக் கடைந்தால்தான் வெண்ணை வரும். எள்ளைப் பிழிந்தால் எண்ணை கிட்டும். கரும்பை மென்று தின்றால் அதன் இனிப்பை உணர முடியும். அவ்வாறே பயிற்சியினால் மட்டும் துக்கத்திற்கு முடிவும், சுகத்தின் தோற்றமும் ஜீவனுக்கு ஏற்படும்.*

இவ்வுலகில் ஒவ்வொரு ஜீவனும் துக்கம் அகல வேண்டு

மென்றுதான் விரும்புகிறான். வாழ்க்கையின் மிக முக்கியமான கடினமான பிரச்சனை இந்தத் துக்கம் முடிவையடைவதேயாகும். இதுவே அனைவரையும் பாதிக்கிறது. எறும்பு, கொசு முதல் நான் முகப் பிரம்மன் வரை இந்தத் துக்கத்தின் முடிவிற்காகவே ஏங்குகி றார்கள். சம்சார துக்கம் எப்போது அகலும்? துக்கம் இல்லாத இடம் எங்கே? உலகத்தில் எங்குத் தேடினும் அத்தகைய இடம் கிடைப்பதில்லையே? நிலையான சுகத்தை அளிக்கவல்லது இக் காட்சிப் பொருள்கள் நிறைந்த உலகில் இருக்கிறதா? இல்லை.

துக்கத்தின் முடிவு ஆன்மாவில் மட்டுமே. தெய்வத்திடம் மட்டுமே இருக்கிறது. ஆன்ம சுகத்தில்தான் சாத்வீகமான ஆனந் தத்தில்தான், துக்கத்தின் முடிவை ஜீவனால் அடைய முடியு மென்று இந்த சுலோகத்தில் கூறப்பட்டது. துக்க நிவாரணத்திற் கான உபாயம் ஸாத்வீக சுகத்தை ஈட்டுதலே யாகும். ஆத்மானந் தத்தை அடைதலேயாகும். எனவே அதனையே தேட வேண்டும். பயிற்சியினால், நான்குவிதமான சாதனைகளினால் அஹங்கார மின்மை முதலிய குணங்களால் அதனைப் பெற முடியும். 'நிகச்ச தி' என்பதனால் முயற்சியினால் துக்கமில்லா நிலையை ஜீவன் அடைய முடியும் என்பது தெரிகிறது.

வினா : சுகம் எத்தனை வகைப்படும்?

விடை : மூன்று வகைப்படும் (1) சாத்வீக சுகம் (2) ராஜஸ சுகம் (3) தாமஸ சுகம்

வினா : துக்கமின்மை எங்ஙனம் ஏற்படும்?

விடை : பயிற்சியினால் உத்தம சாத்வீக சுகத்தைப் பெறுவதால் துக்கம் முற்றிலுமாக அகன்று விடுகிறது.

## முன்னுரை

சாத்வீக சுகத்தின் இலட்சணங்களைக் கூறுகிறார்.

*யத்த தக்ரே விஷமிவ பரிணாமே அம்ருதோபமம்!*
*தத்ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தமாத்ம புத்திப் ப்ரஸாதஜம்!! - (37)*

## சொற்பொருள்

யத்தத்-எந்த ஒன்று, அக்ரே-துவக்கத்தில், விஷமிவ-விஷயத்தைப் போல், பரிணமே-முடிவில், அம்ருதோபமம்-

அமிர்தத்தைப் போன்றிருக்குமோ, ஆத்ம புத்தி ப்ரஸாதஜம்-தனது புத்தியின் தூய்மையால் ஏற்படும், தத்சுகம்-அந்த சுகம், சாத்வீகம்-சாத்வீகம் என்று, ப்ரோக்தம்-கூறப்படுகிறது.

**கருத்துரை**

எந்த சுகம் முதலில் விஷம் போலவும் முடிவில் அமிர்தத்துக்கும் ஒப்பானதுமாகிறதோ அது சாத்வீக சுகமாகும். ஆத்ம நிஷ்டையில் தூய்மையான தெளிவடைந்து புத்தியில் அது தோன்றுகிறது.

**விளக்கவுரை**

ஆன்மீகத் துறையில் முதலில் பயிற்சிக் காலத்தில் பிரம்ம நிஷ்டை, தியானம், வைராக்கியம் முதலியவை ஓரளவிற்குக் கடினமாகத் தோன்றலாம். எனினும் பயிற்சி நிறைவடையும் காலத்தில் அமுதத்திற்கு ஈடான ஆன்ம நிலையில் எத்துணைத் துன்பங்கள் ஏற்படினும், வெறுப்பு ஏற்பட்டாலும் தைரியத்தை இழக்காமல் அது உண்மையில் கஷ்டமல்ல என்றும் இறுதியில் எல்லையில்லாப் பேரானந்தத்தை அளிக்கவல்லது என்றும் கருதியிருந்து பயிற்சியை விடாது செய்தல் வேண்டும். 'விஷமிவ' என்று சொன்னார்களேயன்றி 'விஷம்' என்று சொல்லவில்லை. அதாவது துவக்கத்தில் விஷம் போல கடினமானது என்பதே பொருள். இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள 'இவ' என்ற சொல்லில் கஷ்டம் போலத் தோன்றுமே தவிர உண்மையில் கஷ்டமில்லை என்பது தெரிகிறது. அந்தத் தற்காலிகமான கஷ்டத்திற்கான காரணம் முற்பிறவியினின்றும் தொடர்ந்து வரும் வாசனைகளுக்கும், இப்போதைய பிறவியின் புண்ணிய வாசனைகளுக்கும் இடையில் ஏற்படும் மோதலேயோகும். புண்ணிய வாசனைகள் வலுத்துப் பாவ வாசனைகளை அகற்றிவிடும் போது அவை விலகிச் செல்லச் செல்ல ஜீவனைத் துன்புறுத்திச் செல்லும் (கிள்ளிவிடும்) அந்த வலியே 'விஷமிவ' என்பதன் பொருள். அதுவே ஜீவனின் துவக்க நிலையில் உள்ள துன்பம். உண்மையில் அது துன்பமல்ல. இணையற்ற சுகத்திற்கான துவக்கமேயாகும்.

வேப்ப இலையை அரைத்து நோய் தீர மருந்தாகத் தருவதுண்டு. அது கசப்பாய் இருப்பினும் ஆரோக்கியத்தைத் தரும். மருந்து உண்பதற்கு விருப்பமில்லாவிடினும், ஆரோக்கியத்திற்காக வலுக்கட்டாயமாகத் தின்றுதான் தீர வேண்டும். ஒரு கல்லானது கடவுள் விக்ரமாக உருவெடுப்பதற்கு முன் உளியினால் பல அடிகள் படுவதைப்

போல்; பொன் அணிகலன்களாய் மாறுவதற்கு முன் தட்டானின் சுத்தியால் அடிகளைத் தாங்குவது போல், முடிவில்லா பிரம்மானந் தத்தை அனுபவிப்பதற்கு முன் ஜீவன் ஓரளவு தியாகம் செய்ய வேண் டியிருக்கிறது. அவ்வாறான அற்பமான சுகத்தை விட்டுக் கொடுக் கும் போது ஓரளவு துக்கம் ஏற்படலாம். பல பிறவிகளாக அந்த விஷய சுகங்களை உறவினர்களாகத் தத்தம் இதய வீட்டில் வைத்து ஜீவர்கள் உபசரித்து வந்திருக்கிறார்கள். எனவே உறவினர்கள் பிரி யும் போது தற்காலிகமாக வேதனை தோன்றத்தான் செய்யும். அம் மாத்திரத்திலேயே சாதகன் பயம் கொள்ளலாகாது. கொஞ்சம் பொறு மையைக் கடைபிடித்துச் சாதனையை விடாமல் செய்து வந்தால் கஷ்டம் விலகி நன்மை ஏற்படும்.

ஒரு மாணவன் கல்வி பயிலும் காலத்தில் அல்லும் பகலும் உழைத்துப் படிக்கிறான். உத்தியோகம் கிடைத்தவுடன் சுகமாக இருப்பான். அவ்வாறே ஆன்மீகத் துறையில் புலன்கள் முதலியவற் றையடக்கும் போது உட்பூசல் விளைவாகக் கொஞ்சம் துன்பம் ஏற்ப டினும் அதனைப் பொறுத்துக் கொண்டு முன்னேறிச் செல்ல வேண் டும். இங்குப் பகவான் சாத்வீக சுகத்தின் உண்மை நிலையைத் தெரி விக்கிறார். விஷவடிவிலான துக்கத்தில் அமுத வடிவான சுகங்களின் விதைகள் இருக்கின்றன என்று அருளிச் செய்துள்ளார். அதனை எப்ப டியேனும் விழுங்கிவிட்டால் அவற்றிலிருந்து அமுத வடிவிலான விதைகள் முளைக்கத் தொடங்கும். விஷத்தைப் போல உள்ளது என வீசி எறிந்து விட்டால் அமுத விதையையும் மக்கள் இழந்தவர்களா வார்கள். எனவே சாதகன் இவ்விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்து, விலைமதிப்பற்ற இவ் உபதேசத்தினை நினைவில் நிறுத்தி தியாக சீலர்கள் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு சாதனைகளை விடாமல் செய்து வரவேண்டும். 'கஸ்சித் தீரஹ' தைரியசாலி எல் லாக் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளும் தைரியசாலியால் ஆன் மாவைப் பார்க்க முடியும் என்று உபநிடதங்கள் கூறுகின்றன. ஸ்ரீ புத்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர் முதலியோரின் சாதனைக் கால வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்தால் இந்த உண்மை புலனாகும். 'அம்ருதோபமம்' - அமிர்த்ததைப் போன்று எனச் சொல்லப்படுவது மிகவும் பொறுத்தமானதாகவே அமைந்திருக்கிறது. ஏனெனில் ஆத்ம சுகமான தெய்வ சுகம் தேவர்களின் அமுதத்தைப் போன்றதே யொழிய அதனைக் காட்டிலும் எத்தனையோ கோடி மடங்கு அதிக மான ஆற்றல் வாய்ந்தது. தேவர்களிடத்தில் உள்ள ஸ்தூல சரீரத்திற்கு சிறிது காலம் மரணம் ஏற்படாது தடுக்கலாம். ஆனால் ஆன்ம சுக மான அமிர்தம் நிலையான பிறப்பு, இறப்பு என்ற வெள்ளத்திலி

ருந்து ஜீவனைக் காப்பாற்றும்.

'ஆத்மபுத்தி ப்ரஸாதஜம்' - அந்த சாத்விக ஸுகமானது எவ்வாறு கிடைக்கும். புத்தி தூய்மையாக இருந்தால் விஷயங்களாகிய குற்றங்கள் எவையுமின்றி இருந்தால், தூய கண்ணாடியில் பிரதிபிம்பம் போல் ஆன்மசுகம் அதில் புலப்படும். அனுபவத்திற்கு வரும் எனவே சுகத்தை விரும்புவோர் முதன் முதலில் தமது புத்தியைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். மோட்சம் எங்குள்ளது. தெய்வ சுகம் எங்குள்ளது? என வினவுவோர்க்கு பகவான் தக்க பதிலளித்துள்ளார். மோட்ச சுகம் ஆகாயத்தில் இல்லை. பாதாளத்திலும் இல்லை. அப்பழுக்கற்ற புத்தியுடன் இருத்தலில்தான் உள்ளது. இப்பொருளையே வஸிஷ்ட மகரிஷி இராமசந்திரனுக்கு இங்ஙனம் உபதேசித்துள்ளார்.

*நமோக்ஷோ நவசஹே ப்ருஷ்டே பாதாளே நச பூதலே!*
*மோக்ஷோ ஹீ சேதோ விமலம் சமயக்ஞான விபோதிதம்!! (வஸிஷ்ட கீதை)*

**வினா :** சாத்விக சுகத்தின் இலட்சணம் யாது?

**விடை :** துவக்க காலத்தில், (பயிற்சி காலத்தில்) விஷத்தைப் போல் கடினமாகத் தோன்றி இறுதியில் அமிர்தத்தைப் போல் சுகமளிக்கவல்லது சாத்வீக சுகம்.

**வினா :** சாத்விக சுகம் ஜீவனுக்கு எவ்வாறு கிடைக்கும்?

**விடை :** நிர்மலமான புத்தியிலிருந்து கிடைக்கும். எனவே சுகத்தை விரும்புவோர் புத்தியைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**வினா :** எனவே ஜீவனுடைய கடமை யாது?

**விடை :** ஆன்மீகப் பயிற்சியில் ஈடுபடும் போதும் இடையில் ஏற்படும் ...பங்களுக்கு அஞ்சாமல் இறைவனின் மீது முழு நம்பிக்கை வைத்து, ...ச்சலுடன், புத்தியை விஷய தோஷங்கள் இன்றித் தூய்மையாக வைத்... ஆற்றுதல் வேண்டும். அப்போது மகத்தான ஆன்ம சுகம் அனுபவத்...ம். அதுவே மோட்சம்.

இனி ராஜஸ சுகத்தை விவரிக்கிறார்.

*...ந்த்ரிய ஸம்யோகத்யத்த தக்ரே அம்ருதோபமம்!*
*...மே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம்!! - (38)*

## சொற்பொருள்

*யத்தத்-எந்த சுகமானது, விஷ்யேந்திரிய ஸம்யோகாத்-விஷயங்களும், புலன்களும் ஒருங்கிணைவதால் (அவற்றின் தொடர்பால்), அக்ரே-முதலில், அமிர்தோபமம்-அமிர்த்தத்தைப் போன்றிருப்பது, பரிணாமே-இறுதியில், விஷமிவ-விஷத்தைப் போல் (ஆகிறதோ) தத்ஸுகம்-அந்த சுகமானது, ராஜஸம்-ராஜஸமென்று, ஸ்ம்ருதம்-சொல்லப்படுகிறது.*

## கருத்துரை

*எந்த சுகம் பொறி புலன்களின் தொடர்பால் முதலில் அமிர்தம் போலிருந்து, இறுதியில் விஷத்தைப் போல மாறுகிறதோ அத்த கைய சுகம் ராஜஸ சுகமெனப்படுகிறது.*

## விளக்கம்

*விஷய சுகம் தற்காலிகமானது. நொடிப் பொழுதேயிருப்பது. இந்திரியங்களும் விஷயங்களும் கூடும்போதே அந்த சுகம் தோன் றும். பிறகு உடனே மறைந்து விடும். துவக்கத்தில் அமுதம் போல் முடிவில் துக்கமே உருவாகப் பரிணமிக்கும் விஷத்தைப் போல என இங்குத் தெரிவிக்கப்பட்டது. ராஜஸசுகம் ஜீவன்களுக்கும் முதலில் அமுதம் போலத் தோன்றினாலும் மேலே பாலும், கீழே விஷமும் உடைய குடத்திலிருக்கும் விஷமே என்றும் தெரிகிறது. நச்சினைப் போன்ற அந்த அமுதம் மிகவும் அபாயகரமானது. அமுதத்தினுள் நச்சு விதைகள் குடியிருக்கும். எனவே அத்தகைய அமுதத்தை ஒதுக் கித் தள்ளாவிட்டால் அதில் மறைந்திருக்கும் நச்சு விதைகளைக் கூட ஏற்க வேண்டி வரும். எனமே முமுட்சுக்கள் விஷயசுகங்கள் தமக்கு ஏதாவது நேரிட்டால் அது துக்கத்தால் சூழப்பட்டதென்றும், இரை யோடு உள்ள மீனின் தூண்டில் போன்றதென்றும் அறிந்து அதனை விட்டு விலகுதல் வேண்டும் அந்த சுகமானது இவ்வுலக வாழ்வை மட்டுமின்றி மேலுலக வாழ்வையும் அழித்து விடும்.*

*எனவே பகவான் ஜீவர்களின் மீது கருணைபூண்டு அச்சுகங்க ளின் பலவித வண்ணத்தையும் வெளிப்படுத்தி நமக்கு எச்சரிக்கை விடுக்கின்றார். அதனை நம்பி மோசம் போய் விடாதீர்கள் என நமக்கு ஆலோசனை கூறுகிறார். அஞ்ஞானியர் இந்தச் சத்தியத் தினை உணராமல் மூடியிருக்கும் கிணறுகளைப் போல் காணப்ப டும். விஷய சுகங்களையே வேண்டி மிகவும் ஆழமான சம்சாரக் கிணற்றில் தள்ளப்படுகிறார்கள்.*

பகவானின் இவ்வாக்கு ஜீவன்களுக்குக் காரிருளில் தோன்றும் வெளிச்சத்தைப் போன்றவை. மேற்போக்கான மாயத் தோற்றத்தில் மயங்கிவிடாமல் முமுட்சுக்கள் விஷய சுகத்தால் ஏற்படும் தீமையை இனம் கண்டு இந்திரியங்கள், மனம் இவற்றை விஷயங்களோடு தொடர்பு ஏற்படா வண்ணம் காக்க வேண்டும்.

ஒருகால் முற்பிறவியின் தாக்கத்தால் இந்திரியங்கள் விஷயங்களின் மேல் பாய்ந்தாலும், அவற்றை விவேகத்தின் துணை கொண்டு பின்னுக்குத் தள்ளி, நிலைப்படுத்தி ஆன்மாவில் நிலைக்கச் செய்தல் வேண்டும்.

**வினா :** ராஜஸ சுகத்தின் இலட்சணம் யாது?

**விடை :** முதலில் அமுதத்தைப் போல் இனித்து இறுதியில் விஷத்தைப் போல் துக்கத்தினைத் தருவதே ராஜஸசுகத்தின் இலட்சணம்.

**முன்னுரை**

இனித் தாமஸ சுகத்தினைப் பற்றி விவரிக்கிறார்.

*யதக்ரே சானுபந்தே ச சுகம் மோஹனமாத்மனஹ!*
*நித்ரா லஸ்ய ப்ரமாதோத்தம் தத்தாமஸ முதாஹ்ருதம்!! - (39)*

**சொற்பொருள்**

நித்ராலஸ்ய, ப்ரமாத, உத்தம்-நித்திரை, சோம்பல், மயக்கம், இவற்றினின்று பிறக்கும், யத்சுகம்-எந்த சுகம், அக்ரேச-துவக்கத்தில், அனுபந்தேகி-இறுதியிலும், ஆத்மனஹ-தனக்கு, மோஹனம்-மோஹத்தை, மயக்கத்தைத் தரவல்லதோ, தத்-அது, தாமஸம்-தாமஸ சுகமென்று, உதாஹ்ருதம்-கூறப்படுகிறது.

**கருத்துரை**

தூக்கம், சோம்பல், மயக்கம் இவற்றினின்றும் பிறந்ததாய், துவக்கத்திலும் இறுதியிலும், மோகத்தை, மயக்கத்தைத் தரவல்லதோ அந்த சுகம் தாமஸ சுகமென்று கூறப்படுகிறது.

**விளக்கவுரை**

அதிக தூக்கம், சோம்பல், மயக்கம் இவற்றால் ஏற்படுவதுதான் தாமஸ சுகம். இது துவக்கத்திலும் இறுதியிலும் மயக்கத்தை, அறியாமையைத் தூண்டுவதேயாதலால் மிகவும் கீழ்த்தரமானது. விலைம

திப்பற்ற இந்த மானுடப் பிறவியை, தூக்கத்திலும், சோம்பலிலும், மயக்கத்திலும் வீணாகக் கழித்துவிடுபவர்கள் சம்சாரமெனும் துக்க மாளிகையின் வளாகத்தில் அடி வைத்தவர்களேயாவர். பிறப்பு இறப்பு எனும் இத்தொடருடன் கூடிய சம்சாரத்திற்கான அஞ்ஞான விதை தாமஸ சுகத்தை அனுபவிப்போரிடத்து அழியாமலேயே நிலைத்து விடுகிறது. எனவே இந்த அபாயகரமான சுகம் விடத்தக்க தேயாகும். எனவே பகவானின் இந்த நற்போதனையை நன்கு ஏற்று, தாமஸ, இராஜஸ சுகத்தை விட்டு சாத்வீக ஸுகத்தையே நாடுதல் வேண்டும்.

வினா : தாமஸ சுகத்தின் இலட்சணம் என்ன?

விடை : (1) தூக்கம், சோம்பல், மயக்கம் இவற்றால் ஏற்படுவது. (2) முற்றிலும் முடிவிலும் மோகத்தை ஏற்படுத்துவது - தாமஸ சுகத்தின் இலட்சணம்.

### முன்னுரை

சத்வம் முதலிய முக்குணங்களோடு கூடியிராத பொருள் இம்மூவுலகங்களிலும் எதுவுமில்லை என்று கூறுகிறார்.

*ந தத்அஸ்தி ப்ருதிவ்யாம் வாதிவி தேவேஷுவா புனஹ!*
*ஸத்வம் ப்ரக்ருதிஜைர்முக்தம் யதேபிஹி ஸ்யாத் த்ரிபிர்குணைஹ!! - (40)*

### சொற்பொருள்

ப்ரக்ருதிஜைன்-இயற்கையிலிருந்து (மாயையின்றி) பிறந்தவையாகி, ஏபிஹி த்ரிபிஹி குணஹ-இம்மூன்று குணங்களால், முக்தம் ஸ்யாத்-எது முக்தியடைந்திருக்கிறதோ, தத்வைத்வம்-அந்த உயிர், ம்ருதிவ்யாய்-பூவுலகிலோ, வாழ அல்லது, புனஹ-மேலும், திவி தேவேஷு-தேவலோகத்தில் தேவர்களுக்கிடையேயும், ந அஸ்தி-இல்லை.

### கருத்துரை

இயற்கையினின்றும் (மாயை) பிறந்ததாகிய இம்முக்குணங்களினின்று விடுதலை பெற்ற உயிர் மண்ணுலகில், விண்ணுலகில் வானவர்களிடத்தும் இல்லை.

**விளக்கவுரை**

*மூவுலகங்களில் உள்ள ஒவ்வொரு பொருளும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று முக்குணங்களோடு கூடியது என்றும், அவற்றுடன் கூடியிராத பொருள் (முக்தி அடைந்தவனைத் தவிர) எதுவும் இவ்வு லகில் இல்லையென்று கூறுகின்றார். பிறவியிலேயே மோட்சம் அடைந்த மகான்கள் தவிர ஏனையோர் அனைவரும் ஏதோவொரு குணத்துடனே அல்லது குணங்களுடனோ கூடியவரே என்றும், அவற்றினின்றும் விடுபட்டவர்கள் அல்லர் என்றும் பகவான் இச்சு லோகத்தில் கூறுகிறார். அவர்களும் பந்தத்தினால் கட்டுண்டு கிடப் ப்வரே. அவர்கள் முயற்சி செய்து ஞானத்தைப் பெற்றுக் குணங்களற் றவராக மாறுதல் வேண்டும்.*

*'ப்ரக்ருதிஜைஹ' என்று கூறியதால் இம்மூன்று குணங்களும் உற்பத்தியாகும் இடம் இயற்கை அல்லது மாயை (அஞ்ஞானம்) என்பது தெளிவாகிறது. இம்மூன்று குணங்கள் இருப்பின் அவர்கள் இன்னும் இயற்கையுடன் கூடியவர்களேயாவர். எனவே இம்மூன்று குணங்களைக் கடந்து குணங்களுக்கு அப்பாற்பட்ட ஆன்ம நிலையை அடைதலே மோட்சம்.*

**வினா :** *சத்வம் முதலிய முக்குணங்கள் எதனின்று தோன்றின?*

**விடை :** *இயற்கையிலிருந்து.*

**வினா :** *இம்முக்குணங்களற்ற பொருள் இவ்வுலகில் ஏதேனும் உண்டா?*

**விடை :** *இல்லை. (பிறவியிலேயே மோட்சம் அடைந்தவனைத் தவிர)*

**வினா :** *இத்தகைய நிலை இவ்வுலகில் மட்டும் தானே அன்றிப் பிற உலகங்களிலும் உண்டா?*

**விடை :** *சுவர்க்கம், தேவர் உலகம் இவற்றிலும் இத்தகைய நிலையே யுண்டு.*

**முன்னுரை**

*மக்களது குணங்களுக்கேற்ப அவரவர் கர்மாக்கள் அமைகின் றன என்கிறார்.*

*ப்ராஹ்மண க்ஷத்ரிய விசாம் சூத்ராணாம்ச பரந்தப!*
*கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவப்ரபவைர் குணைஹ!! - (41)*

**சொற்பொருள்**

*பரந்தப-எதிரிகளை வாட்டுபவனே, பிராமண க்ஷத்திரிய, வைசியர்களும், சூத்ராணாம்ச-சூத்திரர்களும், கர்மாணி-கர்மாக்கள், ஸ்வபாவ ப்ரனவஹ-அவரவர் இயல்பில் உதித்த, கர்மாணி-கர்மங்கள், குணைஹ-குணங்களுக்கு ஏற்ப, ப்ரவிபக்தானி-பிரிக்கப்பட்டுள்ளன.*

**கருத்துரை**

*எதிரிகளை வாட்டும் அர்ஜுனனே! பிரம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களுடைய கர்மங்கள், அவரவர் இயல்பில் உதித்த குணங்களுக்கேற்பப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.*

**விளக்கவுரை**

*இதற்கு முன் 4 ஆம் அத்தியாயத்தில், 13 ஆம் சுலோகத்தில் நான்கு வர்ணங்களைச் சார்ந்தவர்கள் அவரவர் குணங்களின் அடிப்படையில் கர்மாக்களின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டனர் என்று பகவான் கூறியிருக்கிறார். இப்போது அக்கருத்தையே இன்னும் தெளிவுபடுத்தி அவரவர் முற்பிறவியின் பண்புகளுக்கேற்ப அவரவர் தொழில்களும் அவற்றைப் பின்பற்றியே அந்தந்த வர்ணங்கள் பிரிக்கப்பட்டன எனத் தெரிவிக்கிறார். இதனால் பிறப்பால் சாதி ஏற்படுவதில்லை என்பதும், அவரவர் மன இயல்பைப் பொறுத்துத் தான் பிறவி கர்மா முதலியவை ஏற்படுகின்றன என்பதும் தெளிவாகிறது. எனவே பிறவியால் கீழ்ச்சாதியாயினும் தத்தம் செயல்களின் தூய்மையால், ஆன்மீக சாதனையால் மேலான வர்ணத்தைச் சார்ந்தவராகலாம். இங்ஙனம் அனைவருக்கும் ஆன்மீகத்தில் உயரிய சிகரங்களை எட்டிபிடிக்கும் வாய்ப்பை வழங்குதல் கீதையின் தனிச் சிறப்பாகும்.*

**வினா :** *வர்ணங்கள் எதனால் ஏற்படுகின்றன?*

**விடை :** *அவரவர் குணங்களினால்*

**வினா :** *நான்கு வர்ணங்களைச் சார்ந்தோரின் கர்மாக்கள் எவ்வெவ்வகையில் பகுக்கப்பட்டன?*

**விடை :** *அவரவர் முற்பிறவியின் இயல்பில் உதித்த குணங்களுக்கேற்பப் பிரிக்கப்பட்டன.*

**வினா :** *பிறப்பினால் சாதி ஏற்படாதா?*

**விடை :** *அல்ல. அவரவர் கர்மாக்களின் அடிப்படையில் ஏற்பட்டது.*

**முன்னுரை**

*அவ்வாறு இயல்பினால் ஏற்படும் கர்மாக்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார்.*

*சமோ தமஸ்தபஹ சௌசம் க்ஷாந்திரார்ஜவமேவச!*
*ஞானம் விக்ஞான மாஸ்திக்யம் ப்ரஹ்மகர்ம ஸ்வாபாவஜம்!! - (42)*

**சொற்பொருள்**

*சமஹ்-அந்தக் கரணங்களை அடக்குதல், தமஹ்-புறக்கரணங்களையடக்குதல், தபஹ்-தவம், சௌசம்-தூய்மை, க்ஷாந்தி-பொறுமை, ஆர்ஜவம்-நேர்மை,-ஞானம்-சாஸ்திர ஞானம், விக்ஞானம்-அனுபவ ஞானம், ஆஸ்திக்யம் ஏவச-தெய்வம், குரு இவர்களின் பேரில், சாஸ்தரத்தின் பேரில் நம்பிக்கை ஆகியவை, ஸ்வயாவஜம்-இயல்பாக ஏற்பட்ட, பிரஹ்ம கர்ம-பிராம்மண கர்மங்களாம்.*

**கருத்துரை**

*அந்தக் கரணங்கள், புறக்கரணங்கள் ஆகியவற்றின் அடக்கம், தவம், தூய்மை, நேர்மை, சாஸ்திர ஞானம், அனுபவ ஞானம், தெய்வம், குரு இவர்களின் பேரில் நம்பிக்கை ஆகியவை யாவும் பிராம்மணர்களின் இயல்பான கர்மங்களாம்.*

**விளக்கவுரை**

*ஞான, விக்ஞானங்கள் இரண்டையும் மோட்சத்தை நாடுவோர் தவறாமல் பெற்றிருத்தல் வேண்டுமென்று பகவான் கீதையில் பல் வேறு இடங்களில் கூறியிருக்கிறார். சாஸ்திரஞானம் மட்டும் போதாது. அனுபவஞானமும் வேண்டும். அனுபவ ஞானத்தினால் தான் மனிதனுக்கு மனமாற்றமும், ஆனந்தமும் ஏற்படும். ஆன்மீக விஷயங்களில் நம்பிக்கையும் பிறக்கும். எனவே ஒவ்வொருவர் ஞான விக்ஞானங்களைப் பெற்றாக வேண்டும். அகப்புலன், புறப்பு*

லன் அடக்கம் முதலான ஒன்பது கர்மாக்களைச் செய்பவனே பிராம் மணன் ஆவான் என்பது பொருள். தவம் என்று சொல்லப்பட்டது 17 ஆம் அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்ட மனம், வாக்கு, காயங்க ளால் ஆகிய தவம் என்பதாகும்.

**வினா :** எவ்வெவ் கர்மாக்கள் பிராம்மணர்களுக்கு விதிக்கப்பட்டுள் ளன?

**விடை :** (1) அகப்புலன், (2) புறப்புலன்கள் அடக்கம், (3) தவம், (4) தூய்மை, (5) பொறுமை, (6) நேர்மை, (7) சாஸ்திர அறிவு, (8) அனுபவ அறிவு, (9) ஆஸ்திக மனப்பான்மை என்ற ஒன்பது கர்மாக் கள் பிராம்மணர்களது இயல்பான கர்மாக்கள் ஆகும்.

### முன்னுரை

க்ஷத்திரியர்கள் கர்மாக்களை இனி விவரிக்கிறார்.

*சௌர்யம் தேஜோ த்ருதிர்தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயனம்!*
*தானமீச்வர பாவஸ்ச க்ஷாத்ரம் கர்மஸ்வபாவஜம்!! - (43)*

### சொற்பொருள்

சௌர்யம்-சூரத்தன்மை (பராக்கிரமம்) தேஜஹ-துணிவு, த்ரு திஹ்-உறுதி, கீர்த்தி-புகழ், தாக்ஷ்யம்-ஆற்றல், யுக்தே-போரில், அபி லாயசாம்ச-புறங்காட்டாமை, தானம்-கொடை, ஈஸ்வர பாவஹ- இறைமையுணர்வும், ஸ்வபாவஜம்-இயற்கையில் பிறந்த க்ஷாத்ரம் கர்ம-க்ஷத்தரிய கர்மங்களாம்.

### கருத்துரை

சூரத்தன்மை, துணிவு, உறுதி, ஆற்றல், போரில் புறங்காட் டாமை, கொடை, இறையுணர்வு ஆகியவை இயற்கையில் பிறந்த க்ஷத்திரிய கர்மங்களாம்.

### விளக்கவுரை

'யுத்தே சாப்யபலாயனம்'-போரில் புறங்காட்டுதல் க்ஷத்திரிய தர்மமல்ல எனப்பட்டது. புறத்தே நேரும் போரானது எப்போதோ நேர்வது. அகப்போர் மோட்சத்தை யடையும் வரையில் எல்லா ஜீவன்களிடத்தும் நேர்ந்து கொண்டேயிருக்கும். நன்மை, தீமை, தர்மம், அதர்மம், தெய்வத் தன்மை, அசுரத் தன்மை இவற்றிற்கி

டையே எப்போதும் போல் நடந்து கொண்டேயிருக்கும். பலம் பொருந்திய மாயையினால் ஏற்படும் இந்தப் போரில் ஒவ்வொரு மனிதனும் இத்தகைய ஆண்மையையும், வீரத்தையும் காண்பிக்க வேண்டியிருக்கும். அதாவது மாயையுடன் நடக்கும் போரில் புறங் காட்டி ஓடிவிடக்கூடாது. முன் வைத்த காலை பின் வைக்கக்கூடாது. புறப்போரில் க்ஷத்திரியர்கள் காட்டும் தைரியம், ஆற்றல் இவற்றைக் காட்டிலும் மிகுந்த சாகஸங்களை மனிதன் தன் அகப்போரில் காட்ட வேண்டியிருக்கும். அப்போதே வெற்றி உள்ளங்கை நெல்லிக்கனி யாகி ஜீவனின் மோட்ச சாம்ராஜ்யத்தில் முடிசூடப்படுவான். பிராம் மணனின் அறிவும், க்ஷத்திரிய வீரத்தினையும் ஜீவன் பெற்றாக வேண்டும். இலக்கினை (மோட்சத்தினை) அடையும் வரையில், பின்வாங்குதல் கூடாது. இந்த க்ஷத்திரிய தர்மத்தினை ஒவ்வொருவ ரும் தனது அகப்போரில் கடைபிடித்துக் கடைத்தேற வேண்டும்.

**வினா :** *க்ஷத்திரியனின் இயல்பு என்ன?*

**விடை :** *(1) சூரத்தன்மை, (2) ஒளி (கீர்த்தி), (3) தைரியம், (4) கற்றல், (5) போரில் புறங்காட்டாமை, (6) ஈகை, (7) மக்களை ஆள்வதில் ஆற்றல் இவை க்ஷத்திரிய கர்மாக்கள்.*

**முன்னுரை**

இனி வைசியர், சூத்திரர் இவர்களின் இயல்பைக் கூறுகிறார்.

*க்ருஷி கோரக்ஷ்ய வாணிஜ்யம் வைச்ய கர்ம ஸ்வபாவஜம்!*
*பரிசர்யாத்மகம் கர்ம சூத்ரஸ்யாபி ஸ்வபாவஜம்!!-(44)*

**சொற்பொருள்**

*க்ருஷி-விவசாயம், கோரக்ஷ்ய-பசுக்களைக் காத்தல் (ஆநிரை மேய்த்தல்), வாணிஜ்யம்-வர்த்தகமும் ஸ்வபாஜகம்-இயல்பால் ஏற்பட்ட, வைச்யம் கர்ம-வைசியனின் கர்மாவாக இருக்கிறது. அபி-மேலும், பரிசர்ய்த்யசம்-தொண்டு செய்வதும், கர்ம-கர்மா, சூத்ரஸ்ய அபி-சூத்திரர்களுக்கும், ஸ்வ பாவஜம்-இயல்பால் ஏற்பட்டது.*

**கருத்துரை**

**வேளாண்மை, ஆநிரை மேய்த்தல், வர்த்தகம், ஆகியவை வைசியர்க ளுக்கு இயல்பாய் ஏற்பட்டதாகும். அவ்வாறே குற்றேவல் புரிவது சூத்திரர் களின் இயல்பாகக் கூறப்பட்டிருக்கிறது.**

**வினா :** வைசியனின் இயல்பான கர்மா யாது?

**விடை :** விவசாயம், ஆநிரை மேய்த்தல், வர்த்தகம் ஆகியவை.

**வினா :** சூத்திரர்கள் இயல்பான செயல் யாது?

**விடை :** சேவை செய்தல்

**முன்னுரை**

அவரவர் இயல்பிற்கேற்ற கர்மாக்களைச் செய்வதால் ஞான சித்தியை அடைவார்கள் என்று கூறுகிறார்.

*ஸ்வே ஸ்வே கர்மண்ய பிரதஹ ஸம்ஸித்திம்லபதே நரஹ!*
*ஸ்வகர்ம நிரத்ஹ ஸித்திம் யதா விந்ததி தச்ச்ருணு!! - (45)*

**சொற்பொருள்**

ஸ்வேஸ்வே கர்மணி-தத்தமக்குரிய கர்மத்தில், அபிரதஹ-இன்புறுகின்ற (ஆர்வமுடைய) நரஹ-மனிதன், ஸம்சித்திம்-ஞான நிலையை, லபதே-அடைகிறான், ஸ்வகர்ம நிரதம்-தன் கர்மத்தில் கருத்துடையவன், யதா-எவ்வாறு, ஸித்திம்-சித்தியை, விந்ததி-அடைகிறான், தத்-அதை (என்பதை, ச்ருணு-கேள்.

**கருத்துரை**

அவனவன் தத்தம் கர்மத்தில் நிறைவுறுகிற மனிதன் நிறை நிலை (சித்தியை)யை அடைகிறான். தனது கர்மாவில் கருத்து வைப்பவன் எங்ஙனம் சித்தியடைகிறான் என்பதைக் கேட்பாயாக.

**விளக்கவுரை**

அவரவர் தத்தம் கர்மங்களை, இறைவனுக்கு அர்ப்பணம் செய்து, பலனைக் கருதாதது செய்வதால் மனிதன் ஞான நிலையை அடைவான் என்று இங்குக் கூறப்படுகிறது. கர்மாவினால் மோட்சம் எங்ஙனம் சித்திக்கும் எனப் பலருக்கும் ஐயம் எழுகிறது. அந்த ஐயத்தினை இச்சுலோகத்திலும் இதனை அடுத்து வரும் சுலோகத்திலும் பகவான் தீர்த்து வைக்கிறார். பலனில் இச்சையின்றி கர்மாக்களைச் செய்வதால் மனத்தூய்மையுண்டாகி ஞானம் பெற்று மோட்சம் அடைகிறான். இவ்வாறாக கர்மா மோட்சத்திற்கு அடிகோலுகிறது.

**வினா :** ஞான முத்தியை மனிதன் எங்ஙனம் பெறுகிறான்?

விடை : தத்தம் இயல்பான கர்மாவைப் பலன் கருதாது இறைவனுக்கு அர்ப்பித்து இச்சையின்றிச் செய்வதால் மனத்தூய்மையேற்பட்டு ஞானசித்தி கிடைக்கிறது.

*யதஹ ப்ரவ்ருத்திர்பூதானாம் யேன ஸர்வமிதம் ததம்!*
*ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவஹ!! - (46)*

## சொற்பொருள்

யதஹ-எவனால், பூதானாம்-உயிர்களுக்கு, ப்ரவ்ருத்திஹ்-உற்பத்தி, யோன-யாரால், இதம் ஸர்வம்-இந்த உலகனைத்தும்,-ததம்-வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, தம்-அப்பரம்பொருளை, மானவஹ-மனிதன், ஸ்வகர்மணா-தத்தம் கர்மாவினால், அய்யர்ச்சய-அர்ச்சித்து, ஸித்திம்-சித்தியை, விந்ததி-அடைகிறான்.

## கருத்துரை

யாரிடத்திடமிருந்து உயிர்கள் உற்பத்தியாயினவோ, யாரால் இவ்வையகமெல்லாம் வியாபிக்கப்பட்டுள்ளதோ, அப்பரம் பொருளை சுய கர்மத்தால் வழிபட்டு மனிதன் மேன்மை எய்துகிறான்.

## விளக்கவுரை

'யதஹ்ப்ரவிருத்திம் பூதானாம்'-யாரிடத்திடமிருந்து கோடிக்கணக்கான உயிர்கள் தோன்றுகின்றனவோ என்று கூறுவதால் எல்லாவுயிர்கட்கும் ஆதாரமானவன் அப்பரம்பொருளே என்பது தெளிவாகிறது. ஜடமாகிய பொருள் சைதன்யத்தின் உதவியின்றி எதுவும் செய்ய முடியாது. ஜடமாகிய இயற்கை 'சித்' ஆகிய பரம்பொருளால் தான் இயங்குகிறது. (மயா அத்யக்ஷேண ப்ரகிருதிஹி ஸ்ரூயதேஸ ஸராசரம்). எனவே ஜீவன் அனைத்திற்கும் காரணமான அப்பரம் பொருளின் மீது எல்லையற்ற பக்தியுடன் வழிபட்டு மேன்மையுறுதல் வேண்டும்.

'யேந ஸர்வமிதம் ததம்'-இவ் வாக்கியம் கீதையில் மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. 'எதனால் இவ்வுலகனைத்தும் வியாபிக்கப்பட்டுள்ளதோ' என்பது அதன் பொருள். பரமாத்மா எங்கும் வியாபித்திருப்பதால் இவ்வுலகில் அவனில்லாத இடமில்லையென்பது நிச்சயமாகிறது. பாலில் வெண்ணை மறைந்திருப்பதைப் போல அவன் எங்கும் வியாபித்திருக்கிறான். புறக் கண்களுக்கு

அவன் புலப்படுவதில்லையெனினும், ஞானக்கண்களுக்கு எங்கும் புலப்படுவான். இவ்வாறு ஒவ்வொரு அணுவிலும் அவன் வியாபித்திருப்பதால் எல்லாவற்றிற்கும் சாட்சியாக நிற்பதால் உயிர்கள் அவனது அருகாமையை எங்கும் உணர்ந்து பாவச் செயல்களில் ஈடுபடாமல் பக்தியுடன் இருத்தல் வேண்டும்.

'ஸ்வகர்மணா தம் அப்யர்ச்சய'-மனிதன் கர்மாக்களைச் செய்வதால் மோட்சத்தினை எங்ஙனம் அடைதல் கூடும்' என்பதற்கான விடையை பகவான் இங்கு அளித்துள்ளார். உனது கர்மாக்களை இறை அர்ப்பணமாகச் செய்து கொண்டிரு. தெய்வத்தை உன் கடமைகளின் வாயிலாக வழிபடு. அதன் மூலம் நீ ஞான சித்தியடைந்து மோட்சத்தினையும் அடைவாய்' என பகவான் இங்குப் போதிக்கிறார். கர்ம பலனை இறைவனுக்கு அர்ப்பித்தலே கர்மத்தின் வாயிலாக இறைவனை வழிபடுதல்.

கர்மாவினால் மோட்சம் சித்திக்கும். ஆயினும் அதனைச் செய்ய வேண்டிய முறைப்படிச் செய்தல் வேண்டும். இச்சையின்றி கர்மாக்களை இறையர்ப்பணமாகச் செய்யும்போது அவற்றிலுள்ள பிழை நீங்கி மனத்தூய்மை ஏற்பட்டு மோட்சத்தின் கருவியாகும். இதுவே கர்மநெறியிலுள்ள இரகசியம். பக்தர்களின் மேலுள்ள கருணையினால் பகவான் இங்கு இதனைத் தெரியப்படுத்தினார். கர்ம மார்க்கம் நிந்திக்கத்தக்கதல்ல. ஏனைய பக்தி ஞானம் இவற்றைப் போல் இதுவும் புனிதமானதே. மோட்சத்திற்குக் கருவியாவதே என்பது இச்சுலோகத்தினால் புலனாகிறது.

'ஸ்வகர்மண தம் அப்யர்ச்சய'-தத்தம் கர்மாவைச் செய்து இறைவனை வழிபடுதல் என்பதை மக்கள் கவனியாமல், பலன்களைக் கருதி, கர்மாக்களைச் செய்கின்றனர். அதனால் கர்மா பந்தத்தை ஏற்படுத்துகிறது. எனவே இறை அர்ப்பணமாக அவனிடம் அன்பு கொண்டு கர்மாக்களைச் செய்தால் 'ஸித்திம் விந்ததி மானவஹ்' என்றவாறு மனிதன் ஞானஸித்தி, மோட்ச ஸித்தியை அடைவான் என கீதாசார்யன் உறுதியளிக்கிறார்.

இச்சுலோகத்தில் கர்மா, பக்தி, ஞானம் என்ற மூன்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனின், (1) கர்மாவைச் செய்தல் (2) அதன் வாயிலாக கடவுளை வழிபடுதல் (3) அதனால் மனத்தூய்மையேற்பட்டு ஞானம் ஏற்படுதல். கர்மா என்ற விளக்கில், பக்தி என்ற திரியை இட்டு, ஞானம் என்ற ஜோதியை ஏற்ற வேண்டும்.

வினா : உயிர்கள் யாரிடமிருந்து தோன்றுகின்றன?

விடை : பரம்பொருளிடமிருந்து.

வினா : இவ்வுலகமெங்கும் யாரால் வியாபிக்கப்பட்டிருக்கிறது?

விடை : பரம் பொருளினால்.

வினா : ஜீவன் மோட்சத்தை எவ்வாறு அடைவான்?

விடை : தனது கர்மாவினால் இறைவனை வழிபட்டால், ஞானம் பெற்று மோட்சத்தினையடைவான்.

### முன்னுரை

கடமைகளை ஆற்றுதலே மிகச் சிறந்தது என்கிறார்.

*ச்ரேயான் ஸ்வதர்மோ விகுணஹ பரதர்மாத் ஸ்வனுஷ்டிதாத!*
*ஸ்வபாவநியதம் கர்ம குர்வந்நாப் னோதி கில்பிஷம்!! - (47)*

### சொற்பொருள்

ஸ்வதர்மஹ-சுயதர்மமானது, விமுணஹ அபி-(தனது விவேக மின்மையால் குணமில்லாததாகத் தோன்றினாலும், ஸு அனுஷ்டி தாத்-நன்கு அனுஷ்டிக்கப்படுகின்ற. பரதர்மதா-பிற தர்மங்களைக் காட்டிலும், ச்ரேயான்-சிறந்தது, ஸ்வபாவ நியதம்-இயற்கையால் ஏற்பட்ட (தன் கடமைக்கு ஏற்ற) கர்மா-கர்மாவை, குர்வன்-செய்கிறவன், நில்பிஷம்-கேட்டை, ந ஆப்னோதி-அடைவதில்லை.

### கருத்துரை

நிறைவாக அனுஷ்டிக்கப்பட்ட பரதர்மத்தை விட, குறைவாய் அனுஷ்டிக்கும் ஸ்வதர்மம் சிறந்தது. இயற்கையிலமைந்த கர்மத்தைச் செய்பவன் கேட்டினை அடையான்.

### விளக்கவுரை

தன் கடமைகளைச் செய்வது சற்றுக் கடினமாயினும், எளிதாகச் செய்யக்கூடிய பிறரது கடமைகளை ஏற்பதைக் காட்டிலும் தன் கடமைகளை ஆற்றுவதே சிறந்தது எனக் கூறப்பட்டது. தன் கடமைகளை இறைவனுக்கு அர்ப்பித்துச் செய்து வந்தால் மனிதன் கேட்டினை அடையமாட்டான்.

ஸ்வ தர்மம் என்றால் ஆன்மாவிற்குச் சம்பந்தப்பட்ட கர்மங்கள் என்று சொல்லலாம். ஆத்மசிந்தனை, ஞானம் முதலியன. இவை சற்றுக் கடினமாகத் தோன்றினாலும் காட்சிப் பொருள்களின் மீதான சிந்தனையை ஏற்பதைக் காட்டிலும் சிறந்தவை, மேலானவை. ஆன்ம சிந்தனை முடிவில்லாத ஆனந்தத்தைத் தரவல்லது. அன்னிய தர்மம்-அதாவது காட்சிப் பொருள்களின் மீதான கர்மம் துவக்கத்தில் சுகம் தருபவையாகத் தோன்றினாலும் இறுதியில் துக்கத்தையே உண்டாக்கும். எனவே அன்னிய தர்மத்தைக் காட்டிலும் ஸ்வதர்மம் சிறந்தது எனப்பட்டது.

**வினா :** ஜீவனுக்கு எத்தகைய கர்மா சிறந்தது?

**விடை :** சற்றுக் கடினமாகத் தோன்றினும் அவரவர் ஸ்வதர்மமே சிறந்தது.

**வினா :** எதனால் மனிதன் கேட்டையடைவதில்லை?

**விடை :** இயற்கையில் உண்டான கர்மாவை, ஸ்வதர்மத்தை இறைவனுக்கு அர்ப்பிக்கும் மனப்பான்மையுடன் நன்கு ஆற்றினால் கேடுறுவதில்லை.

### முன்னுரை

ஸ்வதர்மம் ஒருகால் குற்றத்துடன் கூடியிருப்பினும் அதனை விடலாகாது என்கிறார்.

*ஸஹஜம் கர்ம கௌந்தேய ஸதோஷமபிந த்யஜேத்!*
*ஸர்வாரம்பாஹி தோஷேண தூமேனாக்னிரி வாவ்ருதாஹ்!! - (48)*

### சொற்பொருள்

கௌந்தயே-குந்தியின் மைந்தா! ஸகஜம்கர்ம-இயல்பான கர்மாவை, ஸதோஷமபி-தோஷத்தோடு கூடியது எனினும், (காட்சி வடிவானதாயினும், முக்குணங்களோடு கூடியதாயினும்), நத்யஜேத்-விட்டு விடலாகாது, தூமனே இவ-அக்கினியானது புகையால் சூழப்பட்டிருப்பதைப் போல், ஸர்வாரம்பாஹ்-எல்லாக் கர்மாக்களும், தோஷேண-தோஷத்தால், ஆவ்ருதாஹி-சூழப்பட்டிருக்கின்றன.

**கருத்துரை**

*அர்ஜுனா! கேடுடையதாயினும் உடன் பிறந்த கர்மத்தை விட்டு விடலாகாது. ஏனெனில் புகையால் சூழப்பட்ட நெருப்பினைப் போல் எல்லா கர்மாக்களும் முக்குணங்களால் ஆன தோஷங்களால் மூடப்பட்டிருக்கின்றன.*

**விளக்கவுரை**

*கர்மா என்பது புலன்களால் செய்யப்படுவதாதலால் காட்சிக்குட்பட்டது. முக்குணங்களைத் தன்னகத்தே கொண்டது. இயற்கைக்கு (மாயைக்கு) உட்பட்டது. எனவே தோஷங்களைக் கொண்டது. எனவே ஆன்மாவினின்று வேறுபட்ட தோஷம், காட்சி தோஷம், குணதோஷம் என்ற மூன்று தோஷங்கள் ஒவ்வொரு செயலில் இருக்கிறது. அதனால்தான் 'ஸர்வாரம்பாஹி' (எல்லா கர்மாக்களும்) என்று தெரிவிக்கப்பட்டது. எனவே புகையால் அக்னி மூடப்பட்டிருப்பதைப் போல் எல்லா கர்மாக்களும் குற்றமுடையவையாயினும், இயல்பான கர்மாக்களை விட்டுவிடலாகாது. ஏனெனில் அவை வேட்கையின்றி இறைவனுக்கு அர்ப்பிக்கும் மனப்பான்மையுடன் செய்தால் மனத்தூய்மையையும் ஞானத்தையும் மோட்சத்தையும் தரவல்லவை. ஆனால் பாவ காரியங்களை மட்டும் செய்யக்கூடாது. எல்லா கர்மாக்களும் மாயையெனும் குற்றத்தால் சூழப்பட்டிருப்பினும், அதன் தூய்மையான செயலினால் தூய்மையற்றவையை, புண்ணிய கர்மாவினால், பாவ கர்மத்தை - பலனைக் கருதாத கர்மாவினால் பலனைக் கோரும் கர்மாவையும் அகற்றிவிட்டு அதன் பிறகு முறையான சாதனையால் இன்னும் முன்னேறிச் சென்று கர்மாவேயில்லாத ஆன்மநிலையை எட்ட வேண்டும்.*

*இதனை வேறொரு வகையிலும் சிந்திக்க இயலும். சில செயல்களில் ஐந்துவகையான தோஷங்கள் ஏற்படுகின்றன. வாழ்க்கைப் பயணத்திற்காக அந்தந்த காரியங்களை மக்கள் தவறாமல் செய்ய வேண்டும். எனவே அவ்வத் தோஷங்களுக்கு ஏற்ற வகையில் ஐந்து விதமான பிராயச்சித்தங்கள் உள்ளன.*

| தோஷம் | பிராயசித்தம் |
|---|---|
| 1. தான்யத்தை உற்பத்தி செய்யும் போது நேரும் ஜீவஹிம்சை | 1. பிரம்ம யக்ஞம், வேதம் ஓதுதல். |
| 2. அரைக்கும் போது ஏற்படும் பிராண ஹிம்சை | 2. பித்ருயக்ஞம், பித்ருதேவதைகளை தர்மம் செய்தல் முதலியவற்றால் திருப்தி |

| | |
|---|---|
| | யுறச் செய்தல் |
| 3. விறகு பிளக்கும் போதும் அவற்றில் சமையல் செய்யும் போதும் விளையும் ஜீவஹிம்சை | 3. தேவயக்ஞும் ஹோமம். |
| 4. தண்ணீரைக் காய்ச்சும் போது ஜீவஹிம்சை | 4. பூத யக்ஞும், பிராணிகளுக்கு உணவு இட்டுக் காப்பாற்றுதல் |
| 5. பிறக்கும்போது ஏற்படும் பிராண ஹிம்சை | 5. மனுஷ்ய யக்ஞும் அதாவது முனிசிரேஷ்டர்களையும், பிரம்ம நிஷ்டர்களையும் தீனர்களையும் உபசரித்து உணவு இட்டுத் திருப்தியுறச் செய்தல். |

இங்ஙனம் கர்மாக்களால் விளையும் அந்தந்த தவிர்க்க முடியாத தோஷங்கள், புண்ணியகர்மாக்களால் பலனற்று அகன்று விடுகின்றன. பிரம்ம சிந்தனை, ஆத்ம தியானம் முதலிய புனித செயல்களால் ஜீவர்களின் இயற்கை தோஷங்கள் அழிந்து விடுகின்றன. எனவே குற்றங்கள் இருப்பினும் அவரவர் ஸ்வகர்மாவைச் சரிவரச் செய்து வந்தால் இதயத் தூய்மை ஏற்பட்டு, ஞானம் பிறந்து சிறந்த பிரம்ம நிலையை அடைய முடியும்.

## முன்னுரை

41 ஆவது சுலோகத்திலிருந்து இதுவரை கர்மயோகத்தைப் பற்றி விவரித்து இனி ஞான யோகத்தைப் (ஸாங்கிய யோகம் அல்லது சந்நியாச யோகத்தை) பற்றிக் கூறுகிறார்.

*அஸக்த புத்திஹி ஸர்வத்ர ஜிதாத்மா விகதஸ் ப்ருஹஹ!*
*நைஷ்கர்ம்ய ஸித்திம் பரமாம் ஸந்யாஸேனாதி கச்சதி!! - (49)*

## சொற்பொருள்

ஸர்வத்ர-எல்லாவற்றிலும், அஸக்த புத்திஹி-பற்றற்ற புத்தியுடையவனாய், ஜிதாத்மா-மனதை வென்றவனும், விகதஸ்ப்ருஹஹ-ஆசையற்றவனும், ஸந்யாஸேன-சந்நியாசத்தில், பரமாமம்-மேலான, நைஷ்கர்ம்ய சித்திம்-கர்மங்களற்ற ஆன்ம நிலையை, அதிகச்சதி-அடைகிறான்.

**கருத்துரை**

*எல்லா விஷயங்களிலும் பற்றற்ற புத்தியுடையவனாய், மனத்தை வென்றவனாய், ஆசைகளற்றவனாய் இருப்பவன், சந்நியா சத்தால் மேலான களங்கமற்ற ஆன்ம நிலையை யடைகிறான்.*

**விளக்கவுரை**

*இதுவரையில் நிஷ்காம கர்மயோகத்தைப் பற்றிக் கூறி இனி ஞானயோக சிந்தனையில் ஈடுபடுகிறார். சில நற்குணங்களைக் கூறி அவற்றையுடையவன் கிரியைகளற்ற ஆன்ம நிலையையடைவான் என்று சொல்கிறார். அவையாவன - (1) எவற்றிலும் பற்று கொள்ளா திருத்தல் ஒட்டாத தன்மை (2) மனத்தை வெல்லுதல் (3) ஆசை இன்மை.*

*'ஸர்வத்ர' என்பதால் எதன்மீதும், எக்காலத்தும் எல்லா இடத்தி லும் பற்றற்றவனாகப் பழகுதல் வேண்டுமென்பது பொருள். சிலர் சிலவற்றில் விரக்தியுற்று இருப்பினும் சிலவற்றில் பற்றுடையவ ராய் இருப்பர். அவ்வாறே சிலர் தியான காலத்தில் பற்றற்ற மனத்தி னராய் இருப்பினும் வெளி உலக விஷயங்களில் ஈடுபாடு கொண்டி ருப்பர். அவை எவையுமின்றி எக்காலத்தும் பற்றற்றவராயிருத்தல் வேண்டும் என்பதால்தான் 'ஸர்வத்ர' எனப்பட்டது.*

*'ஜிதாத்மா'-தன் மனத்தை வென்றவன். மனத்தை வெல்லாத வன் உலகனைத்தையும் வென்றாலும் சுதந்திரம் இல்லாதவனேயா வான். துக்கம் அவனை விடாது. எனவே புறப்பகைவர்களோடு அகப்பகைவர்களையும் வெல்ல வேண்டும். இல்லையேல், 'போக் துஹ் கலே கண்டகவத் ப்ரதீதம்' என்று திரு சங்கரர் கூறியது போல் தீயமனமானது சாப்பிடுபவன் குரல்வளையில் மாட்டிக் கொண்ட முள் போன்று அவனைத் துன்புறுத்தும்'. எனவே விவேகமுடைய வன் முதலில் தம்மனத்தை, புலன்களை வெல்லுதல் வேண்டும்.*

*'விகதஸ் ப்ருஹ'-காட்சிப் பொருள்கள் யாவற்றிலும் ஆசையி ருத்தல் கூடாது. அப்போதே மனம் வெளியே ஓடாமல் உள்முக மாய்த் திரும்பி ஆன்மாவில் நிலைக்கும். சலனமுற்ற மனத்தில் ஆத் மானுபவம் ஏற்படாது. உள்ளம் சலனமற்று இருக்க வேண்டுமாயின் ஆசைகள் அறவே ஒழிதல் வேண்டும். எனவே 'விகதஸ்ப்ருஹ்' என்று கூறப்பட்டது.*

'நைஷ்கர்ம ஸித்திம்'-இங்கு மோட்சம் இங்ஙனம் வர்ணிக்கப் பட்டுள்ளது. அதாவது செயல்களற்ற ஆன்மநிலை, என்பது பொருள். உடல், புலன்கள், மனம் யாவற்றையும் கடந்த நிலை ஆதலால் ஆன்மநிலை நிஷ்கர்ம நிலையாகிறது. அத்தகைய நிலைதி யாகத்தால் மட்டுமே (சந்நியாசத்தால்) கிடைக்குமென்று இங்கு தெரிவிக்கப்பட்டது. அதாவது கர்மபலத் தியாகம், விஷயங்களில் மீதான ஆசைகளைத் தியாகம் செய்தல் பற்றினைத் தியாகம் செய் தல், கர்ம பலத்தியாகம் இவற்றால் மோட்சநிலை சித்திக்கும் என் பது தெளிவாகிறது.

'பரமாம்'-என்பதால் ஆன்மநிலை எல்லா சித்திகளை விட மேன்மையானது.

**வினா :** நைஷ்கர்ம ஸித்தி என்றால் என்ன?

**விடை :** கிரியைகளற்ற ஆன்மநிலை மோட்சம்.

**வினா :** அது எவ்வாறு கிடைக்கும்?

**விடை :** (1) எதிலும் ஒட்டாத தன்மை (2) மனத்தை வெல்லுதல் (3) ஆசையின்மை (4) தியாகம் இவற்றால் ஆன்ம நிலை கிட்டும்.

**வினா :** மோட்ச நிலை எத்தகையது?

**விடை :** எல்லா சித்திகளைக் காட்டிலும் மேன்மையானது.

*ஸித்திம் ப்ராப்தோ யதா ப்ரஹ்ம ததாப்னோதி நிபோதமே!*
*ஸமாஸேனைவ கௌந்தேய நிஷ்டா ஞானஸ்யயாபரா!! - (50)*

## சொற்பொருள்

கௌந்தேய-குந்தியின் மைந்தனே! ஸித்திம்-கர்ம சித்தியை, ப்ராப்தஹ-அடைந்தவன், யதா-எவ்வாறு, பிரம்மா-பிரம்மத்தினை, ஆப்னோதி-அடைகிறானோ, ததா-அவ்வாறே, ஞானஸ்ய-ஞானத்தின், பரா-சிறந்த, நிஷ்டா-நிட்டையாக, யா-எது இருக்கி றதோ அதனை, ஸமாஸேன ஏவ-சுருக்கமாக, மே-என்னிடமிருந்து, நிபோத-அறிந்துகொள்.

## கருத்துரை

அர்ஜுனனே! கர்மசித்தியை யடைந்தவன் பரம்பொருளை எவ் வாறு சேர்கிறானோ அவ்வாறே ஞானத்தின் உயர்நிலையாகிய பிரம்

மத்தை எப்படி அடைகிறான் என்பதை என்னிடமிருந்து சுருக்கமாக அறிந்து கொள்.

**விளக்கவுரை**

ஞானத்தின் உயர்நிலையான பரம்பொருளை அடையும் முறையைத் தெரிவிக்கிறேன் என கீதையின் சாரமனைத்தும் சுருக்கமாக இங்குத் தெரிவிக்கப்போகிறார். எனவே இக்கட்டம் மிக முக்கியமானது. மோட்சத்தை நாடும் முமுட்சுக்கள் இதனைக் கவனமாகக் கேட்டல் வேண்டும்.

'ஸமாசேனைவ' - போர்துவங்கும் நேரமாகையால் இனி அதிகமாக விரித்துச் சொல்வதற்கு நேரம் இல்லாமையால் சுருக்கமாகச் சொல்ல நினைத்திருக்கலாம். இதுவரை தர்மங்கள் பலவும் சொல்லப்பட்டன. எனவே இனி சாரத்தினைச் சொன்னால் போதுமெனக் கருதிச் சுருக்கமாகச் சொன்னார். இனிவரும் மூன்று சுலோகங்களும் 'கீதைசாரம்' 'சுருக்கமான கீதை' என்று பெயர் பெற்றது.

**முன்னுரை**

ஞான நிட்டையில் மேலாம் நிலையைக் குறித்து அடுத்துவரும் மூன்று சுலோகங்கள் தெரிவிக்கின்றன.

*புத்யா விசுத்தயா யுக்தோ த்ருத்யாத்மானம் நியம்யச!*
*சப்தாதீன் விஷயான்ஸ்த்யக்த்வா ராகவேஷௌ வ்யுதஸ்யச!! - (51)*

*விவிக்த ஸேவீ லக்வாசீ யதவாக்காயமானஸஹ*
*த்யானயோக பரோ நித்யம் வைராக்யம் ஸமுபாச்ரிதஹ!! - (52)*

*அஹங்காரம் பலம் தர்பம் காமம் க்ரோதம் பரிக்ரஹம்!*
*விமுச்ய நிர்மமஹ சாந்தோ ப்ரஹ்ம பூயாய கல்பதே!! - (53)*

**சொற்பொருள்**

விசுத்தயா-பரிசுத்தமான, புத்தயா-புத்தியின், யுக்தஹ-கூடியவனும், த்ருத்யா-தைரியத்துடனும், ஆத்மானம்-மனதை, நியம்யச-அடக்கித் தன் வயப்படுத்தி, சப்தாதீன விஷயான்-சப்தம், ஸ்பரிசம் முதலான விஷயங்களை, த்யக்த்வா-விடுத்து, ராகத்வேஷௌ-விருப்பு வெறுப்புகளை, வ்யுதஸ்யச-துறந்து, வீவீக்த ஸேவீ-தனித்திருப்பவனாய், லக்வாசீ-மிதமான உணவு உண்பவனாய், யதவாகாயமானஸஹ-வாக்கு, காயம், மனதை அடக்கியவனாய், நித்

யம் எப்போதும், த்யான யோக பரஹ-தியான யோகத்தில் நிலைத்திருப்பவனாய், வைராக்கியம்-வைராக்கியத்தை, சமாச்ரிதஹ-நன்கு கடைபிடிப்பவனும், அஹங்காரம்-அகந்தையை, பலம்-பலம், ஆசையின் வலிவையும், தர்பம்-செருக்கையும், காமம்-காமத்தை, க்ரோதம்-குரோதத்தை, பரிக்ரஹம்-உடைமையையும், விமுச்யஹ-நன்கு கைவிட்டு, நிர்மமஹ-மமகாரமற்று, சாந்தஹ-சாந்தமாய் இருப்பவன், ப்ரஹ்மபூயாய-பிரம்மமாவதற்கு, கல்தே-தகுதியுடையவனாகிறான்.

## சொற்பொருள்

தூய அறிவுடன் கூடியவன் உறுதியுடன் தன்னையடக்கியும், சப்தம் முதலிய இந்திரிய விஷயங்களைத் துறந்தும், விருப்பு வெறுப்பை விட்டொழித்தும், தனித்திருந்து, மிதமான உணவை யுண்டு, மனம், மொழி, மெய்யடக்கி, யாண்டும் தியான யோகத்தில் திளைத்திருந்து, வைராக்கியம் பூண்டவனாய், அகங்காரம், வன்மை, செருக்கு, காமம், குரோதம், உடைமை ஆகியவைகளை நீத்து மமகாரமற்று சாந்தமாயிருப்பவன் பிரம்மத்துடன் ஐக்கியமடைந்து பிரம்மாவதற்குத் தகுதியுடையவன் ஆகிறான். நன்கு கடைபிடித்தால் மோட்சத்தை எளிதில் அடையலாம். பலன் இரண்டும் இங்குக் கூறப்பட்டிருக்கின்றன. பிரம்மத்துடன் சேர்தல் என்ற உன்னதமான பலனைக் கொடுப்பவையாதலால் மோட்சத்தை நாடுவோர் சிரத்தையுடன் அவற்றை நன்கு பயின்று வருதல் வேண்டும்.

'விசுத்தயா' - 'சுத்தயா' எனாமல் 'விசுத்தயா' என்று சொல்வதால் புத்தி சற்றுத் தூய்மையாக இருந்தால் மட்டும் போதாது மிகவும் தூய்மையாக இருத்தல் வேண்டுமென்பதும் தெளிவாகிறது. நிர்மலமான கண்ணாடியில்தான் முகம் தெளிவாகத் தெரியுமல்லவா?

'த்ருத்யா' - மனம் எளிதில் உட்படுவதல்ல, அதனை வெல்வதற்கு, அடக்குவதற்கு எத்துனையோ தைரியம் தேவையாக இருக்கின்றது. ஆன்மா, கோழைகளால் அடையக் கருதுவதல்ல.

'கஸ்சித் தீரஹ்' என்பது போல் தைரியமுடையவனே மனதைத் தன்வயப்படுத்திக் கொண்டு ஆன்மாவை அடைவான்.

'ஆத்மானம் நியம்யச'-மனத்தையும் புலன்களையும் அடக்காவிட்டால் ஆன்மீகத் துறையில் வெற்றியடைய முடியாது. சிரமமான சாதகத்தில் மனது அடங்குதல் மிகவும் முக்கியமானது. நியம்ய என்பது மனதை நன்கு அடக்குதல் வேண்டுமெனக் கட்டளையிடுவது போல் ஆகிறது.

'சப்தாதீவிஷயாம் த்யக்த்வா' - சப்தம் போன்ற விஷயங்களின் பின்னால் ஓடுபவர்கள் ஒருநாளும் ஆத்மானுபாவத்தை அடைய முடியாது. மனமானது வெளிப்புறத்தைவிட்டு உள் திரும்பி தியானத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

'விவிக்த ஸேவீ' - தனியான இடத்தில் வசித்தல் வேண்டும். அல்லது வீட்டில் தியானத்திற்கு இடையூறு இல்லாத வகையில் ஓர் அறையைத் தயார் செய்து கொண்டு பிரம்ம நிட்டையில் ஈடுபடலாம். பலருக்கிடையில் தியானம் செய்தல் கடினம். மனம் ஒன்றுபடாது. எனவே தனிமையில்தான் செய்ய வேண்டும்.

'லக்வாஷீ' - மிதமான உணவையே உண்ண வேண்டும். அதிகமாகச் சாப்பிடுவதால் உடல் நலம் கெடுவது மட்டுமின்றி தியானம் கைகூடாது. உடல் எவ்வளவு மெலிந்துள்ளதோ அவ்வளவு நல்லது. ஆயின் வெற்று உபவாசங்கள் உதவாது. ஏற்ற உணவையேயுண்டு, மிதமான சாத்வீகமான ஆகாரத்தை உண்டு பயிற்சி செய்தால் நன்மை பயக்கும். எனவே சாதகர்கள் ஆகார நியமங்களைச் சரிவரக் கடைபிடித்தல் நன்று.

'யத வாக்காய மானஸஹ' - வாக்கும், உடலும், மனமும் தன் வயப்படுத்தப்படுதல் வேண்டும். மத யானையை யானைப்பாகன் அங்குசத்தால் வயப்படுத்திக் கொள்வது போலப் பயிற்சியாளன், பக்தி, ஞானம் முதலியவற்றால், விவேகத்தால் மேற்கூறிய மூன்றையும் தன் வயப்படுத்திக் கொள்ள வேண்டும். தன் சொற்படி நடக்க வேண்டுமேயன்றி அவற்றின் சொற்படி நாம் ஆடலாகாது.

'த்யான யோக பரே நித்யம்' - என்று சொல்வதால் சில சமயத்தில் தியான சீலனாய் தெய்வ சிந்தனையுடையவனாயும், பிற சமயங்களில் காட்சிப் பொருள்களில் ஈடுபாடு கொள்வது தகாது என ஆணையிட்டது போல் ஆகிறது. இத்தகைய நிலை துவக்கத்தில் சாத்தியமாகாவிட்டாலும், பயிற்சியினால் போகப் போகக் கிடைக்கும். தியானத்தினின்றும் மீண்டும் வரும் போதுகூட தியான காலத்தில் இருந்த சாத்வீகமான அமைதிச் சூழ்நிலையை வெளியிலும் பராமரித்துக் கொள்ள வேண்டும்.

'வைராக்யம் ஸமுபாஸ்ச்ரிதஹ்' - 'ச்ரிதஹ' ஆஸ்ரயித்தவன். ஆஸ்ரதிஹ - நன்றாகப் பின்பற்றியவன். உபாச்சரிதஹ - மேலும் நன்கு பின்பற்றுபவன். ஸமுவாச்ரிதஹ - முற்றிலுமாகக் கடைபிடிப்பவன்.

'ஸமுபாச்ரிதஹ' என்பதால் வைராக்கியத்தை முற்றிலுமாக நன்கு மேற்கொள்ளுதல் வேண்டுமெனப் போதிக்கப்பட்டது. ஏனெ னில் வைராக்கிய பலமற்றவனை மாயையானது ஒரு நொடியில் கீழே தள்ளிவிடும்.

'பலம்' - இங்கு 'பலம்' என்பதின் பொருள் தெய்வ பலம், அசுர பலம், மிருக பலம், காமக்குரோதம் முதலியவற்றின் பலம் இவற் றையே பெரிதாகக் கருதி தானே பகவான் என்று கருதுதல் கூடாது. நற்காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பலம் உத்தமமானது. முரட்டுப் பிடிப்புடன் காட்டும் பலம் ஒதுக்க வேண்டியதேயாகும். அவற்றை விட்டுத் தெய்வ பலத்தையே சம்பாதிக்க வேண்டும்.

காமக் குரோதங்கள் இரண்டும் எப்போதும் அண்ணன் தம்பிகள் போல் சேர்ந்தே வருகின்றன. ஏனெனில் குரோதத்தின் பிறப்பிடம் காமம். அவ்விரண்டையும் அழித்துவிட வேண்டும்.

'ப்ரிக்ரஹம்' - பிறரிடமிருந்து எதனையும் பெறுதல் கூடாது. தனது வயிற்றுக்குத் தேவையான 'பிட்சம்' முதலியவற்றைத் தவிர பிறவற்றை எவற்றையும் முமுட்சுவானவன் பெறுதல் கூடாது. அவ் வாறு வாங்குவதால் அவ்வப்பொருள்களைப் பற்றிய ஆசையால் மனத்தில் சஞ்சலம் ஏற்படும். பிறருடைய வினை தன்னைப் பற்றிக் கொள்வதுடன், போகப் பொருள்களால் சாதகம் கெட்டுவிடும். எனவே பிறரிடமிருந்து எந்தப் பொருள்களையும் பெறுதல் கூடாது. அகங்காரம் முதலிய தீய குணங்களுடன் பரிகிரஹமும் சேர்க்கப்பட் டிருப்பதால் அதுவும் ஏனையவற்றைப் போல் அபாயகரமானதென் பதும் - கடைப் பிடிக்கத் தக்கதல்ல என்பதும் தெளிவாகிறது.

'விமுச்ய' - என்பதால் மேற்கூறிய அகங்காரம் முதலிய தீய குணங்கள் அனைத்தையும் முற்றிலுமாக விட்டு விட வேண்டுமென போதித்தது போல் ஆகிறது.

'பிரஹ்ம பூயாய கல்பதே' - இங்குக் கூறப்பட்டவற்றை நன்கு பயில்வோன் எவராயினும் மோட்சத்தினைப் பெறுவதற்கு தகுதியு டையவர்களாவர்.

இம்மூன்று சுலோகங்களும் கீதையின் சாரமானதாதலால் முமுட்சுக்கள் இவற்றை நன்கு மனத்தில் இருத்தி, நன்கு கடைபிடித் துக் கடைத்தேறுதல் வேண்டும். இவற்றில் சில நற்குணங்களும், சில தீய குணங்களும் சொல்லப்பட்டன. அதாவது வியாதிக்கான மருந்து பத்தியம் இரண்டும் சொல்லப்பட்டன. இரண்டும் ஒருங்கே

இணைந்து செயல்பட்டால்தான் 'பவ'மென்னும் பிறவிநோய் தீரும்.

**வினா :** பிரஹ்ம சாட்சாத் காரத்திற்கு எவ்வெவ் சாதனைகளைச் செய்தல் வேண்டும்? எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டும்?

**விடை :** 1) புத்தியைத் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும்.
2) துணிவுடன் புலன்களையும் மனத்தையும் வயப்படுத்திக் கொள்ள வேண்டும்.
3) சப்தம், ஸ்பரிசம் முதலிய விஷயங்களை விட்டு விடுதல் வேண்டும்.
4) விருப்பு வெறுப்புகளை உதறித் தள்ள வேண்டும்.
5) தனிமையை நாடுதல் வேண்டும்.
6) மிதமான உணவை உட்கொள்ளுதல் வேண்டும்.
7) மனம், வாக்கு, காயம் இவற்றைத் தன் வசத்தில் வைத்திருத்தல் வேண்டும்.
8) இடைவிடாது தியான யோகத்தில் நிலைத்தல் வேண்டும்.
9) தீவிர வைராக்கியம் வேண்டும்.
10) அகந்தை, தீய செயல்களுக்காகப் பயன்படுத்தப்படும் பலம், ஆடம்பரம், காமம், குரோதம், பிறரிடமிருந்து எதனையும் பெறுதல் இவற்றை அறவே விட்டுவிடுதல் வேண்டும்.
11) மமதையை நீக்குதல் வேண்டும்.
12) அமைதியான மனத்தினனாய் இருத்தல் வேண்டும்.

**வினா :** புலன்களையும் மனத்தையும் அடக்குதல் எங்ஙனம்?

**விடை :** துணிச்சலுடன் அடக்குதல் வேண்டும்.

**வினா :** பிரஹ்மத்தை அடைவதற்குத் தகுதியானவன் யார்?

**விடை :** மேற்சொன்ன நற்குணங்களைக் கொண்டிருப்போர் எவராயினும் சரியே அவரே பிரம்மத்தை அடைவர்.

**முன்னுரை**

பிரம்மத்தை அறிந்த மகான் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதை அடுத்துத் தெரிவிக்கிறார்.

*ப்ரஹ்ம பூதஹ ப்ரஸன்னாத்மா ந சோசதி ந காங்க்ஷதி!*
*ஸமஸ் ஸர்வேஷு பூதேஷு மத்பக்திம் லபதே பராம்!! - (54)*

## சொற்பொருள்

*பிரஹ்ம பூதஹ-பிரம்ம வடிவத்தை (அல்லது பிரம்ம ஐக்கியத்தை) அடைந்தவன் (அதாவது ஜீவன் முக்தன்), ப்ரஸன்னாத்மா-நிர்மலமான (அமைதியான) மனமுடையவன் (ஆனவன்), நசோசதி-எதனைக் குறித்தும் வருந்தான். நகாங்க்ஷதி-எதனையும் விரும்பான், ஸர்வேஷு பூதேஷு-எல்லா உயிர்களிடத்தும், ஸமஹ-சமமான புத்தியுடையவனாய் (அவற்றையும் தன்னைப் போலவே எண்ணுவான்) ப்ராம்-மேலான, மத்பக்திம்-என்னிடத்தே பக்தியை (அனைத்தும் பிரம்மமே என்னும் எண்ணத்தை, லபதே-உடையவனாய் இருப்பான்.*

## கருத்துரை

*பிரம்ம வடிவத்தையடைந்தவனான ஜீவன் முக்தன், நிர்மலமான (அமைதியான) மனம் உடையவனாக எதனைக் குறித்தும் வருந்தாது எதனையும் விரும்பாது, எல்லா உயிர்களிடத்தும் புத்தியுடையவனாய் (அவற்றையும் தன்னைப் போலவே எண்ணி) என்னிடத்து மேலான பக்தியுடையவனாய் இருப்பான்.*

## விளக்கவுரை

*சலனமற்ற சித்தமுடையவனே பிரம்மத்தை அடைவான். தூய்மையற்ற மனமுடையவன் அல்லன். எனவேதான், 'பிரஸன்னாத்மா' எனப்பட்டது. இச்சுலோகத்தில் பிரம்மத்தை உணர்ந்தவன் எங்ஙனம் நடந்து கொள்வான் எனபது நன்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தகையோன் தூய்மையான மனத்துடனும் எதனையும் குறித்து வருந்தாது, எதனையும் விரும்பாது, எல்லா உயிர்களிடத்தும் சமமான புத்தியுடன் (பூதாதயையுடையவனாய்) மேலான பக்தியுடையவனாய்த் திகழ்வான்.*

*'ந சோசதி ந காங்க்ஷதி' - காட்சிவுலகமனைத்தும் தன்னிடத்திலேயே அடங்கியுள்ளது என்பதனை அறிந்தவனாதலால் அவன் இனி எதனைக் கோருவான்? எதற்காக வருந்துவான்? இவ்வுண்மை கீழ்க்கண்ட ஈசாவாசோபனிஷத் மந்திரம் தெரிவிக்கிறது.*

***"யஸ்மின் ஸர்வாணி பூதானி ஆத்மைவா பூத்விஜானதஹ
தத்ரகோ மோஹஹ கஹ சோக ஏகத்வ மனுபஸ்யதஹ"***

**-ஈசாவாஸ்யோபநிஷத்**

'சமஹஸர்வேஷு பூதேஷு' - ஆத்மானுபூதி, பிரம்மானுபவம் அடைந்தவனுக்கு அடையாளம் உயிர்கள் அனைத்திடமும் சமமான எண்ணம் கொண்டிருத்தல், தன்னைப் போலவே பிறவற்றையும் கருதுதல், ஞானம் அடைவதற்கு 'ஸர்வபூத தயை' உயிர்களிடத்துக் கருணை என்பது சின்னமாகும். அது இல்லையேல் முழுமையான ஞானம், ஆத்மானுவம் இன்னமும் ஏற்படவில்லை என்றுதான் பொருள். எனவே பிரம்மனை அடைந்தோன் எல்லா உயிர்களிடத்தும் சமமான எண்ணம் உடையவனாய் அவற்றிற்கு நன்மை செய்ப வனாய் இருப்பான் என்று பகவான் அருளிச் செய்துள்ளார்.

'மத் பக்திம் லபதே பராம்' - அத்தகைய பிரம்ம ஞானி என்னி டத்து மேலான பக்தியையுடையவன் ஆகிறான் என்று சொல்வதால் பக்தியின் உச்சநிலையில், ஞானநிலையில் பேதமில்லையென்பது தெரிகிறது.

பக்தி இரண்டு வகைப்படும். (1) சாதாரண பக்தி (2) பராபக்தி, இதில் இரண்டாவதான பராபக்தி ஞான நிஷ்டைக்குச் சமமனாதா கும்.

'ஸ்வஸ்வரூபாணு சந்தானம் பக்தி நித்ய அபி தீயதே' - என்ற சங்கரரின் கூற்றின்படி ஆன்மதத்துவத்தை இடைவிடாது சிந்தித்தி ருத்தலே பராபக்தியின் இலட்சணம். எனவே பராபக்திக்கும் ஞானத் திற்கும் பேதம் கிடையாது. மேலும் ஞானத்தையடைந்தவர் மேலான பக்தியுடையவராய் இருப்பர் என்ற உண்மை இங்கு வெளிப்படுகிறது. ஞானிக்கு ஆன்மாவிடத்து அனன்ய பக்தி வெளிப்படும்.

**வினா :** பிரம்மத்தை அடைந்தவன் எப்படியிருப்பான்?

**விடை :** (1) தூய்மையான மனத்தையுடையவனாய் இருப்பான். (2) எதற்கும் வருந்தான் (3) எதனையும் விரும்பான் (4) எல்லா உயிர்களி டத்தும் அன்பும் கருணையும் கொண்டு அவற்றைத் தன்னைப் போலவே பாவிப்பான்.

**வினா :** அத்தகைய பிரம்ம ஞானி எதனை அடைவான்?

**விடை :** மிகவும் மேலான பக்தியை இடைவிடாத மாறாத பக்தி பூண்டவனாய் இருப்பான்.

## முன்னுரை

பக்தியினால் ஞானமும், ஞானத்தினால் மோட்சத்தினையும் அடையலாம் என்கிறார்.

*பக்த்யா மாமபிஜானாதி யாவான்யஸ்சாஸ்மி தத்வதஹ!*
*ததோ மாம் தத்வதோ ஞாத்வா விசதே ததனந்தரம்!! (55)*

## சொற்பொருள்

பக்த்யா - பக்தியினால், மாம் - என்னை, தத்வதஹ - உள்ளபடி, யாவான் - எத்தன்மையனாகவும், சஅஸ்மி - யாராகவும் நான் இருக்கிறேன் என்று, அபிஜானாதி - அறிகிறான், ததஹ - அதன் பிறகு, மாம் - என்னை, தத்வதஹ - உண்மையாக உள்ளபடி, ஞாத்வா - அறிந்து, ததனந்தரம் - விரைவில், விசதே - (என்னில்) பிரவேசிக்கிறான்.

## கருத்துரை

நான் எத்தன்மையன், எவன் என்று பக்தியினால் ஒருவன் என்னை உள்ளபடி அறிகிறான்; உள்ளபடி அறிந்தபின் விரைவில் என்னை அடைகிறான்.

## விளக்கவுரை

இதற்கு முன் சுலோகத்தில் ஞான்த்தால் பக்தி ஏற்படுகின்றது என்று சொல்லப்பட்டது. இச்சுலோகத்தில் பக்தியினால் ஞானம் பிறக்கின்றதென்று சொல்லப்படுகின்றது. இதனால் பக்தி, ஞானம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன என்பது தெளிவாகிறது. பக்தி எளிதாக அனைவராலும் அடையக்கூடியது. பக்தியால் ஞானம் உண்டாவதால் கிட்டதட்ட எல்லா அத்தியாயங்களிலும் கீதையில் பக்தியைக் குறித்து விவரமாக இடம் பெற்றுள்ளது. பக்தியெனும் மலரே ஞானமெனும் பழமாக மாறும்.

'மாம் அபிஜானாதி' - ஜானாதி என்று சொல்லாமல் அபிஜானாதி என்று சொல்வதால் பக்தியால் மனிதன் இறைவனை நன்கு அறிந்து கொள்கிறான் என்று பொருள்.

'தத்வதஹ' - பகவானைப் பலரும் பலவாறு உணர்கிறார்களே தவிர உள்ளபடி உணர்பவர் மிகவும் அரிதானவரே. பக்தியினால் [illegible] அவனை உள்ளபடி உணர முடியும்.

'விசதே ததனந்தரம்' - ஆன்ம வடிவத்தை மனிதன் பக்தியினால் உணர்ந்த பிறகு அதனுடன் ஒன்றுகிறான். அதாவது அதனுடன் லயித்து விடுகிறான். உப்புக்கல் கடலில் கரைந்து விடுவது போல் அவன் பிரம்மத்தில் ஒன்றி பிரம்ம வடிவமாகவே எஞ்சுகிறான்.

''(ஞாதும், த்ரஷ்டும் சதத்வேன ப்ரவேஷ்டம் ச பரந்தப'' (11-54)

இதனின்றும் இறைவன் எத்தகையவன் என்பதனை நன்கு அறிந்த பிறகே அவனிடம் ஒன்றுதல் ஐக்கியமடைதல், நிகழும் என்பதும் அதற்கு முன்பேயல்ல என்பதனை 'அனந்தரம்' என்ற சொல்லினால் பகவான் தெளிவாக்குகிறார். அத்தகைய உண்மையான பகவத் தியானமோ பக்தியினால்தான் சித்திக்கும். இதனால் இரண்டு முக்கியமான விஷயங்கள் போதிக்கப்பட்டுள்ளன.

(1) ஞானத்தினால் முக்தி கிடைக்கின்றது. (2) அந்த ஞானம் பக்தியினால்தான் ஏற்படும் என்பது.

எனவே மோட்சத்தினைப் பெறுவதற்கு எல்லா ஜீவர்களுக்கும் பக்தி என்பது மிகவும் தேவையானது என்பது தெரிகிறது.

**வினா :** இறைவன் எத்தகையவன்? மனிதன் அவனை எதனால் அறிகிறான்.

**விடை : பக்தியினால்**

**வினா :** அவ்வாறு அறிந்த பிறகு அவன் என்ன செய்வான்?

**விடை :** இறைவனில் கலந்து விடுவான்.

**வினா :** பிரம்ம ஐக்கியம் எதனால் கை கூடும்?

**விடை :** இறை தத்துவத்தைப் பற்றிய ஞானத்தினால். அத்தகைய தத்துவ ஞானம் பக்தியினால் ஏற்படுகிறது.

**முன்னுரை**

இறைவனை நாடுபவனுக்கு இறைவனின் அருளினால் நிலையான மோக்ஷ நிலை கிட்டுமென்கிறார்.

*ஸர்வ கர்மாண்யபி ஸதா குர்வாணோ மத்வ்ய பாச்ரயஹ!*
*மத்ப்ரஸாதாதவாப்னோதி சாச்வதம் பதமவ்யயம்!!* (56)

## சொற்பொருள்

ஸர்வ கர்மாணி - எல்லாவிதமான கர்மங்களையும், சதா எப்போதும், குர்வாணகஅபி - செய்து வருபவன் ஆயினும், மத்வ்யபாச்ரயஹ - என்னையே சரணடைந்திருப்பவன், மத்ப்ரஸாதா - என் அருளால், அவ்யயம் - அழிவற்ற, சாச்வதம்பதம் - நிலையான மோக்ஷத்தினை, ஆப்னோதி - அடைகிறான்.

## கருத்துரை

எப்போதும் எல்லா கர்மங்களையும் செய்த போதிலும் என்னை சரணடைகிறவன் எனதருளால் சாத்வதமானது அழியாததுமாகிய பதத்தினை அடைகிறான்.

## விளக்கம்

பக்தியுடன் கர்மாக்களை செய்து வருவதால் ஜீவனுக்கு இறை அருள் கிட்டி மோக்ஷ பதவி கிடைக்குமென்று தெரிவிக்கப்பட்டது. ''சர்வ கர்மாண்ய அபி'' என்று சொல்லப்பட்டதன் பொருள் விதிப் படி கூறப்பட்ட எல்லாவிதமான கர்மங்களே அன்றி, தோஷத்துடன் கூடிய கர்மாக்கள் அல்ல. ஏனெனில் அவை முதலிலேயே ஒதுக்கப்ப பட்டுள்ளன. இந்திரியங்களால் எந்தெந்த கர்மங்களைச் செய்தாலும் இறைவனை எப்போதும் நினைத்த வண்ணமே இருப்பவன், அல்லது அக்கர்ம பலன்களை இறைவனுக்கே அற்பிப்பவன் இறை அருளுக்குப் பாத்திரமாகிறான். அதனால் அவனுக்கு மோக்ஷம் எளிதில் கிட்டுகிறது. எனவே பக்தியுடன் கர்மாக்களைச் செய்து வந்தால் அக்கர்மங்களே மனிதனை மோக்ஷத்திற்கு இட்டுச் செல்லும் என்பது தெளிவாகிறது. இறைவனைச் சரணடைந்தவன் அநேக காரியங்களைச் செய்து வந்தாலும் அதனால் எவ்விதத்திலும் கட்டுறுவதில்லை.

மேற்கூறிய இறையருளைப் பெற்றவன் அதனால் அழிவற்ற மோக்ஷ பதவியினை அடைகிறான். தலையில் நீர் குடத்தைச் சுமந்து நடனமாடும் ஒரு பெண் வாயினால் பாடிக் கொண்டும் கைகளாலும், கால்களாலும் நடனமாடிக் கொண்டும் முகத்தில் பாவனைகள் காட்டிக் கொண்டு இருப்பினும் அவளது மனம் மாத்திரம் தலையிலுள்ள நீர்க் குடத்தின் மீதே இருப்பதைப் போல் எல்லாவிதமான காரியங்களையும் எப்போதும் செய்து கொண்டிருப்பினும் எவனது மனம் இறைவனின் மீதே லயித்திருக்குமோ அவன் இறை அருளுக்கு பாத்திரமாகி மோக்ஷத்தை அடைகிறான் என்று இங்குக் கூறப்பட்டது.

இறைவனைச்சரணடையாது, பலா பலன்களை இறைவனுக்கு அர்ப்பியாது செய்யப்படும் காரிய கர்மங்களால் ஜீவன் வஞ்சிக்கப்படுகிறானோ ஒழிய மோக்ஷத்தினை அடைய முடிவதில்லை. எனவே தர்ம மார்க்கத்தினை அனுசரிப்போர் இக்கருத்தினை நன்கு மனத்தில் இருத்த வேண்டும்.

''மத்ப்ரஸாதாத்'' - இறையருள் இல்லாவிடில் மாயையின் பந்தத்தினின்றும் எவரும் தப்பிக்க இயலாது. மாயாதீனர்களான மக்கள் மாயாதீதன் ஆன ஈசுவரனின் அருளைப் பெறாவிடில் மாயையைக் கடத்தல் இயலாது (மாமேவ யே ப்ரபத்யன்தே மாயா மேதாம் தரந்தின்தே) எனவே அவனது அருளை முதன் முதலில் பெற வேண்டும். அது எங்ஙனம் கிடைக்கும்? இறைவனைச் சரணடைவதால் எல்லாக் கர்மங்களையும் இறையர்ப்பண எண்ணத்துடன் செய்வதால்; அத்தகையோரை அவன் கருணையுடன் அருள் புரிகிறானேயன்றி ஏனையோரை அல்ல. இதில் இறைவனுக்கு வேற்றுமை ஏதுமில்லை. யார் அவனை அண்டுகிறார்களோ அவர்களை அவன் அருள் கூர்ந்து மோட்ச நிலையை அளிக்கிறான். எனவே முதன்முதலில் இறைவனைச் சரணடைவதன் வாயிலாக அவனுக்கு அன்பு ஏற்படும் வண்ணம் கர்மாக்களைச் செய்து வருதல் வேண்டும்.

இவ்வாறு கிட்டும் மோட்ச பதவி எத்தகையது? சாசுவதமானது. அழிவற்றது. காட்சிப் பொருள்கள் எவ்வளவு சிறந்ததாயின் அவை நிலையானவையல்ல. அது அத்தனை சிறந்ததாயினும் அவை தேசகாலங்களுக்கு உட்பட்டவையேயாகும். எனவே அனைத்திலும் சிறந்த மோட்ச பதவிக்காக அனைவரும் இடைவிடாத பக்தி பூண்டு முயற்சித்தல் வேண்டும்.

**வினா :** மோட்சம் எத்தகையது?

**விடை :** நிலையானது, அழிவற்றது.

**வினா :** அதனைப் பெறுதல் எங்ஙனம்?

**விடை :** இறையருளால் (மதிப்ரஸாததா)

**வினா :** இறையருள் எவ்வாறு கிட்டும்?

**விடை :** இறை பக்தியினால்.

**வினா :** மோட்சம் பெறுவதற்காகக் கர்மாக்களை விட்டு விட வேண்டுமா?

**விடை :** இல்லை. எல்லா கர்மாக்களையும் எப்போது செய்தாலும் இறைவன் மீது மனம் இலயித்திருக்குமானால் அவன் அருளால் மோட்சம் கிட்டும்.

**வினா :** கர்மாக்களை எங்ஙனம் செய்தல் வேண்டும்?

**விடை :** இறைவனைச்சரணடைந்து அவனுக்குப் பிடித்தமான வகையில் இச்சையின்றி அவனுக்கே அர்ப்பித்து கர்மாக்களைச் செய்து வரல் வேண்டும்.

**முன்னுரை**

கர்மாக்களை அவனுக்கே அர்ப்பித்து மனத்தை அவன் மீது நிலைபெறச் செய்தல் வேண்டுமென்கிறார் -

*சேதஸா ஸர்வகர்மாணி மயி ஸன்யஸ்ய மத்பரஹ!*
*புத்தியோக முபாச்ரித்ய மச்சித்தஹ ஸததம் பவ!! (57)*

**சொற்பொருள்**

ஸர்வகர்மானி - எல்லா கர்மங்களையும் (கர்ம பலன்களை) சேதஸா - விவேகத்துடன் கூடிய புத்தியினால், மயி - என்னிடத்தே, ஸன்யஸ்ய - சமர்ப்பித்து, மத்பரஹ - என்னையே இறுதியான அடையும் பொருளாகக் கருதி, புத்தியோகம் - ஒருமித்த மனத்துடன் கூடிய தத்துவ சிந்தனையை (அல்லது தியான யோகத்தை) உபாச்ரித்ய கடைபிடித்து, ஸததம் - எப்போதும், மத்சித்தஹ - என்னுள் மட்டும் மனத்தைச் செலுத்தியவனாய், பவ - ஆகுக.

**கருத்துரை**

விவேகத்தால் கர்மங்களையெல்லாம் என்பால் ஒப்படைத்து, என்னையே குறியாகக் கொண்டு, புத்தி யோகத்தை அல்லது தியான யோகத்தைச் சார்ந்திருந்து, எப்போதும் சித்தத்தை என்பால் வைப்பாயாக.

**விளக்கவுரை**

'சேதஸா' சரீரத்தால் எல்லாவிதமான கர்மங்களையும் செய்து கொண்டிருப்பினும், மனத்தால் அக்கர்மாக்களை இறைவனுக்கே அர்ப்பித்து அவனிடத்து மனத்தை லயிக்கும்படிச் செய்தல் வேண்டும். 'சேதஸா' என்பதால் கர்மபலனைத் துறத்தலைப் பற்றியே

இங்குப் போதிக்கப்பட்டதேயன்றி கர்மாவைத் துறத்தலைப் பற்றி அல்ல. சரீரம் சலனமற்று எவ்வித கர்மாக்களைச் செய்யாதிருப்பி னும் மனம் வெளியுலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பின் அதனால் எவ்வித பலனும் கிடையாது. அவ்வாறின்றி உடலால் பலவித கர் மாக்களைச் செய்து கொண்டிருப்பினும் மனத்தால் அக்கர்ம பலனை இறைவனுக்கு அர்ப்பித்தால் அது மோட்சத்திற்கு வழிகோலும். எனவே இங்கு 'சேதஸா' எனக் கூறப்பட்டது. 'புத்தியோகம்' - அன்புடன் பக்திபூர்வமாகத் தன்னைச் சேவிப்போர்க்கு புத்தி யோகத்தை அளிப்பேன் என்று 10-ஆம் அத்தியாயத்தில் பகவான் தெரிவித்திருக்கிறார் (ததாமி புத்தியோகம்) அதாவது மன ஒருமைப் பாடு, தத்துவ சிந்தனையில் ஆற்றல் அவனுக்கு பகவானின் அரு ளால் கிடைக்கும். அதனை நன்கு கடைபிடித்து எப்போதும் மனதை அந்தப் பரம்பொருளிடம் நிலைபெறச் செய்தல் வேண்டுமென இங் குக் கூறப்பட்டது. 'ஸததம்' என்பதால் எக்காலத்தும் தெய்வத்தை மறக்காது ஆன்மாவில் லயிக்குமாறு பார்த்துக் கொள்ள முயற்சி தேவையாக இருக்கிறது. ஏனெனில் மாயை ஜீவனைப் பாழாக்குவ தற்கு எனவே காத்திருக்கிறது. அவன் சிறிது எச்சரிக்கை குறைவாக இருந்த போது அவனைச் சூழ்ந்து கொண்டு இருளில் (அஞ்ஞானத் தில்), விஷய சுகங்களில் தள்ளிவிட சித்தமாக இருக்கிறது. எனவே பயிற்சியாளர்கள் 'ஸததம்' என்ற சொல்லை மனத்தில் இருத்தி இறைவனை எக்காலத்தும் மறவாதிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

'மத்பரஹ' - உலகிலுள்ள காட்சிப் பொருள்கள் யாவும் அழியக் கூடியவை. எனவே அறிவுடையோன் நிலையான பரம்பொரு ளையே அடையக்கூடிய குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும்.

**வினா :** இறைவனை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும்?

**விடை :** (1) மனத்தால் முழுமையாக எல்லாவிதமான கர்மாக்களை யும் இறைவனுக்கே அர்ப்பித்தல் வேண்டும்.

(2) அவனையே அடையத்தக்கவனாக எண்ணிக் கொள்ள வேண்டும்.

(3) புத்தி யோகத்தை நன்றாகக் கடைபிடித்தல் வேண்டும்.

(4) இறைவனிடத்து மனத்தை லயித்திடச் செய்தல் வேண்டும்.

**வினா :** பகவான் கர்ம ஸந்நியாசத்தைப் போதித்துள்ளாரா?

**விடை :** 'சேதஸா' (மனத்தால் எல்லாவிதமான கர்மங்களையும் இறைவனுக்கே அர்ப்பித்து) என்பதால் உடலால் கர்மாக்களைச் செய்து கொண்டிருப்பினும் கர்ம பலனை இறைவனுக்கு அர்ப்பிக்க வேண்டுமெனப் போதிக்கப்பட்டிருக்கிறது.

**வினா :** மனிதன் எதனை அடையத் தக்கதாகக் கொள்ள வேண்டும்? எதனால்?

**விடை :** பரமாத்மாவையே அடையத் தக்கவனாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவனே நிலையானவன்.

**முன்னுரை**

இவ்வாறு இறைவனிடத்தே மனத்தை லயிக்கச் செய்வோர்க்கு இறைவனருளால் எல்லா துக்கங்களும் அகன்றிவிடுமென்று கூறுகிறார்.

*மச்சித்தஹ ஸர்வதுர்காணி மத்ப்ரஸாதாத் தரிஷ்யஸி!*
*அத சேத் த்வமஹங்காரந்ந ச்ரோஷ்யஸி விநங்க்ஷ்யஸி!!* (58)

**சொற்பொருள்**

மத்சித்தஹ - சித்தத்தை என்பால் வைத்து, மத்ப்ரஸாதாத் - என்னருளால், ஸர்வதுர்காணி - எல்லாவிதமான இடர்ப்பாடுகளையும், தரிஷ்யஸி - கடந்திடுவாய், அதஹ - இனி அவ்வாறின்றி, த்வம் - நீ, அகங்காராத் - அகந்தையால், நஸ்ரோஷ்யஸி ச - (என்னுடைய இந்தச் சொற்களை) கேட்காமல் இருப்பாயாயின், வினங்கக்ஷ்யஸி - அழிவடைவாய்.

**கருத்துரை**

சித்தத்தை என்பால் வைத்து எனதருளால் இடர்ப்பாடுகளையெல்லாம் கடந்து செல்வாய். அவ்வாறின்றி நீ அகங்காரத்தால் என் சொற்களைக் கேட்காமல் இருப்பாயாயின் கேடு அடைவாய்.

**விளக்கவுரை**

உலகில் அனைவரும் தங்களுக்குத் துக்கங்கள் எதுவும் ஏற்பட்டு விடக் கூடாதென்றும் சுகங்களே சம்பவிக்க வேண்டுமென்றே விரும்புவர். ஆனால் அதனைப் பெறுவதற்கு வேண்டிய சாதனைகளை மட்டும் செய்வதில்லை. சுகத்தினைப் பெறுவதற்கான

சாதனை எதுவோ அதனை இங்கு பகவானே பக்தர்கள்பால் கருணை கொண்டு தெரிவித்துள்ளார். இறைவனிடத்து எவர் தன் மனத்தை லயிக்கச் செய்கிறார்களோ அதாவது எவர் காட்சிப் பொருள்களில் விஷயங்களின் மீது மனத்தை ஈடுபடுத்தாமல் ஆன்மாவில் நிலைபெறச் செய்கிறார்களோ, அவர்களுக்கு இறையருளால் எல்லாவிதமான துக்கங்களும் இடர்ப்பாடுகளும் அழிந்து விடும். 'ஸர்வ' என்ற சொல்லைப் பயன்படுத்துவதால் ஏதோ சில துக்கங்கள் மட்டுமல்ல எல்லாவிதமான ஆபத்துக்களும், துக்கங்களும் அகன்று விடுமென்பது பொருள்.

'துர்காணி' - துர்கம் என்றால் கோட்டையென்றும், இடர்ப்பாடு என்றும் பொருள். மாயையானது ஜீவனைச் சுற்றிலும் பலவிதமான தடுப்புச் சுவர்களை, துக்கங்களை, இடையூறுகளை, தடைகளை ஏற்படுத்தி வைத்திருக்கிறது. சம்சாரமெனும் சங்கிலியால் பிணைத்து வைத்திருக்கிறது. அத்தகைய கோட்டைகளை இடிப்பதற்கு உலகியல் உபாயங்கள் ஏற்றவையல்ல. மாயையை வெல்ல வேண்டுமாயின் மாயையை ஆள்பவனே கதி. எனவே துக்கத்தை அழிப்பதற்கு சுகானுபவம் பெறுவதற்கு இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொள்வது மட்டுமே, இறைவனை தியானிப்பது ஒன்றே வழி, வேறு வழியெதுவும் இல்லை.

'மத்ப்ரஸாதாத்' - என்னுடைய அருளால் துக்கங்களை கடக்க முடியும். இறைவனுக்கு அனைவரும் சமமேயானாலும் அவனை யார் பக்திபூர்வமாக தியானிக்கிறார்களோ அவர்கள்பால் அவனது திருவருள் பெருகும். காற்று எங்கும் ஒரே மாதிரியாக வீசினாலும் படகின் பாய் மரத்தை எடுக்கின்றனரோ அவர்களது படகே நகரும். மரத்தின் கீழ் எவர் அண்டுகின்றனரோ அவர்களுக்கு மாத்திரமே மரம் நிழல் அளிக்கும். எனவே சுகானுபவத்தைப் பெற வேண்டுமாயின் இறைவனை அண்டுவதைத் தவிர வேறு வழியில்லை.

ஒருவனை எவராயினும் அகங்காரத்தினாலோ, அல்லது செல்வச் செருக்கினாலோ, அதிகாரகர்வத்தினாலோ பகவானின் இவ்வாக்கியத்தின் மீது நம்பிக்கை இல்லாதிருப்பின், அல்லது இவ்வாக்கியத்தினைக் கேளாது இருப்பின் அவர்கள் அழிந்து விடுவாரென்றும், சம்சாரக் கிணற்றில் விழுந்து பல்வேறு துன்பங்களை அடைவார்கள் என்றும் இங்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே பகவானின் இவ்வாக்கியங்களைச் சிரத்தையுடன் கேட்டு, அவற்றைச் செயலில் கடைபிடித்துக் கடைத்தேறுவது உயிர்களின் கடமையாகும்.

**வினா :** உயிர்களின் சம்சார துக்கங்கள் எவ்வாறு அழியும்?

**விடை :** இறைவனிடம் மனத்தை லயிக்கச் செய்யின் எல்லாவித மான இடர்ப்பாடுகளும் விலகிவிடுகின்றன.

**வினா :** அங்ஙனம் இறைவனின் வாக்கியங்களைக் கேளாதோரின் கதி என்ன?

**விடை :** அவர்கள் சம்சார துக்கங்களின் சிக்கி வயப்படுகின்றனர். அழிந்து விடுவர்.

**வினா :** அவ்வாறு அவர்கள் கேளாமல் இருப்பதற்குக் காரணமென்ன?

**விடை :** அகந்தையினால், கர்வத்தினால் உந்தப்பட்டு அவர்கள் அங் ஙனம் கேளாமல் இருப்பர்.

முன்னுரை

ஒருகால் அகந்தையினால் இந்த வாக்கியங்களைக் கேளாமல் நான் போர் புரிய மாட்டேன் என்று நீ சொன்னாலும் இயற்கையே உன்னைக் கொண்டு போர் புரிய வைக்குமென்று பகவான் அர்ஜுன னிடம் கூறுகிறார்.

*யதஹங்காரமாச்ரித்ய நயோத்ஸ்ய இதி மன்யஸே'*
*மித்யைஷ வ்யவஸா யஸ்தே ப்ரக்ருதிஸ்த்வாம் நியோக்ஷ்யாதி!! - (59)*

சொற்பொருள்

யதி - ஒருகால், அகங்காரம் - அகங்காரத்தை, ஆச்ரித்ய - அடைந்து, நயோத்ஸ்யே - இதி - யுத்தம் செய்யமாட்டேனென்று, மன்யஸேயே - நினைப்பாயாகில், யேஷஹ தே வீயவஸாயஹ - இந்த உன் முயற்சி யானது, மித்யா - வீணானதேயாகும், ப்ரக்ருதிஹ - உன்னுடைய (க்ஷத்திரிய) இயல்பே, த்வாம் - உன்னை, நியோக்ஷிய - பிணித்து இருக்கும்.

கருத்துரை

அகங்காரம் கொண்டு போர் புரியேன் என்று நினைப்பாயாகில் உன் முயற்சியானது வீணாகும். உன் (க்ஷத்திரிய) இயல்பே உன் னைப் போரில் பிணித்து விடும்.

**விளக்கவுரை**

*நானே கர்த்தா என்ற எண்ணத்தை விட்டு க்ஷத்திரியர்களுக்கு ஏற்ற தர்மப்போர் புரிவாயென்று அர்ஜுனனுக்கு இதற்கு முன்பே பகவான் தெரிவித்துள்ளார். இப்போது, அர்ஜுனா! அகந்தையினால் இவ்வாக்கியங்களை மீறினால் உன் முயற்சி வீணாகும். உன்னுடைய க்ஷத்திரிய் இயல்பே வலுக்கட்டாயமாக உன்னைப் போரில் ஈடுபடுத்தி விடுமென்று முக்காலத்தையுமுணர்ந்த பகவான் கூறுகிறார்.*

**முன்னுரை**

*மனிதன் தான் ஒரு வேலையைச் செய்யக் கூடாதென்று நினைத்தாலும் அவனுடைய இயல்பான ஸ்வபாவத்தினால் செய்தே தீருவான் என்கிறார்.*

*ஸ்வபாவஜேன கௌந்தேய நிபத்தஹ ஸ்வேன கர்மணா!*
*கர்தும் நேச்சஸி யன்மோஹாத் கரிஷ்யஸ்யவ சோஅபிதத்!! (60)*

**சொற்பொருள்**

*கௌந்தேய! - அர்ஜுனனே!, ஸ்வபாவஜேன - முன்பிறவியின் வாசனையால் விளைந்த இயல்பினால், ஸ்வேன - உன்னுடைய, கர்மணா - கர்மாவினால், நிபத்தம் - நன்கு, கட்டுண்டவனாய், மோஹரத் - (மோகத்தினால்) விவேகமின்மையால், யத் - எதனை, கர்தும் - செய்வதற்கு, ந இச்சஸி - விரும்பமாட்டாயோ, தத்அபி - அதனையும் கூட, அவஸஹஅபி - உன் வசத்தில் இன்றி கர்மத்தின் வயப்பட்டு, கரிஷ்யஸி - செய்வாய்.*

**கருத்துரை**

*அர்ஜுனனே! உன் இயல்பில் பிறந்த வினையினால் கட்டுண்டு எதனைச் செய்வதற்கு மறுக்கிறாயோ, மயக்கத்தால், உன் வசமிழந்து, கர்மத்தின் வயப்பட்டவனாய் அதனையே நீ செய்வாய்.*

**முன்னுரை**

*'நிபத்தஹ' - மனிதன் தன் கர்மாவினால் கட்டுண்டு கிடக்கிறான். 'பத்தஹ' எனாமல்; 'நிபத்தஹ' என்பதால் நன்கு கட்டுண்டு கிடக்கிறான் என்பது பொருள். முற்பிறவியின் வாசனையால் அர்ஜுனன் போர் புரிந்தாக வேண்டியிருக்கிறதென்று முக்காலங்களையு*

ணர்ந்த பகவான் கூறுகிறார். எனவே நீ போர்புரியமாட்டேன் என்று கூறினாலும் வாசனைகளின் தாக்கத்தால் போர் புரிந்தே தீருவாய் என்று அர்ஜுனனுக்குத் துணிவுடன் கூறுகிறார். இதனால் நாம் செய்யும் முயற்சியாவும் வீணே என எவரும் நினைக்கலாகாது. மனிதனுக்கு (1) முற்பிறவி வாசனை (2) இப்பிறவியில் தான் செய்யும் முயற்சி என்ற இரண்டும் இருக்கின்றன. ஜீவனிடத்தே இவ்விரண்டிற்குமிடையே போராட்டம் நடந்து கொண்டேயிருக்கும். இப்பிறவியின் முயற்சி அதிகமாக இருப்பின் முற்பிறவி வாசனையை வென்று விட முடியும். ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய முற்பிறவி வாசனை எப்படிப்பட்டது என்பது தெரியாது. ஆதலால் தீவிரமான முயற்சியை மேற்கொண்டு இப்பிறவியில் தெய்வீகப் பண்புகளையே கைக் கொண்டால் முற்பிறவியின் தீயபண்புகளை இவை வென்றுவிடும். இப்போதைய முயற்சி அதிகமாக இல்லாவிடில் முற்பிறவி வாசனைகளே வென்றுவிடும். எனவே ஜீவனானவன் மிகுந்த எச்சரிக்கையுடன் முயற்சிபூர்வமாக தெய்வீகப் பண்புகளைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வினா : மனிதன் எதனால் கட்டுண்டு இருப்பான்?

விடை : தனது ஊழ்வினையால்

வினா : எதனால் முக்தியடைவான்?

விடை : இப்பிறவியில் மேற்கொள்ளும் முயற்சியால்.

முன்னுரை

இறைவன் தனது மாயையயினால் எல்லா உயிர்களையும் விசை பொம்மைகளைப் போல் ஆட்டுவிக்கிறான் என்று கூறுகிறார்.

*ஈச்வரஹ ஸர்வபூதாணாம் ஹ்ருத்தே அர்ஜுன திஷ்டதி!*
*ப்ராமயன் ஸர்வபூதாணி யந்த்ராரூடாணி மாயயா!!* (61)

சொற்பொருள்

*அர்ஜுனா* - ஏ அர்ஜுனனே! *ஈச்வரஹ* - உலகத்தைக் காப்பாற்றும் பரம்பொருள் (எங்கும் நிறைந்தவன்), மாயையா - மாயையினால், ஸர்வபூதானி - எல்லா உயிர்களையும், யந்த்ரா ரூடானி (இவ்) - யந்திரத்தில் பொருத்தப்பட்ட பொம்மைகளைப் போல், ஸர்வபூதானி எல்லா உயிர்களையும், ப்ராமயன் - சுழற்றிக் கொண்டு ஹ்ருத்தேஹே - இதயத்தில், திஷ்டத் - நிற்கிறான்.

**கருத்துரை**

ஏ அர்ஜுனா! உலகத்தை காப்பாற்றும் ஈசுவரன் உயிர்களை யெல்லாம் இயந்திரத்திலேற்றி மாயையினால் ஆட்டிப் படைத்துக் கொண்டு அவற்றின் இதயத்தில் இருக்கிறான்.

**முன்னுரை**

ஈசுவரன் எங்கேயிருக்கிறான்? என்ன செய்து கொண்டிருக்கி றான் என்ற கேள்விகளுக்கு இங்கு விடையளிக்கப்பட்டிருக்கிறது. இறைவனை மிக்க தொலைவில் இருப்பதாக நினைப்பது மடமை யேயாகும். அவன் உயிர்களுக்கு மிக அருகில் இதயத்தில் (ஆன்ம வடிவில்) குடியிருக்கிறான். எனவே 'ஸர்வபூதானாம் ஹ்ருத்தேஷ' என்று கூறப்பட்டது. எனவே இறைவனை உணர்ந்து எப்போதும் பாவங்களைச் செய்யாமல் பக்தியுடன் இருத்தல் வேண்டும். உயிர் கள் எல்லாச் செயல்களையும், எல்லா எண்ணங்களையும் இறைவன் காட்சியாக நின்று எப்போதும் பார்த்துக் கொண்டேயிருப்பான் என் பதை எவரும் மறத்தல் கூடாது. ஈசுவரன் என்றால் தலைவன். காப் பாற்றுபவன், நெறிப்படுத்துபவன், காப்பாற்றுகிறான். அவரவர் கர்ம வினைகளுக்கேற்ற பலன்களை அளிப்பான். அரசு ஆணையை மீறும் மக்களுக்கு எவ்வாறு தண்டனை கிடைக்குமோ அவ்வாறே இறைவனுடைய தர்மத்தை மீறினால் மனிதன் தண்டனைக்குட்ப டுத்தப்பட்டுத் தனது தீவினையின் பயனை, துக்கத்தையனுபவிப் பான். எனவே இதயத்தின் உள்ளிருக்கும் ஈசுவரனை நினைந்து தர் மத்தை, சத்தியத்தை எவரும் மீறலாகாது.

இறைவன் எங்கிருக்கிறான், வைகுண்டத்திலா? கைலாசத் திலா, பாதளத்திலா அல்லது பிற உலகங்களிலா? அவர் எங்கும் குடியிருப்பார். மிக அருகில் இதயத்திலும் இருப்பார். எனவே அத்த கைய பரம்பொருளை எப்போதும் பக்தியுடன் தொழுத வண்ணம் இருத்தல் வேண்டும். 'ஸர்வபூதானாம்' என்பதால் இறைவன் எல்லா உயிர்களிடத்தும் இருப்பான் என்பது தெளிவாகிறது. எனவே இறை வன் எறும்பிலும், கொசுவிலும், பசுவிலும் கூட இருக்கிறார். ஆனால் எவனது உள்ளம் தூய்மையாக உள்ளதோ அங்கு அவர் நன்கு ஒளிர்வார்.

'யந்த்ராரூடானி' - ஈசுவரன் மாயையின் வாயிலாக எல்லா உயிர் களையும் சம்சாரமெனும் யந்திரத்தில் இட்டுச் சுழற்றுகிறார். யந்தி ரத்தில் சிக்கிய எறும்போ, புழுவோ அந்த சக்கரத்தினூடே சிக்கிச்

சுழல்வதைப் போல் உயிர்களும் மாயையெனும் சக்கரத்தில் சிக்கிச் சுழல்கின்றன. அதனின்றும் தப்பிப்பதற்கான வழி அடுத்த சுலோகத்தில் சொல்லப்படுகிறது. அந்த யந்திரத்தை இயக்குபவனை அண்டியிருப்பதே அதற்கான வழி.

'மாயையா' - என்பதால் இறைவன் சம்சார சக்கரத்தினைச் சுழற்றிக் கொண்டிருப்பினும், மாயையின் உதவியால் அதனைச் செய்வதால் அவர் கர்த்தா ஆவதில்லை. அவன் சாட்சியாகவே நிற்கிறான்.

**வினா :** இறைவன் எங்கே உறைகிறான்?

**விடை :** கோடிக்கணக்கான உயிர்களின் இதயத்தில் உறைகிறார்.

**வினா :** அங்கு என்ன செய்கிறார்?

**விடை :** சம்சார சக்கரத்தில் எல்லா உயிர்களையும் இட்டுச் சுழற்றிக் கொண்டிருக்கிறார்.

**வினா :** எதைக் கொண்டு?

**விடை :** மாயையின் சக்தியினால்.

**வினா :** எங்ஙனம்

**விடை :** சக்கரத்தில் சிக்கிய புழுக்களைப் போல்.

## முன்னுரை

சம்சார சக்கரத்தில் சுழலும் உயிர்கள் மோட்சத்தை, அடைவது எங்ஙனம் என்பதை அடுத்துக் கூறுகிறார்.

*தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேன பாரத!*
*தத் ப்ரஸாதாத்பராம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்ஸ்யஸி சாச்வதம்!!* (62)

## சொற்பொருள்

பாரத - அர்ஜுனா!, ஸர்வபாவேன - எல்லா வகையிலும், தத்ஏவ - இதயத்தில் இருப்பவனாகிய) அந்த இறைவனையே, சரணம் கச்ச - சரணடைவாயாக. தத்ப்ரஸா தாத் - அவனது அருளால், பராம் - மேன்மையான, சாந்திம் - அமைதியை, ஸாஸ்வதம் - நிலையான, ஸ்தானம் - மோட்சத்தினை, ப்ராப்ய்யஸி - அடைவாய்.

**கருத்துரை**

*அர்ஜுனா! எல்லா வகையிலும் அவனையே தஞ்சமடைவாயாக! அவனருளால் மேலான அமைதியையும், நிலைத்துள்ள வீடுபேற்றையும் அடைவாய்.*

**விளக்கவுரை**

*இதற்கு முன் சுலோகத்தில் உயிர்கள் சம்சார சக்கரத்தில் சிக்கிக் கொண்டு சுழல்கிறார்கள் எனச் சொல்லப்பட்டது. அதனின்றும் அவர்கள் தப்பித்துக் கொள்வதெப்படி விடுதலை பெறுவது எங்ஙனம் என்பதற்கான விடை இங்குச் சொல்லப்படுகிறது. எல்லா உயிர்களின் இதயத்திலும் எந்தப் பரம்பொருள் வசிக்கிறானோ அவனை எல்லா வகையிலும் சரணடைவதே, பந்தங்களிலிருந்தும் விடுதலை பெற ஒரே வழி என்பது தெரிவிக்கப்பட்டது. இயந்திரத்தை நிறுத்த வேண்டுமாயின் இயக்குபவனை நாட வேண்டும். சம்சார இயந்திரத்தைச் சுழற்றுபவனோ சாட்சாத் இறைவனே என முன் சுலோகத்தில் கூறப்பட்டது. '(ஈஸ்வர ப்ராமயர் ஸர்வபூதானி யந்த்ராரூடானி)' எனவே அவனையே ஜீவன் சரணடைய வேண்டியிருக்கிறது. இல்லையேல் மாயை அவனுக்கு வழிவிடாது. மாயை இறைவனின் சக்தி அன்றி வேறெதற்கும் கட்டுப்படாது. உலகியல் சக்திகளனைத்தும் மாயாசக்திக்கும், மாயாசக்தி தெய்வசக்திக்கும் உட்பட்டிருக்கின்றன. மாயைக்குட்பட்ட உயிர்கள் மாயா மோகத்தை, சம்சார சக்கரத்தின் சுழற்கியைக் கடந்துவிட வேண்டுமாயின் மாயையை ஆள்பவனாகிய பரமாத்மாவைச் சரணமடைய வேண்டும். அந்த விஷயமே இச் சுலோகத்தில் தெரிவிக்கப்பட்டது.*

*'ஸர்வ பாவேன' என்று சொல்வதால், இதயத்தில் நிலைத்துள்ள பரமாத்மாவை எல்லா வகையிலும் முழு மனத்துடன் சரணடைய வேண்டுமென்பது தெளிவாகிறது. உடல், வாக்கு, மனம் ஆகிய எல்லாவற்றாலும் முழுமையாகச் சேவிக்க வேண்டுமென்பது பொருள். காட்சிப் பொருள்களில் மனத்தை செலுத்தலாகாது.*

*'தத் ப்ரஸாதாத்' - மோட்சத்திற்கு இறைவனருள் மிகவும் அவசியம். அதனைப் பெறாமல் வேறெந்த வழிகளைக் கையாண்டாலும் மாயா பந்தம் விலகாது. அதனை இறைவனைச் சரணடைவதால் தூய பக்தியுடன் வழிபடுவதாலும் பெறலாம். அவன் அருளால் ஜீவனுக்கு மேலான அமைதியும் நிலையான மோட்ச பதவியும் கிட்டும். ஆஹா! எத்தனை சிறந்த பலன்! எனவே ஜீவனின் முதற்*

கடமை ஈசுவரனைச் சரணடைவதேயாகும்.

'பராம் சாந்திம்' - மோட்ச பதவி மிகவும் அமைதியானது. துக்கம் அறவேயில்லாதது. அத்தகைய முழு அமைதி எந்த உலகிலும் கிடையாது. அந்த பூரண அமைதியைப் பெறுவதற்கு, இறைவனைச் சரணடைய வேண்டும். ஆனால் அதனை அடைவதற்கு ஏற்ற விலையைக் கொடுக்க வேண்டும். காட்சிப் பொருள்களின் மீதான இச்சையைத் துறந்து முழு மனத்துடன் இறைவனைச் சரணடைவதே அந்த விலை.

'சாஸ்வதம்' என்பதால் தெய்வ நிலை காலத்தைக் கடந்தது என்பது விளங்குகின்றது. அழிவற்றதான, அதனைப் பெறுவதற்கு மிகவும் மேன்மையான இம்மனிதப் பிறவியை அர்த்தமுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டும், பக்தியுடன் செயல்பட வேண்டும்.

**வினா :** பரம்பொருள் நிலை எத்தகையது?

**விடை :** (1) பூரணமான அமைதியின் இருப்பிடம். (2) நிலையானது.

**வினா :** அது எதனால் கிடைக்கும்?

**விடை :** இறையருளால்.

**வினா :** இறையருள் எங்ஙனம் கிட்டும்.

**விடை :** முழுமையாக இறைவனைச் சரணடைந்தால் கிட்டும்.

### முன்னுரை

இதுவரை சொன்ன போதனைகளை நன்கு சிந்தித்துத் தனக்கு எது ஏற்றதோ அதனை ஏற்குமாறு பகவான் அர்ஜுனனுக்குப் புத்தி புகட்டுகிறார்.

*இதி தே ஞானமாக்யாதம் குஹ்யாத் குஹ்யதரம்மயா!*
*விம்ருச்யைததசேஷேண யதேச்சஸி ததாகுரு!! (63)*

### சொற்பொருள்

இதி - இங்ஙனம், குஹ்யாத் - இரகசியங்களில், ருஹ்யதரம் - இரகசியமான, ஞானம் - ஞானம் (கர்ம, பக்தி, தியான, ஞான, வைராக்கியம் முதலிய போதனைகளுடன் கூடிய இந்த கீதா சாஸ்திரம்), மயா - என்னால், தே - உனக்கு, ஆஹ்யாதம் - சொல்லப்பட்

டது, ஏதத் - இதை, அசேஷண - முழுமையாக, விம்ருக்ய - விமர்ச னம் செய்து, யதா - எப்படி, இச்சஸி - இச்சிக்கிறாயோ, ததா - அப்படியே, குரு - செய்வாயாக.

## கருத்துரை

மறைபொருள்களுக்கெல்லாம் மறை பொருளாகிய ஞானத்தை (கீதா சாஸ்திரம்) உனக்கு நான் சொன்னேன். இதனை முழுதும் நன்கு ஆராய்ந்து நீ விரும்பியதைச் செய்.

## விளக்கவுரை

'குஹ்யாத் குஹ்யதாம்' - ஸ்ரீ கிருஷ்ணர் கீதா சாஸ்திரத்தை உபதேசித்து இறுதியில் அதனை மிகவும் இரகசியமான வித்தை என்கிறார். உபநிஷத்துகளின் சாரமாகிய இம்மகாஞானத்தை சத்குருக்கள் மிகவும் இரகசியமாக வைத்திருந்து தகுதியுடைய சீடர்களுக்கே உபதேசம் செய்வர். அதிகாரி ஆண் ஆதலால் அர்ஜுனனுக்குக் கண்ணபிரான் அதனைப் போதித்து அதன் வாயிலாக உலகிற்குச் சிறந்த உபகாரம் செய்தார். இந்த ஞானம் இரகசியங்களுக்கெல்லாம் இரகசியமானது என்று சொல்லப்படுவதால் அதன் இயல்பு எத்தகையது என்பதை நம்மால் ஊகித்தறிய முடியும். ஏனெனில் சாதாரணமாக விலையுயர்ந்த மதிப்புடைய பொருள்களையே மக்கள் இரகசியமாகப் பாதுகாத்து வைப்பர். ஆதலால் இம்மகிமை பொருந்திய ஞானச் செல்வத்தின் மதிப்பையுணர்ந்து அறிஞர்கள் அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு சிறப்படைதல் வேண்டும். 'விம்ருஷ்யை, சேஷேண' - மகான்கள் தாங்கள் தர்மத்தைப் போதித்த போதிலும் அதனைப் பற்றிச் சிந்திப்பதற்கும், ஆராய்வதற்கும் முழுமையான சுதந்திரம் உண்டு. அவர்கள் சொன்ன போதனையை முன்பின் ஆராயாது அப்படியே ஏற்றுக் கொள்ளுமாறு அவர்கள் வற்புறுத்துவதில்லை. மகான்களாகிய குருமார்களின் இலட்சணம் இவ்வாறாக இருக்கும். குரு போதித்ததை மாணாக்கன் தனது சுயஅறிவால் நன்கு ஆய்ந்து, சிந்தனை செய்து தனக்கு விருப்பமானதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய சுயேச்சையை பழைய குருமார்கள் தமது சீடர்களுக்குக் கொடுத்திருந்தனர். இந்த முறையையொட்டியே குருவிற்குக் குருவாகிய ஸ்ரீ கிருஷ்ணரும் நடந்து கொள்கிறார். அர்ஜுனனுக்குப் போதிக்க வேண்டிய அனைத்தையும் புகட்டி அதன் பிறகு, 'அர்ஜுனனே என் மேலுள்ள பக்தியினால், கௌரவத்தால், நம்பிக்கையால் நான் சொன்னதனைத்தையும் நீ அப்படியே கண்ணை மூடிக் கொண்டு ஏற்றுக் கொள் எனச் சொல்ல மாட்டேன். நீ சுயமாக

அதனை ஆராய்ந்து பார். பகுத்தறி. அதன் பிறகு உனக்குப் பிடித்த தைச் செய் என்று கூறித் தன் பரந்த உள்ளத்தை வெளிப்படுத்துகிறார். சீடன் சுயமாக நன்கு சிந்தியாது இருந்தால் அவனது புத்தி மலராது. இவையனைத்தையும் கருதியே பகவான் மேற்கண்ட வாக்கியங்க ளைக் கூறினார். மேலும் போதனையில் பிடிப்பும், நேர்மையும் இல்லையேல் இத்தகைய வாக்கியங்களைத் துணிவாக யாரும் சொல்லிவிட முடியாது. ஆதலால் கீதை போதனையின் சிறந்த கொள்கைகளை அதன் உண்மைகளை நாம் உணர முடிகிறது. 'அசே ஷேண' என்பதால் சிறிது ஆராய்ச்சி செய்தால் மட்டும் போதாது முழுமையாக எல்லா வகையிலும் பல கோணங்களிலும் ஆராய வேண்டுமென அர்ஜுனனுக்குத் தெரியப்படுத்தியதாயிற்று.

'யதேச்சஸி ததாகுரு' - அப்படி நன்கு ஆராய்ந்த பின் உனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதனைச் செய்யவும் என்று கூறுகி றார். ஆசிரியரான கண்ணன் செய்ய வேண்டியதற்கு அதிகாரியாக தன் மேல் அதிகாரத்தை இட்டுக் கொள்ளவில்லை. பற்றற்ற கர்மா விற்கு நல்ல உதாரணமாக இதனைச் சொல்லலாம். பதினெட்டு அத்தியாயங்களின் போதனையைத் தங்கு தடையின்றி உபதேசித்துக் கடைசியில் அதனுடைய பலனைக் கேட்காமலேயே பகவான் முடித்து விட்டார். மீண்டும் அர்ஜுனனைப் போர் புரிய வைப்பது அவரது போதனையின் இலக்கு ஆயினும், அந்தப் போதனையின் பலனாகிய இலட்சியத்தை எடுத்துரைக்காமல் முடிக்கின்றார். 'நான் சொல்ல வேண்டிய தர்மத்தைச் சொல்லிவிட்டேன். அதனால் எனக் கொரு கவலையும் இல்லை. அதன் பிறகு உனது இஷ்டம்' (யதேச்ச ஸிததாகுரு) என பகவான் பரந்த நோக்குடன் கூறுகிறார். 'நிஷ்காம கர்மா' என்பதற்கு இது ஒரு உதாரணம் ஆகும்.

செய்ய வேண்டிய வேலைக்குத் தானே கர்த்தாவாக நினைத்துக் கொண்டு முயற்சி செய்தால் ஆசிரியர்களுக்குச் சாந்தியிராது. எனவே அவர்கள் தமது தர்மத்தைக் கடைபிடிப்பார்கள். பலனை எதிர்பார்க்க மாட்டார்கள். சீடன் தனது முன்னேற்றத்தைத் தானே பார்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியன் வழிகாட்டுவான். சீடன் தானே அவ் வழியில் நடக்க வேண்டும்.

'ஞானம் ஆக்யாதம்' - என்று சொல்வதினால் கீதா சாஸ்திரத்தில் கர்மா, பக்தி முதலியவை பற்றிச் சொல்லப்பட்டிருந்தாலும் அவைய னைத்தும் ஞானத்தினுள் அடக்கம் என்பது தெளிவாகிறது. கர்ம, பக்தி, தியானம் முதலான தர்மங்களைப் போதித்து இறுதியில்

அவையனைத்தும் ஒருசேர ஞானம் என்ற சொல்லில் அடக்கி பகவான் இங்குக் கூறியுள்ளார். ஆதலால் எல்லாமார்க்கங்களும் இறுதியில் ஞானத்தில் முடிவடையுமென்பதும், ஜீவனின் இறுதி இலட்சியம் ஞானம் பெறுவதே. என்பதில் கர்மா, பக்தி முதலியவை அவற்றை அடைவதற்கு வழிகோலுகின்றன என்பதையும் இதனால் நிச்சயிக்கலாம்.

**வினா :** கீதா ஞானம் எத்தகையது?

**விடை :** மிகவும் இரகசியமானது.

**வினா :** ஆசிரியன் ஞானத்தைப் போதித்த பிறகு சீடன் என்ன செய்ய வேண்டும்?

**விடை :** ஆசிரியர் சொன்னதை தனது சொந்த புத்தியுடன் நன்கு ஆய்ந்த தனக்குத் தகுந்ததை எடுத்துக் கொண்டு செயல் புரிய வேண்டும்.

## முன்னுரை

அர்ஜுனன்பால் அன்பு மிகுந்து பகவான் மிகவும் இரகசியமான ஒன்றிரண்டு வாக்கியங்களை மேலும் கூறுகிறார்.

*ஸர்வ குஹ்யதமம் பூயஹ ச்ருணுமே பரமம் வசஹ!*
*இஷ்டோஅஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்! (64)*

## சொற்பொருள்

ஸர்வ குஹ்யதமம் - இரகசியங்களனைத்திலும் மிகவும் இரகசியமானதும், பரமம் - மேலானதுமாகிய, மே - என்னுடைய வசஹ உரையை, பூயஹ - மீண்டும், ச்ருணு - கேள், (த்வம் - நீ), மே - எனக்கு த்ருடம் - மிகவும், இஷ்டஹஅஸி - பிரியமானவனாய் இருக்கிறாய், இதி ததஹ - என்ற காரணத்தால், தே - உனக்கு, ஹிதம் - நலத்தை, வக்ஷ்யாமி - சொல்கிறேன்.

## கருத்துரை

ஏ அர்ஜுனனே! இரகசியங்களனைத்தும் பரம இரகசியமானதும், மிகவும் மேன்மையானதுமாகிய என்னுரையை மீண்டும் கேள். ஏனெனில் நீ எனக்கு மிகவும் நெருங்கியவன். ஆகையால் உன் நன்மைக்காக மேலும் சொல்கிறேன்.

## விளக்கவுரை

'ஸர்வஹ்யதமம்' - குஹ்யம் - இரகசியம், குஹ்யதரம் - இரகசியமானது, குஹ்யதமம் - இரகசியத்துள் இரகசியம் - 'ஸர்வ குஹ்யதமம் - மிக மிக இரகசியமானது. போதனையின் இரகசியத்தின் முக்கியத்துவம் இதனால் புலப்படுகிறது. இதனால் அதன் மீது நம்பிக்கை, வேட்கை இவை ஏற்படுகின்றன. பூயஹ - மீண்டும் சொல்கிறேன். சீடனின் மேலுள்ள அக்கறையினால் குருவானவர் மீண்டும் மீண்டும் நினைவுறுத்துவார். முன் சுலோகத்தில் 'இதிதே ஞானமாத்யாதம்' என்ற வாக்கியத்தைச் சொல்லி முடித்து விட்டார். ஆயினும் அர்ஜுனனின் மேலிருந்த பிரியத்தினால் உந்தப்பட்டு இன்னும் சிலவற்றை உபதேசிக்க எண்ணி மீண்டும் செய்கிறார்.

'பரமம் வசஹ' என்பதால் இனி சொல்லப்போகும் வாக்கியங்கள் மிகவும் சிறந்தவையென்பது புலனாகிறது. சாட்சாத் பகவானே அவற்றைச் சிறந்தவையென்று சொல்வதால் மக்கள் அதன்மேல் எத்துணை நம்பிக்கை வைத்திருக்க வேண்டுமென்பது புலனாகிறது.

'இஷ்டோ அஸி மே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்' - ஆசானின் அன்பைப் பெறுவதில்தான் சீடனின் புத்திக் கூர்மை தெரிகிறது. குருவின் அன்பிற்குப் பாத்திரமாதல் சீடனுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமேயாகும். ஏனெனில் அன்பிற்குரிய சீடனுக்கு ஆசான் தன் இதயத்தைத் திறந்து மிகவும் இரகசியமானவற்றையும் உபதேசிப்பான். எனவே, பணிவு, அடக்கம், தொண்டு இவற்றின் மூலமாக ஆசானின் அன்பையும், ஆதரவையும் பெற்றுவிட்டால் மோட்சத்திற்கான வழி சீடனுக்குக் கைக் கெட்டியதேயாகும். இந்த விஷயத்தையே பகவான் 'தத்வித்தி பிராணி பாதேந.... (4-34) என்று கூறியுள்ளார்.

இங்கு அர்ஜுனன் ஆசானின் அன்பிற்குப் பாத்திரமாகிவிட்டான். இதயம் எப்போது பக்குவமாகி, தூய்மையாய், பக்தியுடன் விளங்குகிறதோ அப்போது ஆசான் அவனைத் தேடி வந்த அவனது இதய அரங்கில் ஞான விதையை விதைத்துச் செல்வான். இதற்கான உதாரணங்கள் பலவற்றையும் நமது புராணங்களில், வரலாற்றில் காணலாகும். எனவே இதயத் தூய்மை பக்தி இருந்தால் நல்லதொரு ஆசானை இறைவனே அவர்களிடம் அனுப்புவான். அல்லது அவர்களை நல்ல ஆசானிடம் சேர்ப்பான். இல்லாவிடில் தானே அவர்களது இதயத்தில் நல்ல போதனைகளைத் தோன்றுமாறு செய்வான்.

நீ எனக்குப் பிரியமானவன் அதனால் உனக்கு நன்மையைச் சொல்கிறேன் என்று பகவான் அர்ஜுனனிடம் சொல்வதால் நல்லாசிரியர்களின் அருளைப் பெறாவிடில் நற்போதனையைப் பெறமுடியாதென்பது புலனாகிறது. எனவே சாஸ்திரங்களில் பல்வேறு இடங்களில் இறைவனது அருளில்லையேல் நல்லாசிரியர்களின் அன்பில்லையேல் அத்வைத ஞானம் - ஆத்மசாட்சாத் காரம் கிடைக்காது என்று சொல்லப்பட்டது. எனவே முமுட்சுக்கள் அனைவரும் நாமம், ஸ்மரணம், பூசை, சேவை இவற்றைச் செய்து வந்து பக்தியுடன் இருத்தல் வேண்டும்.

**வினா :** பகவான் அர்ஜுனனுக்கு மீண்டும் எத்தகைய போதனையைச் சொல்லக் கருதினார்?

**விடை :** இரகசியத்திலும் இரகசியமான, மிகவும் சிறந்த போதனையைச் சொல்லக் கருதினார்.

**வினா :** கண்ணன் அர்ஜுனனுக்கு கீதா சாஸ்திரத்தை ஏன் போதித்தார்?

**விடை :** அர்ஜுனன் அவரது அன்பிற்குரியவனாதலால்.

## முன்னுரை

பரம இரகசியமான போதனைகளை அடுத்துவரும் இரண்டு சுலோகங்களில் கூறுகிறார்.

*மன்மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு!*
*மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜானேப்ரியோ அஸிமே!!* (65)

## சொற்பொருள்

மன்மனாஹ - என்னிடம் மனம் வைத்தவனாய், மதிபந்தஹ - என்னிடத்தில் பக்தியுடையவனாய், மத்யாஜீ - என்னை ஆராதிப்பவனாய், பவ - ஆகுக, மாம் - என்னை, நமஸ்கரு - வணங்கு, மாம்ஏவ - என்னையே, ரஷியஸி - அடைவாய், மே - எனக்கு, ப்ரயஹ்சுஸி - எனக்கினியவனாய் இருக்கிறாய் (எனவே) தே - உனக்காக, ஸத்யம் - உண்மையாக, பிரதி ஜானே - பிரதிக்ஞை செய்கிறேன்.

## கருத்துரை

என்பால் மனம் வைத்து, என்னிடம் பக்தி பூண்டு என்னை ஆராதிப்பாய். என்னையே வணங்கு, என்னையே அடைவாய். எனக்கு இனியான் நீ. எனவே உனக்கு உறுதியளிக்கிறேன்.

## விளக்கவுரை

இச்சுலோகம் பின்வரக்கூடிய சரம சுலோகம் கீதா சாஸ்திரத்தின் சாரத்தை எடுத்துரைப்பவையாக இருக்கின்றன. பகவான் மிகவும் இரகசியமான போதனையைச் செய்கிறேன் என்று கூறி இவற்றை ஆரம்பிப்பதால் இச்சுலோகங்களின் மகத்துவம் எத்தகையது என்பது தெரிகிறது. இதில் முதல் சுலோகத்தின் முதற்பகுதி சாதனை முறையையும் இரண்டாவது பலனையும் குறிப்பிடுகின்றது. இதில் நான்கு சாதனைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. (1) மனத்தை இறைவனில் லயிக்கச் செய்தல் (2) தெய்வ பக்தியுடன் இருத்தல் (3) தெய்வத்தினையே வழிபடுதல் (4) தெய்வத்தையே வணங்குதல். இந்நான்கு சாதனைகளையும் செய்பவன் இலக்கான பரமாத்மாவைத் தவறாது அடைவான். (மாமேனவஷ்யதி). இறைவனை அடைவதே இச்சாதனைகளின் பலன்.

எனவே மக்கள் தம் மனத்தை உலகியல் விஷயங்களினின்றும் சப்தாதி விஷயங்களினின்றும் திருப்பி ஆத்மாவிலேயே (தெய்வத்திடமே) நிலைபெறச் செய்தல் வேண்டும். மேலும் மக்களுக்கு எந்த பக்தி, வேட்கை வெளி நடப்புகளில் இருக்கின்றதோ அதனைத் திருப்பி இறை விஷயங்களில் நிலைபெறச் செய்தல் வேண்டும். அவனையே பூசித்தல் வேண்டும். தியானித்தல் வேண்டும். அவனையே வணங்குதல் வேண்டும். அஞ்ஞானிகளான மக்கள் அவ்வாறு செய்யாது தம் சித்தத்தினைக் காட்சிப் பொருள்களின் மீதே லயிக்கச் செய்து அவற்றையே சேவித்து, காமம் முதலான அரக்க குணங்களையே வணங்கி ஏற்கின்றனர். அவற்றையே வளர்க்கின்றனர். அத்தகையோர் இறைவனை எக்காலத்தும் அடைய முடியாது என்பது இச்சுலோகத்தின் மூலம் தெளிவாகிறது. எனவே அத்தகைய விஷய சுகங்களின் வேட்கையை விட்டு மக்கள் தம் சித்தத்தினை பரமாத்மாவினிடத்திலேயே நிலைக்கச்செய்தால் தவறாது பரமனை அடைவர்.

'மயத்யம்தே ப்ரதிஜானே' - இவ்வாறாகச் சாதனைகளைச் செய்து வருபவன் இறைவனை அடைவரோ அடைவதில்லையோ

என்ற ஐயம் எழுமே என்று என்னவோ என்னவோ, இது சத்யம், நான் பிரதிக்ஞை செய்கிறேன். சாட்சாத் பகவானே நான் பிரதிக்ஞை செய்து கொள்கிறேன் என்று சொல்லும் போது இனி அவ்வாக்கியம் எத்தகைய பரம சத்தியம் என்பதை ஊகித்துக் கொள்ள முடியும். இவ்வாறு பகவான் பிரதிக்ஞை செய்து சொல்லும் இடங்கள் மிகவும் அரிது. எனவே சாதகர்கள் இத்தகைய அபூர்வ வாக்கியங்களின் மீது முழுமையான நம்பிக்கையையும் சிரத்தையும் கொண்டு இறைவன் நேரில் காணுதல் என்னும் மிக உன்னதமான பலனைப் பெற்று உய்வடைதல் வேண்டும்.

'மன்மனாபவ - என்ற வாக்கியத்தில் கர்மா, பக்தி, தியான, ஞானமெனும் நான்கு சாதனைகள் சொல்லப்பட்டன.

**வினா :** பகவானை அடைவதற்கான உபாயங்கள் எவை?

**விடை :** (1) இறைவனிடத்து மனத்தை லயிக்கச் செய்தல் (2) பக்தியுடன் ஒழுகுதல் (3) அவனையே ஆராதித்தல் (4) அவனையே வணங்குதல்.

**வினா :** இறைவன் எவர் மீது தனது அருளைப் பொழிவார்?

**விடை :** தன்னை ஆராதித்துத் தன் அன்பைப் பெற்றவர்கள் மீது.

**வினா :** மேற்சொன்ன விதமாகத் தெய்வத்தை அடைய முயற்சி மேற்கொள்பவர்க்குக் கிடைக்கும் பலன் என்ன?

**விடை :** அவர்கள் இறைவனையே அடைவர். இது பரம சத்தியம். சாட்சாத் ஸ்ரீ கிருஷ்ணரே இவ்வாக்கியத்தைச் சத்தியமென்று பிரதிக்ஞை செய்து சொல்கிறார்.

**முன்னுரை**

கீதா சாரணமான சரம சுலோகத்தினைக் கூறுகிறார்.

*ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம்வ்ரஜ!*
*அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுசஹ!! - (66)*

**சொற்பொருள்**

ஸர்வதர்மான்-எல்லா தர்மங்களையும், பரித்யஜ்ய-துறந்து, மாம்-என், ஏகம்-ஒருவனையே, சரணம் வ்ரஜ-சரணடைடவாயாக, அஹம்-நான், த்வா-உன்னை, ஸர்வ பாபேவ்யஹ-எல்லாவிதமான

பாவங்களினின்றும், மோக்ஷயிஷ்யாமி - விடு விடுப்பேன், மாசுசஹ - விசனப்படாதே.

**கருத்துரை**

தர்மங்களையெல்லாம் துறந்து என்னையே சரணடைவாயாக. பாவங்களனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன்; வருந் தாதே.

**விளக்கவுரை**

இச்சுலோகம், மிகவும் முக்கியமானது. சரமசுலோகமென்று இதனைக் கூறுவர். 'ருஷ்யாதி நியாசம்' என்ற முறையில் இச்சுலோ கத்தில் முதல் பாதத்தினை சக்தியென்றும் இரண்டாவது பாதத்தை நீலகமென்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் இந்த சுலோகத்தின் முக் கியத்துவம் தெரிகிறது. கீதா சாஸ்திரத்தின் தத்துவபோதனையில் இது கடைசி சுலோகமாதலால் கீதையில் சாரமனைத்தையும் ஒருங்கி ணைத்துச் சொல்கிறது. இங்கே கூறப்பட்ட சரணாகதி, பிரபத்தி, ஆகியவை சாதனையாளர்களுக்கு மிகவும் முக்கியமானது. வைண வர்கள் இதனை மிகவும் முக்கியமாகக் கருதி எப்போதும் மந்திரமாக ஜெபிப்பர்.

'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய' - நித்யம், நைமித்திகம் முதலிய அனைத்து அறங்களை விட, சரணாகதி பலமடங்கு அதிக பலனை அளிக்கும். சிறு சிறு அறங்கள், கர்மங்கள் ஆகியவை புண்ணியத் தைப் பெற வாய்ப்பளிக்கும். ஆனால் சரணாகதி மோட்சத்தைப் பெற வழிவகுக்கும். அந்தந்த கர்மங்களின், தர்மங்களின் பலன் சர ணாகதியின் பலனில் ஓர் பங்காகிறது. (நூற்றில் பத்து பங்கு). ஆத லால் பகவான் சிறு காரியங்கள் செய்வதை விட்டு நிரந்தரமான அளவில்லா பலனாம் மோக்ஷத்தினை அடையச் செய்யும் வழியைப் பின்பற்ற வேண்டுமென்று போதித்தார். 'மாமேகம்' என்று சொல்வ தால் பகவான் ஒருவனையே சரணடைந்தால் போதும் அனைத்து கர்மங்களையும் தர்மங்களையும் செய்தது போலாகும் என்பது தெரி யவருகிறது. மரத்தின் வேர்களுக்கு நீர்பாய்ச்சினால் இலைகளுக் கும், கிளைகளுக்கும் நீர் பாய்ச்சுவதேயல்லவா? பலவிதமான தர் மங்கள், கர்மங்கள் செய்யும் முறைகள் ஆகியவை குழப்பத்தை ஏற்ப டுத்தி மனத்தில் ஐயம் எழும். ஆதலின் இறைவன் ஒருவனை வேண் டிச் சரணடைதல் போதுமானது. எதைத் தெரிந்து கொண்டால் அனைத்தையும் அறிந்ததாகுமோ, எதனை அடைந்தால் அனைத்தை

யும் அடைந்ததாகுமோ அதனை - ஆன்மப் பொருளை, பிரம்மத்தை சரணடைந்தால் போதும். பிற சர்ச்சைகளால், பிற சாதனைமுறைக ளால், பிற அறங்களினால், பிற கர்மங்களினால் பலனில்லை. என வேதான் அவையனைத்தையும் துறந்து தன்னையே சரணடைக என்று பகவான் தெரிவிக்கிறார்.

'அகம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' - ஆயின் சிலர் இங்ஙனம் கேட்கக் கூடும். அனைத்து கர்மங்கள், தர்மங்கள் இவற்றை விடுத்து இறைவனை அண்டினால் இறைவன் நமக்கு எதனை அளிப்பார்? என்று அதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் சரியான விடையை அளித்துள்ளார். 'அவ்வாறு என்னைச் சரணடைந்தால் உமது எல்லாவிதமான பாவங்களினின்றும் பந்தங்களினின்றும் உங் களை முக்தியடையச் செய்கிறேன். என்று 'ஸர்வ பாபேப்யோ' - என்பதால் ஏதோ ஒரு பாவம் மட்டுமன்று எல்லாவிதமான பாவங்க ளினின்றும் விடுதலையடையச் செய்கிறேன் என்று வாக்கு அளித் துள்ளார். மனிதனுக்கு இதனை விட வேறென்ன வேண்டும்? பிறப்பு இறப்பு பந்தங்களினின்றும் தப்பித்தல், கர்ம பாசங்களினின் றும் விடுதலை ஆகியவையே அவனுக்குத் தேவையானது. அதனை அடையச் செய்கிறேன் என்று பகவான் பிரமாணம் செய்கிறார். ஆயின் எவருக்கு? அனைவர்க்கும் அல்ல. அனைவரும் இறைவ னின் குழந்தைகளேயாயினும் யார் கை எடுத்து அவரை அண்டுகி றார்களோ, அவர்களையே கைபிடித்து எடுத்து தனது மடியில் உட் கார வைத்துக் கொள்வான். எவனொருவன் எல்லாவிதமான ஆசைக ளையும், கர்மாக்களையும், தர்மங்களையும் விட்டு அவன் ஒருவ னையே சரணடைகிறானோ, உடல், மனம், வாக்கு ஆகியவற்றால் அவனையே சரணடைகிறானோ, அதாவது காட்சிப் பொருள்கள், விஷய சம்பந்தமான கர்மாக்களைத் துறந்து, தர்மங்களைத் துறந்து, த்ரிக்ரூபமான ஆன்மாவையே அண்டினால் அவனை மட்டுமே சம் சார பந்தமெனும் (பாவ) கை விலங்குளினின்றும் விடுவித்துக் கடைத்தேற்றுவேன் என்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஐயந்திரிபறச் சொல் கிறார்.

இதனினின்றும் ஜீவன் தான் நிறைவேற்ற வேண்டியதை நிறை வேற்றினால் இறைவன் தான் அளிக்க வேண்டியதையளிப்பான் என் பது தெளிவாகிறது. இச்சுலோகத்தில் முதல்பாதம் ஜீவனின் கடமை யைச் சொல்கிறது. இரண்டாவது பாதம் இறைவன் அளிக்கும் பிரதி பலனை எடுத்துக் காட்டுகிறது. ஜீவன் பரமாத்மாவை தஞ்சமடைந் திராவிடில், காட்சிப் பொருள்களின் மீது மட்டுமே புத்தியைச்

செலுத்தினால் இறைவன் தான் தர வேண்டியதை எங்ஙனம் தருவான்? இயற்கையில் ஒன்றுக்கொன்று எதிரான நியமங்களை ஏற்படுத்தியுள்ளார். அது எதுவெனில் - பாவத்தினால் துக்கமும், புண்ணியத்தினால் சுகம், ஞானத்தினால் அல்லது இறைவனைச் சரணாகதியடைவதால் மோக்ஷம் கிடைக்கும். எவர் எவ்விதமாகப் பின்பற்றுகிறார்களோ அதற்கான பலனையே அனுபவிப்பர். இதில் பகவான் வேற்றுமை காட்டுவதில்லை.

'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய' - என்ற வாக்கியத்திற்கு வேறொரு பொருள் உண்டு. 'காட்சிப் பொருள் எண்ணங்களைக் கைவிட்டு சாட்சியான ஆன்மா வொன்றையே சரணடைக' - என்றும் சொல்லலாம். இது இன்னும் சிறந்த பொருள். தியாகத்தினால்தான் மோட்சம் கிட்டும் என்ற சாஸ்திர நிர்ணயத்தினை இது நன்கு வலியுறுத்துகின்றது. ஒன்றைத் தியாகம் செய்தால்தான் வேறொன்று கிடைக்கும். பைசாசத்தைப் பற்றிக் கொண்டால் இறைவன் கிட்டான். இறைவனைப் பற்ற வேண்டுமாயின் பைசாசத்தை (காட்சிப் பொருள்களை) கைவிட வேண்டும். அதாவது காட்சிப் பொருள்களைக் குறித்த, அதாவது க்ஷேத்திரத்தினைக் குறித்த எண்ணங்களைக் கைவிட்டு க்ஷேத்ரக்ஞன் ஆன பரமாத்மாவை சரணடைதல் வேண்டும்.

இச்சுலோகத்தில் எல்லா தர்மங்களையும் விட்டு விடுமாறு சொல்வதால் அதர்மங்களைச் செய்தல் வேண்டுமென்பது பொருளல்ல. அல்லது தர்மங்களை விடுத்து சோம்பித்திரிய வேண்டுமென்பதல்ல. மிகப்பெரிய தர்மமான, தெய்வ சரணாகதியிலேயே ஆன்மாவை அடைவதிலேயே, ஏனைய அறங்கள் அடங்கிவிடுமாதலால், 'ஸதே பஞ்சாஸத்', (நூற்றில் ஐம்பது அடங்கியுள்ளது) என்ற நியாயத்தை அனுசரித்து இத்தகைய சிறந்த தர்மத்தைக் கடைபிடிப்போர் சிறிய கர்மங்களைத் துணியாகச் செய்ய வேண்டி அதனை நன்றாகச் செய்தால் போதுமென்றும் சொல்வதேயாகும். இங்கு பெரிய தர்மம் செய்கையில் சிறிய தர்மம் தேவையில்லை என்று சொன்னதாகுமேயொழிய ஏனைய தர்மங்களினால் பலனில்லை அதனால் அதனைச் செய்வதை விடுத்து சோம்பேறியாக இருக்க வேண்டுமென்பது பொருளல்ல. எனவே சொற்களை நன்கு கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும்.

'மாசுசஹ' - இந்த உண்மையையுணர்ந்து இறைவனைச் சரணடைந்து இனி வருத்தத்தை விடு என்று பகவான் அர்ஜுனனுக்கு

அருளிச் செய்தார். துக்கமேயற்ற ஆன்மநிலை கிட்டும்போது சோகத்திற்கு இடமேது. எப்போதும் பரமானந்தமே. எனவேதான் பகவான் அர்ஜுனனுக்கு 'மாசுசஹ' வருந்தாதே எனப் போதித்தார்.

'அசோச்யான் அன்வசோசஸ்த்வம்' - என சோகத்தைப் போக்கும் போதனையுடன் கீதை தொடங்கி 'மாசுசஹ' - வருந்தாதே என்று சோகத்தைப் போக்கும் வாக்கியத்துடன் முடிவடைகிறது. எனவே கீதையின் இலட்சியம் சோகத்தைப் போக்குவதே என்பது தெளிவாகிறது. துக்கமின்மை, ஆனந்தமடைதல், சம்சார துக்கமழிதல், பிரம்மானந்த பிராப்தி - இவையே கீதையின் இலட்சியம். அத்தகைய இலட்சியத்தை ஜீவர்கள் அடையச் செய்வதே கீதையின் நோக்கம்.

இச்சுலோகத்தில் மிகவும் எளிதான பக்தி, பிரபத்தி, சரணாகதி இவையே முக்திக்குக் காரணமாக சொல்லப்படுவதால் இனிப் பெரிய பெரிய சாஸ்திரங்களைக் கற்க இயலாதவர், புலமையில்லாதவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் மோட்சத்தினை அடைய முடியாது என வருந்த வேண்டியதில்லை. இந்த சுலோகம் கீதையில் மிக முக்கியமானதாதலால் இதனை நன்கு மனனம் செய்து பொருளை எண்ணிப்பார்த்தல் முமுட்சுக்களுக்கு நற்பலனை அளிக்கும்.

**வினா :** உயிர்களுக்கு பாவங்கள் விலகுதல் பாப விருத்தி, துக்கங்கள் அகலுதல் எவ்வாறு நேரும்?

**விடை :** (நித்ய, நைமித்ய) கர்மங்களை, தர்மங்களை, அல்லது காட்சி முதலான எண்ணங்களை விட்டு விட்டு இறைவன் ஒருவனையே சரணடைந்தால் அவனே உயிர்களுக்கு மோட்சத்தையளிப்பான்.

**வினா :** சோகத்தைப் போக்கும் வழியென்ன?

**விடை :** பகவானைச் சரணடைவதே.

**முன்னுரை**

பக்தியில்லாதவனுக்கு வாக்கில் நம்பிக்கையில்லாதவர்க்கு கீதையின் சாஸ்திரத்தை உபதேசிக்கக்கூடாது எனத் தெரிவிக்கிறார்.

*இதம்தே நாதபஸ்காய நாபக்தாய கதாசன!*
*நசாசுச்ரூஷவே வாச்யம் நசமாம் யோப்யஸூயதி!! - (67)*

## சொற்பொருள்

தே-உனக்கு, (அபிஹிதம்-சொல்லப்பட்ட) இதம்-இந்த கீதா சாஸ்திரம், கதாசன-எப்போதும், அதபஸ்காய-தவமில்லாதவனுக்கும், (சம்சார பந்தத்திலிருந்து விடுபட வேண்டு மென்ற தாபமில்லாதவனுக்கு), அபக்தாய-பக்தியில்லாதவனுக்கும், நவாச்யம்-சொல்லத் தக்கதல்ல, அசுச்ரூஷவே-சேவை செய்யாதவனுக்கும் அல்ல, யஹ்-எவன், மாம்-என்னை, அப்யஸூயதி-நிந்திக்கிறானோ, அவனுக்கும், நச-சொல்லலாகாது.

## கருத்துரை

உனக்குப் போதிக்கப்பட்ட இந்த கீதா சாஸ்திரம் பக்தியில்லாத வனுக்கும், தவமில்லாதவனுக்கும், தொண்டு புரியாதவனுக்கும், என்னை இகழ்பவனுக்கும் எப்போதும் சொல்லத் தக்கதல்ல.

## விளக்கவுரை

இதனை யாருக்குப் போதிக்கக்கூடாது என்பது இந்த சுலோகத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் மிகவும் புனிதமான இத னைத் தகுதியில்லாதவனுக்குச் சொல்வதால் வீணாகி விடக்கூடாது. அகந்தை இதயத்தில் உள்ளபோது இந்தப் போதனை செய்யப்பட் டால் அது மனத்தில் ஏற்கப்படமாட்டாது. அழுக்கு நிறைந்த துணி யில் வண்ணச் சாயம் ஏறாது. எனவே பணிவு, பக்தி, தொண்டு ஆகிய குணங்கள் உடையோருக்கே இந்த கீதா சாஸ்திரத்தைப் போதிக்க வேண்டுமேயன்றி ஏனையவர்க்கல்ல என்று பகவான் கூறுகிறார். விலைமதிப்பற்ற இப்போதனை தகுதியற்றவர் கையில் சிக்கினால் வீணாகிவிடும். எனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தகுதியில்லா தவனுக்கு, குருசேவை செய்யாதவனுக்கு, பகவானை நிந்திப்பவ னுக்கு கீதா சாஸ்திரத்தைப் போதிக்கக்கூடாது எனப்பட்டது. இங்கே தவமெனில் பாவங்களை இதயத்தின் அழுக்கை தவிர்க்கச் செய்வதா கும். அல்லது சம்சார பந்தத்தினின்றும் விடுதலைபெறும் தீவிரமா வேட்கை என்றும் சொல்லலாம். அத்தகைய மேன்மையான தவத்தை மேற்கொண்டவர்க்கு இப்போதனையானது நன்கு உள்ளத் தில் பதியும் (நோயாளிக்கு மருந்து பலனளிப்பது போல்) இங்கு சிஷ்ருஷை என்றால் குருசேவை பெரியோர்களைப் பணிதல், இறைவனைச் சேவித்தல் என்று கொள்ளலாம். அல்லது கேட்பதில் ஆர்வமுடையோர் என்றும் கொள்ளலாம. 'கதாசன' என்று கூறுவ

தால் இத்தகைய நற்குணங்கள் இல்லாதவர்க்கு எக்காலத்தும் கீதா சாஸ்திரத்தை உபதேசித்தல் கூடாதென்று பகவான் எச்சரிக்கை விடுக்கிறார். தகுதியில்லாதவர்களுக்கு, இறைவனை நிந்திப்பவர்களுக்கு, நாத்திகர்களுக்குப் போதிக்கப்பட்டால் ஆன்மீகக் கல்வி நற்பலனை தராது. கீதா சாஸ்திரத்தைக் கேட்பதற்கும், கற்பிப்பதற்கும், கற்பதற்கும் பக்தி முதலான நற்குணங்களின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

**வினா :** இந்த கீதா சாஸ்திரத்தை யாருக்கு உபதேசிக்கக் கூடாது?
**விடை :** (1) தவமில்லாதவன் (2) பக்தியில்லாதவன் (3) சேவை செய்யாதவன் (4) இறைவனை நிந்திப்பவன் ஆகிய இவர்களுக்கு உபதேசிக்கக்கூடாது.
**வினா :** யாருக்குப் போதிக்கப்பட வேண்டும்?
**விடை :** (1) தவம், (2) பக்தி, (3) சேவை, (4) பகவானை நிந்தியாதவன் இவர்களுக்குப் போதிக்கலாம்.

### முன்னுரை

கீதையை சிரத்தையுடன் போதிப்பவர்கள் தனக்கு மிகவும் பிரியமானவர்களென்றும், அவர்கள் தவறாமல் தன்னை அடைவார்கள் என்றும் பகவான் இரண்டு சுலோகங்கள் வாயிலாகத் தெரிவிக்கிறார்.

*ய இதம் பரமம் குஹ்யம் மத்பக்தேஷ்வபிதா யஸ்யதி!*
*பக்திம் மயிபராம் க்ருத்வா மாமேவைஷ்யத்ய ஸம்சயஹ!! - (68)*

### சொற்பொருள்

யஹ்-யார், பரம்குஹயம்-மிகவும் இரகசியமான, இமம்-இந்த கீதா சாஸ்திரத்தை, மத்பக்தேஷு-என் பக்தர்களுக்கு, அபிதாயஸ்யதி-சொல்வானோ, (ஸஹ்-அவன்), மயி-என்னிடத்தே, பராம்-மேலான, பக்திம்-பக்தியை, க்ருத்வா-உடையவனாய், அஸம்சயஹ-ஐயமின்றி, மாமேவ-என்னையே, எஷ்யதி-அடைவான்.

### கருத்துரை

மிக ஆழ்ந்த இத்தத்துவத்தை என் பக்தர்களிடத்து உபதேசித்து, என்னிடம் மேலான பக்தி பண்ணுகிறவன் ஐயமின்றி என்னையே அடைவான்.

## விளக்கவுரை

கீதையைப் பிரசாரம் செய்வதால் ஏற்படும் பலனை இங்குக் கூறுகிறார். கீதையைப் போதிப்பதன் பலன் மோக்ஷமே என்று இங் குத் தெரிவிக்கப்பட்டது. தனது பக்தர்களுக்கு கீதா சாஸ்திரத்தைப் போதிப்பவர்கள் மேலான பக்தி (பராபக்தி) யுடையவர்களாய் பிரம் மத்தை அடைவார்கள் எனறு இங்குக் கூறப்பட்டது. இதனால் பிற ருக்குச் சேவை அனைத்திலும் சிறந்தது பக்தி. இதனால் மற்றவர்க ளுக்கு உபகாரம் செய்வதே அவர்கள் உள்ளிருக்கும் பகவானுக்குச் சேவை செய்வதேயாகும். எனவே இது சாதாரண பக்தியன்றி பரா பக்தி என வர்ணிக்கப்பட்டது. எல்லா தானங்களையும் விட ஞானதா னம் சிறந்தது. ஆகையால், 'அஸம்சயஹ' என்று சொன்னதால் ஐய மின்றி கீதையை போதிப்பவன் முக்தியை அடைவான் என்பது தெரியவருகிறது. எனவே மகத்தான பலனை அளிக்கவல்ல இந்த கீதா சாஸ்திரத்தை நாம் படிப்பதுடன் பிறருக்கும் போதிப்பது நம் கடமையாகும்.

**வினா :** இந்த கீதா சாஸ்திரம் எத்தகையது?

**விடை :** இரகசியமானது.

**வினா :** இதை யாருக்குப் போதிக்க வேண்டும்?

**விடை :** பகவானின் பக்தர்களுக்கு, தீய குணங்கள் இல்லாதவர்க ளுக்கு.

**வினா :** அவ்வாறு போதிப்பவர்க்குக் கிடைக்கும் பலன் யாது?

**விடை :** மேலான பக்தியுடைய அவர்கள் ஐயத்திற்கிடமின்றிப் பக வானை அடைவார்கள்.

*நச தஸ்மான் மனுஷ்யேஷு கஸ்சின்மே ப்ரியக்ருத்தமஹ!*
*பவிதா நசமேதஸ்மாதன்யஹ ப்ரியதரோபுவி!! - (69)*

## சொற்பொருள்

மனுஷ்யேஷு-மனிதர்களுள், தஸ்மாத்-அவனை விட, மே-எனக்கு, ப்ரிய க்ருத்தமஹ-பிரியமானதைச் செய்பவனும், கஸ்சித்-எவனும், நச-இல்லவே இல்லை, தஸ்மாத்-அவனை விட, எனக்கு ப்ரியதரஹ-மிகவும் ப்ரியமானவனும், அன்யஹ-வேறொருவர், புவி-இவ்வுலகில், பவிதா நச-இருக்க மாட்டான்.

**கருத்துரை**

*மனிதர்களுள் எனக்கு விருப்பமான செயல்புரிபவனும் அவனைவிட வேறுயாருமில்லை; எனக்கினியானும் வையகத்தில் அவனைவிட யாரு.மில்லை.*

**விளக்கவுரை**

*இந்த சுலோகமும், கீதையின் ஆன்மீக தத்துவத்தைப் பரப்புவது பகவானுக்கு எத்தகைய பிரியமானது என்பது புலப்படுகிறது. 'பரியக்ருத்தமஹ்' - என்பதில் 'தம' என்ற உருபைப் பயன்படுத்துவதால் அத்தகையவன் பகவானுக்கு மிகப் பிரியமானவன் என்பது தெளிவாகிறது. (ப்ரியக்ருத், ப்ரியக்குத்தரம், ப்ரியக்ருத்தமஹ) உலகில் மக்கள் இறைவனைத் திருப்தி செய்வதற்குப் பலவிதமாக காரியங்களில் ஈடுபடுகின்றனர். அவர்கள் அனைவரையும் விட இந்த கீதா சாஸ்திரத்தைப் போதிப்பவனே அதிகமான புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள்கிறான். ஏனெனில் அதன் வாயிலாக அவன் பிரம்மத்தையே அடைகிறான். பகவானுக்கு மிகவும் பிரியமானவனாகிறான். எக்காலத்தும் அவனை விட பிரியமானவன் இவ்வையகத்திலே இல்லை என்று சொல்வதால் அவனுக்குப் பிரியமான கீதாப்பிரச்சாரம் செய்து நம் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகச் செய்து கொள்வது நலம்.*

*அதுவே வாழ்க்கையின் குறிக்கோள். கீதா தத்துவத்தை ஒவ்வொருவரும் நன்கு கற்றுப் பிறருக்கும் போதிக்க வேண்டும். இவ்வாறாகத் தானும் கடைத்தேறிப் பிறரையும் கடைத்தேற்றி இறைவனுக்குப் பிரியமானவனாக இருத்தல்வேண்டும். எனவே ஒவ்வொருவரும் பட்டி தொட்டிகளிலெல்லாம் கீதா சங்கங்களை நிறுவி அதன் வாயிலாக கீதா ஞானத்தை மக்களிடையே பரவச்செய்ய வேண்டும். (கீதா பிரச்சாரத்தைப் பற்றிய விவரங்களை இந்நூலின் துவக்கத்தில் காணலாம்).*

**வினா :** *இவ்வுலகிலேயே பகவானுக்கு மிவுகம் பிரியமானவன் யார்?*

**விடை :** *கீதையின் தத்துவத்தை மக்களுக்குப் போதிப்பவன்.*

**வினா :** *அவனை விட பிரியமானவன் எவரேனும் உண்டா?*

**விடை :** *எக்காலத்தும் இல்லை.*

## முன்னுரை

கீதா சாஸ்திரத்தை ஓதுதல் ஞானவேள்வியைச் செய்வதற்கு ஒப் பானது என்கிறார்.

*அத்யேஷ்யதேசய இமம் தர்ம்யம் ஸம்வாத மாவயோ!*
*ஞான யக்ஞேன தேனாஹமிஷ்டஹ ஸ்யாமிதி மேமதிஹி!! - (70)*

## சொற்பொருள்

யஹ்ச-எவனொருவன், தர்ம்யம்-தர்மம் நிறைந்த, ஆவயோஹ- நமது, இமம்-சம்வாதம், இந்த உரையாடலை, அத்யேஷ்யதே- கற்றறிகிறானோ, தேன-அவனால், ஞான யக்ஞேனே- ஞானவேள்வியினால், அஹம்-நான், இஷ்டஹ- ஆராதிக்கப்பட்டவன், ஸ்யாமிதி-ஆவேன் என்பது, மே-எனது, மதிஹி-கொள்கை.

## கருத்துரை

தர்மம் நிறைந்த இந்த உரையாடலை இன்னும் யார் கற்றறிகி றானோ, அவனால் ஆற்றப்படும் ஞான வேள்வியினால் நான் ஆரா திக்கப்படுபவன் ஆவேன். இது என் கொள்கை.

## விளக்கவுரை

'தர்ம்யம்' என்பதால் இந்த கீதா சாஸ்திரம் தர்மம் மார்க்கத்திலி ருந்து பிறழாதது என்பதும் புலனாகிறது. 'தர்மக்ஷேத்ரே' - என்று தர்மம் என்ற சொல்லுடன் ஆரம்பித்து கீதை தொடங்குவது குறிப்பி டத்தக்கது.

'ஞானயக்ஞேஜ' - இந்த கீதையை ஓதுபவன் ஞான வேள்ளவி யால் இறைவனைப் பூசிப்பவனேயாவான் என்று இங்குத் தெரிவிக் கப்பட்டது. எனவே இதனை பாராயணம் செய்வது கூட சிறந்த பலனைத்தரவல்லது. ஆனால் பக்தியுடன் செய்தல் வேண்டும். பொருளறிந்து கற்றால் இன்னும் சிறந்த பலன் கிட்டும். கீதையின் மேலான தத்துவம் ஞானமே என்பதும், கர்ம, பக்தி, தியானம் முத லானவையனைத்தும் ஞானத்தில்தான் முடிவடைவகின்றன என் றும் அவை ஞானத்திற்குத் துணை புரிபவை என்பதும் தெரிய வருகி றது. அவ்வாறில்லையேல் கீதையைப் படிப்பது ஞான வேள்விக்கு ஒப்பாகும் என ஏன் குறிப்பிட வேண்டும்? பழம், மலர் இவற்றால் இறைவனைப் பூசிப்பது சாதாரண பூஜை. ஞான வேள்வியால் அவ னைப் பூசிப்பது பராபூசை.

'மே மதிஹ' - 'இது என் முடிவு' - என்று பகவான் கூறுவதால் இந்த வாக்கியத்தினை பிரமாணமாகக் கொள்ளலாம். ஏனெனில் சாட்சாத் பகவானே 'இது என் திடமான கொள்கை' என்கிறாரல்லவா?

**வினா :** கீதா சாஸ்திரத்தை ஓதுபவன் எந்த வேள்வியைச் செய்தவனா வான்?

**விடை :** ஞான வேள்வியை.

**முன்னுரை**

ஆர்வத்துடன் இந்த கீதா நூலைக் கேட்பவன் கூட மிகச்சிறந்த புண்ணியத்தைப் பெறுவான்.

*ச்ரத்தாவான ஸூயஸ்ச ச்ருணுயதபி யோநரஹ!*
*ஸோஅபி முக்தஹ சுபான் லோகான் ப்ராப்னுயாத் புண்ய கர்மணாம்!! -*

**சொற்பொருள்**

*யநரஹ-எவனொருவன், ச்ரத்தாவான்-சிரத்தையுடனும், அன ஸூயஹச-அவமதிப்பில்லாதவனாயும், ஸ்ருணுயாத் அபி-இந்த கீதா சாஸ்திரத்தைக் கேட்டாலும், ஸஹஅபி-அவனும், முக்தஹ-பாவங்களினின்றும் விடுபட்டவனாய்; புண்யகர்மணாம்-புண்ணிய கர்மங்களைச் செய்தவர்களுடையும், க்ஷபாம் லோகான்-புண்ணிய உலகங்களை, ப்ராப்னுயாத்-அடைவான்.*

**கருத்துரை**

*எந்த மனிதன் சிரத்தையுள்ளவனாய், அவமதிப்பு இன்றி இந்த கீதா சாஸ்திரத்தைக் கேட்கிறானோ அவன் பாவங்களிலிருந்து விடு பட்டுப் புண்ணிய காரியங்களைச் செய்து புண்ணிய உலகங்களை அடைவான்.*

**விளக்கவுரை**

*சிரத்தையுடன் இருத்தல், அவமதிப்பு இன்றி இருத்தல் இதற்கு முன்பும் பலவிடங்களில் கூறப்பட்டது. கீதை நிறைவுபெறும் இந்த சந்தர்ப்பத்திலும் அதனைக் கூறுகிறார். முமுட்சுகளுக்கு இந்த நற்கு ணங்கள் எத்தனை தேவையென்பது இதனால் விளங்குகிறது. சிரத் தையின்றி எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது வீணேயாகும். அவ்*

வாறே அசூயையுடையவன் எந்தக் காரியத்திலும் முன்னேற்றம் அடைவதில்லை. அசூயை ஓர் வேர்ப் புழுவைப் போன்றது. அது இதயத்தில் நுழைந்து விட்டால் பிற நற்குணங்களனைத்தையும் பிற சக்திகள் அனைத்தையும் துளைத்து ஓட்டையாக்கவிடும். எனவே அந்தத் தீய குணத்தை யாரும் நெருங்க விடக் கூடாது.

இவ்வாறு சிரத்தையுடனும் அசூயை இன்றியும் கேட்பவன் பாவங்களினின்றும் விடுதலை பெற்று புண்ணிய உலகங்களை அடைகிறான் எனப்பட்டது. பகவானின் இவ்வாக்கியங்கள் படிப்பறிவு இல்லாத பக்தர்களுக்கு மிகவும் ஆறுதல் அளிக்கக் கூடியது. அவர்களுக்கு, கீதையை பாராயணம் செய்ய இயலாத புண்ணியம் எவ்வாறு கிடைக்கும் என்ற ஐயப்பாட்டினைப் போக்கும் விதமாக சிரத்தையுடனும் பொறாமை இன்றியும் கீதையைக் கேட்டால் போதும்; புண்ணியத்தைப் பெற முடியும் என்கிறார். ஆன்மீக தத்துவம் இதயத்துடன் தொடர்புடையதே அன்றி உடலுடனோ, அறிவுடனோ அல்ல. இறைவன் உறையுமிடம் இதயம்தான். பண்டிதர்கள் பல வித்தைகளையும் கற்று அறிவைப் பெருக்கிக் கொண்டாலும் உலகியல் அறிவை விரிவாக்கிக் கொண்டாலும், அவர்களது மனப்பான்மை (இதயம்) குறுகியதாக இருப்பின் தயை, கருணை, சிரத்தை, பொறாமையின்மை ஆகிய நற்குணங்கள் இல்லாவிடில் பலனில்லை. கல்வியறிவு அற்றவர்கள் கூட இந்நற்பண்புகளைப் பெற்றிருப்பின் அவர்கள் புண்ணியத்தைப் பெற முடியும் என்கிறார்.

**வினா** : படிப்பறிவற்றவன் கீதையைப் படிக்க முடியாதல்லவா? அவன் கடைத்தேறுவது எங்ஙனம்?

**விடை** : சிரத்தையுடனும், பொறாமையின்றியும் இந்த கீதையைச் சொல்லக் கேட்டால் போதும் அவர்கள் புண்ணிய உலகம் பெறுவர்.

## முன்னுரை

என்னுடைய போதனையால் உனது அறியாமை (பிரமை) அழிந்துவிட்டது என பகவான் அர்ஜுனனிடம் கூறுகிறார்.

*கச்சிதேதச் ச்ருதம் பார்த்த த்வைய காக்ரேண சேதஸா!*
*கச்சிதக்ஞாண ஸம்மோஹஹ ப்ரநஷ்டஸ்தே தனஞ்ஜய!! - (72)*

## சொற்பொருள்

*பார்த்த-ஓ அர்ஜுனா! ஏதத்-இது,* (என்னால் உபதேசிக்கப்பட்ட இந்த கீதாசாஸ்திரம்), *த்வயா-உன்னால், ஏகாக்ரேண சேதஸா-* ஒன்றுபட்ட மனத்துடன், *ச்ருதம் கச்சித்-*கேட்கப்பட்டதா?, *தனஞ்*

*ஜயா-அர்ஜுனா, தே-உன்னுடைய, அஜ்ஞானஸம் மோஹஹ-அறியாமையினால் விளைந்த மோஹம் (குழப்பம்), ப்ரநஷ்டஹகச் சித்-முழுமையாக அழிந்ததா?*

**கருத்துரை**

*பார்த்தா! ஒன்றுபட்ட மனத்துடன் உன்னால் இது கேட்கப்பட்டதா? தனஞ்ஜயா! உனது அறியாமையால் விளைந்த மயக்கம் அழிந்ததா?*

**விளக்கவுரை**

*கண்ணபிரான் தான் சொல்லக் கருதிய போதனைகள் அனைத்தையும் கூறிவிட்டு 'அர்ஜுனனே! இந்த வாக்கியங்கள் நீ ஒருமித்த மனத்துடன் கேட்டாயா? உன் அறியாமை ஒழிந்ததா' எனக் கேட்கிறார். நோயாளிக்கு மருந்து கொடுத்த பிறகு அவனுடைய நோய் குணமடைந்ததா என்று கேட்பது மருத்துவரின் கடமையாகும். பிறவி நோய் மருத்துவனாகிய ஸ்ரீகிருஷ்ணரும் அவ்வாறே செய்தார். அறியாமை நோயால் பீடிக்கப்பட்ட அர்ஜுனனுக்கு கீதா சாஸ்திரமெனும் ஈடில்லா மருந்தைக் கொடுத்துக் குழப்பம் தீர்ந்து விட்டதா என்று கேட்கிறார்.*

*'ஏகாக்ரேண சேதஸா' - என்றால் கேட்கும் போதும், தியானத்திலும் மனம் ஒருமித்திருத்தல் வேண்டும். சலனமுற்ற மனத்துடன் எதனைச் செய்தாலும் அது பலனளிக்காது. சலனமுடைய தண்ணீரில் சூரியனது பிம்பம் நன்றாக பிரதிபலிப்பதில்லை. அதைப்போல் சலனமுற்ற மனத்தில் ஆன்மா பிரதிபலிக்காது. தியானம், வேள்வி முதலியவை நன்கு நடைபெற வேண்டுமாயின் ஒருமித்த மனம் மிகவும் அவசியம். மேலும் போர்க்களத்தில் மன ஒருமைப்பாடின்றிக் குழப்பத்திற்கு உள்ளாகி விட்டால், தான் செய்த போதனை அனைத்தும் வீணாகிவிடும். எனவேதான் பகவான் இவ்வாறு கேட்கிறார். பாராயணம் செய்யும்போதோ, தியானம் செய்கையிலோ, தத்துவ சிந்தனை செய்கையிலோ மனத்தை புறத்தே அலையவிடாமல் ஒருமைப்படுத்த வேண்டும். மனத்தை ஒருமுகப்படுத்தி வேள்வி முதலியவற்றைச் செய்து அறியாமையை அடியோடு அழித்து விடுங்கள் என்ற இந்த வாக்கியமே ஸ்ரீகிருஷ்ணர் செய்த கீதா சாஸ்திரத்தின் இறுதி போதனை.*

'அக்ஞான ஸம்மோஹஹ' - மோகத்திற்குக் காரணம் அறியாமையேயாகும். அறியாமையால் மனிதன் கயிற்றைப் பாம்பாக எண்ணி பிரமைக்கு உள்ளாகிறான். அவ்வாறே அழியும் பொருளை நிலையாக எண்ணி மோஹத்தில் ஆழ்கிறான். அறியாமையால் ஏற்பட்ட அர்ஜுனனின் குழப்பம் தனது உறவினர்கள் இறந்து விடுவார்கள் என்ற துக்கம் ஆகியவை பகவான் உபதேசித்த போதனையால் அழிந்ததா எனக் கேட்கிறார்.

'ப்ரணஷ்டஹ' - மருந்து ஆற்றல் வாய்ந்ததானால் நோய் முற்றிலும் குணமாகிவிடும். பகவானின் ஈடில்லா ஞான மருந்தினால் அர்ஜுனனுடைய பிறவி நோய் முற்றிலுமாக அழிந்துவிட்டது. தான் பயன்படுத்திய மருந்தின் குணம் எத்தகையது என்பது தெரியுமாதலால் பகவான் தைரியமாக உன் நோய் தீர்ந்ததா எனக் கேட்க முடிந்தது. 'நஷ்டஹ' எனாமல் 'ப்ரநஷ்டஹ' என்று கேட்பதால் அறியாமை முழுமையாகத் தீர்ந்து விட்டதா எனக் கேட்பதாயிற்று.

'தனஞ்ஜய' - முன்பு இராஜசூய வேள்வியில் தனம் முதலியவற்றை எப்படிவென்று வந்தாயோ அவ்வாறே இப்போதும் உன் மாயையையும் குழப்பத்தையும், அறியாமையையும் வென்று புகழடைவாயாக என்று வாழ்த்தும் முகமாக தனஞ்ஜய என்ற அடைமொழி இட்டுக் குறிப்பிடுகிறார்.

**வினா :** வேள்வி முதலியவற்றை எவ்வாறு செய்ய வேண்டும்?

**விடை :** ஒருமித்த மனத்துடன்.

### முன்னுரை

பகவானின் இக்கேள்விக்கு அர்ஜுனன் விடை கூறுகிறான்.

### அர்ஜுன உவாச

*நஷ்டோ மோஹ ஹஸ்ம்ருதிர் லப்தாத்வத் ப்ரஸாதான்மயா அச்யுத!*
*ஸ்திதோ (அ)ஸ்மி கதஸந் தேஹஹ கரிஷ்யே வசனம்தவ!! - (73)*

### சொற்பொருள்

அச்யுத-ஏ கிருஷ்ணா, த்வத் ப்ரஸாதாத்-உன்னருளால், மோஹஹ-என்னுடைய அறியாமை, நஷ்டஹ-அழிந்துவிட்டது, மயா-என்னால், ஸ்ம்ருத்ஹி-அறிவு (ஆன்ம அறிவு), லபத்வா-அடையப்பட்டது. கதஸ்ந்தேஹஹ-ஐயங்கள் நீங்கியவனாய், ஸ்திதஹ அஸ்மி-இருக்கிறேன், தவ-உன்னுடைய, வசனம் - வாக்கியத்தை, கரிஷ்யே-நிறைவேற்றுகிறேன்.

**கருத்துரை**

ஏ கிருஷ்ணா! உன்னருளால் என் அஞ்ஞானம் தொலைந்தது. ஐயங்கள் அகன்றன. இனி உன் கட்டளையை நிறைவேற்றுகிறேன்.

**விளக்கவுரை**

பகவானின் கேள்விக்கு அர்ஜுனன் விடை கூறுகிறான். 'என்னுடைய அஞ்ஞானம் அழிந்து விட்டது' என அர்ஜுனன் தெள்ளத்தெளிவாகச் சொல்கிறான். அர்ஜுனன் தன்னை மறந்த நிலையில் செய்யத்தக்கன எவை செய்யத்தகாதவை ஆகியவற்றை மறந்த நிலையில் கண்ணன் அவனுக்கு உண்மைத் தத்துவத்தைப் போதித்தார். நோயாளிக்கு மருந்து கொடுப்பதைப் போல், இங்கு மருத்துவன் சிறந்தவன். மருந்தும் சிறந்ததுதான். இனி நோய் எத்துணை தீவிரமாயினும் என்ன? கீதையெனும் அமுதத்தைப் பருகிய அர்ஜுனனுக்கு மோஹம் அழிந்துவிட்டது. அறியாமை என்ற மயக்கம் தொலைந்தது. இதனையே 'நஷ்டோ மோஹஹ' என அர்ஜுனன் ஒப்புக்கொள்கிறான். மருந்திற்கு மருத்துவத்திற்கு உடனடியாகப் பலன் கிடைத்தது. போதிக்கப்பட்டவனிடம் உடனுக்குடன் நேரிடையாகப் பலன் காண்பது போதகரின் திறமையைப் பறை சாற்றுகிறது. ஸ்ரீகிருஷ்ணர் எத்துணை ஆற்றல் வாய்ந்தவரென்பதும், கீதா ஞானம் எத்துணைச் சிறந்தது என்பதும் இதனால் தெளிவாகிறது.

ஆன்மீக ஞானம், அனுபவத்தினால் பெற வேண்டிய ஒன்று. அது வெறும் வாக்கு ஞானத்தால் முழுமை அடைவதல்ல. ஒவ்வொருவரும் அதனை நடைமுறையில் அனுபவத்தில் உணரலாம். அப்போது கீதா சாஸ்திரம் வெறும் கற்பனையல்ல, சாஸ்திரங்களில் தெரிவிக்கப்பட்டு மகான்கள் ஆகிய ரிஷிகள் அனுபவத்தில் உணர்ந்து நமக்குப் போற்றிப் பாதுகாத்து வைத்தது என்பதையுணரலாம். அர்ஜுனன், கண்ணனின் போதனையையும் சித்தாந்தத்தையும் தன்னளவில் அனுபவத்தில் உணர்ந்து விட்டான். தனது கோட்பாடு சரியானதே என்பதை பகவானும் உடனேயே அவன் மூலம் நிரூபணம் செய்து விட்டார். அந்த உண்மையை அர்ஜுனன் இச்சுலோகத்தின் மூலம் இவ்வுலகிற்கு எடுத்துரைக்கிறான். 'மக்களே' நான் மருந்துண்டு உடனுக்குடன் பலன் கிட்டியது. சம்சார நோயால் வாடும் நீங்களும் தயங்காமல் இதனை உண்ணுங்கள். என்னைப் போல் உங்களுக்கும் (பவரோகம்) பிறவிப்பிணி தீரும் என உலகத்திற்குப் பறை சாற்றுகிறான். பசிதீர்ந்ததிற்கு அடையாளம் ஏப்பம் வருவதே. அவ்வாறே கீதா அமுதத்தை ஆசைதீர அருந்திய அவ

னுக்கு ஏப்பம் வந்தது 'என் பசி தீர்ந்தது. தாகம் தணிந்தது, திருப்தியுற்றேன்' என்று அர்ஜுனன் சொன்னான். இதனால் கீதையின் மீது மக்களுக்கு நல்ல நம்பிக்கை ஏற்படும்.

ஸ்ம்ருதிர்லப்தா' - மறந்ததை மீண்டும் நினைவிற்குக் கொண்டு வருவதே ஸ்ம்ருதி, ஸ்மரணம் எனப்படும். அர்ஜுனன் தனது உண்மை வடிவான ஆன்மாவை மறந்து பிரமையுற்றான். தான்தேகமல்லவென்பதும், தேகத்திற்கு அப்பாற்பட்ட சச்சிதானந்தம் என்பது அவனுக்கு மீண்டும் நினைவிற்கு வந்தது. 'ஸ்ம்ருதிஹி' என்று கூறுவதால் இந்த ஆன்ம வடிவம் புதிதாக அடைவதல்ல என்பதும், தொன்று தொட்டே அவனுக்கு இயல்பாகவே இருந்திருக்கின்றதென்பதும், அதனை அவன் மறந்து விட்டான் என்பதும், மீண்டும் நெருங்கிய நண்பனின் வாக்கியத்தினால் இப்போது மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறதென்பதும் தெளிவாகிறது.

*ஆத்மா துஸததம் ப்ராப்தோஹ்ய ப்ராப்தவத வித்யயா!*
*தந்நாஸே ப்ரஸ்தவத்பாதி ஸ்வகண்டா பரணம் யதா!!*

('ஆத்ம போதனை' - ஸ்ரீசங்கராச்சாரியார்)

ஆன்மா எப்போதும் அடையப்பட்டேயிருக்கிறது. அடையப்படாததைப் போல் அறியாமையால் தோன்றுகிறது. அறியாமை அகலும்போது மறந்துவிட்ட கழுத்தணியை மீண்டும் அணிவது போல் தோன்றும் என ஸ்ரீ சங்கராச்சாரியார் கூறுவதைப் போல் ஆன்மா எல்லா உயிர்களுக்கும் இயல்பாய் அமைந்தது. ஆயினும் மறக்கப்பட்டது. குருவின் வாக்கியத்தை இப்போது மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதுதான் ஸ்மிருதி. இதனால் எல்லா உயிர்களும் அழிவற்ற ஆன்மாவின் வடிவங்களே என்றும், அவித்தையின் தாக்கத்தால் அந்த விஷயத்தை மறந்துவிட்டு தான் தேகம் மற்றும் புலன்கள் மட்டுமே என்றெண்ணி வீணாக வருந்துகின்றான். எனவே அனுபவம் வாய்ந்த மகான்களின் போதனையாலும் கீதா சாஸ்திர சிந்தனையாலும் மறந்துவிட்ட சுய வடிவத்தை ஒவ்வொருவரும் அர்ஜுனனைப் போல் மீண்டும் நினைவிற்குக் கொண்டு வந்து தன்னுடைய மகிமையை உணர்ந்து சோகத்தினின்றும் விடுபட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

'த்வத் ப்ருஸாதாத்' - நல்ல குருவின் அருள் ஆன்மீகத் துறையில் மிகத் தேவை. சீடன்தன் உய்வுக்காகத் தானே எவ்வளவு முயன்றபோதிலும் விஸ்வேசுவரனுடைய அருளில்லையேல். இந்த மாயையைக்

கடப்பது மிகக் கடினம். எனவே பூசை, ஜபம், தியானம் முதலியவற்றைச் செய்தல். சத்குருவை மனம், வாக்கு, காயம் இவற்றால் தூய்மையாகச் சேவித்தல் ஆகியவை முமுட்சுகளுக்குக் கடமையாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகான்களின் அருளினால் மாயையின் கறை நீங்கிவிடும். எனவேதான் நம்முன்னோர்கள் தாங்கள் எத்துணை உயர்ந்தவராயினும் யாராவது ஒரு குருவை அடைந்து சேவித்து அவ்வாறே பகவானைப் பூசித்துக் கடைத்தேறினர். இங்கும் அர்ஜுனன் தன் அறியாமை, சத்குருவான ஸ்ரீ கிருஷ்ணனின் அருளினால்தான் அழிந்தது என்பது மிகத் தெளிவாகக் கூறுகிறான்.

'அச்யுத்' - தனது பக்தர்களை சம்சார பந்தத்தில் விழுந்து விடாமல் காப்பாற்றுபவனாதலால் கிருஷ்ணருக்கு 'அச்யுதன்' என்ற பெயர் உண்டாயிற்று. தன் பக்தனாகிய அர்ஜுனனை அறியாமையில் விழுந்துவிடாமல் காப்பாற்றி அச்யுதன் என்ற தன் பெயரை ஸ்ரீ கிருஷ்ணர் நிலைநாட்டிக் கொண்டார்.

'கத ஸந்தேஹ' - அறியாமையில் ஐயங்கள் தொடர்ந்து மனிதனைத் தொல்லைப்படுத்தும். ஆனால் ஆன்ம தத்துவத்தை உண்மையாக உணரும்போது அத்தகைய ஐயத்திற்கு இடமேயிராது.

*பித்யதே ஹ்ருதய க்ரந்திம் சித்யந்தே ஸர்வ சம்ஸயாஹ!*
*க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மின் த்ருஷ்டே பராவதே!!*

என் உபநிஷத் வாக்கியம் இந்த உண்மையைத் தெரிவிக்கிறது.

'கரிஷ்யே வசனம் தவ' - நோயாளி ஆரோக்கியம் அடைந்து விட்டான் என்பதற்கான அடையாளம் எழுந்து நடப்பது. அதே போல் ஆன்மஞானம் அடைந்தவனுக்கு அடையாளம் தேகத்தின்பால் கொண்ட மயக்கம் அழிந்துதான் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுதலே. அதேபோல் அர்ஜுனனுக்கு அறியாமை விலகியதால் 'நீ சொன்னதைப் போலச் செய்கிறேன்' என்று அர்ஜுனன் கூறி தன் கடமையற்ற ஆயத்தமானான்.

உலக வழக்கில் சீடன் எவ்வளவு உயர்நிலைக்குச் சென்றாலும், குருபக்தியையும், அவரது சொல்லையும் மறந்துவிடலாகாது. அவ்வாறே அர்ஜுனன் தனக்கு ஞானம் ஏற்பட்டு விட்ட பின்பும் குருவின் கட்டளையை நிறைவேற்றுவதை விட்டு விடவில்லை. குருபக்திக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அர்ஜுனனின் இந்த முன் உதாரணத்தை மோட்சத்தை நாடுவோர் எப்போதும் நினைவில் இருத்தி குருபக்தி, தெய்வபக்தி, சாஸ்திரத்தின் மீது நம்பிக்கை

இவற்றை எப்போதும் விடாமல் இருக்க வேண்டும்.

**வினா :** கிருஷ்ணனின் போதனையால் அர்ஜுனனுக்கு எத்தகைய நற்பலன்கள் கிடைத்தன?

**விடை :** (1) அஞ்ஞானம் அகன்றது (2) ஆன்ம நிலை ஏற்பட்டது. (3) ஐயங்கள் அகன்றன (4) கடமையில் ஈடுபடுத்துவதற்கான உற்சாகம் எழுந்தது.

**வினா :** ஜீவனுக்கு அஞ்ஞானம் எவ்வாறு அகலும்?

**விடை :** மகான்களாகிய நற்குருமார்களின் போதனைகளாலும் அவர்களின் அருளாலும் அகலும் (த்வத் ப்ரஸாதாத்).

**முன்னுரை**

கீதையனைத்தையும் கேட்டபிறகு சஞ்சயன் தனக்கு ஏற்பட்ட ஆனந்த அனுபவத்தை ஐந்து சுலோகங்கள் வாயிலாகத் திருதராட்டிரனுக்குத் தெரிவிக்கிறார்.

**சஞ்ஜய உவாச**

*இத்யஹம் வாஸுதேவஸ்ய பார்த்தஸ்யச மஹாத்மனஹ*
*ஸம்வாதமிமச்ரௌஷமத்புதம் ரோமஹர்ஷணம்!!* (74)

**சொற்பொருள்**

இதி - இவ்வாறு, அஹம்-நான், வாஸுதேவஸ்ய - வாசுதேவனுடைய, மஹாத்மனஷ - மகாத்மாவான, பார்த்தஸ்ய ச - பார்த்தனுக்கும், குமம் - இந்த, அத்புதம் - அற்புதமானதும், ரோமஹர்ஷம் - மயிர்கூச்சுஉண்டு பண்ணுவனுமாகிய , சம்வாதம் - சம்பாஷணையை - அச்ரௌஷம் கேட்டேன்.

**கருத்துரை**

இங்ஙனம் வசுதேவருக்கும் மகாத்மாவான அர்ஜுனனுக்கும் இடையே நிகழ்ந்த மயிர்கூச்சு உண்டுபண்ணும் அற்புத உரையாடலை நான் கேட்டேன்.

**விளக்கவுரை**

ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசித்த கீதை முழுவதையும் வியாசரின்

அருளால் கேட்க முடிந்த சஞ்சயன் அதனைக் கேட்டபிறகு இதற்கு முன்பு எப்போதும் அடைந்திராத மகிழ்ச்சிப் பெருக்கை அடைந்து அதனை திருதராட்டிரனுக்குத் தெரிவிக்கிறார்.

'பார்த்தஸ்ய சமஹாத்மனஹ' - இதுவரை மயக்கத்திற்குட் பட்டு பிரமை பிடித்தவனாய் அற்பனாக இருந்த அர்ஜுனன் பகவா னுடைய திவ்யபோதனைகளால் மகானாக மாறிவிட்டான். அர்ஜு னனைப் போன்றே ஒவ்வொருவரும் கண்ணனின் போதனை அமு தத்தைப் பருகி சம்சாரத் தளைகளை அறுத்து எறிந்து மாயையின் மோகத்தை ஒழித்து மகான்களாக விளங்க வேண்டும். மகாத்மா என்பது ஒரு விருதாகும். முயற்சியால் எவராயினும் இவ்விருதைப் பெறலாம். கீதையின் முக்கியமான நோக்கம், இலக்கு அற்பர்களை மகான்கள் ஆக்குவதேயாகும். மந்த புத்தியுடையவர்களை புத்தி மான்கள் ஆக்குவதேயாகும். அஞ்ஞானியை ஞானியாக்குவதேயா கும்.

'அத்புதம் ரோகஹர்ஷணம்' கிருஷ்ணார்ஜுன சம்வாதனான இந்த கீதாசாஸ்திரம் மிகவும் வியப்பிற்குரியது. ஏனென்றால் ஸ்பர்ச வேதி இரும்பைப் பொன்னாக்குவது போல், கீதை சாஸ்திர ம் மாயையால் மோகமடைந்தவனை மாயையினின்றும் விடுபடச் செய்கிறது. அழுபவனைச் சிரிக்க வைக்கிறது. இத்தகைய அமோக மான தெய்வீக சத்தி இதிலிருக்கிறது. இதனைப் படித்தவனோ கேட் டவனோ ஆனந்தத்தில் தன்வயப்படுவான். இதனால்தான் இதனை சஞ்சயன் 'அத்புதம் ரோமஹர்ஷணம்' என வர்ணிக்கிறார். இத்த கைய சிறப்பினால்தான் கீதை உலக பிரசித்தி பெற்றது. முமுட்சுக ளுக்கு கற்பக விருக்ஷமாக இருக்கிறது.

**வினா :** *கிருஷ்ணன் அர்ஜுனனின் உரையாடல் எத்தகையது?*

**விடை :** *(1) அற்புதமானது (2) புளகாங்கிதமடையச் செய்வது.*

**முன்னுரை**

வேத வியாசரின் அருளால்தான் இந்த உரையாடலைக் கேட்க முடிந்ததென சஞ்சயன் சொல்கிறார்.

*வ்யாஸ ப்ரஸாதாச் ச்ருத்வானேதத் குஹ்யமஹம் பரம்!*
*யோகம் யோகேச்வராத் க்ருஷ்ணாத் ஸாக்ஷாத் கதயதஹ் ஸ்வயம்!!-(75)*

## சொற்பொருள்

வ்யாஸ பிரஸாதாத்-வேத வியாசரின் அருளால், அஹம்-நான், குஹ்யம்-இரகசியமானதும், பரம்-மேலானதும் ஆகிய, ஏதத்யோகம்-இந்த யோக சாஸ்திரத்தை, ஸ்வயம்-சுயமாகவே, கதயதஹ-அர்ஜுனனுக்குக் கூறும், யோகேஸ்வராத்-யோகேசுவரனாகிய, க்ருஷ்ணாத்-கிருஷ்ணரால், சாக்ஷாத்-நேரிடையாகக், ச்ருதீவான்-கேட்டேன்.

## கருத்துரை

திரு வேதவியாசரின் அருளால் நான் மிகவும் இரகசியமானதும் மிகச் சிறந்ததுமாகிய இந்த யோக சாஸ்திரத்தை அர்ஜுனனுக்குச் சொல்லிக் கொண்டிருந்த யோகேசுவரனாகிய கண்ணனிடம் நேரடியாகக் கேட்டேன்.

## கருத்துரை

கீதா சாஸ்திரம் யோகம் என்று இங்குக் கூறப்பட்டது. 'யோகம்' என்றால் கூடுதல் சேர்க்கை. ஜீவனை பரமாத்மாவிடம் சேர்ப்பது என்பது பொருள். இது மிகவும் இரகசியமானதும் சிறந்ததும் ஆகையால் முமுட்சுக்களுக்கு அவசியம் கடைப்பிடிக்கத்தக்கதாக உள்ளது.

'யோகேஸ்வரதா' - யோகத்திற்குத் தலைவன் யோகேஸ்வரன். யோகத்தைப் பற்றி முழுமையாக அறிந்தவன் கண்ணன். எனவே அத்தகைய மகான் உபதேசித்தக் கீதையெனும் யோக சாஸ்திரத்தில் எத்துனை நம்பிக்கை வைக்க வேண்டுமென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

ஸ்ரீவியாசரின் அருளால் நான் கீதையை நேரடியாகத் தான் கேட்க முடிந்தது என சஞ்சயன் கூறுகிறார். ஸ்ரீ வியாச மஹரிஷி தொலைவில் நடப்பதை எண்ணிப்பார்க்கும் சக்தியும், கண்ணால் பார்க்கும் சக்தியையும் அருளியதால் போர்க்களத்தில் நடந்த இந்த விவாதத்தை வீட்டிலிருந்தபடியே அவரால் கேட்க முடிந்தது. அதாவது கீதை எந்த முறையில் வெளிப்பட்டதோ அதனை உள்ளது உள்ளபடி சஞ்சயனால் சொல்ல முடிந்தது என்பது பொருள். இவ்விதம் சஞ்சயன் கூறியது சாட்சாத் பகவானால் கூறப்பட்ட வாக்கியங்களே ஆதலால் அந்நூலின் மீது யாவருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படுதல் வேண்டும்.

'ஸ்வயம்' - என்பதால் இதற்கு அளவில்லாத மதிப்பு இருக்கிறது.

**வினா :** *கீதா சாஸ்திரம் எத்தகையது?*

**விடை :** *(1) மிகவும் இரகசியமானது (2) மகிமை பொருந்தியது (3) கடவுள் தானாகக் கூறியது.*

**வினா :** *சஞ்சயன் இந்த கீதா சாஸ்திரத்தை நேரில் எப்படிக் கேட்க முடிந்தது?*

**விடை :** *வியாசரின் அருளால்.*

**முன்னுரை**

பகவானின் திவ்ய போதனைகளை நினைவிற்கொண்டு அளவில்லாத மகிழ்ச்சியையடைந்தேன் என சஞ்சயன் கூறுகிறார்.

*ராஜன் ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்வாதமிமமத்புதம்!*
*கேவார்ஜுன யோஹ புண்யம் ஹ்ருஷ்யாமிச முஹுர்முஹு!! - (76)*

## சொற்பொருள்

ராஜன்!-திரதராஷ்டிர அரசே! அத்புதம்-அற்புதமானதும், புண்யம்-புண்ணியமானதும், கேசவார்ஜுனயோஹ்-கேசவனுக்கும் அர்ஜுனனுக்கும் இடையில் நடந்த, இமம் சம்வாதம்-இந்த உரையாடலை, சம்ஸ்ம் ருத்ய சம்ஸ்ம்ருத்ய-நினைத்து நினைத்து, முஹுமுஹுஹ்ச-மீண்டும் மீண்டும், ஹ்ருஷயாமி-ஆனந்தம் அடைகிறேன்.

**கருத்துரை**

திருதராஷ்டிர மன்னனே! கேசவார்ஜுனரின் வியப்பிற்குரிய இப்புண்ணிய உரையாடலை நினைத்து நினைத்து மீண்டும் மீண்டும் மகிழ்வடைகிறேன்.

**விளக்கவுரை**

சஞ்சயன் கீதையை மீண்டும் எண்ணிப் பார்த்துத் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

'ஸம்ஸ் ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய-மீண்டும் மீண்டும் என இருமுறை சொல்வதில் ஒரு சிறப்புள்ளது. கேட்ட போதனையை நன்கு

நினைத்துப் பார்த்தாலே ஸம்ஸ்மரணம். மேலும் அந்தச் சொல்லை இருமுறை சொல்வதால் கீதையை மீண்டும் மீண்டும் நன்கு நினைத்துப்பார்த்தல் வேண்டுமென்பது பொருள். இறைவன் வழங்கிய கீதா போதனையைச் சஞ்சயன் அவ்வாறே மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தார். அவ்வாறு 'ஸ்மரணம்' செய்தால்தான் அதன் பொருள் மனத்தில் இடம்பெறும் (1) ஸ்ரவணம், (2) ஸ்மரணம், (3) நிதி தியானம் என மூன்று முறைகள் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. சஞ்சயன் முதலில் கீதா போதனையைக் கேட்டார். அதன்பின் மனத்தில் எண்ணிப்பார்த்து அதன் பலனாக பேரானந்தத்தை அடைந்தார்.

'புண்யம்' என்று சொல்வதால் கிருஷ்ணார்ஜுன சம்வாதமான இந்த கீதா சாஸ்திரம் மிகவும் புண்ணியத்தை அளிக்க வல்லதும், மிகவும் பவித்ரமானதும் ஆகும் என்பது பொருள். சாட்சாத் மோட்சத்தையே அளிக்கவல்ல புனிதத்தன்மையுடையதாதலால் 'புண்யம்' எனப்பட்டது.

'ஹ்ருஷ்யாமிச புனஹ புனஹ' - தன் சுய வடிவை (ஆன்மாவை) நேரில் காணும் போதும், இறைவனில் இரண்டறக் கலக்கும்போதும் ஜீவன் துக்கம் நீங்கி மிக்க பேரானந்தத்தையடைகிறான். மனிதனுக்குத் தேவையானது ஆனந்தமேயல்லவா? துக்கமின்மையேயல்லவா? கீதையினால் இவ்விரண்டும் கிட்டுகிறது. அர்ஜுனனே இதற்கு எடுத்துக் காட்டு. முதலில் சோகத்தினால் சூழப்பட்டிருந்த அர்ஜுனன் கீதையைக் கேட்பதால் மோகம் விலகி, ஆனந்தமடைந்து கடமையை நிறைவேற்றிப் போர்க்களத்தில் இறங்கினான். அவ்வாறே சஞ்சயன் கீதையை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்து பரமானந்தம் அடைந்தார். என்வே ஆனந்தத்தை விரும்பும் ஒவ்வொருவரும், துக்கத்தைப் போக்கிக் கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் இந்த கீதா சாஸ்திரத்தைக் கட்டாயமாகப் படித்து அதனை நினைத்துப் பார்த்து, அதன் பொருளை உணர்தல் வேண்டும். கீதை சஞ்சீவியைப் போன்றது. அனைத்துயிர்களுக்கும் உயிரூட்டவல்லது. சஞ்சயனது வாக்கு இதற்கு உதாரணம்.

**வினா :** கீதா சாஸ்திரம் எத்தகையது?

**விடை :** (1) மகத்தான புண்ணியத்தை அளிக்கவல்லது, மிகவும் தூய்மையானது (2) அற்புதமானது - மிகவும் ஆச்சரியத்தை அளிக்க வல்லது.

**வினா :** இதனைக் கேட்டபிறகு என்ன செய்ய வேண்டும்?

**விடை :** கேட்ட பொருளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தல் வேண்டும். நிதி தியானம் செய்தல் வேண்டும்.

**வினா :** அதனால் கிடைக்கும் பலன் என்ன?

**விடை :** ஜீவன் துக்கத்தினின்றும் விடுபட்டு பரமானந்தத்தையடைவான்.

## முன்னுரை

பகவானின் விசுவரூபத்தை நினைத்து மிக்க ஆனந்தத்தையடைகிறேன் என்று சஞ்சயன் கூறுகிறார்.

*தச்ச ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய ரூபமத்யத்புதம் ஹரே!*
*விஸ்மயோமே மஹான் ராஜன் ஹ்ருஷ்யாமி சபுனஹ்புனஹ்!! - (77)*

## சொற்பொருள்

ராஜன்! அரசே! ஹரே-கண்ணபிரானின், அத்யத்புதம்-மிகவும் அற்புதமான, தச்சரூபம்-விசுவரூபத்தை, ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ருத்ய-நினைந்து நினைந்து, மேச-எனக்கு இன்னும், மஹான் விஸ்மயஹ-மிக்க வியப்பு (பவதி-உண்டாகிறது), புனஹபுனஹச-அடிக்கடி, ஹ்ருஷ்யாமி-மகிழ்வடைகிறேன்.

## கருத்துரை

அரசே! ஹரியின் அந்த அதிசய விசுவரூபத்தை இன்னும் எண்ணியெண்ணி எனக்குப் பெருமகிழ்வு ஏற்படுகிறது; வியப்புண்டாகிறது.

## விளக்கவுரை

முன் சுலோகத்தில் பகவானின் போதனையால் ஏற்பட்ட ஆனந்தம் தெரிவிக்கப்பட்டது. இப்போது விசுவரூபத்தை நினைத்தபோது ஏற்படும் அனுபவம் (பரமானந்தம்) தெரிவிக்கப்படுகிறது. 'ஹ்ருஷ்யாம் சபுனஹ்புனஹ்' - சஞ்சயன் மீண்டும் அவரது போதனையையும் வடிவத்தையும் எண்ணியெண்ணிப் பிடிபடா ஆனந்தத்தில் திளைக்கிறார். ஆச்சரியமும் எல்லையில்லாமல் இருக்கிறது. அனைவரும் இத்தகைய எல்லையில்லா ஆனந்த நிலையை (ஞானத்தைப் பெறுவதன் மூலம்) அடைய வேண்டியவனாகவே இருக்கிறான்.

அழியும் உலக நினைவை விட்டு நிலையான பகவத் சொரூபத்தைச் சிந்திக்கும்போது, சிலர் பெருமகிழ்ச்சி எய்தி, கூத்தாடுவர், உரக்கப் பாடுவர், சிலர் நடனம் செய்வர். இவை பெருமகிழ்ச்சியின் அடையாளங்கள். சஞ்சயனுக்கு கீதாசாரத்தைக் கேட்டபிறகு விசுவரூபத்தைப் பற்றி நினைத்து ஆனந்தம் ஏற்பட்டது. அதனையே இங்கு திரிதராட்டினனுக்குத் தெரிவிக்கிறார்.

**வினா :** *பகவானின் விசுவரூபம் எத்தகையது?*

**விடை :** *மிகவும் அற்புதமானது.*

**வினா :** *அதனை நினைந்து சஞ்சயனுக்கு எத்தகைய அனுபவம் ஏற்பட்டது?*

**விடை :** *1) மிக ஆச்சரியம் (2) பரமானந்தம்.*

**முன்னுரை**

*கிருஷ்ணார்ஜுனர் இருக்குமிடத்தில் வெற்றி, செல்வம் முதலிய மங்கலங்கள் பெருகும் என்று கூறுகிறார்.*

*78. யத்ர யோகேச்வரஹ க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தனுர்தரஹ!*
*தத்ர ஸ்ரீர் விஜயோ பூதிர்த்ருவா நீதிர்மதிர்மம!! - (78)*

**சொற்பொருள்**

*யத்ர-எங்கு, யோகேச்வரஹ-யோயேசுவரனாகிய, க்ருஷ்ணஹ-கிருஷ்ணன், (திஷ்டதி-இருப்பானோ), யத்ர-எங்கு, தனுர் தரஹ-வில்லை ஏந்திய, பார்த்தஹ-அர்ஜுனன் (திஷ்டதி-இருப்பானோ, தத்ர-அங்கு, ஸ்ரீ-செல்வமும், விஜயசஹ-வெற்றியும், பூதிஹ்-பெருக்கு, (ஐசுவர்யம்), த்ருவா-நிலைத்த, நீதிஹி-நியாயமும், இதி-இருக்குமென்பது, மே-என்னுடைய, மதிஹ்-கொள்கை.*

**கருத்துரை**

*யோகேசுவரனான கிருஷ்ணனும், வில்லேந்திய பார்த்தனும் எங்குளரோ அங்குத் திருவும், வெற்றியும், செல்வப் பெருக்கும், நிலைத்த நீதியும் உள்ளன என்பது என் கொள்கை.*

**விளக்கவுரை**

*கீதை நூல் இந்த சுலோகத்துடன் முடிவடைகிறது. இறைவ*

னின் சந்நிதானத்தில் பக்தனின் அருகாமை எத்தகைய நற்பலனை அளிக்கவல்லது என்பது இச்சுலோகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எங்கு யோகேசுவரனாகிய கண்ணனும் வில்லேந்திய பார்த்தனும் உளரோ அங்கு வெற்றி, ஐசுவரியம் முதலானவை விளங்கும் எனப்பட்டது. எனவே வெற்றி, நீதி, ஞானச் செல்வம் இவற்றை வேண்டுவோர் இறை சிந்தனையின் மூலம் சாட்சாத் இறைவனைத் தன் இதயத்தில் இருத்திக் கொள்ள வேண்டும்.

பகவானான ஸ்ரீ கிருஷ்ணர் இருக்குமிடத்தில், பக்தனான அர்ஜுனன் இருக்குமிடத்தில் அத்தகைய வெற்றி முதலானவை இருக்கும் என மேலே சொல்லப்பட்டதால், அர்ஜுனன் சாதாரண பக்தனல்லன். வில்லேந்திய பக்தன். அதாவது புறத்தே எவ்வாறு பகைவர்களைக் காண்டீபத்தைக் கொண்டு வென்றானோ, அவ்வாறே உட்பகைவர்களை கீதைஞானம் என்ற வில்லைக் கொண்டு வென்று மோகத்தைத் தொலைத்தவன் (நஷ்டோ மோஹஹ்). இவ்வாறு அஞ்ஞானம் விலகிய பக்தன் இறைவனேயாகிறான். (ப்ரஹ்மம வித்ப்ரஷ்மைவ பவதி) எனவே இயற்கையை வென்று மாயையாகிய பகைவனை ஞானமெனும் வாளால், வில்லால் துண்டித்த பக்தனான அர்ஜுனன் இருக்குமிடத்தில் இறைவனின் சந்நிதியைப் போல் வெற்றி, செல்வம் இவை மேன்மேலும் பெருகுவதில் வியப்பேதுமில்லை. இங்குச் சொல்லப்பட்ட பக்தன் சாதாரண பக்தனல்லவென்பதும், அறியாமை, காமம், குரோதம் முதலியவற்றை வெற்றி கொண்ட வில்லேந்திய பக்தனின் விஷயமே சொல்லப்பட்டதென்பதை அறிய வேண்டும். எனவே கீதை ஞானமெனும் வில்லைக் கையில் ஏந்தியவனும், பற்றின்றி கர்மா, பக்தி, ஞானம், தியானம், வைராக்கியம் என்ற அஸ்திரங்களை ஏந்தியவனும் ஆகிய பக்தனின் அருகில் திருமால் குடியிருப்பான் என்பது பொருள். அத்தகைய பக்தர்கள் இறைவனின் வடிவங்களேயாவர். எனவே இறைவனிடத்து எத்தகைய தூய்மையான ஆற்றல் இருக்குமோ. அத்தகைய ஆற்றல் அவர்களிடத்தும் இருக்கும். ஞான நிலையில் பக்தனுக்கும் பகவானுக்கும், ஞானிக்கும் தெய்வத்திற்கும் வேற்றுமை இராது. ('ஞானி த்வாத்மைவ மேமதம்).

மேலும் 'தனுர்தரஹ' என்ற சொல் கர்ம யோகத்தினையும், தூய்மையான அனுஷ்டானத்தையும் குறிக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் தத்துவ ஞானத்துடன் அதனைச் செயலில் காட்டும் திறன் இருக்க வேண்டுமென்பது தெளிவாகிறது.

எங்குக் கண்ணன் உள்ளானோ அங்கு வெற்றி, செல்வம் இவை இருக்குமெனத் தெரிவிப்பதால் ஒவ்வொருவரும் தமது வீட்டிலும், இதயத்திலும் பகவானை இருத்தி இடைவிடாமல் அர்ச்சனை, பூசை, தியானம் முதலியவை செய்து வந்தால் அங்குப் பரம்பொருளே குடியிருப்பானாதலால் வெற்றி, செல்வம் ஆகியவை எப்போதும் குடியிருக்கும். அவ்வாறே எங்கு பக்தி, ஞானம், வைராக்கியம் முதலிய தெய்வீக குணங்கள் உடைய மகான்கள், பக்தர்கள் குடியிருப்பார்களோ, அங்கு வில்லேந்திய அர்ஜுனனின் சந்ததியைப் போல் வெற்றி முதலியவை துலங்குமென்று கொள்ள வேண்டும். பூசைகள் நடக்குமிடத்தில், மகான்கள் குடியிருக்குமிடத்தில் நன்மை பயக்கும் சூழல் இருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம்.

அனைவரும் விரும்புவது வெற்றியையும் செல்வத்தையுமே. அவற்றை அடைவதற்கான உபாயம் இச்சுலோகத்தில் கூறப்பட்டது. அதனைச் செயல்படுத்தினால் தவறாமல் வெற்றி முதலியவை கிடைக்கும். ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை அவரவர் இதயத்தில், இருப்பிடத்தில் சேர்த்துக் கொள்வதே அந்த உபாயம். இறைவனை பக்தியுடன் தியானித்து அவனது அருகாமையை யுணர்ந்தவண்ணம் இருப்பதே அவ்வுபாயம். பகவானும் மகான்களாகிய பக்தர்களும் இருக்குமிடத்தில் வெற்றி முதலியன தவறாது கிட்டும். எனவே நன்மக்களின் அருகாமை, பகவானின் அருகாமை இரண்டையும் பெற்று ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன (நர நாராயணர்) இருவரின் வெற்றிச் செல்வத்தை அனுபவித்தல் வேண்டும்.

மேலும், எங்கு (எப்பக்கத்தில்) ஸ்ரீ கிருஷ்ணர், அர்ஜுனன் இருக்கிறார்களோ, தர்மம் எப்பக்கம் இருக்குமோ அங்கு வெற்றி நிச்சயம் இருக்கும் என்ற வாக்கியத்தினைச் சொல்வதால் சஞ்சயன் பாண்டவர் பக்கமே வெற்றி கிட்டும் என்பதைத் திருதராட்டிரனுக்குத் தெரிவித்ததாயிற்று. (அதனைக் கேட்ட பிறகாவது திருதராட்டிரன் சமரசம் செய்து கொண்டு போரை நிறுத்துதல் நல்லது என்பதை இங்கு மறைமுகமாகச் சொல்லப்பட்டது).

இச்சுலோகத்தில் 'த்ருவாநீதிஹி' என்ற சொல்லிற்கு 'நீதி முதலானவை தப்பாது கிட்டும்' என்று சிலர் பொருள் சொல்கின்றனர்.

கீதையின் முடிவில் சஞ்சயன் மூலமாகப் போதிக்கப்பட்ட 'யத்ரயோகேஸ்வரஹ க்ருஷ்ணோ..... என்ற மிக உன்னதமான இந்த சுலோகத்தை பக்தர்கள் மறுபடியும் மறுபடியும் நினைத்துப் பார்த்து இறைவனின் அருகாமையை யுணர்ந்து தம் இதயத்தில் அவனுக்கு

நிரந்தரமான இடத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவனது அருளால் வாழ்க்கையை ஆனந்த மயமாகச் செய்து கொள்ள வேண்டும். மேலும் இறைவன் கருணை மேலிட்டுப் போதித்த இந்த கீதா சாஸ்திரமனைத்தையும் நன்கு படித்து, நடைமுறையில் கடைபிடித்து, ஆத்மானுபூதி அடைந்து பிறவியில்லாப் பெருவாழ்வைப் பெறுவதன் மூலம் மனித வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்வீராக!

**ஹரி ஹி ஓம் தத் ஸத்**

வியாசர் இயற்றிய ஒரு லட்சம் சுலோகங்களையுடைய மஹா பாரதத்தில், பீஷ்ம பருவத்தில் பிரம்ம வித்தையைப் புகட்டுவதும், யோக சாஸ்திரமானதும், ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதமாகயுள்ளது மாகிய பகவத் கீதையெனும் உபநிஷத்தின்கண் மோக்ஷ ஸந்நியாச யோகமென்ற பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

**ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணம். ஓம் தத்ஸத்.**

ஓம்

# ஸ்ரீ பகவத் கீதை

## சுலோகங்களின் அகர வரிசை


| | அத்தியாயம் எண் | சுலோக எண் |
|---|---|---|
| **அ** | | |
| அகீர்த்திஞ்சாபி | 2 | 34 |
| அக்ஷரம் ப்ரஹ்ம | 8 | 3 |
| அக்ஷராணாமகாரோ | 10 | 33 |
| அக்னிர் ஜ்யோதிரஹ: | 8 | 24 |
| அச்சேத்யோ அயமதா | 2 | 24 |
| அஜோ அபி ஸன்னவ்ய | 4 | 6 |
| அக்ஞஸ்சாச்ரத்ததா | 4 | 40 |
| அத்ர சூரா மஹேஷ் | 1 | 4 |
| அத கேன ப்ரயுக்தோ | 3 | 36 |
| அத சித்தம ஸமாதா | 12 | 9 |
| அத சேத் த்வமிமம் | 2 | 33 |
| அத சைனம் நித்ய | 2 | 26 |
| அதவா யோகினா | 6 | 42 |
| அதவா பஹுனை | 10 | 42 |
| அத வ்யவஸ்திதான் | 1 | 20 |
| அதைதததப்யசக்தோ | 12 | 11 |
| அத்ருஷ்ட பூர்வம் | 11 | 45 |
| அதேசகாலே யத்தா | 17 | 22 |

| | | |
|---|---|---|
| அத்வேஷ்டா ஸர்வ | 12 | 13 |
| அதர்மம் தர்மமிதி | 18 | 32 |
| அதர்மாபிபவாத் | 1 | 41 |
| அதஸ்சோர்த்வம் | 15 | 2 |
| அதிபூதம் க்ஷரோ | 8 | 4 |
| அதியக்ஞ: கதம்கோ | 8 | 2 |
| அதிஷ்டானம் ததா | 18 | 14 |
| அத்யாத்மஞான | 13 | 11 |
| அத்யேஷ்யதே சய | 18 | 70 |
| அனந்தவிஜயம் | 1 | 16 |
| அனந்தஸ்சாஸ்மி | 10 | 29 |
| அனன்யசேதா: | 8 | 14 |
| அனன்யாஸ்சிந்த | 9 | 22 |
| அனபேக்ஷ: சுசிர்தக்ஷ | 12 | 16 |
| அனாதித்வாந்நிர்க் | 13 | 31 |
| அனாதி மத்யாந்த | 11 | 19 |
| அனாச்ரித: கர்மபலம் | 6 | 1 |
| அனிஷ்டமிஷ்டம் | 18 | 12 |
| அனுத்வேககரம் | 17 | 15 |
| அனுபந்தம் க்ஷயம் | 18 | 25 |
| அநேகசித்தவிப் | 16 | 16 |
| அநேக பாஹூதர | 11 | 16 |
| அநேக வக்த்ர நயன | 11 | 10 |
| அந்தகாலே ச | 8 | 5 |
| அந்தவத்து பலம் | 7 | 23 |
| அந்தவந்த இமே | 2 | 18 |
| அன்னாத்பவந்தி | 3 | 14 |
| அன்யே ச பஹவ: | 1 | 9 |
| அன்யேத்வேவமஜா | 13 | 25 |
| அபரம் பவதோ | 4 | 4 |
| அபரே நியதாஹாரா: | 4 | 30 |
| அபரேயமிதஸ்த்வன் | 7 | 5 |
| அபர்யாப்தம் | 1 | 10 |
| அபானேஜூஹ்வதி | 4 | 29 |
| அபிசேத்ஸூதுரா | 9 | 30 |
| அபி சேதஸி பாபே | 4 | 36 |
| அப்ரகாசோ அப்ரவ் | 14 | 13 |
| அபலாகாங்க்ஷி | 17 | 11 |
| அபயம் ஸத்வஸம் | 16 | 1 |

| | | |
|---|---|---|
| அபிஸந்தாய து | 17 | 12 |
| அப்யாஸயோக | 8 | 8 |
| அப்யாஸே அப்யஸ | 12 | 10 |
| அமானித்வமதம்பித் | 13 | 7 |
| அமீ சத்வாம் த்ருத | 11 | 26 |
| அமீ ஹி த்வாம்ஸுர | 11 | 21 |
| அயனேஷுச | 1 | 11 |
| அயதி: ச்ரத்தயோ | 6 | 37 |
| அயுக்த: ப்ராக்ருத: | 18 | 28 |
| அவஜானந்தி மாம் | 9 | 11 |
| அவாச்யவாதாம்ஸ்ச | 2 | 36 |
| அவினாசி து தத்வித்தி | 2 | 17 |
| அவிபக்தம் ச பூதே | 13 | 16 |
| அவ்யக்தாதீனி | 2 | 28 |
| அவ்யக்தாத்வ்யக்த் | 8 | 18 |
| அவ்யக்தோ அக்ஷர | 8 | 21 |
| அவ்யக்தோ அயம | 2 | 25 |
| அவ்யக்தம் வ்யக்தி | 7 | 24 |
| அசாஸ்த்ர விஹிதம் | 17 | 5 |
| அசோச்யானன் | 2 | 11 |
| அச்ரத்ததானா: புருஷா | 9 | 3 |
| அச்ரத்தயா | 17 | 28 |
| அச்வத்த: ஸர்வவ்ரு | 10 | 26 |
| அஸக்த புத்தி: | 18 | 49 |
| அஸக்திரனபிஷ் | 13 | 9 |
| அஸத்யமப்ரதிஷ்டம் | 16 | 8 |
| அஸௌ மயா ஹத: | 16 | 14 |
| அஸம்யதாத்மனா | 6 | 36 |
| அஸம்சயம் மஹா | 6 | 35 |
| அஸ்மாகம் து | 1 | 7 |
| அஹம் க்ரதுரஹம் | 9 | 16 |
| அஹங்காரம் பலம் | 16 | 18 |
| அஹங்காரம்...பரிக் | 18 | 53 |
| அஹமாத்மா | 10 | 20 |
| அஹம் வைச்வா | 15 | 14 |
| அஹம் ஸர்வஸ்ய | 10 | 8 |
| அஹம் ஹீ ஸர்வ | 9 | 24 |
| அஹிம்ஸா ஸத்யம் | 16 | 2 |
| அஹிம்ஸா ஸமதா | 10 | 5 |

| | | |
|---|---|---|
| அஹோ பத | 1 | 45 |

**ஆ**

| | | |
|---|---|---|
| ஆக்யாஹி மே கோ | 11 | 31 |
| ஆசார்ய: பிதர: | 1 | 34 |
| ஆட்யோ அபிஜன | 16 | 15 |
| ஆத்மஸம்பாவிதா: | 16 | 17 |
| ஆத்மௌபம்யேன | 6 | 32 |
| ஆதித்யானாமஹம் | 10 | 21 |
| அபூர்வயமாணமசல | 2 | 70 |
| ஆப்ரஹ்மபுவனால் | 8 | 16 |
| ஆயுதானாமஹம் | 10 | 28 |
| ஆயு: ஸத்வபலா | 17 | 8 |
| ஆருருக்ஷோர் முனேர் | 6 | 3 |
| ஆவ்ருதம் ஞான | 3 | 39 |
| ஆசாபாசசதைர்ப | 16 | 12 |
| ஆஸ்சர்யவத்பச்யதி | 2 | 29 |
| ஆஸுரீம் யோனிமா | 16 | 20 |
| ஆஹாரஸ்த்வபி | 17 | 7 |
| ஆஹுஸ்த்வாம் | 10 | 13 |

**இ**

| | | |
|---|---|---|
| இச்சாத்வேஷஸமுத் | 7 | 27 |
| இச்சா த்வேஷ: ஸுகே | 13 | 6 |
| இதி குஹ்யதமம் | 15 | 20 |
| இதி தே ஞானமாக் | 18 | 63 |
| இதி க்ஷேத்தியம் ததா | 13 | 18 |
| இத்யர்ஜுனம் | 11 | 50 |
| இத்யஹம் வாஸு | 18 | 74 |
| இதமத்ய மயாலப் | 16 | 13 |
| இதம் து தே குஹ்ய | 9 | 1 |
| இதம் தே நாதபஸ் | 18 | 67 |
| இதம் சரீரம் கௌந் | 13 | 1 |
| இதம் ஞானமுபா | 14 | 2 |
| இந்த்ரியஸ்யேந்த்ரி | 3 | 34 |
| இந்த்ரியாணாம்ஹி | 2 | 67 |
| இந்த்ரியாணி பராண் | 3 | 42 |
| இந்திரியாணி மனோ | 3 | 40 |

| | | |
|---|---|---|
| இந்த்ரியார்த்தேஷு | 13 | 8 |
| இமம் விவஸ்வதே | 4 | 1 |
| இஷ்டான் போகான் | 3 | 12 |
| இஹைகஸ்தம் | 11 | 7 |
| இஹைவ தைர்ஜித: | 5 | 19 |

ஈ

| | | |
|---|---|---|
| ஈஸ்வர: ஸர்வபூதா | 18 | 61 |

உ

| | | |
|---|---|---|
| உச்சை: ச்ரவஸமச் | 10 | 27 |
| உத்க்ராமந்தம் | | |
| உத்தம: புருஷஸ்த் | | |
| உத்ஸன்னகுலதர்மா | | |
| உத்ஸீதேயுரிமே | | |
| உதாரா: ஸர்வ | | |
| உதாஸீனவதாஸீ | | |
| உத்தரேதாத்மனாத் | | |
| உபத்ரஷ்டானு | | |

ஊ

| | | |
|---|---|---|
| ஊர்த்வம் கச்சந்தி | 14 | 18 |
| ஊர்த்வமூலமத: | 15 | 1 |

ரு

| | | |
|---|---|---|
| ருஷிபிர்பஹுதா | 13 | 4 |

ஏ

| | | |
|---|---|---|
| ஏதச்ச்ருத்வாவசன | 11 | 35 |
| ஏதத்யோனீனி | 7 | 6 |
| ஏதன்மே ஸம்சயம் | 6 | 39 |
| ஏதான்ன ஹந்து | 1 | 35 |
| ஏதான்யபி து கர்மா | 18 | 6 |
| ஏதாம் த்ருஷ்டிம | 16 | 9 |
| ஏதாம் விபூதிம் | 10 | 7 |
| ஏதைர்விமுக்த: | 16 | 22 |
| ஏவமுக்தோ | 1 | 24 |

| | | |
|---|---|---|
| ஏவமுக்த்வார்ஜுன: | 1 | 47 |
| ஏவமுக்த்வா ததோ | 11 | 9 |
| ஏவமுக்த்வா ஹ்ருஷீ | 2 | 9 |
| ஏவமேதத்யதாத்த | 11 | 3 |
| ஏவம் பரம்பரா | 4 | 2 |
| ஏவம் ப்ரவர்த்திதம் | 3 | 16 |
| ஏவம் பஹுவிதா | 4 | 32 |
| ஏவம் புத்தே: பரம | 3 | 43 |
| ஏவம் ஸததயுக்தா | 12 | 1 |
| ஏவம் ஞாத்வா | 4 | 15 |
| ஏஷா தேஃஅபிஹிதா | 2 | 39 |
| ஏஷாப்ராஹ்மீஸ்திதி: | 2 | 72 |

ஓ

| | | |
|---|---|---|
| ஓமித்யேகாக்ஷரம் | 8 | 13 |
| ஓம் தத் ஸதிதி | 17 | 23 |

| | | |
|---|---|---|
| கச்சின்னோபயவிப்ர | 6 | 38 |
| கச்சிதேதச்ருதம் | 18 | 72 |
| கட்வம்ல லவணாத் | 17 | 9 |
| கதம் ந ஞேய | 1 | 39 |
| கதம் பீஷ்ம மஹம் | 2 | 4 |
| கதம் வித்யாமஹம் | 10 | 17 |
| கர்மஜம் புத்தியுக்தா | 2 | 51 |
| கர்மண: ஸுக்ருதஸ் | 14 | 16 |
| கர்மணைவ ஹி | 3 | 20 |
| கர்மணோஹ்யபி | 4 | 17 |
| கர்மண்ய கர்ம ய: | 4 | 18 |
| கர்மண்யே வாதிகார | 2 | 47 |
| கர்மப்ரஹ்மோத்பவ | 3 | 15 |
| கர்மேந்த்ரியாணி | 3 | 6 |
| கர்ஷயந்த: சரீரஸ்தம் | 17 | 6 |
| கவிம் புராணமனுசா | 8 | 9 |
| கஸ்மாச்ச தே ந | 11 | 37 |
| காங்க்ஷந்த: கர்மணாம் | 4 | 12 |
| காமஏஷக்ரோத ஏஷ | 3 | 37 |
| காமக்ரோத வியுக்தா | 5 | 26 |

| | | |
|---|---|---|
| காமமாச்ரித்ய துஷ் | 16 | 10 |
| காமாத்மான: ஸ்வர்க | 2 | 43 |
| காமைஸ்தைஸ்தைர் | 7 | 20 |
| காம்யானாம் கர்மணாம் | 18 | 2 |
| காயேன மனஸா | 5 | 11 |
| கார்பண்யதோஷோ | 2 | 7 |
| கார்யகாரண கர்த் | 13 | 20 |
| கார்யமித்யேவ யத் | 18 | 9 |
| காலோ அஸ்மி லோக | 11 | 32 |
| காச்யஸ்ச பரமேஷ் | 1 | 17 |
| கிரீடினம் கதினம சக் | 11 | 46 |
| கிரீடினம் கதினம் | 11 | 17 |
| கிம் கர்ம கிமகர்மேதி | 4 | 16 |
| கிம் தத்ப்ரஹ்ம கிமத் | 8 | 1 |
| கிம் புனர்ப்ராஹ்மணா: | 9 | 33 |
| குதஸ்த்வா கச்மல | 2 | 2 |
| குலக்ஷயே ப்ரணச்ண | 1 | 40 |
| க்ருபயா பரயாவிஷ் | 1 | 28 |
| க்ருஷிகோரக்ஷ்ய | 18 | 44 |
| கைர்லிங்கைஸ்த்ரீன் | 14 | 21 |
| க்ரோதாத்பவதிஸம் | 2 | 63 |
| க்லேசோ அதிகதரஸ் | 12 | 5 |
| க்லைப்யம் மாஸ்மகம: | 2 | 3 |
| க்ஷிப்ரம் பவதி தர்மா | 9 | 31 |
| க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ | 13 | 34 |
| க்ஷேத்ரக்ஞம் சாபி | 13 | 2 |
| கதஸங்கஸ்ய முக்த | 4 | 23 |
| கதிர்பர்த்தா ப்ரபு: | 9 | 18 |
| காண்டீவம் ஸ்ரம் | 1 | 30 |
| காமாவிச்யசபூதானி | 15 | 13 |
| குணானேதானதீத்ய | 14 | 20 |
| குருனஹத்வா ஹி | 2 | 5 |

ச –

| | | |
|---|---|---|
| சஞ்சலம் ஹி மன: | 6 | 34 |
| சதுர்விதா பஜந்தே | 7 | 16 |

| | | |
|---|---|---|
| சாதுர்வர்ண்யம்மயா | 4 | 13 |
| சிந்தாமபரிமேயாம் | 16 | 11 |
| சேதஸா ஸர்வகர் | 18 | 57 |

ஜ -

| | | |
|---|---|---|
| ஜன்ம கர்ம ச மே | 4 | 9 |
| ஜராமரணமோக்ஷா | 9 | 29 |
| ஜாதஸ்ய ஹி | 2 | 27 |
| ஜிதாத்மன: ப்ரசாந்த | 6 | 7 |
| ஞானயக்ஞேன | 9 | 15 |
| ஞானவிக்ஞானத்ருப் | 6 | 8 |
| ஞானேனதுதக்ஞா | 5 | 16 |
| ஞானம் கர்ம ச | 18 | 19 |
| ஞானம் தே அஹம் | 7 | 2 |
| ஞானம் ஞேயம் | 18 | 18 |
| ஞேய: ஸ நித்யஸந் | 5 | 3 |
| ஞேயம்யத்தத்ப்ரவ | 13 | 12 |
| ஜ்யாயஸீ சேத் கர்ம | 3 | 1 |
| ஜ்யோதிஷாமபிதஜ் | 13 | 17 |

த -

| | | |
|---|---|---|
| தத: பதம் தத்பரிமார் | 15 | 4 |
| தச்ச ஸம்ஸம்ருத்ய | 18 | 77 |
| தத: சங்காஸ்சபேர்ய | 1 | 13 |
| தத: ச்வேதைர் | 1 | 14 |
| தத: ஸ விஸ்மயா | 11 | 14 |
| தத்வவித்து மஹா | 3 | 28 |
| தத்ர தம் புத்திஸம் | 6 | 43 |
| தத்ர ஸத்வம் நிர்மல | 14 | 6 |
| தத்ராபச்யத் ஸ்தி | 1 | 26 |
| தத்ரைகஸ்தம் | 11 | 13 |
| தத்ரைகாக்ரம் மன: | 6 | 12 |
| தத்ரைவம் ஸதி | 18 | 16 |
| தத்க்ஷேத்ரம் யச்ச | 13 | 3 |
| ததித்யனபிஸந்தாய | 17 | 25 |
| தத்புத்தயஸ்ததாத் | 5 | 17 |
| ததவித்தி ப்ரணிபா | 4 | 34 |
| தபஸ்விப்யோ அதிகோ | 6 | 46 |

| | | |
|---|---|---|
| தபாம்யஹமஹம் | 9 | 19 |
| தமஸ்த்வக்ஞானஜம் | 14 | 8 |
| தமுவாசஹ்ருஷீகேச: | 2 | 10 |
| தமேவ சரணம் கச்ச | 18 | 62 |
| தஸ்மாச் சாஸ்த்ரம் | 16 | 24 |
| தஸ்மாத் ப்ரணம்ய | 11 | 44 |
| தஸ்மாத் தவமிந்த்ரி | 3 | 41 |
| தஸ்மாத் த்வமுத்தி | 11 | 33 |
| தஸ்மாத் ஸர்வேஷு | 8 | 7 |
| தஸ்மாதஸக்த: ஸத | 3 | 19 |
| தஸ்மாதக்ஞான | 4 | 42 |
| தஸ்மாதோமித்யுதா | 17 | 24 |
| தஸ்மாத் யஸ்மமஹா | 2 | 68 |
| தஸ்மாந்நார்ஹா | 1 | 37 |
| தஸ்ய ஸஞ்ஜனயன் | 1 | 12 |
| தம் வித்யாத்து: க | 6 | 23 |
| தம் ததா க்ருபயா | 2 | 1 |
| தானஹம் த்விஷத: | 16 | 19 |
| தானிஸர்வாணி ஸம் | 2 | 61 |
| துல்யநிந்தாஸ்துதிர் | 12 | 19 |
| தேஜ: க்ஷமா த்ருதி: | 16 | 13 |
| தேதம்புக்த்வாஸ்வர் | 9 | 21 |
| தேஷாமஹம் ஸமுத் | 12 | 7 |
| தேஷாமேவானுகம் | 10 | 11 |
| தேஷாம் ஸததயுக் | 10 | 10 |
| தேஷாம் ஞானீ | 7 | 17 |
| த்யக்த்வா கர்மபலா | 4 | 20 |
| த்யாஜ்யம் தோஷவ | 18 | 3 |
| த்ரிபிர்குணமயை | 7 | 13 |
| த்ரிவிதா பவதிச்ரத் | 17 | 2 |
| த்ரிவிதம் நரகஸ்யே | 16 | 21 |
| த்ரைகுண்ய விஷயா | 2 | 45 |
| த்ரைவித்யா மாம் | 9 | 20 |
| த்வமக்ஷரம் பரமம் | 11 | 18 |
| த்வமாதிதேவ: புரு | 11 | 38 |


**த -**


| | | |
|---|---|---|
| தண்டோ தமயதா | 10 | 38 |

| | | |
|---|---|---|
| தம்போ தர்ப்போ | 16 | 4 |
| தன்ஷ்டராகரா | 11 | 25 |
| தாதவ்யமிதி யத்தா | 17 | 20 |
| திவிஸூர்ய ஸஹஸ் | 11 | 12 |
| திவ்யமால்யாம்பர | 11 | 11 |
| து: கமித்யேவ யத் | 18 | 8 |
| து: கேஷ்வனுத்விக்ன | 2 | 56 |
| தூரேண ஹ்யவரம் | 2 | 49 |
| த்ருஷ்ட்வாது பாண்ட் | 1 | 2 |
| த்ருஷ்ட்வாது பாண்ட் | 1 | 2 |
| த்ருஷ்ட்வேதம் | 11 | 51 |
| தேவத்விஜ குரு | 17 | 14 |
| தேவான் பாவயதா | 3 | 11 |
| தேஹினோ அஸ்மின் | 2 | 13 |
| தேஹீ நித்யமவத்யோ | 2 | 30 |
| தைவமேவாபரே | 4 | 25 |
| தைவீ ஹ்யேஷாகுண | 7 | 14 |
| தைவீ ஸம்பத்விமோ | 16 | 5 |
| தோஷைரேதை | 1 | 43 |
| தயாவாப்ருதிவ்யோ | 11 | 20 |
| த்யூதம் சலயதாமஸ் | 10 | 36 |
| த்ரவ்யயக்ஞாஸ் | 4 | 28 |
| த்ருபதோ த்ரௌப | 1 | 18 |
| த்ரோணம் ச பீஷ் | 11 | 34 |
| த்வாவிமௌ புரு | 15 | 16 |
| த்வௌ பூதஸர்கௌ | 16 | 6 |


**த -**


| | | |
|---|---|---|
| தர்மக்ஷேத்ரே குரு | 1 | 1 |
| தூமோ ராத்ரிஸ்ததா | 8 | 25 |
| தூமேனாவ்ரியதே | 3 | 38 |
| த்ருத்யா யயாதார | 18 | 33 |
| த்ருஷ்டகே துஸ்சேகி | 1 | 5 |
| த்யானேனாத்மனி | 13 | 24 |
| த்யாயதோ விஷயான் | 2 | 62 |


**ந**


| | | |
|---|---|---|
| ந கர்த்ருத்வம் நகர் | 5 | 14 |

| | | |
|---|---|---|
| ந கர்மணாமனாரம்பான் | 3 | 4 |
| ந காங்க்ஷே விஜயம் | 1 | 32 |
| ந ச தஸ்மான் மனுஷ் | 18 | 69 |
| ந ச மத்ஸ்தானி | 9 | 5 |
| ந ச மாம் தானிகர் | 9 | 9 |
| ந சைதத்வித்ம: | 2 | 6 |
| ந ஜாயதே ம்ரியதே | 2 | 20 |
| ந ததஸ்தி ப்ருதிவ் | 18 | 40 |
| ந தத்பாஸயதே | 15 | 6 |
| ந துமாம் சக்யஸே | 11 | 8 |
| ந த்வேஹம்ஜாது | 2 | 12 |
| ந த்வேஷ்யகுசலம் | 18 | 10 |
| ந ப்ரஹ்ருஷ்யேத்பிரிய | 5 | 20 |
| ந புத்திபேதம் ஜன | 3 | 26 |
| நப: ஸ்ப்ருசம் நீப்த | 11 | 24 |
| நம: புரஸ்தாதத ப்ரு | 11 | 40 |
| ந மாம் கர்மாணி | 4 | 14 |
| ந மாம் துஷ்கிருதினோ | 7 | 15 |
| ந மே பார்த்தாஸ்தி | 3 | 22 |
| ந மே விது: ஸீரகணா: | 10 | 2 |
| ந ரூபமஸ்யேஹ | 15 | 3 |
| ந வேதயக்ஞாத் | 11 | 48 |
| நஷ்டோ மோஹ: | 18 | 73 |
| ந ஹி கஸ்சித் க்ஷண | 3 | 5 |
| ந ஹி தேகப்ருதா | 18 | 11 |
| ந ஹி ப்ரபச்யாமி | 2 | 8 |
| ந ஹி ஞானேன | 4 | 38 |
| நாத்யச்னதஸ்துயோ | 6 | 16 |
| நாந்தோஸ்தி மம | 10 | 40 |
| நான்யம் குணேப்ய: | 14 | 19 |
| நாஸதோ வித்யதே | 2 | 16 |
| நாஸ்தி புத்தியுக்தஸ் | 2 | 66 |
| நாஹம் ப்ரகாச: ஸர்வ | 7 | 25 |
| நாஹம் வேதைர் ந | 11 | 53 |
| நிமித்தானி ச பச் | 1 | 31 |
| நியதஸ்ய து ஸ்ந்யா | 18 | 7 |
| நியதம் குரு கர்ம | 3 | 8 |
| நியதம் ஸங்கரஹிதம் | 18 | 23 |
| நிராசீர்யதசித்தாத் | 4 | 21 |

| | | |
|---|---|---|
| நிர்மானமோஹா | 15 | 5 |
| நிஶ்சயம் ச்ருணுமே | 18 | 4 |
| நிஹத்ய தார்த்தராஷ் | 1 | 36 |
| நேஹாபிக்ரம நாஶோ | 2 | 40 |
| நைதேஸ்ருதீபார்த்த | 8 | 27 |
| நைநம் சிந்தந்தி | 2 | 23 |
| நைவ கிஞ்சித்கரோ | 5 | 8 |
| நைவ தஸ்ய க்ருதேனோ | 3 | 18 |

ப

| | | |
|---|---|---|
| பஞ்சை தானி மஹா | 18 | 13 |
| பத்ரம் புஷ்பம் பலம் | 9 | 26 |
| பரதஸ்மாத் து | 8 | 20 |
| பரம் ப்ரஹ்ம பரம் | 10 | 12 |
| பரம் பூய: ப்ரவக்ஷ்யா | 14 | 1 |
| பரித்ராணாயஸாது | 4 | 8 |
| பவன: பவதாமஸ்மி | 10 | 31 |
| பஶ்ய மே பார்த்த | 11 | 5 |
| பஶ்யாதித்யான் | 11 | 6 |
| பஶ்யாமி தேவான் | 11 | 15 |
| பஶ்யைதாம் பாண்டு | 1 | 3 |
| பாஞ்சஜன்யம் ஹ்ரு | 1 | 15 |
| பார்த்த வைவேஹ | 6 | 40 |
| பிதாஸி லோகஸ்ய | 11 | 43 |
| பிதாஹமஸ்ய ஜக | 9 | 17 |
| புண்யோ கந்த: | 7 | 9 |
| புருஷ: ப்ரக்ருதிஸ் | 13 | 21 |
| புருஷ: ஸ பர: பார்த்த | 8 | 22 |
| புரோதஸாம் ச | 10 | 24 |
| பூர்வாப்யாஸேன | 6 | 44 |
| ப்ருதக் த்வேன து | 18 | 21 |
| ப்ரகாசம் ச ப்ர | 14 | 22 |
| ப்ரக்ருதிம் புருஷம் | 13 | 19 |
| ப்ராக்ருதிம்... க்ஷேத்ரம் | 13 | 0 |
| ப்ரக்ருதிம் ஸ்வாம | 9 | 8 |
| ப்ரக்ருதே: க்ரிய | 3 | 27 |
| ப்ரக்ருதேர்குண | 3 | 29 |
| ப்ரக்ருத்யைவ ச கர் | 13 | 29 |

| | | |
|---|---|---|
| ப்ரஜஹா தி யதா | 2 | 55 |
| ப்ரயத்னாத்யதமான | 6 | 45 |
| ப்ரயாணகாலே மன | 8 | 10 |
| ப்ரலபன் விஸ்ருஜன் | 5 | 9 |
| ப்ரவ்ருத்திம் ச நிவ்ரு | 18 | 30 |
| ப்ரவ்ருத் திம்... ஜனா ந | 16 | 7 |
| ப்ரசாந்த மனஸம் | 6 | 27 |
| ப்ரசாந்தாத்மா விகத | 6 | 14 |
| ப்ரஸாதே ஸர்வது: கா | 2 | 65 |
| ப்ரஹ்லாதஸ் சாஸ்மி | 10 | 30 |
| ப்ராப்ய புண்யக்ருதா | 6 | 41 |

ப -

| | | |
|---|---|---|
| பந்துராத்மாத்மனஸ் | 6 | 6 |
| பலம் பலவதாமஸ்மி | 7 | 11 |
| பஹிரந்தஸ்ச பூதா | 13 | 5 |
| பஹூனாம் ஜன்மனா | 7 | 19 |
| பஹூனி மே வ்யதீ | 4 | 5 |
| பாஹ்யஸ்பரசேஷ்வ | 5 | 21 |
| பீஜம் மாம் ஸர்வபூ | 7 | 10 |
| புத்தியுக்தோ ஜஹா | 2 | 50 |
| புத்திர் ஞானமஸம் | 10 | 4 |
| புத்தேர்பேதம் த்ரு | 18 | 29 |
| புத்யா விசுத்தயா | 18 | 51 |
| ப்ருஹத்ஸாம ததா | 10 | 35 |
| ப்ருஹ்மனோ ஹி ப்ர | 14 | 27 |
| ப்ரஹ்மபூத: ப்ரஸன் | 18 | 54 |
| ப்ரஹ்மார்ப்பணம் | 4 | 24 |
| ப்ராஹமண க்ஷத்ரிய | 18 | 41 |

ப -

| | | |
|---|---|---|
| பக்த்யா த்வனன் | 11 | 54 |
| பக்த்யா மாமபிஜா | 18 | 55 |
| பயாத்ரணாதுபரதம் | 2 | 35 |
| பவான் பீஷ்மஸ்ச | 1 | 8 |
| பவாப்யயௌ ஹி | 11 | 2 |
| பீஷ்மத்ரோணப்ர | 1 | 25 |
| பூதக்ராம: ஸ ஏவா | 8 | 19 |

| | | |
|---|---|---|
| பூமிராபோஙனலோ | 7 | 4 |
| பூய ஏவ மஹாபா | 10 | 1 |
| போக்தாரம் யக்ஞ | 5 | 29 |
| போகை ச்வர்யப்ரஸ | 2 | 44 |

ம

| | | |
|---|---|---|
| மச்சித்த: ஸர்வதுர் | 18 | 58 |
| மச்சித்தா மத்கத | 10 | 9 |
| மத்கர்மக்ருன்மத்பர | 11 | 55 |
| மத்த: பரதரம்நான்ய | 7 | 7 |
| மதனுக்ரஹாயபரமம் | 11 | 1 |
| மன: ப்ரஸாத: ஸௌ | 17 | 16 |
| மனுஷ்யாணாம் ஸஹ | 7 | 3 |
| மன்மனா பவ மத் | 9 | 34 |
| மன்மனா... ஸத்யம் | 18 | 65 |
| மன்யஸே யதி தச் | 11 | 4 |
| மமயோனிர் மஹத் | 14 | 3 |
| மமைவாம்சோ ஜீவ | 15 | 7 |
| மயாததமிதம் ஸர்வம் | 9 | 4 |
| மயாத்யக்ஷேண | 9 | 10 |
| மயாப்ரஸன்னேன | 11 | 47 |
| மயி சானன்யயோ | 13 | 10 |
| மயி ஸர்வாணி | 3 | 30 |
| மய்யாவேச்ய மனோ | 12 | 2 |
| மய்யாஸக்தமனா: | 7 | 1 |
| மய்யேவ மன ஆதத் | 12 | 8 |
| மயர்ஷய: ஸப்த | 10 | 6 |
| மஹர்ஷீனாம் ப்ருகு | 10 | 25 |
| மஹாத்மானஸ்து | 9 | 13 |
| மஹாபூதான்யஹ | 13 | 5 |
| மா தே வ்யதா மா | 11 | 49 |
| மாத்ராஸ்பர்சாஸ்து | 2 | 14 |
| மானாபமானயோஸ் | 14 | 25 |
| மாமுபேத்ய புனர் | 8 | 15 |
| மாம் ச யோஙவ்யபி | 14 | 26 |
| மாம் ஹி பார்த்த | 9 | 32 |
| முக்தஸங்கோஙஹை | 18 | 26 |
| மூடக்ராஹேணாத் | 17 | 19 |

| | | |
|---|---|---|
| ம்ருத்யு: சர்வஹர | 10 | 34 |
| மோகாசா மோக கர் | 9 | 12 |

ய

| | | |
|---|---|---|
| ய இதம் பரமம் | 18 | 68 |
| ய ஏனம் வேத்திஹந் | 2 | 19 |
| ய ஏவம் வேத்தி | 13 | 23 |
| யச்சாபி ஸர்வபூதா | 10 | 39 |
| யச்சாவஹாஸார் | 11 | 42 |
| யஜந்தே ஸாத்விகா | 17 | 4 |
| யக்ஞ தான தப: | 18 | 5 |
| யக்ஞசிஷ்டாசின: | 3 | 13 |
| யக்ஞசிஷ்டாம்ருத | 4 | 31 |
| யக்ஞார்த்தாத் கர்ம | 3 | 9 |
| யக்ஞாத்வா ந | 4 | 35 |
| யக்ஞே தபஸி | 17 | 27 |
| யததோ ஹ்யபி | 2 | 60 |
| யதந்தோ யோகின | 15 | 11 |
| யத: ப்ரவ்ருத்திர் | 18 | 46 |
| யதேந்திரியமனோபுத் | 5 | 28 |
| யதோ யதோ நிஸ்சர | 6 | 26 |
| யத்கரோஷி யதச்னா | 9 | 27 |
| யத்ததக்ரே விஷ | 18 | 37 |
| யே ஹி ஸம்ஸ்பர்ச | 5 | 22 |
| யோகயுக்தோ விசுத் | 5 | 7 |
| யோகஸர்யஸ்தகர்மா | 4 | 41 |
| யோகஸ்த: குருகர்மா | 2 | 48 |
| யோகினாமபி ஸர்வே | 6 | 47 |
| யோயுஞ்ஜீத ஸதத | 6 | 10 |
| யோத்ஸ்யமானான | 1 | 23 |
| யோ ந ஹ்ருஷ்யதி | 12 | 17 |
| யோऽந்த: ஸுகோ | 5 | 24 |
| யோ மாமஜமனாதிம் | 10 | 3 |
| யோ மாமேவமஸம் | 15 | 19 |
| யோ மாம் பச்யதி | 6 | 30 |
| யோ யோ யாம் யாம் | 7 | 21 |
| யோऽயம் யோகஸ்த் | 6 | 33 |

| | | |
|---|---|---|
| ரஜஸ்தமஸ்சாபிபூய | 14 | 10 |
| ரஜஸி ப்ரலயம் கத் | 14 | 15 |
| ரஜோ ராகாத்மகம் | 14 | 7 |
| ரஸோ அஹமப்ஸு | 7 | 8 |
| ராகத்வேஷவியுக்தை | 2 | 64 |
| ராகீ கர்மபலப்ரே | 18 | 27 |
| ராஜன்ஸம்ஸ்ம்ருத்ய | 18 | 76 |
| ராஜவித்யா ராஜகுஹ் | 9 | 2 |
| ருத்ராணாம் சங்கரஸ் | 10 | 23 |
| ருத்ராதித்யா வஸ | 11 | 22 |
| ரூபம் மஹத்தே | 11 | 23 |

**ல**

| | | |
|---|---|---|
| லபந்தேப்ரஹ்மநிர் | 5 | 25 |
| லேலிஹ்யஸே | 11 | 30 |
| லோகே அஸ்மின் | 3 | 3 |
| லோப: ப்ரவ்ருத்திரா | 14 | 12 |

**வ**

| | | |
|---|---|---|
| வக்துமர்ஹஸ்ய | 10 | 16 |
| வக்த்ராணி தே | 11 | 27 |
| வாயுர்யமோக்னிர் | 11 | 39 |
| வாஸாம்ஸி ஜீர்ணானி | 2 | 22 |
| வித்யாவினயஸம்பன் | 5 | 18 |
| விதிஹீனமஸ்ருஷ் | 17 | 13 |
| விவிக் தஸேவீ லக் | 18 | 52 |
| விஷயா வினிவர்த்த | 2 | 58 |
| விஷயேந்த்ரிய | 18 | 38 |
| விஸ்தரேணாத்மனோ | 10 | 18 |
| விஹாய காமான் ய: | 2 | 71 |
| வீத ராகபயக்ரோதா: | 4 | 10 |
| வ்ருஷ்ணீனாம்வாஸு | 10 | 37 |
| வேதானாம் ஸாம | 10 | 22 |
| வேதா அவிநாசினம் | 2 | 21 |
| வேதாஹம் ஸமதீ | 7 | 26 |
| வேதேஷுயக்ஞேஷு | 8 | 28 |

| | | |
|---|---|---|
| வ்யவஸாயாத்மிகா | 2 | 41 |
| வ்யாமிச்ரேணேவ | 3 | 2 |
| வ்யாஸப்ரஸாதாச் | 18 | 75 |

ச -

| | | |
|---|---|---|
| சக்னோதீஹைவ ய: | 5 | 23 |
| சனை: சனைருபரமேத் | 6 | 25 |
| சமோ தமஸ்தப: | 18 | 42 |
| சரீரம் யதவாப்னோதி | 15 | 8 |
| சரீரவாங்மனோ | 18 | 15 |
| சுக்லக்ருஷ்ணே கதீ | 8 | 26 |
| சுசௌதேசே ப்ரதிஸ் | 6 | 11 |
| சுபாசுபபலைரேவம் | 9 | 28 |
| சௌர்யம் தேஜோ | 18 | 43 |
| ச்ரத்தயா பரயா | 17 | 17 |
| ச்ரத்தாவானனஸூ | 18 | 71 |
| ச்ரத்தாவான்லபதே | 4 | 39 |
| ச்ருதி விப்ரதிபன்னா | 2 | 53 |
| ச்ரேயான்த்ரவ்ய | 4 | 33 |
| ச்ரேயான்ஸ்வதர்மோ | 3 | 35 |
| ச்ரேயான் ஸ்வதர் | 18 | 47 |
| ச்ரேயோ ஹி ஞான | 12 | 12 |
| ச்ரோத்ராதீனீந்த்ரி | 4 | 26 |
| ச்ரோத்ரம்சக்ஷு: | 15 | 9 |
| ச்வசுரான | 1 | 27 |

ஸ -

| | | |
|---|---|---|
| ஸ ஏவாயம் மயா | 4 | 3 |
| ஸக்தா: கர்மண்ய | 3 | 25 |
| ஸகேதி மத்வா | 11 | 41 |
| ஸ கோஷோ தார்த்த | 1 | 9 |
| ஸததம் கீர்த்தயந்தோ | 9 | 14 |
| ஸ தயா ச்ரத்தயா | 7 | 22 |
| ஸத்காரமான பூஜா | 17 | 18 |
| ஸத்வம் ரஜஸ்தம | 14 | 5 |
| ஸத்வம் ஸுகே | 14 | 9 |
| ஸத்வாத் ஸஞ்ஜாய | 14 | 17 |
| ஸத்வானுரூபா | 17 | 3 |

| | | |
|---|---|---|
| ஸத்ருசம் சேஷ்டதே | 3 | 33 |
| ஸத்பாவே சாது | 17 | 26 |
| ஸமது: கஸுக: | 14 | 24 |
| ஸமம் காயசிரோக்ரீ | 6 | 13 |
| ஸமம் பச்யன்ஹி | 13 | 28 |
| ஸமம் ஸர்வேஷு | 13 | 27 |
| ஸம: சத்ரௌ ச | 12 | 18 |

ஸ

| | | |
|---|---|---|
| ஸமோ அஹம் ஸர்வ | 9 | 29 |
| ஸர்க்காணாமாதிரந்த | 10 | 32 |
| ஸர்வகர்மாணிமன | 5 | 13 |
| ஸர்வ குஹ்யதமம் | 18 | 64 |
| ஸர்வத: பாணிபாத | 13 | 13 |
| ஸர்வ த்வாராணி | 8 | 12 |
| ஸர்வ த்வாரேஷு | 14 | 11 |
| ஸர்வதர்மான் | 18 | 66 |
| ஸர்வபூதஸ்தமாத்மா | 6 | 29 |
| ஸர்வபூதஸ்திதம் | 6 | 31 |
| ஸர்வபூதானி | 9 | 7 |
| ஸர்வபூதேஷுயேனை | 18 | 20 |
| ஸர்வமேதத்ருதம் | 10 | 14 |
| ஸர்வயோனிஷு | 14 | 4 |
| ஸர்வஸ்ய சாஹம் | 15 | 15 |
| ஸர்வாணீந்த்ரிய | 4 | 27 |
| ஸர்வேந்த்ரிய குணா | 13 | 14 |
| ஸஹஜம் கர்ம | 18 | 48 |
| ஸஹஸ்ர யுகபர்யந்த | 8 | 17 |
| ஸஹயக்ஞா: ப்ரஜா: | 3 | 10 |
| ஸங்கரோ நரகாயைவ | 1 | 42 |
| ஸங்கல்ப ப்ரபவான் | 6 | 24 |
| ஸந்துஷ்ட: ஸததம் | 12 | 14 |
| ஸன்னியம்யேந்த்ரிய | 12 | 4 |
| ஸந்யாஸஸ் து மஹா | 5 | 6 |
| ஸந்யாஸஸ்ய மஹா | 18 | 2 |
| ஸந்யாஸம் கர்மணாம் | 5 | 1 |
| ஸந்யாஸ: கர்மயோக | 5 | 2 |
| ஸாதிபூதா திதைவம் | 7 | 30 |

| | | |
|---|---|---|
| ஸாங்க்யயோகௌ | 5 | 4 |
| ஸித்திம் ப்ராப்தோ | 18 | 50 |
| ஸீதந்தி மம | 1 | 29 |
| ஸுகது: கே ஸமே | 2 | 38 |
| ஸுகமாத்யந்திகம் | 6 | 21 |
| ஸுகமத்விதானீம் | 18 | 36 |
| ஸுதுர்தர்சமிதம் | 11 | 52 |
| ஸுஹ்ருன் மித்ரார்யு | 6 | 9 |
| ஸ்தானே ஹ்ருஷீ | 11 | 36 |
| ஸ்திதப்ரக்ஞஸ்ய | 2 | 54 |
| ஸ்பர்சான் க்ருத்வா | 5 | 27 |
| ஸ்வத்ரமமபி | 2 | 31 |
| ஸ்வபாவஜேன | 18 | 60 |
| ஸ்வயமேவாத்மனோத் | 10 | 15 |
| ஸ்வே ஸ்வே கர்மண் | 18 | 45 |

**ஹ**

| | | |
|---|---|---|
| ஹதோ வா ப்ராப் | 2 | 37 |
| ஹ்ந்த தே கதயிஷ் | 10 | 19 |
| ஹ்ருஷீகேசம் | 1 | 21 |

